வெளியீடு 30-6-99 Issued 30-6-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 21, 1998 - தொகுதி 55 - எண் 2

Thursday the 21th May, 1998—Volume 55 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

1081/99
V24, 31'1998
N98.55.2
219398

**21-5-1998**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| | பக்கங்கள் |
| ***1. வினாக்கள்-விடைகள்—*** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பத்தாவது பட்டியல்) | 193-228 |
| ***2. கவன ஈர்ப்பு—*** | |
| (அ) தேனி மாவட்டத்தில் எட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊழியர்கள் வேலை நிறுத்தம் | 229-232 |
| (ஆ) தருமபுரி கூட்டுறவு விசைத்தறிக் கூடம் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை | 232-234 |
| ***3. தகவல் கோரல்—*** | |
| கவன ஈர்ப்பிற்கான அறிக்கை அவையில் வைத்தல் | 234-235 |
| ***4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)*** | |
| தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1998 | 235-236 |
| ***5. மானியக் கோரிக்கைகள் 1998-98, விவாதமும் வாக்கெடுப்பும்—***தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 46 - செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் | 236-344 |
| (ஆ) கோரிக்கை எண் [illegible] - சுற்றுலா | |
| *மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் | 237, 239, 247<br>264, 318-340 |
| *மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் | 239, 241-242<br>307-317, 340 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1998-99 விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| திரு. மு. அப்பாவு | 242-249 |
| திரு. எஸ். டேவிட் செல்வின் | 249-253 |
| *திரு. சி. சந்திரசேகரன் | 253-257 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 257-265 |
| *திரு. நா. பெரியசாமி | 266-275 |
| *திரு. பி.என். வல்லரசு | 276-281 |
| *திரு. டி. மணி | 281-285 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 285-288 |
| திரு. ப. கோவிந்தன் | 288-289 |
| திரு. குழந்தை தமிழரசன் | 290-294 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 294-299 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 299-303 |
| *திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 304-307 |
| 6. அறிவிப்புகள்— | |
| (அ) சுற்றுலாத் துறையின் சார்பாகச் சிற்றுண்டி வழங்கப்படுதல் | 266 |
| (ஆ) கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்க பேரவை நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு | 274 |
| (இ) மனோன்மணீயம் சுந்தரனார் மற்றும் பெரியார் பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றப் பேரவை உறுப்பினர்கள் நியமனம் | 304 |
| (ஈ) மாநில நூலகக் குழு உறுப்பினர்கள் நியமனம் | 304 |
| 7. அரசினர் தீர்மானம்— | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 344-345 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 345 |


219398

D
Y21,31'N98
N98.55.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 7, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மே 21, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது."

சினத்தைத் தூண்டாமல் மகிழத்தக்க அளவுக்குச் செய்திகளைத் தொகுத்தும், தேவையற்ற செய்திகளை ஒதுக்கியும், நல்ல பயனளிக்கும் விதமாகச் சொல்லுவதே சிறந்த தூதருக்கு அழகாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

## உடுக்குறியிடாத வினாக்கள்
## (பத்தாவது பட்டியல்) @

1—

### கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா 8791—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள், அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.

[1998 மே 21

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரியில் சுமார் 20 வருடங்களாக தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இந்தக் கருத்துரு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2—

**குற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல்**

**வினா 13141—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் குற்ற நடவடிக்கைகள் அதிகரித்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூரில் 1996-ஆம் ஆண்டில் நடைபெற்ற குற்றங்களுடன் ஒப்பிடுகையில் 1997-ம் ஆண்டில் குற்றங்கள் குறைந்துள்ளன. பதிவாகியுள்ள வழக்குகளில் கண்டுபிடிப்பு அதிகரித்துள்ளது. தடுப்பு நடவடிக்கைகள் சரியான நேரத்தில் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு:-



1998 மே 21]

| வ எண். | வழக்கு விபரம் | 1996 | 1997 (22-12-1997 வரை) |
|---|---|---|---|
| 1. | பதிவான வழக்குகள் | 397 | 392 |
| 2. | கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் | 266 | 278 |
| 3. | சொத்து இழப்பு | 77,50,711 | 59,89,719 |
| 4. | சொத்து மீட்பு | 50,36,621 | 43,90,465 |
| 5. | தடுப்பு நடவடிக்கைகள்: | | |
| | பிரிவு 41(2) கு.வி.ச. | 1799 | 2068 |
| | பிரிவு 109 கு.வி.ச. | 220 | 113 |
| | பிரிவு 106 கு.வி.ச. | 65 | 142 |
| | பிரிவு 110 கு.வி.ச. | 20 | 13 |
| 6. | தடுப்புக் காவல் சட்டம் (பிரிவு 14/82) | 3 | 9 |

இக்குற்ற நடவடிக்கைகளை இன்னும் குறைக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும், மேலும் குற்றங்கள் நடவாமல் இருக்கவும், நடைபெற்ற குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், திருப்பூர் உட்கோட்டத்தில் உள்ள காவலர்களின் மூலம் தனிப் படை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், குற்றங்கள் நடவாமல் இருக்க, இரவு ரோந்து மற்றும் பகல் ரோந்து தவறாமல் மேற்கொள்ளப்படுகிறது.

3—

**காவலர் குடியிருப்புக் கட்டும் திட்டம்**

**வினா 13245—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள காவலர்கள் குடியிருப்பு மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாகக் காவலர் குடியிருப்பு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள காவலர்கள் குடியிருப்பு பழுதடைந்துள்ளது. இக்குடியிருப்புகளில் சிறு பழுதுபார்ப்புப் பணிகள் மூலம் பழுதுபார்ப்பு மேற்கொள்ள ஒப்பளிக்கப்பட்ட காவல்துறை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து காவல்துறைத் தலைமை இயக்குநரால் விலைப்புள்ளி பெறப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் பணிகள் பிரிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டு, தற்போது பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4—**

**அகமேடு கிராமத்தில் வாக்குச் சாவடி அமைத்தல்**

**வினா 14311—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதியிலுள்ள அகமேடு என்ற கிராம மக்கள் சதுப்பேரி என்ற கிராமத்திற்கு வந்து ஓட்டுப் போடும் நிலையைத் தவிர்க்க அகமேடு என்ற கிராமத்திலேயே வாக்குச் சாவடியை இனி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வேலூர் சட்டமன்றத் தொகுதி, சதுப்பேரி கிராமத்தில் பிளாக் 2 மற்றும் பிளாக் 3 ஆகிய இரண்டு வாக்குச் சாவடிகள் உள்ளன எனவும், இந்த இரண்டு வாக்குச் சாவடிகளையும் பிரித்து பிளாக் 2 முழுவதும் மற்றும் பிளாக் 3-ல் உள்ள ஒரு பகுதியும் சேர்த்து (ஜோதி காலனி மற்றும் அகமேடு நீங்கலாக) சதுப்பேரி கிராம மொத்த 808 வாக்காளர்களும் வாக்களிக்கும் வண்ணம் 14 (எல்லா வாக்காளர்கள்) வாக்குச் சாவடி அமைக்கலாம் எனவும் பிளாக் 3-ல் உள்ள மீதமுள்ள பகுதிகளான அகமேடு கிராம மொத்த வாக்காளர்கள் 349 மற்றும் ஜோதி காலனி (செங்கால் வீதி, மாரியம்மன் கோயில் தெரு பகுதி) வாக்காளர்கள் 72 ஆக மொத்தம் 421 வாக்காளர்களையும்





இணைத்து 14-ஏ (எல்லா வாக்காளர்கள்) வாக்களிக்கும் வகையில் அகமேடு கிராமத்திலேயே உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி கட்டடத்தில் புதியதாக வாக்குச் சாவடி ஏற்படுத்தலாமெனவும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்துள்ளார்.

2. தற்போதுள்ள வாக்குச் சாவடிகள் சமீபத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்காக அமைக்கப்பட்டன. தற்போதுள்ள வாக்குச் சாவடி பட்டியலில் மாற்றம் எதுவும் செய்ய வேண்டியிருப்பின், அதற்கான கருத்துருவினை அடுத்த பொதுத் தேர்தல்/இடைத்தேர்தல் சமயத்தில் அல்லது வாக்காளர்கள் பட்டியல்கள் தீவிரமாகத் திருத்தப்படும்போதுதான் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பலாம். எனவே, சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அகமேடு கிராமத்தில் தனியாக வாக்குச் சாவடி அமைப்பது குறித்து வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவினை வாக்காளர் பட்டியல் தீவிரமாகத் திருத்தப்படும்போது அல்லது அடுத்த தேர்தலின்போது பெற்று இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**5—**

**புதிய வாக்குச் சாவடி அமைத்தல்**

**வினா 14737—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், தனிச்சியம் பஞ்சாயத்து செம்புகுடிப்பட்டிக்கு புதிய வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செம்புகுடிப்பட்டி கிராமம், தனிச்சியம் ஊராட்சியில் அடங்கிய உட்கடை கிராமமாகும் (பிளாக் எண் 4). இக்கிராமத்தில் 672 வாக்காளர்கள் உள்ளனர். அய்யனக்கவுண்டன்பட்டி கிராமம் தனிச்சியம் கிராமத்திற்குள் அடங்கிய பிளாக் எண் 5 ஆகும். இங்கு மொத்தம் 240 வாக்காளர்கள் உள்ளனர். இரண்டு ஊர்களுக்கும் சேர்த்து மொத்த வாக்காளர்கள் 912 ஆகும். இரண்டு கிராமங்களுக்கும் இடையிலான தூரம் 1-1/2 கி.மீ. ஆகும்.

[1998 மே 21

இரண்டு கிராமங்களுக்கும் பொதுவாக அய்யனக்கவுண்டன்பட்டியில் உள்ள அரசு உதவி பெறும் ஆரம்பப் பள்ளியில் (வாக்குச்சாவடி எண் 89-எல்லா வாக்காளர்கள்) அமையப் பெற்று வாக்களித்து வருகின்றனர். தற்போதைய விதி ஒரு வாக்குச் சாவடியில் 1500 வாக்காளர்களுக்கு மேல் இருந்தால் மட்டுமே புதிய வாக்குச் சாவடிகளை பிரித்து அமைக்கலாம் என உள்ளது. செம்புகுடிப்பட்டி மற்றும் அய்யனக்கவுண்டன்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களில் உள்ள வாக்காளர்களின் தற்போதைய எண்ணிக்கை 912 என்பதால் செம்புகுடிப்பட்டிக்கு புதிய வாக்குச் சாவடி அமைக்க சாத்தியக்கூறு ஏதுமில்லை.

6—

**அரசு மருத்துவமனையைச் சீர்செய்தல்**

**வினா 2372—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவமனையில் சுகாதாரம் பேணிக் காக்கப்படாமல் கழிவறை, பிணவறை, வார்டுகள் அசுத்தமாக உள்ள நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அலுவலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் வேலூர் அரசு தலைமை மருத்துவமனையினை திடீர் ஆய்வு மேற்கொண்டார். அத்திடீர் ஆய்வின்போது இம்மருத்துவமனையின் அனைத்து வார்டுகள், கழிவறைகள் மற்றும் பிணவறை ஆகியவை நல்ல சுகாதாரமான முறையில் பேணிக் காக்கப்பட்டு மருத்துவமனையின் சுற்றுப்புறமும் சுகாதாரமாக உள்ளது எனவும் கண்டறியப்பட்டது.



1998 மே 21]

7—

**மருத்துவமனைக்கு படுக்கை வசதிகள்**

**வினா 5838—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் உள்ள உள் நோயாளிகள் பிரிவிற்கு தலையணைகள் மெத்தைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான கட்டில்கள், படுக்கை மெத்தைகள், தலையணைகள், படுக்கை விரிப்புகள் வாங்க செப்டம்பர் 1996-ல் ரூ. 5.00 கோடி அரசு அனுமதி அளித்துள்ளது. இதில் சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு தேவைப்பட்டியலின் அடிப்படையில் 26 படுக்கை மெத்தைகள், 52 தலையணைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

8—

**மின் கட்டணம் வசூல் செய்தல்**

**வினா 12474—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கொங்குப்பட்டி ஊராட்சியில் சுமார் 1500 மின் இணைப்புகளுக்கு மின் கட்டணம் செலுத்த 17 கி.மீ. தூரமுள்ள ஓமலூருக்குச் செல்ல வேண்டியுள்ளதால், அவ்விடத்திலேயே மின் கட்டண வசூல் அறை வைத்து மின் கட்டண வசூல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, கொங்குப்பட்டி கிராமம், ஓதுக்குப்புறத்தில் உள்ளது. இந்தக் கிராமத்தில் 150 மின் இணைப்புகள் மட்டுமே உள்ளன. அங்கு வசூல் செய்ய வேண்டிய பணம் ரூ. 7,500 மட்டுமே, வசூல் செய்யும் பணத்திற்குப் போதுமான பாதுகாப்பு வசதி இல்லை. எனவே, இந்தக் கிராமத்திலிருந்து சுமார் 4 கி.மீ. தூரமுள்ள கருவள்ளி கிராமத்தில் அமைந்துள்ள தற்காலிக வசூல் மையத்தில் கொங்குப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மின் நுகர்வோர்களிடமிருந்து பணம் வசூலிக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

9—

### மின்கம்பங்களை மாற்றி அமைத்தல்

**வினா 12904—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி - குற்றாலம் சாலையில் மேலகரம் ஆதிபராசக்தி கோயில் அருகில் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், தென்காசி-குற்றாலம் சாலையில் மேலகரம் ஆதிபராசக்தி கோயில் அருகில் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த மின்கம்பங்கள் கடந்த ஆண்டு ஜூலை மாதம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.



10—

### மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை மாற்ற நடவடிக்கை

**வினா 13235—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பப் படிவம், வாரியத்தால் விநியோகிக்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விண்ணப்பப் படிவத்தை மாற்றியமைத்து விநியோகிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியமே மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை மாற்றியமைத்து அச்சிட்டு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தமிழ்நாடு மின்சார வாரிய அச்சகத்திலேயே இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அச்சிடும் வேலை நடந்து கொண்டிருக்கின்றது. இப்பணி முடிவடைந்ததும் தமிழ்நாடு மின்சார வாரியமே விண்ணப்பப் படிவத்தை விநியோகிக்கும்.

11—

### ஒருமுனை மின்சாரத்தைத் தடையின்றி வழங்குதல்

**வினா 14020—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கோழிப் பண்ணைகளில், கோடைக் காலத்தில் வெம்மையால் கோழிகள் இறப்பதைத் தடுக்க ஒருமுனை மின்சாரத்தைத் தடையின்றி வழங்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 21

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் தற்பொழுது ஒருமுனை மின்சாரம் தடையின்றித்தான் வழங்கப்பட்டு வருகிறது.

**12—**

**மின்சாரம் உற்பத்தி செய்தல்**

**வினா 14266—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புளியஞ்சோலையில் (உப்பிலியாபுரம் தொகுதி) நீர்த்தேக்கம் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

120 மெ.வா. மின் திறன் கொண்ட கொல்லிமலை புனல் மின் திட்டம் ஏற்கெனவே தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்டு நாமக்கல் மாவட்டம் புளியஞ்சோலை வனப் பகுதியில் நிறுவப்படவுள்ளது.

**13—**

**நடுநிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 2844—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருப்புறம்பியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



1998 மே 21]

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டப் பணி வழிமுறைகளின்படி முன்னுரிமை கொடுத்து தஞ்சாவூர் மாவட்டம், திருப்புறம்பியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**14—**

**சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல்**

**வினா 4177—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடி, தண்டராம்பட்டு, சாத்தனூர், கீழ்சிறுபாக்கம், ராதாபுரம், வானாபுரம், பெருந்துறைப்பட்டு, வாழவச்சனூர், தச்சம்பட்டு, வெறையூர் ஆகிய ஊர்களில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிகளில் வரும் வருவாய், மின் கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவிற்குப் போதுமானதாக இல்லை. இந்நிலையில் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தால் 194 தெரு விளக்குகளுக்கு ரூ. 1.49 இலட்சங்கள் செலவிட வேண்டியுள்ளது. இச்செலவினத்தை ஏற்கக்கூடிய அளவில் ஊராட்சிகளின் நிதிநிலை இல்லை. இந்நிலையில் சோடியம் ஆவி விளக்குகள் ஊராட்சி நிதியில் அமைக்க இயலாது.

15—

**கழிவுநீர்க் கால்வாயின் கொள்ளளவை அதிகப்படுத்துதல்**

**வினா 4275—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பகுதி 3-ல் கழிவுநீர் கால்வாயின் கொள்ளளவை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1983-ல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மலக்கழிவுக் கால்வாயின் நீளம் 2.647 கி.மீ. தற்போது வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதால் அக்கால்வாயை அகலப்படுத்துவதற்குப் பதில், கழிவுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கேற்றவாறு, தற்போது கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிலும் செப்டிக் டாங்க் கட்ட வேண்டுமென்ற நிபந்தனையுடன் கட்டட உரிமம் வழங்கப்படுகிறது.

16—

**மேல்நிலைத் தொட்டி அமைத்தல்**

**வினா 7402—திரு. ஆ. இராசேந்திரன் (என்கிற) தீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் அசாவீரன் குடிக்காடு, வஞ்சினபுரம் காலனி, நக்கம்பாடி, நம்மங்குளம், சேந்தமங்கலம், சொக்கநாதபுரம், தளவாய், இரும்புலிக்குறிச்சி காலனி, மாமனாரங்குடிக்காடு, இலைக்கடம்பூர் காலனி மற்றும் மருங்கூர் போன்ற கிராமங்களில் குடிநீருக்காக மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் உள்ள, அசாவீரன் குடிக்காடு, நக்கம்பாடி, சேந்தமங்கலம், தளவாய், மருங்கூர் கிராமங்களில் தற்பொழுது மேல்நிலைத் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வஞ்சினபுரம் காலனி, நம்மங்குளம், சொக்கநாதபுரம், இரும்புலிக்குறிச்சி காலனி, மாமனாரங்குடிக்காடு மற்றும் இலைக்கடம்பூர் காலனி ஆகிய கிராமங்களில் மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க நடப்பு நிதியாண்டில் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

17—

**ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி செப்பனிடுதல்**

**வினா 7585—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, நெறிப்பறைச்சல், ராக்கியாக் கவுண்டன்புதூர் தொடக்கப்பள்ளி, நெறிப்பறைச்சல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி மற்றும் நெறிப்பறைச்சல் ஊராட்சி, வாலிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகியவை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செப்பனிடப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது பழுதுகள் அனைத்தும் நீக்கப்பட்டு விட்டன.

18—

### பழுதடைந்த விடுகளைப் புதுப்பித்தல்

**வினா 10142—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதியில், மயிலம்பாடி ஊராட்சிக்குட்பட்ட காட்டூர், காந்தி நகர் காலனியிலும், ஆண்டிப்பாளையம் காலனியிலும் பழுதடைந்துள்ள வீடுகளைப் புதுப்பித்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

19—

### தொகுப்பு விடுகளைப் புதியதாக்குதல்

**வினா 10643—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வெண்மணி கிராமத்தில் முன்பு அரசினால் கட்டித் தரப்பட்டு, தற்போது பயன்படுத்தும் நிலையில் இல்லாத தொகுப்பு வீடுகளைப் புதிதாக கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.





ஒரு வீட்டிற்கு ரூ. 29,000 மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வெண்மணி கிராமத்தில் 20 வீடுகள் புதியதாகக் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட வீடுகளை விரைந்து கட்டி முடிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

20—

### நெடுஞ்சாலையுடன் இணைக்க சாலை அமைத்தல்

**வினா 13932—திரு. ச. இராஜரெட்டி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தளி ஒன்றியம், அந்தேவனபள்ளி ஊராட்சி, கங்கதேவனபள்ளியிலிருந்து காருகொண்டபள்ளி, ஒனுகனபள்ளி வழியாக பிளிமுத்திரை கிராமத்திற்கு மதகொண்டபள்ளியிருந்து கொள்ளேபுரம், பளகேரி வழியாக ஓசூர் நெடுஞ்சாலையினை இணைக்க சாலை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, தளி ஒன்றியம், அந்தேவனபள்ளி ஊராட்சி, கங்கதேவன பள்ளியிலிருந்து பிளிமுத்திரை (வழி காருகொண்டபள்ளி, பிளிமுத்திரை) கி.மீ. 0/0-5/4 சாலையில் கி.மீ. 0/0-2/6 வரை சாலை மேம்பாடு செய்யும் பணி நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை மூலம் நபார்டு திட்டத்தில் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மீதமுள்ள சாலை கி.மீ. 2/7-5/4 நீளம், புதிய சாலை அமைக்கும் இடம் பட்டா நிலங்களின் வழியாகச் செல்வதால் நில ஆர்ஜிதம் செய்தபிறகு நிதிநிலை வசதிக்கு ஏற்ப சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

21—

### தார்ச்சாலை அமைத்தல்

**வினா 13934—திரு. ச. இராஜரெட்டி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தளி ஒன்றியம், சுக்கதாசம் கிராமத்தில் இருந்து காளைநெட்டி, சாரண்டப்பள்ளி, நேர்லெட்டி தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தளி ஊராட்சி ஒன்றியம், கக்கதாசம் ஜவளகிரி முதல் பாளையங்கோட்டை சாலை (வழி காளைநெட்டி, சாரண்டபள்ளி, நேர்லெட்டி) 8,000 கி.மீ. நீளமுள்ள சாலையில் 0/0-3/2 நீளம் 1992-93 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் எடுக்கப்பட்டு தார்ச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள கி.மீ. 3/2-8/0 நீளத்திற்கு 1993-94 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கப்பிச் சாலை போடப்பட்டுள்ளது. இக்கப்பிச் சாலையைத் தார்ச்சாலையாக மாற்ற ரூ. 20.00 இலட்சம் தேவைப்படுகிறது. எனவே, தற்போது இப்பணி அரசின் பரிசீலனையில் இல்லை.

**22—**

**சாலை வசதி ஏற்படுத்துதல்**

**வினா 13936—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கீழ்த்தாங்கல் முதல் கிரந்தப்பட்டு வரை மூன்று கிலோ மீட்டர், தாயனூர் முதல் சேப்பூண்டி வரை இரண்டு கிலோ மீட்டர் ஆகிய இடங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி மேல்மலையனூர் ஒன்றியம், கீழ்த்தாங்கல் முதல் கிரந்தப்பட்டு வரையுள்ள 3 கி.மீ. சாலை மற்றும் தாயனூர் முதல் சேப்பூண்டி வரையுள்ள 2 கி.மீ. சாலையில் ஏற்கெனவே ஒரு கி.மீ. தூரம் வரை சாலை போடப்பட்டது போக மீதி, சாலை வசதி செய்து தர ரூ. 6.50 இலட்சங்கள் செலவாகும். நிதிநிலைக்கு ஏற்ப, 1998-99 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் செய்து தர இயலுமா என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.



**23—**

**சாலை வசதி ஏற்படுத்துதல்**

**வினா 13937—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, கோயில்புரையூர் முதல் நொச்சலூர் வரை 2 கி.மீ., கொழப்பலூர் முதல் கத்தாழம்பட்டு வரை 2 கி.மீ., மேட்டுவைலாமூர் முதல் பரிக்கல்பட்டு வரை 4 கி.மீ., நாரணமங்கலம் முதல் நாரணமங்கலம் காலனி வரை 1 கி.மீ. ஆகிய இடங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, கோயில்புரையூர் முதல் நொச்சலூர் வரை 2 கி.மீ., கொழப்பலூர் முதல் கத்தாழம்பட்டு வரை 2 கி.மீ., மேட்டுவைலாமூர் முதல் பரிக்கல்பட்டு வரை 4 கி.மீ. நாரணமங்கலம் முதல் நாரணமங்கலம் காலனி வரை 1 கி.மீ. ஆகிய இடங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித் தர தோராயமாக ரூ. 7.50 லட்சங்கள் தேவைப்படும். வரும் 1998-99-ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் செய்து தர தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**24—**

**சாலை வசதி செய்தல்**

**வினா 14083—திரு. சு. இராஜுரெட்டி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதியில் உள்ள தொட்டமஞ்சி மற்றும் மஞ்சகொண்டபள்ளி பஞ்சாயத்துகளுக்கு சாலை வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, தொட்டமஞ்சி ஊராட்சி, மேலூர் தொட்டமஞ்சி கிராமத்திற்குச் சாலை அமைக்க கி.மீ. 0/0-1/0 நீளம் 1997-98 ஆம் ஆண்டு பத்தாவது நிதிக்குழுத் திட்டத்தில் ரூ. 4.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், தளி தொகுதி, தளி ஊராட்சி ஒன்றிய மஞ்சகொண்டப்பள்ளி ஊராட்சி கர்நாடக எல்லை மஞ்சகொண்டப்பள்ளி வழி பேருப்பட்டி கி.மீ. 6.80 நீளம் சாலையில் கி.மீ. 0/0-3/0 வரை 1996-97 ஆம் ஆண்டு வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் தார்ச்சாலை அமைக்கும் பணி எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 3/0-6/8 நீளத்திற்கு தார்ச்சாலை அமைக்க நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**25—**

### கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல்

**வினா 8325—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி கிராமத்தில் இராசானூர், மாங்குட்டபட்டி, அமரகுஞ்சி கஸ்பா ஆகிய இடங்களில் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி கிராமத்தில் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.





(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**26—**

### வேட்டுவன் கண்மாயைச் சீர்படுத்துதல்

**வினா 9958—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், ஜெயமங்கலம் கிராமத்திலுள்ள வேட்டுவன் கண்மாய் மற்றும் அதன் கால்வாய் சீர்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

இப்பணியை நிதிநிலைக்கேற்ப வரும் நிதியாண்டில் எடுத்துக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**27—**

### ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை

**வினா 13671—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டம், சிற்றாறு பாசனத்தில் புலியூர் பெரியகுளம் மற்றும் புலியூர் கால்வாய் ஆக்கிரமிப்புகளையும் அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புலியூர் கால்வாயை மராமத்து செய்யும் பணிக்கு நீர்வள ஆதார அமைப்பின்கீழ் ரூ. 40.00 இலட்சத்திற்கு ஒப்புதல்

வழங்கப்பட்டுள்ளது. இப்பணி தொடங்கும் முன்னர் பொதுப் பணித் துறையினர் வருவாய் துறையினருடன் கூட்டாய்வு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

### பாசன கால்வாய் தூர்வாரி சீரமைத்தல்

**வினா 13896—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதி, பெருங்காமநல்லூர் கண்மாய், வைகை பாசன கால்வாயை தூர்வாரி, சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெருங்காமநல்லூர் கிராமத்தில் வைகை பாசன கால்வாய் மூலம் பயன்பெறும் கண்மாய்களான கல்குளம் மற்றும் உடைகுளம் கண்மாய்களுக்கு திருமங்கலம் பிரதான கால்வாயின் 6-வது கிளை வாய்க்கால் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இந்த 6-வது வாய்க்கால் சீரமைக்கும் பணி தமிழ்நாடு நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

29—

### பேருந்துகளைத் திருப்பி விடுதல்

**வினா [illegible]—திரு. [illegible]:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி வழியாக தலைஞாயிறு செல்லும் பேருந்துகளை மன்னார்குடியிலிருந்து விக்கிரபாண்டியம், ஆலத்தம்பாடி, ஆலங்குடி வழியாகத் திருப்பிவிட அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தில் சாலை கீழ்க்கண்ட பகுதிகள் பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் உள்ளதால் மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி வழியாக தலைஞாயிறு செல்லும் பேருந்துகளை விக்கிரபாண்டியம், ஆலத்தம்பாடி, ஆலங்குடி வழியாகத் திருப்பி விடும் செயற்குறிப்பு இல்லை.

1. ஆலங்குடி - சித்தாமூர் .. 5 கி.மீ.
2. ஆலத்தம்பாடி - ஆண்டாங்கரை .. 5 கி.மீ.
3. முன்னையூர் - மஞ்சவாடி .. 4 கி.மீ.

ஆலங்குடி முதல் நத்தம்பள்ளம் பாலம் வரையிலான 5 கி.மீ. சாலை மிகவும் பழுதடைந்து பேருந்து இயக்கத் தகுதியற்ற நிலையில் உள்ளது. ஆனிவலம் சுமைதாங்கி- ஆண்டாங்கரை வரை உள்ள 2 கி.மீ. சாலை அகலம் குறைந்த தார்ச்சாலையாக உள்ளது. எதிரே வேறு வாகனங்கள் வந்தால் மாறிச் செல்ல இயலாது. மேலும் அதையடுத்து ஆண்டாங்கரை-மஞ்சவாடி வரை உள்ள 4.5 கி.மீ. சாலை மண் சாலையாக உள்ளது. இதுவும் பேருந்து இயக்க இயலாத அளவிற்கு உள்ளது.

30—

### புதிய பேருந்து இயக்குதல்

**வினா 9815—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியைச் சார்ந்த அரியலூர் அரசு போக்குவரத்துக் கழகம் கிளைக் கழகத்திலிருந்து அரியலூர், ரங்கசமுத்திரம், சுப்புராயபுரம், கிருஷ்ணபுரம், பொய்யூர் வழியாக கண்டக்குடி சென்று கொண்டிருந்த பேருந்து எண் 2-ஐ மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 21

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையிலுள்ள அரியலூர் - சுண்டக்குடி (வழி) ரங்கசமுத்திரம், சுப்புராயபுரம், கிருஷ்ணாபுரம், பொய்யூர் வழித்தடத்தின் மொத்த தூரம் 24.0 கி.மீ. ஆகும். இதில் அரியலூர்-பொய்யூர் வரையுள்ள 10.0 கி.மீ. சாலை மிகவும் மோசமாகப் பழுதடைந்து பேருந்து இயக்கத் தகுதியற்ற நிலை இருந்ததால் இவ்வழித்தடத்தில் இயங்கிய நகரப் பேருந்தை மாற்றி 6-1-93 முதல் ஆங்கியலூருக்கு இயக்கப்படுகின்றது. இச்சாலை சரியில்லாத காரணத்தினால் பேருந்து எண் 2-ஐ மீண்டும் தற்போது இயக்க கூடிய நிலைமை இல்லை.

**31—**

### கூடுதல் பேருந்து இயக்குதல்

**வினா 10276—திரு. ஜி. கே. மணி**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து பி. அக்ரஹாரம், புதூர், சிக்கனம்பட்டி, குட்டம்பட்டி, காளேகவுண்டனூர், மஞ்சநாயக்கன அள்ளி, அனுமந்தபுரம் வழியாக கரூர் அம்மன் கோவில் வரை கூடுதல் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நகரப்பேருந்து தடம் எண் 13ஏ மூலம் தருமபுரியிலிருந்து பி.அக்ரஹாரம், புதூர், சிக்கனம்பட்டி, குட்டம்பட்டி, தின்னூர், காளேகவுண்டனூர் கிராஸ், மஞ்சநாயக்கன் அள்ளி கிராஸ் மற்றும் அனுமந்தபுரம் வழியாக கரூர் மாரியம்மன் கோயில் வரை நாளொன்றுக்கு 12 நடைகள் இயங்கி வருகின்றன. தற்போது 63 விழுக்காடு கொள்ளளவிற்குத்தான் பயணிகள் பயணம் செய்து வருகின்றார்கள். எனவே கூடுதலாகப் பேருந்து இயக்க வேண்டிய சூழ்நிலை தற்போது இல்லை.



1998 மே 21]

**32—**

### திருப்பூர் மேற்குப்பகுதி கிராமத்திற்குப் பேருந்து

**வினா 12806—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மேற்குப் பகுதி கிராமத்தைச் சேர்ந்த களர்வழி, சின்னார்பாளையம், கொன்னக்காடு மக்களுக்குப் பயன்பட்டு வந்த தடம் எண் 42 பேருந்து அங்கு செல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தடம் எண் 42 பேருந்து களர்வழி, சின்னார்பாளையம், கொன்னக்காடு வழியாக கடந்த 10-2-98 முதல் மீண்டும் இயக்கப்பட்டு வருகிறது.

**33—**

### சிற்றுந்து வழித்தடம் தனியாருக்கு வழங்குதல்

**வினா 13522—திரு. ஆ. இராசேந்திரன் (என்கிற) தீரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் ஆண்டிமடம், செந்துறை ஆகிய ஒன்றியங்களை இணைக்கும் வகையில் சிற்றுந்து வழித்தடம் தனியாருக்கு வழங்குவதில் படித்து. வேலையற்ற பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிற்றுந்து இயக்க அனுமதிச் சீட்டு வழங்குவதில் படித்த, வேலையற்ற பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு 1988 ஆம் ஆண்டு

மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 71 (3)-ல் வழிவகை செய்கிறது. இதன் அடிப்படையில் தக்க ஆணை விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**34—**

## பேருந்து இயக்குதல்

**வினா 13570—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதிக்கு உள்ளடங்கிய செஞ்சி ஒன்றியத்தில் திருவண்ணாமலை முதல் விழுப்புரம் வரை (வழி) துத்திப்பட்டு, பொன்னங்குப்பம், அனந்தபுரம் வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலையிலிருந்து வேட்டவலம், மழவந்தாங்கல், துத்திப்பட்டு, பொன்னங்குப்பம், அனந்தபுரம் வழியாக விழுப்புரம் வரையிலான வழித்தடத்தில் துத்திப்பட்டு சாலையிலிருந்து துத்திப்பட்டு வரையிலான 5.5. கி.மீ. தூரப்பகுதி மட்டுமே இதுவரை பேருந்து வசதியே பெறாத பகுதியாகும். இப்பகுதியில் எந்த ஒரு கிராமமும் கிடையாது. மேலும் இத்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதிகள் கீழ்க்கண்டவாறு பகுதி வாரியாக உள்ளன:

| தடப்பகுதி (1) | பேருந்துகள் எண்ணிக்கை (2) | | நடைகள் (3) |
|---|---|---|---|
| திருவண்ணாமலை முதல் மழவந்தாங்கல் சந்திப்பு சாலை வரை | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோ.1) புறநகர் | 11 | 58 |
| | " (விழுப்புரம், கோ.2) புறநகர் | 4 | 12 |
| | தனியார் பேருந்துகள் | 10 | 48 |
| மழவந்தாங்கல் சந்திப்பு சாலை முதல் மழவந்தாங்கல் வரை | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோ.1) புறநகர் | 2 | 4 |
| | தனியார் பேருந்துகள் | 3 | 16 |





| தடப்பகுதி (1) | பேருந்துகள் எண்ணிக்கை (2) | | நடைகள் (3) |
|---|---|---|---|
| மழவந்தாங்கல் முதல் துத்திப்பட்டு சந்திப்பு சாலை வரை | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோ.1) புறநகர் | 2 | 4 |
| | " நகர் | 2 | 10 |
| | தனியார் பேருந்துகள் | 3 | 16 |
| பொன்னங்குப்பம் முதல் அனந்தபுரம் வரை | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோ.1) புறநகர் | 1 | 2 |
| | நகர் | 1 | 12 |
| அனந்தபுரம் முதல் சங்கீதமங்கலம் வரை | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோ.1) புறநகர் | 1 | 4 |
| | நகர் | 4 | 20 |
| | தனியார் பேருந்துகள் | 2 | 8 |
| சங்கீதமங்கலம் முதல் கல்யாணம்பூண்டி சந்திப்பு சாலை வரை | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோ.1) நகர் | 4 | 20 |
| | தனியார் பேருந்துகள் | 2 | 8 |
| கல்யாணம்பூண்டி சந்திப்பு சாலை முதல் திருவண்ணாமலை சந்திப்பு சாலை வரை | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோ.1) புறநகர் | 21 | 86 |
| | நகர் | 7 | 86 |
| | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம், கோ.1) புறநகர் | 3 | 6 |
| | தனியார் பேருந்துகள் | 17 | 82 |
| திருவண்ணாமலை சந்திப்பு சாலை முதல் விழுப்புரம் வரை | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (விழுப்புரம், கோ.1) புறநகர் | 21 | 86 |
| | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) நகர் | 14 | 154 |
| | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோ.2) புறநகர் | 4 | 14 |
| | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம், கோ.1) புறநகர் | 3 | 6 |
| | தனியார் பேருந்துகள் | 33 | 152 |

இத்தடத்தில் ஒரு பகுதி இதுவரை பேருந்து வசதி பெறாதது என்பதால் தகுதி மற்றும் தட நீளச்சான்றிதழ் கோரி, நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை கோட்டப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

சாலை பேருந்து இயக்குவதற்குத் தகுதியுடையதாகச் சான்றிதழ் கிடைக்கப்பெற்று, ஆய்வு செய்து, தேவை இருப்பின் பேருந்து இயக்கப்படும்.

[1998 மே 21

35—

### வெறையூர் வழியாகப் பேருந்துகள் இயக்குதல்

**வினா 14107—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து வெறையூர் வழியாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலையிலிருந்து திருக்கோயிலூர் மார்க்கத்தில் வெறையூர் வழியாக தினசரி 140 நடைகள் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயங்கி வருகின்றன. மேலும் நகரப் பேருந்துகள் மூலம் 28 நடைகளும் வெறையூர் வழியாக இயங்கி வருகின்றன.

36—

### கண்டியாங்குப்பம் வரை பேருந்து விடுதல்

**வினா 14108—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து காட்டாம்பூண்டி, பாவுப்பட்டு, தளையம்பள்ளம் வழியாக கண்டியாங்குப்பம் வரை பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலையிலிருந்து நகரத் தடம் திருவண்ணாமலை கண்டியாங்குப்பம் (வழி) காட்டாம்பூண்டி, பாவுப்பட்டு, தளையம்பள்ளம் என இயங்கி வருகிறது.



1998 மே 21]

37—

### வேளையாம்பாக்கம் வரை அரசுப் பேருந்துகள் இயக்குதல்

**வினா 14109—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து தச்சம்பட்டு, நவம்பட்டு வழியாக வேளையாம்பாக்கம் வரை அரசு பேருந்துகள் இயக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலையிலிருந்து நகரத் தடம் டி.20 திருவண்ணாமலை, வேளையாம்பாக்கம், தச்சம்பட்டு வழியாக 8 நடைகளும், நவப்பட்டு கிராமத்திற்கு நகரத் தடம் டி.1 திருவண்ணாமலை, மணலூர்பேட்டை, தச்சம்பட்டு, நவப்பட்டு வழியாக 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

38—

### மாணவர்களுக்கென தனியாகப் பேருந்து இயக்குதல்

**வினா 14117—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி மாணவர்களுக்கு பேருந்தில் இலவசமாகச் செல்லும் மாணவர்களுக்கென காலையிலும், மாலையிலும் தனியாகப் பேருந்து செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

39—

### தண்டராம்பட்டில் இருந்து நகரப்பேருந்து இயக்குதல்

**வினா 14127—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டில் இருந்து நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தண்டராம்பட்டு, நகரப் பேருந்து இயக்க அரசால் அங்கீகரிக்கப்படாத நகரம் என்பதால் அங்கிருந்து நகரத் தடம் இயக்குவது சாத்தியமில்லை.

40—

### பேருந்து நடைகளை அதிகரித்தல்

**வினா 14536—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், செங்காநத்தம், பாலமதிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்து நடைகளை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்காநத்தம் கிராமத்திற்கு தினசரி வேலூர்-செங்காநத்தம் என 6 நடைகள் நகரப் பேருந்து இயங்கி வருகிறது. இத்தடத்தில் பயணிகள் அடர்வு 58% தான் உள்ளது. வேலூர், பாலமதி பகுதிக்கு தற்போது



இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்திலும் பயணிகள் அடர்வு 45% தான் உள்ளது. எனவே கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

41—

### சாலை பழுதுபார்த்தல்

**வினா 365—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி, மலையனூர்-தேசியன்குட்டை செல்லும் பாதை மிகவும் பழுதடைந்துள்ளது என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) அதை உடனடியாகப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையின் பழுதடைந்துள்ள கி.மீ. 0/0-3/0 பகுதி தற்பொழுது தார் நொடிகள் போடப்பட்டு பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் செல்ல ஏற்ற வகையிலும் மற்றும் கி.மீ. 3/0-6/2 பகுதி நல்ல நிலையிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

42—

### பாலம் அமைத்தல்

**வினா 5422—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள கன்னடியன் கால்வாயின் குறுக்கே பாலம் அமைத்து, சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதியில், கன்னடியன் கால்வாயில் குறுக்கிடும் அனைத்து அரசுச் சாலைகளிலும் ஏற்கெனவே பாலங்கள் கட்டப்பட்டுள்ளதால் புதியதாகப் பாலங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**43—**

## சாலையை அகலப்படுத்துதல்

**வினா 11165—திரு. கொ. வீ. நன்னன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதி, போளூரிலிருந்து செங்கம் வரும் சாலையை அகலப்படுத்தி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மேற்குறிப்பிட்ட சட்டமன்ற வினாவில் கண்டுள்ள சாலை தற்போது நடைமுறைப்படுத்த உள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Tamil Nadu Road Sector Project) தேர்வு செய்யப்பட்டுள்ளது. முன் தெரிவு நிலை ஆய்வின் முடிவின் அடிப்படையில் செயலாக்க வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

**44—**

## இணைப்புச்சாலை இல்லாத கிராமங்கள் விவரம்

**வினா 11968—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை இல்லாத கிராமங்கள் எவ்வளவு?



(ஆ) இணைப்புச்சாலை இல்லாத கிராமங்களுக்கு அரசு இந்த நிதியாண்டில் மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டத்தில் 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் கொடுக்க வேண்டிய கிராமங்கள் 20 ஆகும். இவற்றில் 11 கிராமங்களுக்கு ஊராட்சி ஒன்றியத் திட்டம் மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தில் இணைப்புச் சாலை கொடுக்கப்பட்டது. மேலும் 8 கிராமங்களுக்கு நபார்டு வங்கி நிதி உதவி திட்டத்தில் இணைப்புச் சாலை வசதி கொடுக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மீதியுள்ள ஒரு கிராமத்திற்கு இணைப்புச் சாலை வசதி செய்வதற்கு இடையில் ஒரு காட்டாறு குறுக்கிடுவதால் பாலம் கட்டுவது அவசியமாகிறது. இதனை இனிவரும் ஆண்டுகளில் அரசு நிதிக்கேற்ப எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**45—**

## கடலூர் துறைமுக மேம்பாடு

**வினா 14063—திரு. திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் துறைமுக மேம்பாடு குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர் துறைமுகத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. துறைமுகத்தில் பெரிய அளவிலான படகுகள் வருவதற்கு ஏதுவாக தற்போதுள்ள கடல்நீர் தடுப்புகளை வடக்கு மற்றும் தெற்குப் புறங்களில் இயற்கையாக கடல்நீர் 15 அடி ஆழம் உள்ளவரை நீட்டிப்பதற்கான கருத்துரு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு இதற்கான சிறந்த வடிவமைப்பு மற்றும் இந்த நிலை

குறித்து அறிந்துகொள்ள மாதிரி ஆய்வு ஒன்று ரூ. 7.50 இலட்சம் செலவில் திருவாளர்கள் ஓஷன் இன்ஜினியரிங் சென்டர், இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி, சென்னை அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்விற்கான இறுதி அறிக்கை மேற்படி நிறுவனத்தினரிடமிருந்து பிப்ரவரி 1998 ஆம் மாதத்தில் பெறப்பட்டுள்ளது. மேற்படி இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியின் ஆய்வு அறிக்கையில் இத்திட்டத்திற்கு ரூ. 87 கோடி செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான கருத்துரு கடல்சார் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

மேற்காண்பவை தவிர, தனியார் பங்கேற்பின் மூலம் 'பூட்' (BOOT) அடிப்படையில் கடலூர் துறைமுகத்தினை அனைத்துப் பருவங்களிலும் கப்பல் அடையும் துறைமுகமாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி மேம்பாட்டைத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கு இணைப்பு நிறுவனமாக திருவாளர்கள் 'டாசிட்' நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறுகள் பற்றிய அறிக்கையினைத் தயார் செய்யும் பணி திருவாளர்கள் கன்சல்டிங் இன்ஜினியரிங் லிமிடெட், புதுடெல்லி அவர்களுக்கு திருவாளர்கள் டாசிட் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. திருவாளர்கள் கன்சல்டிங் இன்ஜினியரிங் நிறுவனத்தினர் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இது குறித்து இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பெட்ரோலிய எண்ணெய் சார்ந்த நிறுவனங்களுக்கு வசதி அளிக்கும் பொருட்டு, துறைமுக நிலங்கள் 7 ஏக்கர் மற்றும் 20.03 ஏக்கர் ஆண்டு உரிமம் அடிப்படையில் முதல் கட்டமாக 15 ஆண்டுகளுக்கு முறையே திருவாளர்கள் ஃபீனா டாக்ஸ் லிமிடெட் மற்றும் சதர்ன் எல்.பி.ஜி. சேமிப்பு முனையங்களை நிறுவுவதற்காக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெரிய அளவிலான சிமெண்ட் மற்றும் நிலக்கரியினைக் கையாள பிரத்தியேக தோணித்துறை முனையத்தை திருவாளர்கள் இந்தியா சிமெண்ட் லிமிடெட் நிறுவனத்தார் ஏற்படுத்தத் தேவையான தகுந்த கடற்கரைப் பகுதியினை ஒதுக்கீடு செய்ய கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, டிட்கோ நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள திருவாளர்கள் கினார்மஸ் இந்தோனிசியன் நிறுவனத்தால் நிறுவப்பட உள்ள காகித அட்டை தொழிற்சாலைக்குத் தேவையான மரக்கூழ்/கழிவு காகிதம்





ஆகியவற்றினைக் கையாள 300 முதல் 400 மெட்ரிக் டன்கள் வரையிலான முன்னியங்கப் பொறியுள்ள பெரிய அளவிலான படகுகளை இயக்குவதற்கு ஏதுவாக தற்போதுள்ள கடலூர் துறைமுகத்தினை மேம்படுத்துவது தொடர்பாக கருத்துருவிற்கும் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**46—**

## வேத ஆகமக் கல்லூரி அமைத்தல்

**வினா 11796—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எல்லா மாவட்டத் தலைமையிடங்களிலும் ஒரு வேத ஆகமக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தற்போது கீழ்க்கண்ட இடங்களில் வேத பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன:

1. அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில், திருப்புகலூர், நன்னிலம் வட்டம்.

2. அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி வட்டம்.

3. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

4. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

5. அருள்மிகு வேதாகம திவ்யபிரபந்தகலாசாலை, திருவில்லிபுத்தூர்.

இவை தவிர, வேதம், ஆகமம், இந்து சமய தத்துவம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும், ஆராய்ச்சி செய்யவும், திருச்சி மாவட்டம் மற்றும் வட்டம், கம்பரசன் பேட்டையில் வேதாகம பயிற்சி நிலையம் உள்ளது.

[1998 மே 21

மேலும் திருக்கோயில் நிதி நிலையைப் பொறுத்தும், பொது மக்களின் ஈடுபாடு மற்றும் வரவேற்பினைப் பொறுத்தும், வேதாகமம் கற்க முன் வருகின்றவர்களின் ஆர்வம், எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்தும் இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**47—**

**அருள்மிகு துர்க்கையம்மன் ஆலயத்திற்குத் திருமண மண்டபம் கட்டுதல்**

**வினா 12649—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாலத்தளி கிராமத்தில் உள்ள அருள்மிகு துர்க்கையம்மன் ஆலயத்திற்குத் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், பேராவூரணி பாலத்தளி கிராமத்தில் உள்ள அருள்மிகு துர்க்கையம்மன் திருக்கோயிலுக்குத் திருமண மண்டபம் கட்ட சுமார் ரூ. 15,00,000 செலவாகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயிலுக்கு திருப்பணிக் குழு அமைத்து, அதன் மூலம் தக்க நிதியாதாரம் திரட்டி திருமண மண்டபம் கட்டும் பணியினை மேற்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**48—**

**ஆன்மீக வகுப்புகள் நடத்துதல்**

**வினா 13337—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 21]

(அ) ஆலயங்களில் நல்லொழுக்கம், ஆன்மீக அறிவு போன்றவைகளை போதிக்க வாரம் தோறும் ஆன்மீக வகுப்புகள் நடத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது 560 திருக்கோயில்களில், திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை போன்ற சமய மற்றும் அறநூல்கள் குறித்து கற்றுணர்ந்த தமிழ் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், சான்றோர்களால் ஆன்மீக வகுப்புகள் விரிவுரை மூலம் பெருமளவில் நடைபெற்று வருகின்றன.

**49—**

**அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலய விவரம்**

**வினா 13748—திரு. பெ. சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அறநிலையத் துறையைச் சேர்ந்த அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திற்கு சென்னை நகரிலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் சொத்துக்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) (1) சென்னை, அடையாறு, ஊரூர் கிராமத்தில் 313 கிரவுண்ட் 621 சதுரஅடி நிலம் (2) புது வண்ணாரப்பேட்டையில் 24 கிரவுண்ட் நிலம் மற்றும் (3) மீர்சாகிப்பேட்டையில் 104 கிரவுண்ட் நிலம் உள்ளது.

50—

### ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துதல்

**வினா 13886—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்கள் தோறும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தி, மனித நேயத்தை உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள கிராமப்புற திருக்கோயில்களில், விசேட தினங்களில் தமிழறிஞர்கள் மூலம் திருக்குறள், தேவாரம், திருப்பாவை, திருவெம்பாவை போன்ற தமிழ்த் திருமறைகள் சொற்பொழிவு நடத்தப்பட்டும், ஒலி பெருக்கி மூலம் பக்திப்பாடல்கள் ஒளிபரப்பப்பட்டும் வருகிறது. மேலும் மகாபாரதம், இராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம் போன்ற சமயச் சொற்பொழிவுகளை தொடர் நிகழ்ச்சிகளாக ஒவ்வொரு வாரமும் நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருமுறைப் பதிகங்களை கல்வெட்டில் பதித்து, மக்கள் கோயில்களுக்கு வழிபடச் செல்லும் போது கவனிக்குமாறு வைக்கப்பட்டுள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. கவன ஈர்ப்பு

### (அ) தேனி மாவட்டத்தில் எட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊழியர்கள் வேலை நிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. என். ஆர். அழகராஜா, திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. என். ஆர். அழகராஜா, திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன் ஆகிய இருவரும் இருக்கையில் இல்லை. எனவே, அவர்களுக்குப் பதிலாக திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "3-4-1998 முதல் தேனி மாவட்டத்திலுள்ள 8 ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**(விவர அறிக்கை)**

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. எஸ். கந்தசாமி அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை உடனடியாக நீக்கவேண்டுமென்றும், பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. பி. நாராயணசாமி மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும், அதுவரை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்தும் ஆய்வுக் கூட்டம், களப்பணி ஆய்வுகளைப் புறக்கணிப்பது என தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தினர் முடிவு செய்து 27-3-1998 ஆம் தேதி நடைபெற்ற ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தை

[திரு. கோ.சி. மணி] [1998 மே 21

புறக்கணித்தனர். இவ்வாறு ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத 27 அலுவலர்களுக்கு வேலை செய்யாத நாட்களுக்கு ஊதியம் இல்லை என்ற அடிப்படையில் ஒரு நாள் ஊதியத்தை நிறுத்தி வைத்து 30-3-1998-ல் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணையிடப்பட்டது. மேலும் 30-3-1998 ஆம் தேதி மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வராத ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் அரை நாள் ஊதியத்தையும் நிறுத்தி வைத்து ஆணையிடப்பட்டது.

2. பின்னர், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க நிர்வாகிகள் தங்களது 2-4-1998 ஆம் நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்காக 3-4-1998 ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப் போவதாகத் தெரிவித்தனர்:

கோரிக்கை 1: ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. சோ. கந்தசாமிக்கு வழங்கப்பட்ட தண்டனை திருப்பப் பெறப்படல் வேண்டும்.

கோரிக்கை 2: பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. பி. நாராயணன் மீது பழிவாங்கும் நோக்கத்துடன் பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டை விலக்கிக் கொள்ளல் வேண்டும். மேலும் நிறுத்தி வைக்கப்பட்ட இவரது பதவி உயர்வை மீண்டும் வழங்கலாமென பரிந்துரை செய்தல் வேண்டும்.

கோரிக்கை 3: பழிவாங்கும் நடவடிக்கைகளான 27-3-1998-ல் ஆணையாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு ஒரு நாள் ஊதியப் பிடித்தம் செய்ய உத்தரவிட்டதை இரத்து செய்ய வேண்டும்.

3. இக்கோரிக்கைகள் குறித்து தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாநில நிர்வாகிகளுடன் 2-4-1998-ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

அதில் பின்வரும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டு, அவர்களைப் பணிக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

1. திரு. சோ. கந்தசாமி மீதான குற்றச்சாட்டுகளின்மீது ஏற்கெனவே முடிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு விட்டதால், அவ்வுத்தரவுகளின்மீது சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு மேல்முறையீடு செய்து பரிகாரம் காணலாம்.



1998 மே 21] [திரு. கோ.சி. மணி]

2. பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. பி. நாராயணசாமி மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன. அன்னாரது கோரிக்கையின்படி விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு விசாரணை நடைபெற உள்ளது. எனவே, இவரின் மீதான குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொள்ள இயலாது. 27-3-1998 மற்றும் 30-3-1998 ஆகிய நாட்களில் பணிக்கு வராமைக்கு நிறுத்தி வைக்கப்பட்ட ஊதியத்தை நிறுத்தி வைத்தது தொடர்பான அரசினருக்கு முன்மொழிவுகள் அனுப்பி, அரசினரின் உத்தரவுகள் பெற்ற பின்னர் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. எனினும், இம்மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலகங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து மட்டத்திலும் பணிபுரியும் ஊழியர்களில் 315 நபர்கள் 3-4-1998 ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். 112 ஊழியர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர். 8 ஊழியர்கள் முறையான விடுப்பில் இருந்தனர்.

பின்னர், 22-4-1998 ஆம் தேதியன்று, பிற்பகல் 5.30 மணியளவில் இச்சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள், புதிதாகப் பொறுப்பேற்ற மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து தங்களது கோரிக்கைகளை விவாதித்தனர். பேச்சு வார்த்தையில் கீழ்க்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன:

1. அலுவலர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட அனைத்து நிலுவைக் கோப்புகளின்மீதும் விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு, விதிகளுக்கும் சட்டத்திற்கும் உட்பட்டு ஆணைகள் பிறப்பித்தல்.

2. வேலை நிறுத்த காலத்திற்கு "No Work - No Pay" என்ற அடிப்படையில் சம்பளம் கிடையாது.

3. 23-4-1998 முற்பகல் முதல் வேலை நிறுத்தத்திலிருந்து வளர்ச்சிப் பணியாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்ப ஒப்புக் கொண்டனர்.

4. மாவட்டத்தின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு நல்குவதாகவும் உறுதியளித்தனர்.

5. ஊழியர்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்ப இசைவு தெரிவித்ததின் அடிப்படையில் அவர்கள் மீண்டும் பணிக்கு வருவதை மாவட்ட நிர்வாகம் ஏற்றுக் கொண்டது. அதன்படி தேனி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் 23-4-1998 ஆம் தேதியன்று, பணிக்குத் திரும்பினர். தற்போது பணிகள் அனைத்தும் முழுவீச்சில் தொடங்கப்பட்டு விட்டன. 25-4-1998 அன்று ஊராட்சித் தலைவர்கள் மற்றும் வளர்ச்சித் துறை அலுவலர்கள் கூட்டமும் நடத்தப்பட்டது.

## (ஆ) தருமபுரி கூட்டுறவு விசைத்தறிக் கூடம் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கு. மனோகரன் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தருமபுரி கூட்டுறவு விசைத்தறிக் கூடம் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்களின் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது:

### விவர அறிக்கை

தருமபுரி நகரில் 96 தறிகளுடன், 100 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வந்த தருமபுரி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததால் 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 40 இலட்சம் நட்டம் ஆகியுள்ளது. காசுக்கடன் ரூ. 10.50 இலட்சம் முழுவதும் இழந்து கூட்டுறவு நூற்பாலையில் பெறப்பட்ட கடன் ரூ. 33.57 லட்சம் திருப்பிச் செலுத்த முடியாத தேக்கநிலை ஏற்பட்டு சங்கம் செயலிழந்து உள்ளது. இந்நிலையில் மேற்படி விசைத்தறிக் கூடத்தை மீண்டும் செயல்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.





**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இந்த நூற்பாலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கிய காரணத்தால், இந்தச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டால் மேலும் நட்டம் வரும் என்ற காரணத்தால், ஆலை மூடப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதிகாரிகள் கடந்த காலங்களில் சரியான முறையில் நிர்வாகம் செய்யாத காரணத்தால், தருமபுரி நகரிலே இயங்கிய ஒரே ஒரு 'தருமபுரி கூட்டுறவு விசைத்தறிக் கூடம்' கடந்த 8 மாதங்களாக மூடப்பட்டிருப்பதால், 100-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் வேலையின்றி, அவர்கள் செய்த வேலைக்கு சுமார் 3, 4 மாதங்கள் சம்பளம்கூட இல்லாமல் இன்றைக்குத் தெருவிலே நிற்கக்கூடிய அளவுக்கு அவலநிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 100 குடும்பங்களுக்கு வாழ்வு அளிக்கும் விதத்தில் மறுபரிசிலனை செய்து அந்த கூட்டுறவு விசைத்தறிக் கூடத்தைத் திறக்க, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள விசைத்தறிச் சங்கம், தொழிலியல் விசைத்தறிச் சங்கம் ஆகும். அந்தத் தொழிலியல் சங்கத்திலே தறியிலே ஒரு வேலை செய்தால், தறிக்குத் துணையாக வேலை செய்தவருக்கு ஒருவர் என்ற அடிப்படையிலே 40 தறிக்கு 100 பேர் அங்கே இருக்கின்ற ஒரு சூழ்நிலையும், அந்தத் தொழிலியல் விசைத்தறிக் கூடத்தில் மட்டும் E.P.F., Insurance கட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டதாலும், தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு அதை இயக்க முடியாத அளவுக்கு ஆலைக்குக் கொடுக்கவேண்டிய கடன் இன்னும் 33.57 இலட்சம் பாக்கியிருப்பதாலும், அதேபோல, Cash Credit ரூ. 10.50 இலட்சம் பெற்றுக்கொண்டு, அதனால் நடத்த முடியாத ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது என்ன நடந்திருக்கிறது என்றால், இப்படிப்பட்ட சங்கங்களையெல்லாம் பிரதம விசைத்தறி நெசவாளர் சங்கங்களாக மாற்றிக்கொண்டால் அது இலாபகரமாக இயங்கும் என்பதையொட்டி, 4 தொழிலியல் விசைத்தறி சங்கங்கள் இன்று பிரதம விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்பட்டு, இலாபத்தை அடைகின்ற சூழ்நிலையிலும், மீதி இருக்கின்ற மற்ற விசைத்தறி சங்கங்களெல்லாம் மூடப்படும் சூழ்நிலையும்

ஏற்பட்டுவிட்டது. ஆகவே, இந்த சங்கங்களையெல்லாம் பிரதம விசைத்தறியாளர் சங்கங்களாக அவர்கள் மாற்றிக் கொண்டால், அதற்குரிய பணிகளைக் கொடுப்பதற்குத் துறையிலே வாய்ப்பு இருக்கிறது.

*முற்பகல் 9-35*

## 3. தகவல் கோரல்

### கவன ஈர்ப்பிற்கான அறிக்கை அவையில் வைத்தல்

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தக் கவன ஈர்ப்பை யார் கொடுத்தார்களோ அவர்கள்தான் கேள்வி கேட்கலாம். நீங்கள் மூத்த உறுப்பினர். உங்களுக்குத் தெரியாதது எதுவும் இல்லை. யார் கவன ஈர்ப்பைக் கொடுத்தார்களோ அவர்களுக்குத்தான் கேள்வி கேட்பதற்கு வாய்ப்புண்டு.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களது, கவன ஈர்ப்பிற்கான...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தக் கவன ஈர்ப்பு முடிந்து, அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்பிற்கான அறிக்கையை அவையில் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி எதுவும் இங்கே வைக்கப்படவில்லை. அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் மூத்த உறுப்பினர். நேற்று எடுக்க வேண்டிய கவன ஈர்ப்பு, நேரம் இல்லாத காரணத்தினால் இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அறிக்கை நேற்றே அவையில் வைக்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவல்களைத் தருபவர்களெல்லாம் கூடி, சரியான தகவல்களைத் தருபவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னால், அது நியாயமாக இருக்குமா? நீங்கள்தான் நேற்று ஒத்திவைத்தீர்கள். நேற்றைக்கே நான் அறிக்கையை வைத்துவிட்டேன். அதை அவர் எடுத்துக்கொண்டு போய்விட்டார். அதை இன்றைக்கு எடுத்து வராதது அவருடைய குற்றம். என்னுடைய பொறுப்பா அது? நேற்றைக்கே வைக்கப்பட்ட அறிக்கையை, அவர் படித்துவிட்டு, அதை இன்றைக்குக் கொண்டுவர வேண்டியதுதானே? இந்தக் கவன ஈர்ப்பு அவருக்குரியதும் இல்லை. யார் கேட்க வேண்டுமோ அவர் கேட்கவில்லை. இவர் கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் தெரியாமல் சொல்லிவிட்டார், அமைச்சர் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அவைக்கு வைக்க வேண்டுமல்லவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அறிக்கை ஒருமுறைதான் வைப்பார்கள், நேற்றைக்கே வைத்தாகிவிட்டது.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் ஒருமுறை வைக்கப்பட்டுவிட்டால், அது என்றைக்கும் அவையில் வைக்கப்பட்டதுதான் என்ற அந்தக் கருத்து அவையினால் நிரந்தரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும்

அறநிலைக் கொடைகள் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 46-செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல்

### (ஆ) கோரிக்கை எண் 50 - சுற்றுலா

### (அ) கோரிக்கை எண் 46 - செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.



மானியக் கோரிக்கை எண் 46 — செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 16,89,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2640, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 199, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,89,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2754, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3093, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,89,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2097. திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 620, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1711, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,89,86,000/-ல் ரூ.100- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2306, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3313, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1846, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3824, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திரையரங்குகளில் திரைப்படம் முடிந்ததும் தேசியகீதம் இசைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,89,86,000-ல் ரூ.100- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1078, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவையின் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) கோரிக்கை எண் 50 - சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50, சுற்றுலா. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,92,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2636, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 187, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,92,25,000-இல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2744, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

---

@ 347 முதல் 383 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

வெட்டுத் தீர்மானம் எண் 3661, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.2,92,25,000-இல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 616, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1715, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை அருகாமையில் அமைந்துள்ள லகூன் இடத்தைச் சுற்றுலா மையமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,92,25,000/-இல் ரூ.100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2309, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3320, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1852, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3955, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி நாமகிரிப்பேட்டை ஒன்றியம் பெரியகோம்பைக்கு அருகில் உள்ள பள்ளிப்பாறையை சுற்றுலா மையமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.2,92,25,000/-இல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 9-40



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1094, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 937, திரு.ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3348, திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2160, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு வட்டம் தூத்தூர், ஊராட்சி, இரவிப்புத்தன்துறையைச் சுற்றுலா மையமாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.2,92,25,000/-இல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2578, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பிரசித்தி பெற்ற கோவில்கள், குளங்கள், இன்னும் பல சிறப்புகளடங்கிய மன்னார்குடி நகரைச் சுற்றுலாத் தலமாக அறிவித்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.2,92,25,000/-இல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3748, திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலுள்ள கொள்கை விளக்கக்

குறிப்பை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தைத் தொடங்கி வைப்பவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு. பேசுகின்ற உறுப்பினர்கள், இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கும் சேர்த்தே பேசலாம்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள தியேட்டர்கள் எல்லாம் தற்போது சுகாதாரக் கேடு உள்ளதாகவே இருக்கின்றன. அவற்றில் டிக்கெட் எடுக்கச் செல்லும்போது, டிக்கட் கிடைப்பதாகவும் தெரியவில்லை. 'சிகரெட்' அட்டையில் ஒரு முத்திரையைக் குத்தி, அவர்கள் நினைத்தபடி வசூல் செய்கின்ற நிலையெல்லாம் இருக்கிறது. அதோடு, பகல் காட்சிகளில் இளைஞர்களையெல்லாம் கெடுக்கின்ற வகையில், சில தியேட்டர்களில் 'ப்ளூ பிலிம்' கூட காட்டப்படுகிறது. ஆகவே, தியேட்டர்களையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தியேட்டர்களை நடத்துகிறவர்களுக்கும் சில கஷ்டங்கள் தற்போது இருக்கின்றன. வீடியோ, டி.வி. போன்ற தொலைக்காட்சி சாதனங்கள் முன்னேற்றம் அடைந்துள்ள காரணத்தினால், தியேட்டர் தொழிலும் பாதிக்கப்பட்டு, அதனால் தியேட்டர் உரிமையாளர்களும் பாதிப்பு அடைந்துள்ளனர். தமிழகத்தினுடைய சாதனைகள் இந்தியாவினுடைய சாதனைகள், மதக் கலவரங்களைத் தடுத்தல், தேசிய ஒருமைப்பாடு போன்றவற்றை விளக்கும் படச் சுருள்களைக் கொண்டு 10 நிமிடங்கள் அல்லது 15 நிமிடங்கள் என்று முன்னர் தியேட்டர்களில் படங்கள் காட்டப்பட்டன. ஆனால், அவை முழுவதுமாக தற்போது நிறுத்தப்பட்டு விட்டதாகவே தெரிகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசினுடைய சாதனை விளக்கங்கள் எல்லாம், தொலைக்காட்சியிலே உடனுக்குடன் காட்டப்பட வேண்டும் என்பதற்காக, அவற்றைத் தொலைக்காட்சியிலேயே அதிகமாகக் காட்டுகிற காரணத்தினாலோ என்னவோ, சினிமா தியேட்டர்களில் அரசினுடைய சாதனைகளும், தேசிய ஒருமைப்பாடு போன்றவற்றை விளக்கும் நிகழ்ச்சிகளும் கொண்ட நல்ல படச் சுருள்களை உபயோகிப்பதில்லை என்று நினைக்கிறேன். இது குறித்து அரசினுடைய கவனத்திற்குக்

@ 385 முதல் 405 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



கொண்டு வருகிறேன். வருங்காலங்களில், தியேட்டர்களில் அப்படிப்பட்ட நல்ல கருத்துள்ள, நம்முடைய அரசு தயாரிக்கின்ற படச் சுருள்களைப் போட்டுக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொருட்காட்சிகள் — என்னுடைய நெல்லை மாவட்டத்தில், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறைதான் பொருட்காட்சி நடைபெறுகிறது. மற்ற மாவட்டங்களில், கோவை, மதுரை, சேலம் போன்ற நகரங்களில் ஆண்டுக்கு ஒருமுறை பொருட்காட்சி நடைபெறுகிறது. ஆகவே, நெல்லையிலும் ஆண்டுக்கு ஒருமுறை பொருட்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு பற்றிய புகைப்படக் கண்காட்சி, மதுரையில் நடைபெறுகிறது. தற்போது மதக் கலவரங்களால் பாதிக்கப்பட்டுள்ள நெல்லையிலும், அதுபோன்ற தீண்டாமை ஒழிப்பு பற்றிய புகைப்படக் கண்காட்சியை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, மறைந்த தலைவர்கள், இந்த நாட்டுக்காக உழைத்தவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னங்கள், சிலைகள் அமைத்து, அவர்களை மிக அருமையாகக் கௌரவப்படுத்திக் கொண்டு வருகிறீர்கள். ஆனால், அவ்வாறு வைக்கப்பட்டிருக்கின்ற சிலைகள் எல்லாம் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. குறிப்பாக, நம்முடைய மெரினா கடற்கரையை எடுத்துக் கொண்டால், அங்கே இருக்கின்ற சிலைகளில் எல்லாம் காக்கைகள் உட்கார்ந்து அசிங்கம் செய்கின்ற அளவுக்கு படுமோசமான நிலையிலே உள்ளன. எழும்பூர் அருகே, திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய சிலையைப் பார்த்தோம் என்று சொன்னால், தினமும் மிக அருமையாக அதைத் துடைத்து, சுத்தம் செய்து, காலையில் அருமையாக ஒரு மாலையை அதற்கு அணிவித்து, கௌரவப்படுத்தி வருகிறார்கள். அந்த அளவுக்கு சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய சிலை கவனிக்கப்படுகிறது. அதையே உதாரணமாக எடுத்துக் கொண்டு, கடற்கரைச் சாலையில் இருக்கின்ற சிலைகளை நமது அரசு முறையாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கவனிக்க முடியவில்லை என்றால், அவ்வாறு பராமரிப்பதற்கு, தனியாரிடம், 'நீங்கள் இதை கவனியுங்கள்; சிறு சிறு விளம்பரங்களை நீங்கள் உபயோகப்படுத்துங்கள்' என்று சொன்னால், அவர்கள் மிக அருமையாகக் கவனிப்பார்கள் தொழிலதிபர்களும், நல்ல பணவசதி படைத்தவர்களும்கூட அவ்வாறு செய்வதற்கு முன்வருவார்கள். ஆகவே, மெரினா கடற்கரையில்

அமைந்திருக்கின்ற அந்தச் சிலைகளையாவது, தனியாரிடம் ஒப்படைத்து, அவற்றை நல்ல முறையில் கவனிப்பதற்கு, அங்கு சிறு சிறு விளம்பரங்கள் வைப்பதற்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாநகரத் தந்தை மேயர் அவர்கள்கூட நேற்று மெரினா கடற்கரைக்குச் சென்று பார்வையிட்டார்கள். அங்கே பொதுச் சுகாதாரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அந்தக் கடற்கரையின் ஓரங்களைப் பொதுக் கழிப்பிடமாக மக்கள் பயன்படுத்துகிறார்கள். அவற்றையெல்லாம் மேயர் அவர்கள் பார்த்துக் கண்டித்து, அந்த இடங்களை நல்ல முறையில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

முற்பகல் 9-45

மெரினா கடற்கரையிலுள்ள சிலைகளைத் தினமும் சுத்தப்படுத்தி, நல்ல முறையிலே பராமரிக்கும் பணியை முதற்கட்டமாகத் தனியாரிடம் ஒப்படைக்கலாம்.

மெரினா கடற்கரையில் இரண்டு சிலைகளுக்கு இடையிலே உள்ள பகுதியைத் தனியாருக்கு ஒப்படைத்து, அதைச் சுத்தமாகத் தினமும் கவனித்துக்கொள்ளுங்கள் என்றால்கூட அருமையாகக் கவனித்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு தொழிலதிபர்கள் இருக்கிறார்கள். எனவே இதை இந்த அரசு மனதில் வைத்துச் செயல்படுத்த வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்திலே இந்த நாட்டுக்காக உழைத்த தியாகிகளுடைய சிலைகளைப் பார்த்து மக்கள் மனதிலே நல்லெண்ணம் ஏற்படும்; அந்தத் தியாகச் செம்மல்களுடைய வாழ்க்கையை நாமும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும் என்பதற்காகத்தான் சிலைகள் எல்லாம் வைக்கப்பட்டன. ஆனால் தற்போது சிலைகள் என்றாலே யாருடைய சிலை என்று பார்க்கிறார்கள். அதிலும் சாதியை மையமாக வைத்து, அந்தச் சிலைகள் தமக்கே உரியது என்ற குறுகிய வட்டத்திற்குள் கொண்டுவந்துவிட்டார்கள். உதாரணமாக பெருந்தலைவர் காமராஜர் சிலையையோ, தேவர் திருமகன் சிலையையோ அல்லது டாக்டர் அம்பேத்கர் சிலையையோ பார்த்தால் அந்தந்தச் சாதிக்குச் சொந்தமானவர்கள்தான் அதைச் சொந்தம் கொண்டாடுகிறார்கள் என்ற எண்ணத்தை உருவாக்குகின்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அந்த நிலையை நிச்சயமாக மாற்ற வேண்டும். நான் இந்த நேரத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்



திரு. வல்லரசு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் கடந்த ஆண்டு பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக கோவா சென்றார்கள். கோவா கடற்கரையில் குளிக்கும்போது, முதலில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குளிக்கும்போது அவருடைய உடைமையை மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு அவர்கள் பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். பிறகு திரு. வல்லரசு அவர்கள் குளிக்கும்போது டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் திரு. வல்லரசு அவர்களுடைய உடைமையைப் பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். இருவரும் ஒரே அறையில் தங்கி, ஒருவருக்கு ஒருவர் நண்பராக இருந்து 10 நாட்கள் மிக சந்தோஷமாக இருந்துவிட்டு அந்தப் பயணத்தை முடித்து விட்டு இங்கே வந்திருக்கிறார்கள். கோவாவிற்குச் சென்றால் நீங்கள் ஒருவர் உடைமையை ஒருவர் பாதுகாக்கிறீர்கள். இருவரும் ஒரே அறையில் தங்கியிருந்து சந்தோஷமாக இந்த நாட்டினுடைய முன்னேற்றத் திட்டங்களை எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நீங்கள் தமிழகத்தில், குறிப்பாக, தென்மாவட்டங்களுக்கு இணைந்தே வந்து, இந்த அரசுக்கு உறுதுணையாக இருந்து, அங்கே சாதிக் கலவரம் தொடராத அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக உதவி செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சபையிலே இவ்வளவு அருமையாகச் சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே, இதேபோன்று உங்களை நம்பியிருக்கின்ற மக்களையும் நீங்கள் சிரிக்க வைக்க வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அஸ்தி வைக்கப்பட்ட கன்னியாகுமரியிலே—

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிந்தனைக்குரிய, ஒரு சீரியலான ஒரு சமூகப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய நல்ல ஆலோசனையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஓர் அனுகூலமான பிரதிபலிப்பை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களிடமிருந்து இந்த அவை எதிர்பார்க்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தமட்டிலும் தமிழ்நாட்டில் வாழ்கிற, இந்தியாவிலே வாழ்கிற தாழ்த்தப்பட்ட, மிக மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பொறுத்தமட்டிலும், பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லக்கூடிய அல்லது முற்படுத்தப்பட்டவர்கள் ,என்று

சொல்லக்கூடியவர்களோடு கை குலுக்குவதற்கு என்றும் அவர்கள் மறுத்தவர்கள் அல்ல. நான் ஏற்கெனவே கடந்த ஆண்டு எல்லா கட்சித் தலைவர்களையும் ஒன்றுகூட்டி நடத்திய கூட்டத்திலேகூட நாங்கள் ஒன்று சேர்வதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிறோமே தவிர பிரிந்து செல்வதற்காக அல்ல என்று சொல்லியிருக்கிறோம். இப்போது நாங்கள் நடத்தக்கூடிய போராட்டம், நாங்களும், நீங்களும் அல்லது தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், முற்படுத்தப்பட்டவர்களும் சமமானவர்கள் என்று சொல்வதற்கான போராட்டமே தவிர வேறுபட்டவர்கள் என்று சொல்வதற்காக அல்ல. எனவே அதை நோக்கி எல்லோரும் செல்லவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அதற்காகத்தான் நானும் போராடிக் கொண்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே நிச்சயமாக நான் ஒத்துழைப்புக் கொடுப்பேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு, உங்கள் உணர்வை நீங்கள் தெரிவிக்கலாம்.

*முற்பகல் 9-50*

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் இன்றையதினம் ஒரு நல்ல கருத்தை எடுத்து வைத்தார்கள். நீங்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், சட்டமன்றக் கமிட்டி கோவா சென்றிருந்தபோது ஒரே அறையில் தங்கி, நண்பர்களாக நல்ல முறையில் பழகினீர்கள், அப்படிப்பட்ட நீங்கள் தென் மாவட்டங்களில் ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்காக ஒன்று சேர்ந்து பயணம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் அதற்குத் தயாராக இருக்கிறோம். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தயாராக இருப்பாரேயானால் நாங்களும் அவருடன் ஒன்றாக இணைந்து சென்று சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் இருவரும் தாங்கள் சமாதானமாக இருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு சேர்ந்து எல்லா கிராமங்களுக்கும் சென்று அமைதியை ஏற்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்ற



நல்ல கருத்தைத் சொன்னதற்காக நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 15 நாட்களுக்கு முன்னால் கன்னியாகுமரிக்குச் சென்றிருந்தபோது பெருந்தலைவர் காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட அதே இடத்தில் மணி மண்டபம் கட்டித்தரப்படும் என்ற ஒரு நல்ல செய்தியை வெளியிட்டிருந்தார்கள். அதற்காக எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலே அந்த மணி மண்டபம் எவ்வளவு செலவில் கட்டப்படும், எந்த வடிவமைப்பில் இருக்கும், எவ்வளவு காலத்தில் கட்டப்படும் என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை.

***மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்ம வீரர் காமராஜர் மறைந்தபோது காந்தி மண்டபம் அருகே அவருக்காக நினைவு மண்டபம் கட்டுவதற்கான இடத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அவருடைய நினைவைப் போற்றுகின்ற வகையில் கன்னியாகுமரியில் அவருடைய அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 500 மீட்டர் இடைவெளிக்குள் கட்டடம் கட்டக் கூடாது என்று மத்திய அரசினுடைய மற்றும் உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவு இருக்கின்ற காரணத்தால், அதற்கான அனுமதியைப் பெறுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையோடு மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான மதிப்பீடுகளைப் பொதுப் பணித் துறை தயாரித்து வருகின்றது. அனுமதி கிடைத்தவுடன் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று அவர்கள் விரும்புகின்ற வண்ணம் சிறப்பாக மணி மண்டபம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய சென்னை கடற்கரையில் தலைவர்களுடைய நினைவு மண்டபங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அவற்றுக்கு எவ்வாறு நீங்கள் விரைவாக அனுமதி பெற்றீர்களோ, அந்த அடிப்படையிலேயே கன்னியாகுமரியிலும் விரைவாக அனுமதி பெற்று மணி மண்டபம்

கட்டித்தரப்படும் என்ற உறுதியை அளித்ததற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை 20 நிமிடங்கள் ஓடுகின்ற அளவுக்கு வண்ணப்படமாகத் தயாரிப்பதற்காக 8.28 இலட்சம் ரூபாயை அனுமதித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும் நீங்கள் வண்ணப் படமாகத் தயாரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரையுலக வித்தகர்களைக் கௌரவிக்கும் வண்ணம் அண்ணா, கண்ணதாசன், கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர். ஆகியோர் பெயரால் கலைத் துறை வித்தகர்களுக்கான விருதுகள் வழங்கப்படுவது போல, கலைத் துறைக்கு எவ்வளவோ சேவைகள் செய்து இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் பெயரிலும் வித்தகர்களுக்கான விருதுகள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகமானது ஆங்கிலத்திலே சிறப்பாகத் தயாரித்து இருக்கிறது. அதைத் தமிழிலே மொழி பெயர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 இலட்ச ரூபாயைக் கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தமிழில் டப்பிங் செய்யப்படுகின்ற வேலைகள் நடைபெற ஆரம்பித்துவிட்டன. அதற்காகவும் உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரைப்படத் தொழிலாளர்கள் காப்புறுதித் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டம். மாதம் 25 ரூபாய் வீதம் நிலுவை இல்லாமல் சந்தா செலுத்தினால் ஓய்வூதியத் திட்டத்திலும் விபத்துக் காப்புறுதித் திட்டத்திலும் சேர்க்கப்படுவர் என்று தெரிவித்துள்ளீர்கள். அதற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள் இறந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்று இருக்கிறது. அதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் ஆண்டுச் சம்பளம் 40 ஆயிரம் ரூபாய் இருந்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று கூறியிருக்கிறீர்கள். அதை 60 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் பத்திரிகைத் துறையில்



வேலை பார்க்கும் அனைவருக்கும், சென்னையில் இருப்பவர்களுக்கு மட்டுமன்றி மாவட்டத் தலைநகரங்களில் இருப்பவர்களுக்கும் குடியிருப்பதற்கான வீட்டுவசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரானது மிகவும் மோசமான நிலையில் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றது. நான் கடந்த 15 தினங்களுக்கு முன்னால் அங்கே சென்றபோது அங்குள்ள இரயில் போன்றவைகள் எல்லாம் பழுதடைந்து இருந்தன. அவற்றையெல்லாம் உடனடியாக சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அங்கே மாணவர்களுக்கு அரைக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. மாணவர்களுக்கு திரைப்பட நகரைப் பார்ப்பதற்கு இலவச அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் கடந்த கால ஆட்சியில் கிட்டத்தட்ட ஐந்து கோடி ரூபாய்க்கு மேலாக ஊழல் நடைபெற்றிருக்கிறது. அவற்றையெல்லாம் பேசுவதற்கு நேரமில்லை. ஆகவே, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களிடம் கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்ட ஊழலைப் பற்றியெல்லாம் மிகத் தெளிவான விவரங்கள் என்னிடம் இருப்பதைத் தருகிறேன். அதில் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற யாத்திரிகர்கள் விடுதியில் இருக்கின்ற அறைகள் போதாது. இன்னும் கூடுதலாக அங்கே 20 அறைகளைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நன்றி கூறி அமைகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். டேவிட் செல்வின்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கைகளில் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த உலகத் தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் தங்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்க காலத்திலே புலவர்கள் அரசர்களாகவும், அரசர்களே பெரும் கவிஞர்களாகவும் இருந்தது போல இன்று நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கின்றார்கள்.

அவர்கள் ஒரு பெரிய கவிஞராக, சிற்பியாக இருக்கின்ற காரணத்தினால்தான் தமிழகத்திற்கு என்றைக்கும் புகழ் சேர்க்கக்கூடிய வள்ளுவர் கோட்டமும், பூம்புகாரும் மற்றும் வாஞ்சை வேந்தனுக்கு பாஞ்சாலங்குறிச்சியிலே ஒரு கோட்டையும் கிடைக்கப்பெற்றது. அது போல சிற்பக் கலையிலே சிறந்து விளங்குகின்ற தமிழகத்தில் அந்தக் கலையைச் சிறப்பாகத் தன்னகத்தே கொண்டிருக்கக்கூடிய ஆலயங்கள் நிறைய இருக்கின்றன. அதிலே ஒன்று திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்கின்ற சாலையில் 10 கிலோ மீட்டர் தூரத்தில் கிருஷ்ணாபுரம் என்ற ஒரு சிற்றூரில் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது நேரிலே சென்று அந்த ஆலயத்தையும் சிற்பங்களையும் பார்த்து இருக்கிறார்கள் என்று அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். பாண்டிய நாட்டில் அரசு செலுத்திய சொக்கநாத நாயக்கருக்குப் பின்னால் பட்டத்திற்கு வந்த அவரது மகன் கிருஷ்ணப்ப நாயக்கர் மிகுந்த கலை ஆர்வத்தோடு அந்தச் சிற்பங்களையெல்லாம் அந்த ஆலயத்திலே செதுக்கி வைத்ததாகச் சொல்கிறார்கள். அதற்குச் சரித்திரங்கள் சான்று பகர்கின்றன. அங்கேயுள்ள சிற்பங்களையெல்லாம் பார்க்கும்போது அவைகள் எல்லாம் சிலைகள்தானா அல்லது மனித சிருஷ்டியா என்று எண்ணக்கூடிய அளவிற்கு அந்தச் சிற்பங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே உள்ள தூண்களில் பல்வேறு வகையான சிற்பங்கள் இருக்கின்றன. ஒரு தூணில் நடனமாடக்கூடிய தெய்வ மாது தன்னுடைய ஒரு கையில் ஒரு பூச்செண்டையும் மற்றொரு கையிலே மாதுளம் பழத்தையும் வைத்துக்கொண்டு பூச்செண்டும் மாதுளம் பழமும் கீழே விழாத வண்ணம் தன்னுடைய அங்கங்களையெல்லாம் அசைத்து நடனமாடுகின்ற சிலை செதுக்கப்பட்டுள்ளது. அது போல மற்றொரு தூணிலே ஒரு அரச குமாரியை ஒரு குறவன் தன் தோளிலே தூக்கிச் செல்கின்றான். அவளை மீட்க வருகின்ற வீரர்கள் அந்தக் குறவனைக் காயப்படுத்துகின்றனர். அதனால் வருகின்ற ரத்தம் சிவப்புக் கற்களால் வடிக்கப்பட்டு உண்மையிலேயே குருதியானது அங்கே சொரிகின்ற அளவிற்கு அந்தத் தூணிலே தத்ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அது போல இன்னொரு தூணிலே ஒரு பெண் சிலை வடிக்கப்பட்டிருக்கின்றது. அதிலே அவள் நகைகளையெல்லாம் அணிந்திருக்கின்றாள். அதிலே மூக்குத்தி அணிவதற்கு ஒரு நுண்ணிய இடைவெளி விட்டு அந்தச் சிலையை செதுக்கியிருக்கின்றார்கள். இப்படியாக ஒவ்வொரு சிலையையும் பார்க்கின்றபோது அந்தச் சிலைகளில் நரம்பு மற்றும் தசைச் சுருக்கங்கள் கூட மிகத் தெளிவாகத் தெரிகின்ற அளவிற்கு அவ்வளவு சிறப்பான



சிலைகள் எல்லாம் கிருஷ்ணாபுரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதியினை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் சுற்றுலாத் தலமாக அறிவித்து அதற்கு சிறப்புச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே வளம் கொடுக்கக்கூடிய பொருணை நதி என்னும் தாமிரபரணி ஆற்றின் இருபுறத்திலும் நவதிருப்பதி என்று அழைக்கப்படுகின்ற திருமாலினுடைய 9 கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இந்த நவதிருப்பதிக்கு வந்து செல்கின்றார்கள். இந்த நவதிருப்பதிக் கோயில்களைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து அந்தக் கோயில்களுக்கு வந்து செல்கின்ற பக்தர்களுக்கு ஒரு சிறப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

பண்டைத் தமிழர்களுடைய நாகரிகத்தைப் பறைசாற்றுகின்ற ஆதிச்சநல்லூர் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அங்கே கிடைக்கப்பெற்ற முதுமக்கள் தாழிகள், இரும்பு போர்க் கருவிகள், பித்தளை நகைகள், பாத்திரங்கள் ஆகியவைகள் எல்லாம் நம்முடைய பண்டைத் தமிழர்களின் நாகரிகத்தைப் பறைசாற்றுகின்ற வகையில் அமைந்திருக்கின்றன. எனவே, ஆதிச்சநல்லூரில் அருங்காட்சியகம் ஒன்று அமைத்து அவைகளைப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்கள் எல்லாம் எதிர்காலத்தில் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக, சுற்றுலாத் துறையின் சார்பாக ஓர் அருங்காட்சியகத்தை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழர்களுடைய சரித்திரத்திலே தன்னுடைய பெயரைப் பொன் எழுத்துக்களால் பொறித்துக்கொண்ட ஒரு துறைமுகம் இன்றைக்குப் பொலிவு இழந்து கிடக்கிறது. பாஞ்சாலங்குறிச்சி பொட்டல் காடாக இருந்தது. கலைஞர் அவர்களுடைய கருணைக் கண்கள் பட்டதற்குப் பிறகு, அந்த வடிவமைப்பை அப்படியே அகழ்ந்து ஆராய்ந்து, அந்த வடிவமைப்பிலேயே பாஞ்சாலங்குறிச்சி வேந்தனுக்கு அங்கே ஒரு கோட்டையைக் கட்டிப் புகழ் சேர்த்து, சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள் எல்லாம், அங்கே சுற்றுலாவாகச் சென்று வரக் கூடிய நிலைமை

ஏற்பட்டுள்ளது. அதுபோல, பாண்டிய நாட்டின் தலைநகராகவும் துறைமுகப் பட்டினமாகவும் விளங்கிய கொற்கை, தூத்துக்குடி மாவட்டத்திலே, ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலே, ஒரு சிறு கிராமமாக, களையிழந்த சிற்றூராகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. எனவே, தலைவர் கலைஞர் அவர்களுடைய கடைக்கண் பார்வை கொற்கைத் துறைமுகத்திலே மீண்டும் பட்டு, அதை ஒரு பட்டினமாக மாற்றித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

துறைமுகப் பட்டினமான கொற்கையில், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வன்னிமரம் ஒன்று இருக்கிறது. அதுபோல, கண்ணகி கோயில் ஒன்றும் அங்கே இருக்கிறது. இவைகளை எல்லாம் பராமரிப்பதற்கு ஆள் இல்லாத காரணத்தால் பொலிவு குன்றியிருக்கிறது.

நம்முடைய தமிழர்கள், முதல் தமிழ்ச் சங்கத்தை, அழிந்த தென்மதுரையிலே தோற்றுவித்ததற்குப் பிறகு, இரண்டாவது தமிழ்ச் சங்கத்தை கொற்கை என்ற கபாடபுரத்தில் தோற்றுவித்து, தமிழ் வளர்த்தார்கள் என்று மார்க்கோபோலோ, மெகஸ்தனிஸ் போன்ற மேல்நாட்டவர்களுடைய சரித்திரச் சான்றுகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

கொற்கைக்கு அருகில் உள்ள கிராமங்கள் எல்லாம் இன்னும் பழைய பெயர்களைத் தாங்கி இருக்கின்றன. அன்றைக்கு நாணயம் அச்சடிக்கப்பட்ட அச்சகசாலை, சிறு படை வைத்திருந்த சிறுத்தொண்டநல்லூர், பெரும்படை வைத்திருந்த பெரும்படையான் கோயில், வில் வீரர் உறைந்த கொட்டாரக்குறிச்சி, இப்படி பல கிராமங்கள் இன்றும் அதே பெயரோடுதான் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

இப்போது கொற்கையிலே அருங்காட்சியகம் ஒன்று இருக்கிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, கண்ணகியின் வழக்கால் நெடுஞ்செழியன் உயிர் நீத்த பின்பு, அவனுடைய தம்பி, வெற்றிவேல் செழியன் அரசுக் கட்டிலில் ஏறினான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்த வெற்றிவேல் செழியன், கொற்கையில் கட்டிய கண்ணகி கோயில் இன்றைக்கு வெற்றிவேல் அம்மன் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இவைகளை எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சுற்றுலாத் தலமாகத் தேர்ந்தெடுத்து, கொற்கையில், தமிழர்களுடைய சரித்திரத்தைச் சொல்லுகின்ற



தமிழர்களுடைய வரலாற்றை, வீரத்தைச் சொல்லுகின்ற வகையில், சிற்பங்களை அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, கொற்கையில் ஒரு குளம் இருக்கிறது. அது பொதுப் பணித் துறையைச் சேர்ந்த குளம். அந்தக் குளத்தை இன்னும் ஆழப்படுத்தி, அதிலே நீரைத் தேக்கி, ஒரு படகுக் குழாம் அமைத்து, கொற்கையை மீண்டும் சிறப்புக்குரிய ஒரு நகரமாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திரைப்படக் கொட்டகைகளில் இன்றைக்கு அதிகமாகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன என்ற புகார் எல்லா நகரங்களிலேயும் இருக்கிறது. எனவே, அரசு கண்டிப்பான முறையிலே நடவடிக்கை எடுத்து, சரியான கட்டணத்தை வசூல் செய்யக்கூடிய அளவுக்கு முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொற்கையில் ஏற்கெனவே தொல்பொருள் ஆய்வுத் துறையின் சார்பில் ஒரு சிறந்த அகழ் வைப்பகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அது இந்தத் துறையின் சார்பில் மேலும் விரிவுபடுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சந்திரசேகரன்.

***திரு. சி. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைகளில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, மக்களுக்காக, மக்களால் ஏற்படுத்தப்பட்ட, மக்களுடைய அரசின் செய்தி, அரசின் நலத் திட்டங்கள் குறித்த செய்திகள், மக்களுக்குத் தொடர்புடைய அனைத்துச் செய்திகளையும் வழங்குவதில் பெரும்பங்கு வகிப்பது செய்தி, மக்கள் தொடர்புத் துறை ஆகும். மேலும் இந்தச்

நமது அரசு மே 24-ந்தேதி கொல்லிமலையில் கோடைவிழா கொண்டாடுவதாக அறிவித்திருக்கிறது. கோடை விழா இங்கே கொண்டாடுவதாக அறிவிப்புத் தந்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கொல்லிமலைக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகம்பேர் வந்து செல்கின்றார்கள். கொல்லிமலையில் அறப்பளீஸ்வரர் ஆலயத்திலிருந்து 2½ கிலோ மீட்டர் தொலைவில் ஓர் அருவி அமைந்துள்ளது. அந்த அருவியைக் கண்டுகளிக்க பொதுமக்கள் செல்வதற்கு சென்ற ஆட்சிக்காலத்தில் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன. அந்தப் படிக்கட்டுகள் சரிவர அமைக்கப்படாத காரணத்தால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே, அருவிக்குச் செல்ல சாலை வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

அருவியில் குளிக்கச் செல்பவர்களுக்குப் பாதுகாப்பு வசதி இல்லாமல் நிறையப் பேர் இறந்து விடுகின்றார்கள். எனவே, அங்கே குளிப்பதற்கு வசதியாக இரும்புக் கம்பியால் கைப்பிடி அமைத்து பாதுகாப்பு வசதி செய்து தர வேண்டும். அருவிக்கு அருகில் குறிப்பாகப் பெண்களுக்குக் கழிப்பறை வசதி செய்து கொடுக்க வேண்டுமாயும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியாக அறப்பளீஸ்வரர் கோயில் அருகில் 50 அறைகள் கொண்ட பயணிகள் தங்கும் விடுதி அமைத்துத்தர வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இங்கே அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தக் கோயில் அருகில் பயணிகளைக் கவரும் வகையில் ஒரு மினி மிருகக் காட்சிசாலை அமைத்துத்தர வேண்டும். அதேபோல் அங்கே சிறுவர்கள் பூங்கா அமைத்துத் தரவேண்டும்.

மேலும் ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளில் ஏரியில் படகுத் துறை அமைத்து மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவது போல கொல்லிமலையில் சந்தனப்பாறை என்னுமிடத்தில் காட்டாறு செல்கிறது; அந்தக் காட்டாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, படகுத் துறை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அங்கே முத்தன்குளம் என்று ஒரு சிறிய குளம் இருக்கிறது. அந்தக் குளத்தைச் சுற்றி இயற்கையாகவே நல்ல மரங்கள் அமைந்துள்ளன. அந்தக் குளத்தைத் தூர் எடுத்து சுற்றிலும் அழகுபடுத்தி பூங்காக்கள் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் உள்ள ஒரு சில பிரச்சினைகளை இங்கே கூற விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்பு முன்னுரிமையில் ஒதுக்கப்பட்டு காலியாக உள்ள இடங்களை எல்லாம் நிரப்புவதாகச் சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு பிளஸ் 2 வரை படித்த மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, கொல்லிமலையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றை உருவாக்கி அந்த மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை சுற்றுலாத் தலமாக விளங்குவதால் நஞ்சுண்டபுரத்தில் இருந்து கொல்லிமலை அடிவாரம் வரை ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தரவும், அதேபோல கொல்லிமலையில் அமைந்துள்ள சாலையில் 70 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளதால், அங்கு பொதுமக்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, பள்ளம்பாறையில் இருந்து வாசகப்பட்டிக்கு ஒரு மாற்று வழிச் சாலையும், முள்ளுக்குறிச்சியிலிருந்து நரியங்காடு வரைக்கும் ஒரு மாற்றுவழிச் சாலையும் அமைத்துக் கொடுத்து, மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக ஒன்று உள்ளது. கொல்லிமலைப் பகுதியை நாமக்கல் தாலுகாவிலிருந்து பிரித்துத் தனித் தாலுகாவாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கையை மக்கள் வைத்து இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு கொல்லிமலையை தனித் தாலுகாவாக, அதாவது மலைவாழ் மக்கள் தாலுகாவாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

*** திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் சுற்றுலாத்

செய்திகள், செய்தி இதழ்கள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலமாக மக்களுக்குச் சென்றடையச் செய்வதில், இந்தத் துறை பெரும் பங்கு வகிக்கின்றது.

*முற்பகல் 10-05*

கல்வியறிவு இல்லாத குக்கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் திரையரங்குகள் வாயிலாகப் படம் பிடித்துக் காட்டப்படுவதில் நம் அரசு பெரும் சாதனை செய்து வருகின்றது. இப்படி மக்களின் சேவைக்காகப் பணியாற்றும் இந்தத் துறை முன்னேற, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கணினி மென் பொருட்களுக்கு முழு விற்பனை வரி விலக்கு அளித்து, பெரிதும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

செய்தி விளம்பரத் துறையின் மூலமாக, சமுதாயம் முன்னேற்றம் காணும் வகையில், இன்னும் நல்ல பணிகளை மேற்கொள்ள வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக இந்த நூற்றாண்டைப் பொறுத்தவரையில் உலகை உலுக்கிக் கொண்டிருக்கின்ற பிரச்சினை 'எய்ட்ஸ்' பிரச்சினை. எய்ட்ஸ் பற்றி ஒவ்வொரு குக்கிராமங்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எய்ட்ஸ் பிரச்சினையைவிட இந்த நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கின்ற பிரச்சினை மத நல்லிணக்கப் பிரச்சினை. இந்தப் பிரச்சினை குறித்து, அதுவும் குறிப்பாக மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு எல்லாம் செய்திகள் சென்றடைகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கொல்லிமலையில் வாழுகின்ற மக்கள் கல்வியறிவு இல்லாதவர்கள். பொதுவாக மலைப் பகுதியில் வாழுகின்ற மக்கள் விவசாயக் கூலித் தொழிலாளர்களாக உள்ளார்கள். அவர்களுடைய கல்வியறிவு வளரவும் அரசின் செயல் திட்டங்களைக் கண்டறியவும், ஒவ்வொரு ஊராட்சிக்கும் அரசுச் செலவிலேயே செய்தித்தாள்கள், தினசரி செய்தித்தாள்கள் அனுப்ப நம் அரசு முன்வர வேண்டும். அதுவும் எனது கொல்லிமலைப் பகுதியில் 268 குக்கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராம மக்கள் எல்லாம் கல்வியறிவு இல்லாதவர்கள். அரசினுடைய செயல்பாடுகள் என்ன என்பதே அவர்களுக்குத் தெரியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் தினசரி செய்தித்தாள்கள், அங்கே அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல மலைப் பகுதியில் திரையரங்குகள் இல்லாத காரணத்தால் மலைவாழ் மக்கள் திரைப்படம் பார்ப்பதற்கு சமவெளிப் பகுதியை நோக்கி வருகின்றார்கள். எனவே எல்லா மலைப் பகுதிகளிலும் அரசு மூலமாகத் திரையரங்குகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். குறிப்பாக எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதியில் அமைந்துள்ள கொல்லிமலைப் பகுதியில், செம்மேட்டில் திரையரங்கு அமைக்க வேண்டும்.

மேலும் நாட்டுக்கு உழைத்த நல்லோர்களின் திருவுருவச் சிலைகள் அமைப்பதில் இந்தத் துறை பெரும் பங்கு வகிப்பதால் மலைவாழ் மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இன்றைக்கு நாட்டிற்காகப் பாடுபட்ட அண்ணா அவர்கள் சிலையை அமைத்துத்தர வேண்டும். குறிப்பாக கொல்லிமலைப் பகுதியில் செம்மேட்டில் அண்ணா சிலையும், அதுபோல வாழவந்திநாடு ஊராட்சியில், சோளக்காட்டில் அண்ணா சிலையும் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நம் முதல்வர் அவர்கள் புதிய திட்டங்களை நம் மக்களுக்கு உருவாக்குவதுபோல், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளில் சென்ற ஆட்சியில் அதிக நட்டம் அடைந்திருக்கிறது. ஆனால் கழக அரசு பொறுப்பேற்ற 1996-97 ஆம் ஆண்டில் ரூ.192.44 இலட்சம் மொத்த லாபம் ஈட்டியதோடு ரூ. 43.05 இலட்சம் நிகர லாபம் அடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் மனம் குளிரும் வகையில், அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் மகிழ்ச்சியாக, குடும்பத்துடன், நண்பர்களுடன் சென்று மனநிறைவு அடைந்து வரும் இடம்தான் சுற்றுலாத் தலம்.

நாமக்கல் மாவட்டத்தை உருவாக்கித் தந்த நம் முதல்வர் அவர்கள், 1976-ம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதியில் அமைந்துள்ள கொல்லிமலைப் பகுதிக்கு வருகை தந்து கொல்லிமலையை ஆட்சி செய்த குறுநில மன்னன், கடையேழு வள்ளல்களில் ஒருவரான ஓரிக்குச் சிலை வடித்து விழா எடுத்திருக்கிறார்கள். அந்தச் சிறப்பான கொல்லிமலை சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை, அங்கே கோடை விழா நடத்த வேண்டுமென்பதுதான். உதகமண்டலத்தில் கோடை விழா கொண்டாடுகிறார்கள். இந்த ஆண்டு

துறை மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய லீகின் சார்பாக எனது கருத்துகளை வழங்க வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றேன். மக்களுக்கு, அரசின் திட்டங்களையும் செயல்பாடுகளையும் மற்றும் வரலாற்றுச் சிறப்புகளையும் எடுத்து விளக்குகின்ற துறையாக செய்தி, திரைப்பட, தொழில்நுட்பத் துறை அமைந்து இருக்கின்றது. இந்நிலையில் இந்தியா சுதந்திரம் பெற்ற இந்தப் பொன்விழா ஆண்டிலே இந்தியச் சுதந்திரத்திற்காக தமிழ்நாட்டின் பங்கை இந்திய அளவில் எடுத்துரைப்பது நம்முடைய கடமையாகும். கடந்த காலங்களிலே ஏதோ வடநாட்டவர்கள்தான் இந்தியச் சுதந்திரத்திற்குப் பாடுபட்டார்கள், அவர்கள் சேவையால் இந்தியா சுதந்திரம் அடைந்தது என்பது போன்ற ஒரு நிலை வரக் காரணம் வடநாட்டுத் தலைவர்களைப் பற்றி மொழி கடந்து அனைத்து மொழிகளிலும் தொகுப்புகள், செய்திகள், படங்கள் வந்தன. அதனால் தமிழ்நாட்டிலிருந்து சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள் யார் என்பது வடக்கில் தெரியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாகக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., பாரதியார், வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோரின் சேவைகள் எல்லாம் ஏதோ குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதுபோல தமிழகத்தையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையிலே, அந்தக் காலத்திலே தோன்றிய வீரர் மருதநாயகம் போன்றவர்களைப்பற்றி சரித்திரப் படங்கள் ஆங்கிலத்திலே எடுக்கப்படுவதன் வாயிலாக - அந்தப் படம் எடுக்கப்படுவதற்கு முன்பே பல விமர்சனங்களின் வாயிலாக - இந்தியா முழுவதும் அறியக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது.

ஆகவே, அதுபோல தமிழ்நாட்டிலிருந்து சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட வ.உ.சி., பாரதியார் மற்றும் இந்த மண்ணில் பிறந்து, இந்தியச் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை மாற்று மொழிகளிலே எடுத்து, அவைகளை இந்திய அளவில் அனுப்பி, அதன்மூலம் சுதந்திரப் போராட்டத்தில் நம் தமிழ்நாடு ஆற்றிய பங்கை இந்தியாவில் எங்கும் நிலைநாட்ட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

அதுபோல் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும், ஒரு கலையரங்கத்தை இந்த அரசு கட்டவேண்டும். அப்படிக் கட்டுவதன்மூலம் கலைத் துறையையும் மற்றத் துறைகளையும் வளர்ப்பதற்கு அது வாய்ப்பாக அமையும். மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் அரசு அலுவலர்கள்



கூட்டங்கள் நடத்துவதற்கோ அல்லது அரசின் திட்டங்களை மக்களுக்கு முறையாகத் தெரியப்படுத்துவதற்கோ முறையான மண்டபங்கள் இல்லாத காரணத்தால் இதுபோன்ற கலையரங்குகள் தேவைப்படுகின்றன. ஆகவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஒரு கலையரங்கத்தை அமைக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கிய பிரச்சினை. சினிமாத் தியேட்டர்களில் டிக்கெட் விற்பதை நாம் கட்டுப்பாடு செய்கிறோம். இன்ன விலைக்குத் தான் டிக்கெட்டுகளை விற்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறோம். உணவுத் துறையில் அதுபோன்ற கட்டுப்பாடு இல்லை. சாதாரண தயிர் சாதம் கூட சரவண பவன் போன்ற ஓட்டல்களில் 15 ரூபாய்க்கு விற்கிற இந்தக் காலத்தில், பொழுதுபோக்குக்காக இருக்கிற சினிமா டிக்கெட்டை விற்கிறபோது ஏன் அதைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும்? முன்பு ஒரு முறை வைத்திருந்தார்கள். அவர்கள் ஒரு கட்டணத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற முறை இருந்தது. அதன்மூலம் அதிகமான வரியும் அரசுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. குறைந்த செலவில் சிலர் படம் எடுக்கிறார்கள். ஆனால் சிலர் 'ஜீன்ஸ்' போன்ற படங்களை அதிக முதலீட்டில் எடுக்கிறார்கள். அந்தப் படத்திற்கும் ஒரே கட்டணம், குறைந்த செலவில் எடுக்கப்படும் படங்களுக்கும் ஒரே கட்டணம், என்று சொன்னால் எந்த அளவுக்கு இது நியாயமாக இருக்கும்? உணவுத் துறையில் விலையைக் கட்டுப்படுத்தமுடியாத நாம் பொழுது போக்கு அம்சங்களில் மட்டும் ஏன் கட்டண நிர்ணயம் என்று சொல்லி கட்டுப்படுத்தவேண்டும்? இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக சமீபத்தில் 'டைட்டானிக்' என்ற ஆங்கிலத் திரைப்படம் சென்னையில் திரையிடப்பட்டது. அந்தப் படத்தின் டிக்கெட்டுகள் பிளாக்கில் 300 ரூபாய்க்கு விற்றன. அதை நம்மால் தடுக்க முடியவில்லை. அப்படியிருக்கும்போது யாரோ ஒருவர் இருவர் இப்படி சம்பாதிக்கும்போது, லாபத்தை அடையும்போது, அந்தப் படத்திற்காக உழைத்தவர்கள், படத்தைத் தயாரித்தவர்கள், அந்தப் படத்திற்கு முதலீடு போட்டவர்கள் ஏன் இந்தச் சலுகைகளை அனுபவிக்கக் கூடாது? அதன்மூலம் அரசுக்கு வருவாயைப் பெருக்க வேண்டும் என்ற நிலையை நாம் எடுக்கவேண்டும்.

ஒவ்வொரு நிலையிலும் இந்த அரசு கட்டுப்பாடு என்று கொண்டு வருகிறபோதுதான் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாகச் சமீபத்தில் பால் விலையை உயர்த்தினோம். ஒரு ரூபாய் ஏற்றியதை மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால்

பால்கொள்முதல் விலையை உயர்த்தவேண்டுமென்று பால் உற்பத்தியாளர்கள் கோரினார்கள். அதே நேரத்தில் 38 ரூபாய்க்கு விற்ற மிளகாய் 80 ரூபாய்க்கு விற்றது. அதை அரசு உயர்த்தவில்லை. அதை மக்களும் கண்டுகொள்ளவில்லை. ஆகவே உற்பத்தி கூடும்போதும் குறையும்போதும் விலைகள் மாறுபடுகின்றன. அதை மக்கள் கண்டுகொள்வதுமில்லை. ஆனால் நாம் அதிலே கைவைத்து கட்டுப்பாடு செய்யப் போனால்தான் அதில் சில பிரச்சினைகள் ஏற்டுகின்றன. ஆகவே, விலைவாசிகளைக் கண்ட்ரோல் பண்ணவேண்டுமே தவிர, அவைகளைக் கட்டுப்படுத்தக் கூடாது. அது உற்பத்திக்குத் தக்கவாறு மேலும் கீழும் கூடலாம், குறையலாம். ஆகவே இதுபோன்ற நிலைமைகளை மாற்ற அரசு முன்வரவேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலைவாசி எல்லாம் உயர்ந்திருக்கிறது. ஆனால் கண்ட்ரோல் பண்ணவேண்டும், கட்டுப்படுத்தக் கூடாது என்று சொல்கிறார்களே, அதை என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு அவருடைய விவாதங்கள் அமைந்திருக்கின்றன. ஒன்று, கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்கிறாரா அல்லது கட்டுப்படுத்த வேண்டாம் என்று சொல்கிறாரா என்று தெளிவாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னது, Control என்று சொன்னால் regulate செய்வது, அதை முறைப்படுத்துவது; கட்டுப்பாடு என்று சொன்னால், முழுக்க முழுக்க market forces அதை restrict பண்ணுவது. இந்த இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதைத்தான் உறுப்பினர் சொல்கிறார்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** ஆகவே தேவையில்லாத சில விலைவாசிப் பிரச்சினைகளில் அரசு தலையிடுவதால்தான் அந்தச் சுமை அரசின் மீது வந்து விழுகிறது. ஆகவே இதைக் கவனத்தில் கொண்டு குறைந்த முதலீட்டில் படம் எடுப்பவர்கள், அதற்குத் தக்கவாறு கட்டணங்கள் நிர்ணயித்துக் கொள்வதற்கும், அதிக முதலீட்டில் படம் எடுப்பவர்கள் அதற்குத் தக்கவாறு கட்டணங்களை நிர்ணயித்துக் கொள்வதற்கும் வழி செய்து, அதன்மூலம் அதற்குரிய வரியை அரசு பெறுவதற்கும் வழிவகை செய்யவேண்டும். ஏனென்றால், பிளாக்கில் விற்கும் டிக்கெட் விற்பனையையும், அதன்மூலம் சிலர் பெறும் லாபத்தையும் நம்மால் கண்ட்ரோல் பண்ணமுடியாது. சில தியேட்டர்களில் தியேட்டர்



உரிமையாளர்கள் தங்களுடைய தரகர்களை வைத்தோ, தங்களுடைய மகன்களை வைத்தோ பிளாக்கில் டிக்கெட்டுகளை விற்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. ஆகவே அதையெல்லாம் அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

சினிமா தியேட்டர்களில் புகை பிடிப்பது மிகவும் கஷ்டமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. சுகாதாரத்தை நாம்தானே காப்பாற்றவேண்டும்? ஆகவே இதுபோன்ற நிலைமைகளைக் கண்ட்ரோலில் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் காமராஜர், பேரறிஞர் அண்ணா, பெரியார், காயிதே மில்லத் போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து, திரைப்படங்களாக எடுத்து, சினிமாத் தியேட்டர்களில், சினிமாப் படங்கள் திரையிடுவதற்கு முன்பாகப் போட்டுக் காட்டவேண்டும். இதன்மூலம் தற்கால மற்றும் வருங்கால சந்ததியினர் தமிழகத்தின் வரலாற்றுத் தலைவர்களைப் பற்றி சரியான திசையில் புரிந்துகொள்ள முடியும். இதன் மூலம் மக்களிடையே நல்ல இணக்கமான உணர்வுகளை ஏற்படுத்த முடியும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மூதறிஞர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலையுலகத்திற்கும், தமிழுக்கும், அரசியலுக்கும் மிகப் பெரிய சேவையைச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்த கலையுலகச் சேவை, தமிழ்த் தொண்டு ஆகியவற்றைத் தொகுத்து ஒரு டாக்குமென்டரி — செய்தித் திரைப்படம் எடுத்து அதனை மக்களிடையே தமிழ் மொழியை வளர்ப்பதற்காக வெளியிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 27 பேர்களுக்கு நினைவு மண்டபங்கள் கட்டப்பட்டிருப்பதாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த நினைவு மண்டபங்களின் வாயிலாக அந்தத் தலைவர்கள் நமக்கு இன்னின்ன சேவைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை மக்கள், நினைத்துப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது என்று சொன்னால் அதிலே எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. அதே நேரத்திலே, பெரு மதிப்பிற்கும் கண்ணியத்திற்கும் உரிய காயிதே மில்லத் அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் இல்லை. ஆகவே அதையும் விரைவிலே இந்த அரசு ஏற்படுத்திவிட வேண்டும். காயிதே மில்லத் அவர்களின் பெயரிலே மணி மண்டபம் ஒன்று கட்டிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

மேலும் பல புத்தகங்களைப் படிப்பதைவிட பொருட்காட்சிகளுக்குச் செல்வதே மேல் என்று அறிஞர்கள் சொன்னதாக இந்தக் கொள்கைக்

[திரு. ஜி. நிஜாமுதீன்] [1998 மே 21

குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பதை இங்கே பார்க்கின்றோம். அது அந்தக் காலத்திலேயிருந்த பொருட்காட்சிகளின் நிலை. ஆனால், இந்தக் காலத்திலே உள்ள பொருட்காட்சியில் ஹரியானா ஹேண்ட் லூம்ஸ் நிறுவனத்தின் 10 கடைகள், பிளாஸ்டிக் கடைகள் 10 மற்றும் அப்பளக் கடைகள் 10 ஆகியன இருக்கின்றன. இவைகள் அல்லாமல் அரசின் சாதனைகளை விளக்கக்கூடிய அமைப்புகளிலே ஒரே மாதிரியான சிலைகளை, வருஷாவருஷம் அதே சிலைகளை வைக்கக்கூடிய ஒரு நிலையில், மக்கள் அந்தப் பக்கம் செல்லாத ஒரு இடம் ஆக அது இருக்கிறது. இந்த நிலையில்தான் இன்றைக்கு பொருட்காட்சிகள் அமைந்திருக்கின்றன. ஆகவே, வருங்காலத்தில் பொருட்காட்சி நடத்தும்போது புதிய பொருட்களை-மார்க்கெட்டில் புதிதாகச் சந்தைக்கு வந்த பொருட்களை அங்கே மார்க்கெட் செய்வதற்கு வசதியாகவும், மக்களிடையே அறிமுகம் செய்வதற்கு வசதியாகவும், அதேபோல, தொழில் துறையில் நுணுக்கமான பொருட்களை வைத்து அவைகளை மக்களுக்கு விளக்கக் கூடிய இடமாகவும் கொண்ட ஓர் அரிய இடமாகப் பொருட்காட்சிகளை மாற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசினுடைய சாதனைகளை மக்களிடையே சென்று விளக்க வேண்டிய மாவட்டத்திலுள்ள பி.ஆர்.ஓ-க்கள் மக்கள் தொடர்பு அதிகாரிகள் அந்தப் பணியைச் செய்வதேயில்லை. தமிழரசு என்று ஒரு பத்திரிகை இருக்கிறது. அதற்குச் சந்தாகூட சேர்த்ததாக எனக்குத் தெரியவில்லை.

அதை விட்டுவிட்டு** மக்களைச் சந்திக்க அவர்களுக்கு நேரமும் இருக்காது. சந்திக்க விரும்புவதும் இல்லை. கலெக்டர் எங்கேயாவது கூப்பிட்டால் செல்வார்கள். ஆகவே, தமிழரசுப் பத்திரிகைக்குச் சந்தாவைப் பெருக்குவதற்கும் மக்களை அடிக்கடிச் சந்தித்து மக்களுடைய கருத்துக்களைப் பெற்று அக்கருத்துக்களை அரசிடம் சேர்க்க வேண்டும் என்ற நிலையிலே அவர்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, தருமபுரி மாவட்டத்து மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. கடை ஏழு வள்ளல்களில் ஒருவரும், தமிழ் வளர்த்த அவ்வைக்கு நெல்லிக்கனி கொடுத்து அழியாப்புகழ் பெற்றவருமான அதியமான் நினைவாக அதியமான்கோட்டையிலே, அரசின் பரிசீலனையிலுள்ள அவ்வை அதியமான் கோட்டத்தை...

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 மே 21]

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ** என்று சொன்ன அந்த வாக்கியம் அவ்வளவு ஏற்புடையது அல்ல. அதனுடைய பொருள் புரிகிறதென்றாலும், அந்த வாக்கியத்தை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். எனவே, அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நான் அந்த வாக்கியத்தைத் திரும்பப் பெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப் அவர்களின் வேண்டுகோளை ஏற்று திரு. நிஜாமுதீன் அந்த வாக்கியத்தைத் திரும்பப் பெற்றதால் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். அரசாங்கம் கொண்டுவரக்கூடிய நலத் திட்டங்களெல்லாம்கூட மக்களுக்குச் சென்றடைவதில்லை என்று சொன்னார்கள். மக்களுக்குப் போய்ச் சேருவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. புரிந்துகொள்ள முடியவில்லை என்று சொன்னார்கள். நான் அதைப் பயன்படுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு செய்தி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையெல்லாம் கேட்டுக்கொள்வது, நமது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி வந்த பிறகுதான் மக்கள் சாசனம் என்கிற ஒரு நல்ல புத்தகம் இன்றைய தினத்திலே எல்லாத் துறைகளின் மூலமாகவும் வழங்கப்பட்டு இருக்கின்றது. இதிலே பல்வேறு விவரங்கள், நான் பல தடவை சட்டமன்ற உறுப்பினராக இருந்தும்கூட, நானே கூட தெரிந்துகொள்ள வேண்டிய பல விவரங்கள் இந்த மக்கள் சாசனத்திலே வந்திருக்கிறது. இது இன்றைக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கிறது. இதை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அல்லது ஊராட்சி மன்றங்கள் மூலமாக மக்களுக்குக் கொடுத்தால் அதன் மூலமாக மக்கள் படித்துப் பயன் பெறுவார்கள். அதற்கு ஒரு விலையை நிர்ணயித்து, தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம் என்று விளம்பரம் செய்தால் இதை வாங்கிப் பயன் பெறுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் நலத் திட்டங்களை ஒவ்வொரு முறையும்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவுடன் அந்தந்தத் துறைகளின், — சமூக நலத் துறை, வேளாண்மைத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை போன்ற துறைகளின்-சார்பாக அந்த நலத் திட்டங்களை எந்தெந்த முறையில் பெற்றுக்கொள்ள வேண்டும், என்னென்ன திட்டங்கள் வழங்கப்படுகின்றன என்பதையெல்லாம் தமிழரசு அச்சகத்தால் சிறப்பு வெளியீடாக அச்சிடப்பட்டு, மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமாக எல்லாப் பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதேபோல, அரசுச் செய்தி வெளியீடு மூலமும் இப்படிப்பட்ட திட்டங்களெல்லாம் உடனுக்குடன் அறிவிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்குள் சாதாரண கிராம மக்களுக்கும் சென்றடைகிற வகையில் அந்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் அதியமான் கோட்டையில் அரசு பரிசீலனையில் உள்ள அவ்வை-அதியமான் கோட்டத்தை இந்த ஆண்டே அரசு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை ....

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் திரு. பழனிசாமி அவர்கள் தெரிவித்ததுபோல, இந்த மக்கள் சாசனத்தை அந்தந்த ஒன்றியத்தின் சார்பில் அச்சிட்டு எல்லா மக்களுக்கும் வழங்குவது என்பது அரசாங்கத்தினுடைய முடிவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. நிஜாமுதீன்:** பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாருக்கு ஒரு மணி மண்டபம் கட்ட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதுபோல சேலம் மாவட்டம் ஏற்காடு 'லேடிஸ் சீட்'-ல் சுற்றுலா மையம் மூலம் 'பவர்ஃபுல் டெலஸ்கோப்' ஒன்றை அமைத்துத்தர வேண்டும். மேலும் அந்தப் பகுதியை பூச்செடிகள் அமையப்பெற்ற தோட்டமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிக்குச் செல்லும்போது அங்கே மழை வந்தால் அங்குள்ள சுற்றுலாப் பயணிகள் ஒதுங்குவதற்கு ஒரு இடமும் இல்லாத காரணத்தால் அதற்குத் தகுந்தாற்போல் அந்த இடத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உலக அளவிலே சுற்றுலாத் தொழில் என்பது



மிகப் பிரசித்தி பெற்று, அரசுக்கு அதிக வருவாய் தரக்கூடிய தொழிலாக வளர்ந்து கொண்டிருக்கிற காலத்திலே, நம்முடைய இந்திய நாட்டில் மட்டும் சுற்றுலாத் துறை மிகவும் தேய்ந்து கொண்டிருக்கிறது. இது நம்முடைய தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் இந்தப் பின்னடைவு இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று புரியவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 1996 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறையின் வளர்ச்சி உள்நாட்டுப் பயணிகள் 6 சதவிகிதமாக இருந்தது. இவ்வருடம் 4 சதவிகிதம் என்ற நிலையிலே உள்ளது. அதேபோல வெளிநாட்டுப் பயணிகளின் வளர்ச்சி 5 சதவிகிதமாக இருந்தது, இந்த ஆண்டு 4 சதவிகிதமாக இருக்கிறது. இதில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மக்களைத் தானாக கவர்ந்து செல்லக்கூடிய சுற்றுலாத் தலங்களை இந்த அரசு முன்னுக்குக் கொண்டு வருவதற்கும், அங்கே போதுமான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதை விடுத்து, மக்கள் கவர்ச்சி இல்லாத இடங்களை பலவந்தமாகத் திணித்து சுற்றுலாத் தலமாக அறிவிப்பதோ அல்லது அதற்குத் தேவையில்லாத வகையில் செலவுகளைச் செய்து அங்கே முன்னேற்ற முயற்சிப்பதோ தேவை இல்லாத ஒரு விஷயம். ஆகவே மக்கள் எந்தப் பகுதிக்கு அதிகமாகச் செல்கிறார்களோ அந்தப் பகுதிக்கு மக்கள் மேலும் மேலும் அதிகமாக வருவதற்கு வசதியை ஏற்படுத்த வேண்டும். அதன் காரணமாகத்தான் வேளாங்கன்னி, நாகூர் போன்ற பகுதிகளுக்கு மக்கள் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதிகளிலே தமிழ்நாடு ஓட்டல் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்; வேளாங்கன்னியில் ஆரம்பித்தால் இந்த அரசுக்கு மிகவும் இலாபகரமாக இருக்கும். அதேபோல நாகூரிலும் ஆரம்பித்தால் மிகவும் இலாபகரமாக இருக்கும். இதுபோன்ற இலாபகரமான திட்டங்களை அரசு தொடங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல முத்துப்பேட்டையில் 'லகூன்' என்ற, கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்ட தீவுகள் இருக்கின்றன. கடலிலிருந்து நீர் வந்து தேங்கி Backwater-ஆகி பற்பல தீவுகள் ஏற்பட்டுள்ளன. அந்தத் தீவுகள் மிகவும் அழகாகவும், அற்புதமாகவும் காட்சி அளிக்கின்றன. ஆகவே அந்தப் பகுதிகளை, இப்போது வசதி இல்லை என்றாலும்கூட, தனியார் படகை எடுத்துக்கொண்டு அந்தப் பகுதிக்குச் சென்று வருகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியை மேம்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகூரில் முஸ்லீம்கள் தர்கா ஒன்று இருக்கிறது. பலதரப்பட்ட மக்கள் அங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் தாருங்கள், முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும். உட்காருங்கள். திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புத் தந்தமைக்காகத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிவிப்புகள்

### (அ) சுற்றுலாத் துறையின் சார்பாகச் சிற்றுண்டி வழங்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சுற்றுலாத் துறையின் சார்பாக இன்று காலை *11-30* மணியளவில், சட்டமன்றத்திற்கு அருகில் உள்ள பிளாசாவில் சிற்றுண்டி வழங்கப்படும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 46-செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல்

### (ஆ) கோரிக்கை எண் 50-சுற்றுலா-தொடர்ச்சி

**திரு. நா. பெரியசாமி:** இன்று அவையிலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கை மிகுந்த முக்கியத்துவத்தை பெற்றிருக்கிற கோரிக்கை ஆகும். சில நாட்களுக்கு முன்பாக நம்முடைய மாநிலத்தின் தொழில் வளர்ச்சி குறித்து, தொழில் துறை மானியக் கோரிக்கைமீது விவாதத்தை நடத்தியபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட, தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சி குறித்து 'பார்வைக்கு' 3வது இடத்திலே இருக்கிற தமிழ்நாடு 'உள்ளபடியே' தொழில் வளர்ச்சியிலே இரண்டாவது இடத்திலே இருக்கிறது என்ற செய்தியைச் சொன்னார்கள். தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் இரண்டாவது இடத்திலே இருப்பதை, நாம் போதுமான அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளம்பரம் செய்யாத காரணத்தால் (குறுக்கீடு) இப்போது செய்துவிட்டோம். ஆனால் அந்தக் குறையை முதலமைச்சர் சுட்டிக்காட்டியபிறகுதான் அது கவனத்திற்கு வந்திருக்கிறது என்பதையும் நான் தங்கள் மூலமாக நினைவூட்ட விரும்புகிறேன். ஆக செய்தி, மக்கள் தொடர்புத் துறை என்பது இன்றைய விஞ்ஞானத்



தொழில்நுட்ப வளர்ச்சியில், அதுவும் வியக்கத்தக்க மாற்றங்கள் இந்தச் செய்தி, மக்கள் தொடர்பு துறையில் ஏற்பட்டு இருக்கிறது. இது இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய ஓர் அம்சமாகும்.

இதைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடும், தூரப் பார்வையோடும் இருக்கிறார்கள் என்பதிலே எங்களுக்கு எந்த ஐயமும் இல்லை. உலகமே ஒரு கைப்பந்து அளவுக்குச் சுருங்கி வரக்கூடிய இந்த விஞ்ஞான மாற்றங்களைக் கணக்கிலே கொண்டு, நம்முடைய தமிழ்நாடு இதிலே முன்னிடத்திலே இருக்கவேண்டும் என்ற அக்கறையோடு செயல்படக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறையையும் கூர்ந்து கவனித்து வருகிறார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

*முற்பகல் 10-30*

நம்முடைய செய்தி, மக்கள் தொடர்புத் துறையைப் பொறுத்தவரையில் ஊடகம், மீடியா என்ற அடிப்படையிலே அது மேலும் நவீனப்படுத்தப்படவேண்டும். நம்முடைய கொள்கைக் குறிப்பிலே பல்வேறு நல்ல திட்டங்கள் எல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. பழமையான இயந்திரங்களை எல்லாம் மாற்றிவிட்டு, புதிய இயந்திரங்களைக் கொண்டு அச்சிடுவதற்கு, தகவல் அனுப்புவதற்கு என்ற முறையிலே பல்வேறு நல்ல திட்டங்கள் எல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்றாலும், நம்முடைய உலகத் தொழில்நுட்ப நிலைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு, சாட்டிலைட் மூலமாகச் செய்திகள் பரவக்கூடிய இந்தக் காலத்தில், அதற்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையிலே—சாட்டிலைட் மூலமாக தினந்தோறும் உலகச் செய்திகளை நாம் பார்த்து வருகிறோம். அப்படிப்பட்ட—சாட்டிலைட் மூலமாக இன்றைக்கு ஊடகம், மீடியா என்பது வளர்ந்திருக்கக்கூடிய இந்தக் காலத்தில், அதற்கு ஈடுகொடுத்து, நம்முடைய செய்தி, மக்கள் தொடர்பு துறை அதன் பணிகளை மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு மாற்றியமைக்கப்படவேண்டும்.

அதேபோல, அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்து சொல்வதோடு, திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் மக்கள் கூறும் குறைகளை அரசுக்கு எடுத்துச் சொல்வதற்கும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இதைப் பொறுத்தவரையில், ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மாநில அரசின் சார்பாக நடத்தப்படுகிற தமிழரசு பத்திரிகை, கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, முற்றிலும் நல்லமுறையிலே மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே குக்கிராமத்திலே இருக்கிற குப்பன்,

சுப்பன் கூட அவர்களுடைய கோரிக்கையை எழுதுவதற்கும், அந்தக் கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் உரிய பதில் சொல்வதற்குமான கடமையும், பொறுப்பும் உள்ளது என்ற முறையில் தமிழரசு பத்திரிகையிலே செய்தி வந்து கொண்டு இருக்கிறது. ஆனால், இன்றைக்கு இருக்கிற வாய்ப்புகளின் அடிப்படையிலே பார்க்கிறபோது, தமிழ்நாட்டிலே வெறும் 33 ஆயிரம் பிரதிகள்தான் போகின்றன என்பதைப் பார்க்கிறபோது, உள்ளபடியே நாம் முதலிடத்திலே இருந்தாலும்கூட, அல்லது இரண்டாவது இடத்திலே இருந்தாலும்கூட, பார்வையிலே மூன்றாவது இடத்திலே இருப்போம் என்பதைக் கவனத்திலே கொண்டு, எதிர்காலத்திலே தமிழரசு செய்திகளாகட்டும், மற்ற நம்முடைய விளம்பரத் துறை செய்திகளாகட்டும் எல்லாவற்றிலும் அரசின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்வதிலே முனைப்போடு செயல்படவேண்டும். அதே அளவிற்குச் சற்றும் குறையாமல் மக்களுடைய குறைகளை எதிரொலிக்கக்கூடிய வகையிலே, அரசினுடைய தமிழரசு செய்தியிலே வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதிலே மக்களுடைய ஈடுபாட்டை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படவேண்டும். இன்றைக்கு நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதற்கான வாய்ப்புகள் கொஞ்சம் அதிகமாகி இருக்கிறது என்பது உண்மைதான்.

அது 'நமக்கு நாமே' திட்டமானாலும் சரி, 'அண்ணா மறுமலர்ச்சி' திட்டமானாலும் சரி, அந்தத் திட்டங்களில் எல்லாம் மக்களை ஈடுபடுத்துகிறோம். அவர்களும் முழு மனதோடு ஈடுபடுகிறார்கள் என்கிற செய்தி நமக்குக் கிடைக்கிறது. ஆனால், அத்தகைய செய்திகளை முழுமையான அளவிற்கு நாம் வெளிப்படுத்துவதிலே குறைபாடு இருப்பதாகக் கருதுகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய சுற்றுப் பயணத்தையும் அவர்களுடைய நிகழ்ச்சிகளையும், அமைச்சர் பெருமக்களுடைய நிகழ்ச்சிகளையும் மட்டுமே நாம் முன்னிலைப்படுத்தி, விளம்பரப்படுத்துவதோடு நிறுத்திவிடாமல், மக்கள் பங்கேற்கக்கூடிய நிகழ்ச்சிகளை செய்தி, மக்கள் தொடர்புத் துறையிலே வெளியிட கவனம் செலுத்தி, மக்களுக்கு ஊக்கம் ஊட்டக்கூடிய வகையிலே, அந்தச் செய்திகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, எய்ட்ஸ் நோயைப் பற்றி இன்றைக்கு ஏராளமான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. அது ஆட்கொல்லி நோய் என்ற அடிப்படையிலே மிகப்பெரும் அளவுக்கு விளம்பரம் செய்கிறபோது,



அதிலே ஒரு பய உணர்வுகூட மக்களுக்கு ஏற்பட்டு, அதனால் விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்படக் கூடிய அளவுக்கு அந்த விளம்பர நடவடிக்கைகள் இருக்கின்றன. இந்த விளம்பரத்திலே ஒரு முரண்பாடு இருப்பதை நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். எய்ட்ஸ் நோயினுடைய அபாயத்தைக் குறிப்பதோடு அது வராமல் தடுப்பதற்கு 'ஒருவனுக்கு ஒருத்தி' என்கிற தத்துவத்தை நாம் வலியுறுத்துகிறபோது, அடுத்த வரியிலேயே ஆணுறை அணிவதை அனுமதிக்கிற வலியுறுத்துகிற செய்தியும் அந்த விளம்பரத்திலே வருகிறது. இது எல்லாவகையிலும் முரண்பாடு உள்ள ஒரு விளம்பரமாக இருக்கிற காரணத்தால், அதை மாற்றி அமைத்து, பொதுவாக 'ஒருவனுக்கு ஒருத்தி' என்கிற அடிப்படையிலே ஒரு நல்ல பண்பாட்டை வளர்க்கக்கூடிய வகையில், அந்த விளம்பரத்தைத் திருத்தியமைக்கவேண்டும். (குறுக்கீடு) 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற அடிப்படையிலே மாற்றியமைக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அந்த இலட்சியத்தைப் பின்பற்ற முடியாதவர்கள், குறைந்தது ஆணுறையாவது அணிந்துகொள்ள வேண்டும், அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அந்த விளம்பரம் செய்கிறோம். ஏன் என்றால், சில விஷயங்களை நாம் கட்டாயப்படுத்த முடியாது. சட்டம் போட்டு தடுத்து விடமுடியாது. ஆசைகள் என்பது வேறு. அந்த ஆசைகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கடமை.

•

முற்பகல் 10-35

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய கருத்திலே நான் பெரிய அளவிற்கு மாறுபடவில்லை என்றாலும், நாம் வலியுறுத்துகிற போதாவது ஒரே குறிக்கோளை வலியுறுத்துவது பொருத்தமாக இருக்குமென்பதை நான் திரும்பவும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த ஆண்டு உண்மையிலேயே நாமெல்லாம் மிகப் பெரிய அளவிலே மகிழ்ச்சி கொள்ள வேண்டிய ஆண்டு. சுதந்திர தினத்தின் பொன் விழாவை நிறைவு செய்யக் கூடிய, விடுதலை நாள் விழாவை இந்த ஆண்டிலே நிறைவு செய்யக் கூடிய வாய்ப்பு நம்முடைய அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி நிறைவு செய்கிறபோது மிகப் பெரிய அளவிற்கு

*முற்பகல் 10-40*

அடுத்து, சமூகப் பெரியவர்கள், மரியாதைக்குரியவர்களை எல்லாம் நம்முடைய அரசு மிகுந்த மரியாதையோடு நினைவுகூர்ந்து மக்கள் மன்றத்திலே மரியாதை செலுத்தி வருகிறது. அந்த வகையிலே இலக்கியப் பேராசான் ஜீவானந்தம் அவர்களுக்கு நாகர்கோவிலில் நினைவு மண்டபம் அமைத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சென்று திறந்து வைத்து, பெருமைப்படுத்தி வந்தார்கள். அதேபோல, சில முக்கியமான பெரியவர்களுக்கு குறிப்பாகப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு— முதலமைச்சருக்கு தெரியாதவர் அல்ல அவர், அவரும் முதலமைச்சரும் நன்றாகப் பழகியவர்கள், திரைப்படத் துறையிலே மக்களுக்குப் புரியாத மொழியிலே பேசி வந்த அந்தக் காலத்தில் எப்படி மக்களுக்குப் புரியும்படி முதலமைச்சர் பேச வைத்தார்களோ அதேபோல மக்களைப் பாட வைத்தவர், மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் — ஒரு நினைவு மண்டபம் கட்டவேண்டிய அவசியம் இருக்கிறது. அதை நமது முதலமைச்சர் தங்கள் காலத்திலேயே கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்று நாங்கள் எல்லாம் எதிர்பார்க்கிறோம். அதேபோல, விடுதலைப் போராட்டத்திலே மகாகவி பாரதியாரோடு, செக்கிழுத்த செம்மல் சிதம்பரனாரோடு சேர்ந்து பாடுபட்ட சுப்பிரமணிய சிவா அவர்கள், பாரத மாதாவிற்கு கோயில் அமைக்க வேண்டுமென்பதற்காக, தன்னுடைய இறுதி காலத்திலே பாப்பாரப்பட்டியிலே வாழ்ந்து வந்தவர். அவருடைய சொந்த பூமியைக்கூட பாரத மாதா கோவில் கட்டுவதற்கு ஒதுக்கிக் கொடுத்திருப்பவர். அவருக்கு பாரத மாதா கோயில் என்ற பெயரில் ஒரு நினைவு மண்டபம், சுப்பிரமணிய சிவா பெயரிலே எழுப்பப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல, டாக்டர் அம்பேத்கருடைய அருமை பெருமைகளை, நம்மைக்காட்டிலும் பெரிதாக எடுத்துச் சொன்னவர்கள் இந்தியாவிலேயே இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எல்லா வகையிலும் சொல்லியிருக்கிறோம் என்றாலும், அவருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாகத் தயாரித்து, ஆங்கிலத்திலே வெளியிடப்பட்ட அந்தத் திரைப்படம் இன்றைக்கு தமிழிலே வரவிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தி கொள்கைக் குறிப்பிலே இருந்தாலும், அவருக்கு மணி மண்டபம் கட்டுவதில் காலதாமதமாகிறது என்று சில பக்கத்திலேயிருந்து கோரிக்கைகளும், முறையீடுகளும் வருகின்றன. அதிலே நம்முடைய துறை அமைச்சரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தனிக் கவனம் செலுத்தி விரைந்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று



கேட்டுக்கொள்கிறேன், அதுபோல, எங்களுடைய பெருமைக்குரிய தலைவர், சமூக நீதிப் போராட்டத்தை வர்க்க ரீதியிலே தொடங்கியவர், தஞ்சை மாவட்டத்திலே அடக்கப்பட்ட மக்களை அணி திரட்டிப் போராடிய வெற்றி வீரர் சீனிவாசராவ் அவர்களுடைய நினைவு பாதுகாக்கப்பட வேண்டியது, இளைஞர்களுக்கு பயிற்றுவிக்கப்பட வேண்டியது என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். திருவாரூரிலே நடந்த தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்களுடைய சங்கத்தின் மாநாட்டிலே பேசுகின்ற போதுகூட, அந்த இயக்கத்தினுடைய வளர்ச்சி, பங்கு, பணி பற்றியெல்லாம் எடுத்துரைத்தார்கள் அதன் பெருமைக்குரிய சீனிவாசராவ் அவர்களுக்கு தாங்கள் முதலமைச்சராக இருக்கும் காலத்திலே ஒரு நினைவு மண்டபம் ஏற்படுத்தப்பட வேண்டும். அவருடைய நினைவு இளைஞர்களுக்கு எடுத்துரைக்கப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்து, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு பல்வேறு இடங்களிலே சுற்றுலாத் துறை பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டு. அது ஒரு தொழில் என்ற அடிப்படையிலே பல சலுகைகளை மக்களுக்கு வழங்கி வருகிறது என்றாலும், அதிலே இன்னும் போதுமான அளவிற்குக் கவனம் செலுத்த வேண்டிய பிரச்சனைகளும் இருக்கின்றன. நல்ல மக்கள் திரளாகக் கூடும் இடத்தில் நம்முடைய சுற்றுலாத் துறை கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டும். அப்படிப் பார்க்கிற போது, ஈரோடு மாவட்டத்திலே, பவானி கூடல் நகரம், அது ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பெருமளவிற்கு, லட்சக்கணக்கான அளவிற்கு பக்தர்கள் வந்து குவியக்கூடிய அந்த இடத்தில் நம்முடைய சுற்றுலாத் துறையின் மூலமாக ஒரு விடுதி கட்டுவதும், வருபவர்கள் அங்கு தங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதும், வருபவர்களை ஈர்க்கத் தக்க வகையிலே பல்வேறு காரியங்களைச் செய்வதும் சுற்றுலாத் துறையினுடைய கடமையாகக் கருதுகின்றேன். அந்தக் கடமையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, கோவையிலே புறப்பட்டால் சேலம் வரைக்கும் இருக்கிற தேசிய நெடுஞ்சாலையில் பயணிகள் ஓய்வு எடுப்பதற்கான இடம் இல்லை. கோவையிலே புறப்படுகின்ற பயணிகள் சேலம் வரைக்கும் வந்தால்தான் ஓய்வு எடுப்பதற்கான வாய்ப்பு அந்தத் தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கிறது. அந்தத் தேசிய நெடுஞ்சாலையிலே சிறிது நேரம் ஓய்வு எடுப்பதற்கான வாய்ப்பு வேண்டுமானால், அது பெருந்துறையை மையப்படுத்தி ஓர்

இளைய தலைமுறையினர் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும், சமூக நீதிப் போராட்டத்தைப் பற்றியும், தமிழர்கள் மேம்பாட்டிற்காக நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் தெரிந்துகொள்ளக்கூடிய வகையிலே இந்த விடுதலை நாள் பொன்விழா நிறைவு நிகழ்ச்சியைப் பெருமளவிற்குத் திட்டமிட்டு நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சமீபத்திலே நம்முடைய தமிழ்நாட்டிலும், வேறு பல மாநிலங்களிலும் நடைபெற்ற மதக் கலவரத்தின்போது நாம் ஆச்சரியப்படத்தக்க வகையிலே பல்வேறு நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. ஒரு மதத்தைச் சார்ந்தவர் இன்னொரு மதத்தைச் சார்ந்தவரைப் பாதுகாப்பதும், ஒரு ஜாதியைச் சார்ந்தவர் இன்னொரு ஜாதியைச் சார்ந்தவரைப் பாதுகாப்பதும் இப்படிப் பாதுகாத்துப் புகலிடமும் கொடுத்து, சமூக நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்ட பெருமக்கள் பல பேர் பல்வேறு கிராமங்களிலே இருந்திருக்கிறார்கள். அந்தச் சம்பவங்கள் எல்லாம் பெட்டிச் செய்திகளாக மற்ற பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அந்தச் செய்திகளை எல்லாம் நம்முடைய தமிழரசு பத்திரிகையிலே முன்னிலைப்படுத்தி, மத வெறியர்களுக்கு எதிராக, ஜாதி வெறியர்களுக்கு எதிராகப் போராடுகிற மத நல்லிணக்கக் கருத்தை நம்முடைய மக்களுக்கு ஊக்கப்படுத்துகின்ற வகையிலே பிரச்சாரம் செய்யவேண்டும். ஜாதிக் கொடுமைகளுக்கு எதிராகவும், நம்முடைய செய்தித் தொடர்புத் துறை பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒரு கருத்து, நம்முடைய மாவட்ட அளவிலே இருக்கின்ற மக்கள் தொடர்புத் துறை அலுவலகம் என்பது சீரமைக்கப்படவேண்டும். பல்வேறு மாவட்டங்களில் மக்கள் தொடர்புத் துறைக்காக இருக்கக் கூடிய அலுவலகங்களில் குறைந்தபட்ச வசதிகள் கூட கிடையாது. இன்றைக்கு 'சாட்டிலைட்' உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய நாம், மாவட்ட மக்கள் தொடர்புத் துறை அலுவலகத்திலே சென்று பார்த்தோமேயானால், அங்கே ஒரு FAX மெஷின் கிடையாது. S.T.D. Phone வசதிகள் கூடக் கிடையாது. தினசரி அவர்கள் பத்திரிகைக்குச் செய்தி அனுப்பவேண்டுமென்றால், அவர்களுக்கு ஏராளமான நெருக்கடிகள் இருக்கின்றன என்பதைக் கண் கூடாக அறிகிறோம். பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் பத்திரிகையாளர்களை, செய்தியாளர்களை அழைத்துச் செல்கிறபோது அவர்கள் பிற துறைகளுடைய தயவை நாடவேண்டிய நெருக்கடி இருக்கிறது. எனவே இந்த மக்கள் தொடர்புத் துறையின் மாவட்ட அலுவலகங்களை மிக வலுவான முறையிலே மாற்றி அமைப்பதன் மூலம்தான் மாவட்ட அளவிலேயிருந்து மாநிலத் தலைமை மையத்திற்கும், மாநிலத் தலைமையகத்திலிருந்து மாவட்டத்



தலைமையகத்திற்குமான ஒரு சங்கிலித் தொடரான இணைப்பு ஏற்படும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

அடுத்து, நம்முடைய திரைப்படத் துறையிலே பல்வேறு விவரங்களை முதலமைச்சர் அவர்களே நேரிலே கவனம் செலுத்தி ஒரு சமூக நிலையை ஏற்படுத்தி இருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், திரைப்படத் துறையை எல்லா வகையிலும் ஊக்கப்படுத்தவேண்டுமென்பதற்கான முயற்சியிலே முதலமைச்சர் அவர்கள் தாராளமாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்தக் கொள்கைக் குறிப்பிலிருந்து புரிந்து கொண்டிருக்கிறேன்.

1995 ஆம் ஆண்டிலே தேர்வுக்கு வந்த 44 திரைப்படங்களில், 40 திரைப்படங்களுக்கு மானியம் கிடைக்கப்பெற்றிருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, 40 திரைப்படத் தயாரிப்பாளர்கள் மானியத்தைப் பெற்றிருக்கிறபோது, உள்ளபடியே முதலமைச்சருடைய தாராளத்தைத்தான் நான் இங்கே பார்க்கிறேனே தவிர, அந்தப் படங்களில் அந்த அளவிற்குத் தரம் இருக்கிறதா என்பதைப்பற்றி எல்லாம்கூட கொஞ்சம் வேறுபட்ட அபிப்பிராயம் உண்டு.

அதேபோல், திரையரங்குகளைப் பொறுத்தவரையில், ஒரு திரைப்படத்தினுடைய வெற்றிக்குத் திரையுலக நட்சத்திரம் எவ்வளவு முக்கியமோ, அதுபோல் கிராமப்புறத்திலே பாடுபடக்கூடிய, திரையரங்குகளிலே பாடுபடக்கூடிய தொழிலாளர்களும் அடங்குவார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். திரைப்படம் இயக்குபவர்கள் உள்பட அங்கேயிருக்கக்கூடிய போஸ்டர் ஒட்டுபவர்கள் வரை — சுவரொட்டி ஒட்டக்கூடிய தொழிலாளி வரைக்கும் இருக்கக்கூடிய அனைத்துத் தொழிலாளர்களும் — அதிலே பங்கேற்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை இன்றைக்குப் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறது. அதிலேயும் கவனம் செலுத்தி, உரிய திருத்துங்களைக் கொண்டுவரவேண்டும். சில நாட்களுக்கு முன்னாலே அவையிலேகூட, சினிமா பார்க்க வருபவர்கள், திரைப்படத்தைப் பார்க்க வருபவர்களிடத்திலே, வாகனக் கட்டணங்கள் வசூலிக்கிற ஒரு சட்டத் திருத்தத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டது. ஆனால், ஒரு தியேட்டரிலே படம் பார்க்கச் செல்கிறோம் என்றால், அங்கே படம் பார்க்கிறபோது, நாம் கொண்டு போகிற வாகனத்தை அவர்கள் பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது என்பதை வலியுறுத்த நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு விடுதியும், அங்கே ஒரு தங்கும் விடுதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். பெருந்துறை என்பது இன்றைக்கு லாரி போக்குவரத்து என்றாலும் சரி, வேறு பயணிகள் போக்குவரத்து என்றாலும் சரி, சுற்றுலாப் பயணிகள் போக்குவரத்து என்றாலும் சரி, எல்லா வகையிலும் பெருந்துறை ஒரு மையமாக இருக்கிறது. எனவே, அங்கு ஒரு தங்கும் விடுதியுடன் கூடிய உணவு விடுதி அமைக்க சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல, பல்வேறு நல்ல இடங்களையெல்லாம் தேர்வு செய்ய சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். செய்தியாளர்களுக்கு ஒரு முக்கியமான கோரிக்கை இருக்கிறது. ஏற்கெனவே, கேள்வி நேரத்தின் மூலமாக அவையிலே அது எதிரொலித்தது, அதிலே விளக்கமும் சொல்லியிருக்கிறார்கள். அதிலே செய்தியாளர்கள் என்ற முறையில் பலருக்கு அட்டை வழங்கப்படுவதை மாற்றி, பத்திரிகையாளர்கள் என்ற முறையிலே, பருவ இதழ்களுக்கும், வாரப் பத்திரிகைகளுக்கும் செய்தி அனுமதித்து அவர்களுக்குப் போதிய பயணச் சலுகைகளையெல்லாம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டதிலும் தனித் தனியாக......

முற்பகல் 10-45

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்க பேரவை நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று காலை 11.00 மணிக்கு தலைமைச் செயலக பிரதான கட்டடத்தின் மேற்குப் புறம் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாளினையொட்டி உறுதிமொழி ஏற்பினை செய்துவைக்க இருக்கின்றார்கள். எனவே, நேற்றையதினம் பேரவையில் அறிவித்ததற்கொப்ப பேரவை நிகழ்ச்சிகள் இப்போது ஒத்திவைக்கப்பட்டு, 11-15 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 10-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம் வழுதி** அவர்கள் தலைமையில் முற்பகல் 11.15 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.



## மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 46—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்

### (ஆ) கோரிக்கை எண் 50—சுற்றுலா—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி, ஒரே நிமிடம்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்கள் இன்றைக்கு ஒவ்வொரு செய்திப்பத்திரிகையும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனி பதிப்புகளாக வெளிவந்திருக்கக்கூடிய இந்த சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டு மாவட்ட அளவிலே பணியாற்றக்கூடிய தினசரி பத்திரிகையாளர்களுக்கும், வார பத்திரிகை பருவ இதழ்களுக்கும் செய்தியாளர்கள் அங்கீகாரம் வழங்கி பயண வழிச் சலுகையோடு அங்கீகார அட்டையும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு 4 வருடத்திற்கு ஒரு முறை இருவழிப் பயணச்சலுகை அனுமதிக்கப்பட்டுள்ளது. 4 வருடத்திற்கு ஒரு முறை என்பது தற்போதைய நிலைமைக்குப் பொருத்தம் உடையதாக இருக்காது. எனவே, அவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறையோ, அல்லது குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், இந்தப் பயண சலுகையைப் பொறுத்தவரையில், தென் இந்தியா முழுவதும் சென்று வருவதற்கான வகையில் நீட்டிக்க வேண்டும். நம்முடைய கொள்கைக் குறிப்பிலே சுற்றுலாத் துறையினுடைய வளர்ச்சியை தென் இந்தியா முழுவதும் இணைத்து அதைச் செம்மைப்படுத்துகிற வகையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு அரசு ஊழியர்கள் தென் இந்தியா முழுவதும் சென்று வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கி, முக்கிய இடங்களைச் சுற்றிப் பார்க்கும் வண்ணம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தன்னுடைய 'பேக்கேஜ்' பயணத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இவ்வளவு நேரம் பேசுவதற்கு, கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் ஆகிய மானியங்கள்மீது நான் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தேசியத் தலைவர்கள், பேரறிஞர்கள், கவிஞர்கள் ஆகியோருக்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், கலைஞருடைய அரசும் மணிமண்டபங்களை எழுப்பியும், நினைவாலயங்களை எழுப்பியும், சிலைகளை எழுப்பியும் அவர்களையெல்லாம் போற்றி வருவதை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியினுடைய கோரிக்கையை ஏற்று சென்னை கடற்கரையிலே உலகத் தலைவர் நேதாஜி அவர்களுடைய சிலையை நிறுவி, ஒரு மாபெரும் சாதனை செய்துள்ள தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை எங்களுடைய இயக்கத்தின் சார்பில் மீண்டும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, இந்திய நாட்டின் விடுதலைக்காக 11 வருடகாலம் சிறைத் தண்டனையை அனுபவித்த, வடக்கே பாலகங்காதர திலகர், தெற்கே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் என்கின்ற அளவில் ஆங்கிலேயரின் ஆட்சியில் வாய்ப்பூட்டுச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் ஆயிரக்கணக்கான ஆதிதிராவிட மக்களைத் தன்னுடைய தலைமையிலே அழைத்துச் சென்று ஆலயப் பிரவேசம் மேற்கொண்ட தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் வாழ்ந்த மதுரை திருநகர் வீட்டை அரசு நினைவகமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருநகரில்தான் அவர்கள் அதிகமான காலம் வாழ்ந்தார்கள். எனவே, திருநகரில் அவர் வாழ்ந்த இல்லத்தை அரசு நினைவகமாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சமாதி அமைந்திருக்கின்ற பசும்பொன் கிராமத்திலே மணிமண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. கலைஞருடைய அரசு அதற்கு உறுதுணையாக நின்றது. ஆனால், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் அக்டோபர் 30-ஆம் நாள் வருகிற காரணத்தால், அப்போது கடும் மழை வருகிற காரணத்தால்



பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே வந்து அஞ்சலி செலுத்துவதற்கு, தங்குவதற்கு, வணங்குவதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அங்கே, மணிமண்டபத்தைக் கட்டிக்கொடுத்த கலைஞருடைய அரசு, மக்கள் தங்குவதற்கு அந்த வளாகத்திற்குள் இரண்டு புதிய கட்டடங்களைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இதே சட்டமன்றத்தில் உசிலம்பட்டி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக கால் நூற்றாண்டு காலம் திகழ்ந்திட்ட, 5 ஆண்டு காலம் இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்திட்ட, தென் மாவட்ட பிற்பட்டோர் மக்களின் பிறை நிலாவாகத் திகழ்ந்திட்ட மதிப்பிற்குரிய காலம் சென்ற எங்கள் தலைவர் அமரர் பி.கே. மூக்கையா தேவர் அவர்களுடைய சமாதியில், உசிலம்பட்டியில் மணிமண்டபம் கட்டித் தரவேண்டுமென்று இந்த அரசை, கலைஞர் அவர்களுடைய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழக சட்டசபையில் சுற்றுலா மானியத்தின் மீது நாம் விவாதம் நடத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், ஒருசில அரசியல் இயக்கத்தினர் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு கேடு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு டெல்லிக்கு அரசியல் சுற்றுலா மேற்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு அரசியல் சுற்றுலாக்களை டெல்லி நோக்கி அவர்கள் மேற்கொண்டார்கள். ஒவ்வொன்றிலும் தோல்வி கண்டுவிட்ட காரணத்தால், முதலில் மத்திய அரசு ஆட்சி அமைப்பதற்கு ஆதரவுக் கடிதம் கொடுப்பதில் தாமதப்படுத்தினார்கள்.

முற்பகல் 11-20

இரண்டாவதாக, இன்றைய மத்திய அரசை வீழ்த்துவோம் என்று கூறி, நாங்கள் வேறொரு அரசியல் அணிக்குச் செல்லுவோம் என்று மிரட்டிப் பார்த்தார்கள்.

இப்பொழுது, மூன்றாவதாக, பாராளுமன்ற மேலவைத் தேர்தலை நிறுத்தி வைப்பதற்காக இரகசியக் கடிதம் கொடுத்து உள்ளனர். இன்றையதினம் அவர்களுடைய டெல்லி சுற்றுலாப் பயணம் தொடர்ந்து தோல்வியில் முடிந்து கொண்டிருக்கிறது; தோல்வியுற்றுக் கொண்டிருக்கிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் பத்திரிகையாளர்களுக்கு கலைஞர் அவர்களுடைய அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. அதை நான் பாராட்டுகிறேன். பத்திரிகையாளர்கள் இறந்தால் 25 ஆயிரம் ரூபாய்

அவர்களுடைய குடும்பத்திற்கு இந்த அரசு நிதியாக வழங்குகிறது. அதை ஒரு இலட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு இரயில் பயணத்திற்கு 50 சதவீத சலுகையை இந்த அரசு வழங்குகிறது. அதை முழு அளவு சலுகையாக வழங்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் திரைப்படத்தை ஒரு தொழிலாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. இது மாநில அரசுக்குச் சம்பந்தம் இல்லை என்றாலும்கூட, திரைபடத்தை ஒரு தொழிலாக அறிவிக்கின்ற அளவிற்கு மாநில அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரைப்படம் என்பது நல்லதொரு மீடியாவாக, இப்பொழுது மக்களை ஈர்க்கின்ற மீடியாவாக இருக்கிறது. எனவே, திரைப்படத்தின் மூலம் நல்ல கருத்துக்களை மக்களுக்கு வழங்கினால், அது ஒரு நாட்டினுடைய மக்களை நல்வாழ்விற்கு எடுத்துச் செல்லுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும்.

இன்றையதினம் எடுக்கப்படுகின்ற திரைப்படங்கள் இளைஞர்களை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லுகின்ற அளவுக்குப் பல்வேறு படங்கள் இருக்கின்ற காரணத்தினால், அவற்றையெல்லாம் சென்சார் செய்து நல்ல படங்களை உருவாக்குகின்ற அளவிற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஏற்கெனவே, நல்ல படங்களை உருவாக்குவதற்கு அரசு நல்ல பரிசுகளை, மானியங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் பல்வேறு பரிசுகளை மானியங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே, சென்னை நகரிலே அமைந்திருக்கின்ற திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். நகர் என்று பெயர் சூட்டிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன். ஒருசிலர், அன்றையதினம் தங்களுடைய பெயரைத்தான் சூட்ட வேண்டும் என்று கூறி, தனது பெயரையே சூட்டியபோது, திரைப்படத் துறையில் எம்.ஜி.ஆர். ஒரு தலை சிறந்தவர் என்ற பரந்த நோக்கத்தோடு, எம்.ஜி.ஆர். நகர் என்று பெயர் சூட்டிய கலைஞர் அவர்களை மீண்டும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அதைப்போன்று, இன்று தமிழகத்திலே பல்வேறு இடங்களில் பெண் சிசுப் படுகொலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் கால கட்டத்தில், பெண் சிசுக் கொலையைத் தடுத்து நிறுத்தவதற்காக 'கருத்தம்மா' என்ற ஒரு திரைப்படத்தை இயக்குநர் பாரதிராஜா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்தப்படம் இன்றையதினம் தமிழக மக்களிடத்திலே பெண் சிசுப் படுகொலையைத் தடுத்து நிறுத்துகின்ற ஒரு மீடியாவாக, சாதனமாக அமைந்திருக்கின்ற காரணத்தினால் அதற்குப் பரிசு வழங்க வேண்டும்: மானியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று உலகிலேயே அதிகப்படியாக அன்னியச் செலாவணி வழங்குகின்ற ஒரு இலாகாவாக சுற்றுலாத் துறை அமைந்திருக்கிறது. உலக நாடுகளில் 8 சதவீத அன்னியச் செலாவணியை இன்றையதினம் சுற்றுலாத் துறை மூலம் இன்று உலக நாடுகள் பெற்றுக்கொண்டு இருக்கின்றன. இன்று இந்தியாவைப் பொறுத்தவரையில், சுற்றுலாத் துறையின் மூலம் ஏறக்குறைய 10 ஆயிரம் கோடி ரூபாயை ஈட்டிக் கொண்டிருக்கிறது. அதேபோல, சுற்றுலாத் துறையின் மூலம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 24 கோடி ரூபாயை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். இங்கே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவைப் பொறுத்தவரையில் பல்வேறு கோயில்கள், பல்வேறு கலை நுட்ப இடங்கள், இன்னும் பல்வேறு சுற்றுலாத் தலங்கள், தலைசிறந்த சிம்லா, ஊட்டி கொடைக்கானல் போன்ற பல்வேறு நல்ல உயர்ந்த சுற்றுலா மையங்கள் இருக்கின்ற காரணத்தினால், இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி, சுற்றுலாத் துறையின் மூலம் நிறைய நிதியை ஈட்டித் தர முடியும் என்கின்ற சூழ்நிலையால், சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொன்மை வாய்ந்த கோவில்கள் ஏராளமாக உள்ளன: கலைச் செல்வங்கள் உள்ளன. வன விலங்கு சரணாலயம், இன்னும் பறவை சரணாலயம், ஊட்டி, கொடைக்கானல், குற்றாலம் போன்ற பல்வேறு உயர்ந்த சுற்றுலாத் தலங்களெல்லாம் இருக்கின்ற காரணத்தால், அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு சுரேஷ் அவர்கள் ஓர் இளைஞராகவும் இருக்கிற காரணத்தால் நிச்சயமாக இன்றையதினம் ஈட்டுகின்ற ஆண்டு வருவாய் 24 கோடி ரூபாயை, 100 கோடி ரூபாயாக

உயர்த்துகின்ற அளவிற்குச் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவார், சிறப்படையச் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

மதுரை மாநகரை ஒருங்கிணைந்த சுற்றுலா மையமாக அறிவித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை ஒரு யாத்திரிகர் தலம் ஆகும். அங்கே பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள். பில்கிரிம் சென்டராக இருக்கிற மதுரையை, ஒரு மாபெரும் சுற்றுலா மையமாக - ஒருங்கிணைந்த சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

காரணம், மதுரை மாநகரில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் இருக்கிறது. உலக மக்களை, வெளிநாட்டு மக்களை, இந்திய மக்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய ஒரு தலைசிறந்த ஆலயம் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம்.

அதேபோல, பழமுதிர்ச்சோலை என்று சொல்லப்படுகின்ற அழகர்கோயில் அந்த மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வடக்கே இருக்கிறது.

முற்பகல் 11-25

மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தெற்கே அறுபடை வீடுகளிலே ஒரு வீடாகிய திருப்பரங்குன்றம் இருக்கிறது. மதுரை மாவட்டத்தையொட்டி வைகை அணை, தேக்கடி, மலைகளினுடைய ராணி என்று சொல்லக்கூடிய கொடைக்கானல், பழனி போன்ற பல்வேறு சுற்றுலாத்தலங்கள் இருக்கின்ற காரணத்தினால், மதுரையை மையமாக வைத்து ஒருங்கிணைந்த சுற்றுலா மையத்தை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரை, அந்த அரசு மைசூரை மையமாக வைத்து, பெங்களூரை மையமாக வைத்து (மணியடிக்கப்பெற்றது) சுற்றுலாத் தலங்களையெல்லாம் ஒன்றாக இணைத்து அங்கே நல்லமுறையில் செயல்படுத்துவதைப்போல, இங்கேயும் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம், கேரள அரசு வன சரணாலயம் என்ற பெயரில் நூற்றுக்கணக்கான புலிகளை, மலைப்பாம்புகளை, நம்முடைய பெரியார் அணை கட்டப்படுகின்ற வனப்பகுதி இடத்திலே விட்டுள்ளது. இப்படி நூற்றுக்கணக்கான புலிகளை, மலைப் பாம்புகளை அங்கு விட்டுவிட்ட காரணத்தினால், இன்று பெரியார் அணையின் இறுதி கட்டப்பணி தாமதப்படுகிறது. ஏற்கெனவே, இரண்டு கட்டப் பணிகள் முடிந்து,



மூன்றாம் கட்டப் பணியும் முடிகின்ற சூழ்நிலையில், பெரியார் அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்திவிட முடியாமல் இன்றையதினம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது கேரள அரசு. திட்டமிட்டு நூற்றுக்கணக்கான புலிகளை, மலைப்பாம்புகளை பெரியார் அணைக்கட்டுப் பகுதியிலே விட்டு, மூன்றாம் கட்டப் பணியினை நிறைவேற்றவிடாமல் செய்கிறார்கள். எனவே, அதன் வாயிலாக இறுதிக் கட்டப்பணி தாமதமடையாத அளவிற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டு, 152 அடியாக நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை, செய்தி மற்றும் விளம்பரத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகளிலே சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்தச் செய்தி மற்றும் விளம்பரத் துறையின்கீழ் ஒவ்வொரு நகராட்சியிலும், மாநகராட்சியிலும் வருடத்திற்கு ஒருமுறை, இரண்டு வருடத்திற்கு ஒருமுறை ஒரு பொருட்காட்சி நடத்துகின்ற நிலை உள்ளது. ஆனால், இதற்கு வேறுபட்ட, மாறுபட்ட நிலையில், எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையில் ஒரு சின்ன நகராட்சி— வருடத்திற்கு ஒருமுறை ஒரு பொருட்காட்சியை ஆனி, ஆடி மாதம் வருகின்றபோது, மதச்சார்புடைய ஒரு நாளை மையமாக வைத்துக்கொண்டு, 15 தினங்கள் அந்தப் பொருட்காட்சியைச் சிறப்பாக நடத்துகிறார்கள். அந்தப் பொருட்காட்சியிலே ஏறத்தாழ 3 இலட்சத்திற்கும் அதிகமான பல்வேறுவிதமான மரக்கன்றுகள் தென்னை, மா, கொய்யா, பூச்செடிகள் அவைபோன்ற பணப் பயிர்களெல்லாம் அங்கே விற்பனை செய்யப்படுகின்றன. அப்படி அந்தப் பொருட்காட்சியை நடத்துவதற்குக்கூட நம்முடைய அரசினுடைய அனுமதியைப் பெறுவதற்கு ஒவ்வொரு வருடமும் ஒரு மாத காலம் அங்கிருந்து சென்னைக்கு 4 தடவை வந்து சென்றால்தான் அனுமதி தரப்படுகின்ற ஒரு சூழ்நிலை தொடர்கிறது. ஆகவே, நம்முடைய அரசை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், குழித்துறை நகராட்சி அந்தப் பொருட்காட்சியை நடத்துவதற்கு நிரந்தரமான அனுமதியைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில், மக்களுடைய கவனத்தைக் கவருகின்ற வகையிலே தங்குவதற்கு வசதியுள்ள சுற்றுலாத் தலங்கள் ஏராளமாக உள்ளன.

குற்றாலத்திற்குச் சென்றால் இன்று சாதாரண மக்கள் நடுத்தர மக்கள் அல்லது விவசாயிகள், குறைந்த வாடகையிலே அறைகளைப் பெறமுடியாத நிலையிருக்கிறது. அதுபோன்றுதான் உணவகம் என்று அரசினுடைய சார்பிலேயிருந்தாலும், தனியார் நடத்துகின்றவையாக இருந்தாலும், அவையெல்லாம் இந்தச் சுற்றுலாத் தலங்களிலே மிகப் பெரிய அளவிலே, உயர்ந்த விலையை வசூலிக்கின்றன. ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தச் சுற்றுலாத் தலங்களில், அது குற்றாலமாக இருந்தாலும் சரி, கன்னியாகுமரியாக இருந்தாலும் சரி, ஊட்டியாக இருந்தாலும் சரி, கொடைக்கானலாக இருந்தாலும் சரி, எந்தப் பகுதியாக இருந்தாலும் சாதாரண கிராமவாசி, ஒரு விவசாயி அந்த இடத்தைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செல்வாரேயானால், அவர்களுக்கும் உரிய வாய்ப்பைத் தருகின்றவகையில் குறைந்த வாடகைக்கு அறைகள் கிடைக்கக்கூடிய வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டும். அதன் மூலமாக நம்முடைய கிராம மக்கள்கூட இந்தச் சுற்றுலாத் துறையின் மூலமாக அந்த இடத்தைப் பார்வையிடுவதற்கு நல்ல வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், குறிப்பாகச் சொல்வோமேயானால், உலகத்தினுடைய அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வருடந்தோறும் கன்னியாகுமரிக்கு வருகின்றார்கள். ஆனால், சாதாரணமாக அங்கு இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்தால், அதிகமாக சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான வாய்ப்பு இல்லாத நிலையிருக்கிறது. அதற்குக் காரணம், கோடைக் காலங்களில் அந்தக் கோடையின் கொடுமையிலிருந்து விடுபடுவதற்கு, மரநிழலை ஏற்படுத்தும் பொருட்டு, மரங்களை நடுவதற்கான இடங்கள் இருந்தாலும் அது இன்னும் கவனிக்கப்படாமல் இருக்கின்றது.

முற்பகல் 11.30

குறிப்பாக, நம்முடைய தமிழகத்திற்குச் சொந்தமான பாரதி இல்லத்திற்கு முன்னால் இருக்கின்ற திறந்தவெளி மைதானத்தில் மரங்களை நடுவதன்மூலம் பெரிய அளவிலே மரநிழல் ஏற்படுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தலாம். கோடைக்காலங்களிலே, பகல் நேரத்திலேகூட அங்கு அந்த மரங்களின் கீழ் வெளிநாட்டுப் பயணிகள் வந்து அமரக்கூடிய



அளவிலே, அவர்களைக் கவரக்கூடிய அளவிலே எல்லா ஏற்பாடுகளையும் செய்வது சிறந்ததாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அந்தப் பகுதியிலே பல்வேறு முறைகளிலே போதிய வெளிச்சம் ஏற்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டாலும், உப்புக் காற்றின் தன்மையின் காரணமாக அங்கு நடப்படுகின்ற மின் கம்பங்கள் கெட்டுவிடுகின்றன. எனவே, நவீன விஞ்ஞான வளர்ச்சிப் போக்கின் தன்மையைப் பயன்படுத்தி நவீன முறையிலே நல்ல வெளிச்சம் கிடைக்கக்கூடிய அளவிலே, அங்குள்ள மக்களைக் கவரக்கூடிய அளவிலே ஏற்பாடுகளைச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைப்பதிலேகூட இன்னும் சரியான கவனம் செலுத்தாத ஒரு சூழ்நிலை அங்கே இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதுபோல் இன்னொன்று, அங்கே ஒரு நகராட்சி இருக்கின்றது. அந்த நகராட்சிகூட, சரிவர அந்தச் சுற்றுலாத் தலத்தைப் பயன்படுத்துகின்ற வகையிலே, அந்தச் சுற்றுலாத் தலத்தைப் பாதுகாக்கின்ற வகையிலே நடவடிக்கையை மேற்கொள்கிறதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்த அரசுக்கு வேறுபட்ட ஒரு கட்சியினுடைய தலைவர் அந்த நகராட்சியின் தலைவராக இருக்கின்ற காரணத்தால், அந்த நகராட்சிக்குக் கொடுக்கப்படுகின்ற நிதியைக் கூடச் சரிவர செலவு செய்வதில்லை என்ற சூழ்நிலைதான் அங்கே தொடருகின்றது. அங்கே, அனாதைப் பிணங்கள் என்று சொல்லுகின்ற அந்தப் பிணங்களையும், அதேபோன்று கடலிலேயிருந்து கரைக்கு வந்து சேருகின்ற பிணங்களையும் அந்தப் பகுதியிலே 2 அடி ஆழத்திலேயே புதைத்து விடுவதால், 4 நாட்கள் கழித்து நாய்கள் அந்தப் பிணங்களை வெளியே இழுத்துப் போடுகின்ற நிலை இருக்கின்றது. இது தொடருமேயானால் எந்தச் சுற்றுலாப் பயணியை அங்கே நாம் கவரமுடியும்? ஆகவே, அந்த நகராட்சி ஒரு தீர்மானத்தைப் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்தால், கடலிலிருந்து சற்றுத் தொலைவிலே 10 அல்லது 20 செண்ட் நிலத்தை எடுத்துக்கொண்டு அங்கே இடுகாட்டை அமைத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அதற்குக்கூட அந்த நகராட்சி தயாராக இல்லாத ஒரு சூழ்நிலைதான் அங்கே இருக்கின்றது. ஏனென்றால், இந்த அரசாங்கத்தைக் குறை கூறுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்துதான் இதற்குப் பின்னாலே இருக்கின்றது, அந்த விதத்திலேதான் அந்த நகராட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதை நகராட்சி

என்று சொல்லுவதைவிட 'நரகாட்சி' என்று சொல்லுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆக, கன்னியாகுமரி ஒரு பெரிய சுற்றுலாத் தலமாக வளர்ச்சியடைந்து வருகின்ற இந்த நேரத்திலே, நம்முடைய அரசாங்கத்தின் சுற்றுலாத் துறையின் மூலமாகப் புதிய கட்டடங்களை - விடுதிகளை - நாம் கட்டுகின்றபோது, அவை மலிவாக, சாதாரண மக்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்தால் அது பொருத்தமுடையதாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மற்றொன்று, கோவளம் மாதிரி கடலிலே 100 அடி தூரம் சென்று குளிப்பதற்கு உண்டான சூழ்நிலை கன்னியாகுமரியிலே இருக்கின்றது. எனவே, நாம் நம்முடைய துறையின் இன்ஜினியரிங் பிரிவைப் பயன்படுத்தி ஏதாவது ஒரு பகுதியிலே, அதாவது மேற்குப் பகுதியிலே இரண்டு இடங்களிலே வால்வை அமைத்தால், 100 அடி தூரம் கடலிலே சென்று கடலுக்குள்ளே குளிப்பதற்கான வாய்ப்பினை உருவாக்கலாம் என்று கூறி, அதை இந்தத் துறை பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு புதிய சுற்றுலா இடத்தைக் கண்டுபிடிக்கும்போது நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். உதாரணமாக, விளவங்கோடு தொகுதியிலே சிற்றார் அணை-2 என்ற ஒரு பகுதி இருக்கிறது. அதிலே ஏறத்தாழ 6, 7 மைல்கள் தூரம் படகிலே செல்வதற்கான ஒரு வாய்ப்பு இருக்கின்றது. நெட்டாவிலே ஆரம்பித்து ஆலஞ்சோலை வரையிலும் படகிலே உல்லாசப் பயணம் செய்வதற்கான நல்ல ஒரு வாய்ப்பு இருக்கின்றது. மேலும், அதே பகுதியிலேகூட சிவலோகம் என்ற இடத்திலே அரசாங்கத்தினுடைய விடுதி ஒன்று இருக்கின்றது. அதைக் கொஞ்சம் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு புதிய சுற்றுலாத் தலத்தை உருவாக்குவதற்கு அந்த சிவலோகம் பகுதியிலேயுள்ள சிற்றார்-2 என்ற இடத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு பெரிய சுற்றுலாத் தலமாக இருக்கின்ற திற்பரப்பு நீர்வீழ்ச்சி. சில நேரங்களிலே அதனை நாம் பார்க்கின்றபோது தண்ணீர் குறைந்துவிடுகிறது. அப்படித் தண்ணீர் குறைந்துவிடுகின்றபோது, சிற்றார்-2-ல் இருக்கின்ற நீரை, River Sluice மூலமாக 2 அடி தண்ணீரைத் திறந்துவிடுவோமேயானால் எல்லா நேரங்களிலும் அந்த நீர்வீழ்ச்சியிலே தண்ணீர் வருகின்ற ஒரு சூழ்நிலை உருவாகும். அதனாலே



கோடைக்காலங்களிலேகூட அந்த திற்பரப்பு நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்தி, சுற்றுலாப் பயணிகளை, சுற்றுலாவாசிகளை அதிகப்படியாகக் கவருவதற்கான ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

அதுபோன்று, அந்த அணைக்கட்டைப் பொறுத்தமட்டில், ஒரு அடி கூடுதலாக தண்ணீரின் அளவை உயர்த்தினால் அங்கே படகு சவாரி செய்ய முடியுமா என்பதை இந்தத் துறை பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

அடுத்து, பேச்சிப்பாறையைப் பொறுத்தவரையில் அதற்குச் சரியான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அது ஒரு சுற்றுலாத் தலமாக இருந்தும்கூட, அங்கே அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அந்த அடிப்படையிலே புதிய இடங்களை நாம் கண்டுபிடித்தாலும், பழைய இடங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமாகத்தான் நம்முடைய அரசு வருவாயைத் தேடிக்கொள்ள முடியும். எனவே, சுற்றுலாப் பயணிகள் வரும்போது, அந்தப் பகுதிகள் அவர்களுக்கு பொழுதுபோக்காக இருக்கும் வகையில், அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதற்கான நடவடிக்கைகளில் அரசு தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் உரையாற்றுவதற்கு, இந்தச் சுற்றுலாத் துறை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த என்னுடைய முருகனையும், என்னுடைய அன்புத் தலைவர் அய்யா மூப்பனார் அவர்களையும் வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. பெரியசாமி) தலைமை]

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், சுற்றுலாவுக்கான இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், அந்த சுற்றுலாத் தலங்கள் எல்லாம் முழுமையாக அங்கு வருகின்ற பயணிகளுக்குக் காண்பிக்கப்படுகின்றதா

என்று சொன்னால், நிச்சயமாக இல்லையென்றுதான் சொல்ல முடியும். ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் எங்களுடைய திருப்பூரைச் சேர்ந்த பனியன் அதிபர்களெல்லாம் செல்கிறார்கள். ஆனால், அங்கே பார்ப்பதற்கு ஒருசில இடங்கள்தான் இருக்கின்றன. அவற்றைக் காண்பிப்பதற்கு, கைடுகள் என்று சொல்லக்கூடிய வழிகாட்டிகளை நல்ல பயிற்சி பெற்ற வழிகாட்டிகளை வைத்து அங்கே அந்த இடங்களைப் பற்றி எடுத்துச் சொல்கிறார்கள். நம்முடைய நாட்டில் ஓராயிரம் விஷயங்கள் இருக்கின்றன. சுற்றுலாத் துறையில் காண்பிப்பதற்கு நிறைய இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக, நம்முடைய தமிழ்நாட்டில் அற்புதமான கோயில்கள், சிற்பங்கள், கலை நுணுக்கங்களோடு கூடிய சிற்பங்கள் நிறைய இடங்களில் இருக்கின்றன. குறிப்பாக, ஆவுடையார் கோயில், தஞ்சை பெரிய கோவில், கங்கைகொண்ட சோழபுரம் தாராசுரம், எங்களுடைய கோவை மாவட்டத்தில் பேரூர் போன்ற தலங்கள் நிறைய இருக்கின்றன. ஆவுடையார் கோயில் பற்றி ஒன்றைச் சொல்வார்கள். பொதுவாகச் சிற்பக் கலையிலே மிகச் சிறந்த ஒரு பண்பாட்டை உடைய இடம் ஆவுடையார் கோயில். சிற்பங்களைச் செதுக்குகின்ற சிற்பிகளெல்லாம் அந்தக் கோயிலைக் கட்டும்பொழுதே, அக்ரிமெண்ட் போடும்பொழுதே 'கொடுங்கை' தவிர, மற்ற சிற்பங்களைச் செய்வோம் என்று சொல்லித்தான் கையெழுத்தே போடுவார்களாம். 'கொடுங்கை' என்று சொல்லக்கூடிய அந்தக் கூரையை இதற்கு முன்பும் சரி, பின்பும் சரி, யாருமே சீர் செய்யவில்லை. கல்லிலே தகட்டைப் போல அற்புதமான கூரையை வகுத்திருக்கிறார்கள். அந்தக் கூரையைப் பார்த்ததற்குப் பிறகு அங்கிருக்கின்ற மக்களெல்லாம் பயந்து, அந்தக் கூரை விழுந்துவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். அவ்வளவு இலேசான கல்லினால் செய்யப்பட்டது. அந்தக் காலத்திலே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த வெளிநாட்டுக்காரர் தன்னுடைய துப்பாக்கியால் அதைச் சுட்டிருக்கிறார். சுடும்போது சின்ன ஓட்டை விழுந்திருக்கிறது. அந்தத் துப்பாக்கிக் குண்டு எந்த அளவு இருக்கிறதோ அதே அளவுக்குத்தான் கொஞ்சம்கூட பிசிறு இல்லாமல் அந்த ஓட்டை விழுந்திருக்கிறது. இன்றைக்கும் அங்கே சென்றால் அதைப் பார்க்கலாம். அதுமட்டுமல்ல, அங்கிருக்கின்ற தூண்களெல்லாம் கலைநயம் படைத்த பார்டர்களாக உள்ளன. இன்றைக்கும் அதுபோன்று புடவைகளுக்கு பார்டர்கள் போடுகிறார்கள். அந்த அளவுக்கு கலை நுணுக்கம் படைத்த தூண்கள் இருக்கின்றன. நம்முடைய நெசவாளர்களெல்லாம் சென்றால், அதை trace எடுத்து வந்து புடவைக்கு பார்டர்கள் நெய்கிறார்கள்.



அதுபோன்று தாராசுரம் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்தக் கோயிலில் இருக்கின்ற சிற்பங்கள் சாதாரண சிற்பங்கள் அல்ல. ஆனால், அங்கு போவதற்கு உள்ள வழி மிக மோசமாக இருக்கின்றது. அந்த வழிகளைச் செம்மைப்படுத்த வேண்டும். அதேநேரத்தில், வெளிநாட்டிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வரும்பொழுது அவர்களுக்கு தங்குவதற்கு குறைந்த வாடகையில் ஹோட்டல்கள் இருந்தால்தான் நல்லது. அதிகமான வாடகை கொடுத்து ஹோட்டல்களில் தங்குவதற்கு அவர்கள் யோசிக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சரியான கழிப்பறை வசதிகள் இல்லை என்றுகூட சொல்லலாம். சுத்தமான கழிப்பறை வசதி வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுபோன்று, குளிர்சாதன வசதியுள்ள பேருந்துகள்விட ஏற்பாடு செய்யவேண்டும். குறைந்த விலையில் உணவு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதுபோல, நல்ல கலாச்சாரம் இருக்கவேண்டும். சுற்றுலாப் பயணிகள் வந்தால், இன்னும் ராக் அண்ட் ரோலை காண்பித்துக் கொண்டிருக்கக்கூடாது. நல்ல பண்பாடு நிறைந்த களியாட்டங்களை நம்முடைய அரசே இரவில் நடத்திக் காண்பிக்க வேண்டும். அதுபோல, வழிகாட்டிகள் எல்லாம் தேசபக்தி கொண்டவர்களாக, சுற்றுலாத் தலம் பற்றி நன்கு புரிந்து வைத்திருப்பவர்களாக இருக்க வேண்டும். அதேபோல, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை, வெளிநாட்டவர் அங்கே வந்தால், பிச்சைக்காரர்களது தொல்லை என்பது. சாதாரணமான தொல்லை அல்ல. அதேபோல, 'ஹோமோ செக்சுவல்' என்றெல்லாம் சொல்கிறார்கள். அங்கே இதுபோன்ற மிக மோசமான சூழ்நிலை இருக்கிறது என்று பத்திரிகைகளிலே போடுகிறார்கள். அதையெல்லாம் காவல் துறையை வைத்துக் கட்டுப்படுத்த வேண்டும். அங்கே இருக்கின்ற வியாபாரிகள், அந்த வெளிநாட்டவர்களிடம் சின்னச் சின்னப் பொருட்களை விற்பதற்கு, அவர்களைச் சூழ்ந்து கொண்டு மிகவும் தொல்லை கொடுப்பதை நானே என் கண்களால் பார்த்திருக்கிறேன். ஆகவே, இதுபோன்ற குறைகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

அதேபோன்று, மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, தீரன் சின்னமலை அவர்களுடைய சிலை இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. எந்த ஜாதிக்காரரும், ஜாதியைப் பற்றி இங்கே பேசக்கூடாது என்ற நிலை இருந்தாலும் கூட, தீரன் சின்னமலையின் சிலை செய்யப்பட்டு, இரண்டு ஆண்டுகளாகியும் திறக்கப்படாமல் உள்ளது. எனவே, மாண்புமிகு கலைஞர் அவர்களை வைத்து அந்தச் சிலையைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு சுற்றுலாத் தலத்திலும் குறைந்த பட்சம் ஒரு சுகாதாரமான கழிப்பிடமாவது கட்டித் தந்தால், வெளிநாட்டிலேயிருந்து வருகின்றவர்கள் அங்கே தங்கிச் செல்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, இந்தத் துறையிலே பேசுவதற்கு — என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; மணியடிக்காமல் இருந்தமைக்கு என் நன்றி — வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்த அளவிலே என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. பெரியசாமி):** அடுத்து, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று சுற்றுலாத் துறை, செய்தித் துறை, திரைப்படத் துறை ஆகிய இந்த மானியங்களிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். தாரமங்கலத்திலே பண்டைக் காலத்தில் மிக நுட்பத்துடன் அமையப்பெற்ற சிற்பங்கள் நிறைந்த ஒரு தேவாலயம் கைலாசநாதர் கோவில். பண்டைக் காலத்தில் சிற்பிகளெல்லாம் தாரமங்கலத்தையும், தாடிக்கொம்பையும் நீங்கலாக மற்றக் கோவில்களில் சிற்பம் வடிவமைப்பதற்கு நீங்கள் ஒப்புதல் கொடுத்தால், நாங்கள் செய்து கொடுக்கிறோம் என்று. இது. தாரமங்கலத்தில் உள்ள சிற்பங்களைப்போன்றும், தாடிக்கொம்பில் உள்ள சிற்பங்களைப் போன்றும் அமைக்க இயலாது என்று வரும் பாட்டினை எடுத்துக் கூறுவதுபோல் இருக்கின்றது. அப்படிப்பட்ட பிரசித்திபெற்ற அந்தத் தேவாலயத்திலே உள்ள சிற்பங்கள், சிற்பக் கலையிலே மிகப் பேறுபெற்ற சிற்பங்களாகத் திகழ்கின்றன. ஒரு சிங்கத்தின் வாயினுள்ளே ஒரு குண்டு அமைந்திருக்கிறது. அந்தக் குண்டை உருட்டினால், பந்துபோல உருளுகிறது. அந்தக் குண்டை வெளியிலே எடுக்க முடியாத அளவிற்கு அந்தச் சிற்பம் அமைக்கப் பெற்றுள்ளது. அதைப்போலவே, கோபுரத்தினுடைய அடிப்பக்கத்திலே உள்ள மண்டபத்திலே ஒரு சிற்பம் அமைந்திருக்கிறது. ஒரே கல்லிலே தாமரை பூத்திருப்பதைப் போல ஒரு வடிவமைப்பும். அந்தத் தாமரையைப் பறவைகள் மற்றும் கிளிகள் உட்கார்ந்து கொத்துவதைப்போலவும், அதன் நான்கு மூலைகளிலும் அறு வளையங்கள் அமைந்திருப்பதைப் போலவும், அதுமட்டுமல்லாமல், அந்தக் கல்லைச் சுற்றினால், அது சுற்றுவதைப் போலவும் மிக நுட்பமாக அமைக்கப் பெற்றிருக்கின்றது. அதைப்போலவே, வாலி, சுக்ரீவன் இருவரும் யுத்தம் செய்வதுபோலச் சிற்பம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வாலி இருக்கின்ற இடத்திலிருந்து சுக்ரீவனைப்



பார்த்தால், சுக்ரீவன் தெரியாத விதத்திலும், சுக்ரீவன் அம்பு விடும் இடத்திலிருந்து வாலியைப் பார்த்தால், வாலி தெரிவது போலவும் சிற்பங்கள் மிக நுட்பமாக அமைக்கப்பட்டுள்ளன. இப்படி சிற்பக் கலை மிகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. அதேபோல, எலிகள் வரிசையாகச் செல்வதைப் போல ஒரு கல்லிலே வடிவமைத்திருக்கிறார்கள். அந்த எலியின் மூக்கிலே ஒரு ஊசியின் மூலமாக நூலை விட்டால், வாய்க்கு அந்த நூல் வரும். அதேபோல, காது வழியாக அந்த நூலை விட்டால், அது வாய்க்கு வரும். அந்த அளவிற்கு நுட்பமான முறையிலே அந்தச் சிலையை அமைத்திருக்கின்றார்கள். இப்படி, மிகப் பிரசித்திப்பெற்ற, அற்புதமான தேவாலயமாக அதை அமைத்திருக்கிறார்கள். வருடத்திற்கு மூன்று நாட்கள் அந்தக் கோபுர வாயிலின் வழியாகச் சூரிய ஒளி, மூலஸ்தானத்தில் உள்ள சிவலிங்கத்தின் மீது விழுகிறது. சிவலிங்கத்தின் வலதுபுறம் ஒருநாளும், சிவலிங்கத்தின் நெற்றிமீது ஒருநாளும், இடதுபுறம் ஒருநாளும் என இப்படி மூன்று நாட்கள், சூரிய ஒளி, பிப்ரவரி மாதம் கடைசியில் அந்தக் கோபுர வாயிலின் வழியாக சிவலிங்கத்தின்மீது விழுகின்ற வகையில் அந்தக் கோபுரத்தின் வடிவமைப்பு அமைந்திருக்கிறது. உலகத்திலே எந்தவொரு கோயிலிலும் இப்படி சூரிய ஒளி, மூலஸ்தானமான சிவலிங்கத்தின் மீது விழுவது போன்ற அமைப்பு இல்லாத வண்ணம், இந்தக் கோயிலில் மட்டும் அமைந்திருக்கிறது. ஆகவே, இவ்வளவு பிரசித்தப்பெற்ற அந்தக் கோயிலில், இரதி மன்மதன் இருவருடைய உருவங்களையும் ஒரே கல்லிலே அமைத்திருக்கிறார்கள். இரதியின் தலைமீது கை வைத்துப் பார்த்தால், மன்மதன் சிலை போலவும், மன்மதன் தலைமீது கை வைத்துப் பார்த்தால், இரதியினுடைய சிலை போலவும் தெரிவதுபோல் அந்தக் கோயிலில் அமைக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. பெரியசாமி):** நேரம் ஆகிவிட்டது; உங்களுடைய பேச்சை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இப்படிப பிரசித்திப்பெற்ற சிற்பங்கள் இருக்கின்ற ஒரு தலத்தை, சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. பெரியசாமி):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில், சில செய்திகளைச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய முதல் வேண்டுகோளாக இந்த மாமன்றத்திலே ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். இந்த நூற்றாண்டின் தமிழகத்தினுடைய திரைப்பட வரலாற்றை, நம்முடைய ஒப்பற்ற முதல்வர் கலைஞர் அவர்களை விட்டுப் பிரித்து எழுத முடியாது. சிறந்த கதாசிரியராக, சிறந்த வசனகர்த்தாவாக, சிறந்த நாடக நடிகராக, அற்புதமான உரையாடல்களைத் தீட்டியவர், நம்முடைய ஒப்பற்ற முதல்வர் கலைஞர் அவர்கள். இந்த நிலையில், இன்னும் 12 நாட்களில் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தம்முடைய பவளவிழா வயதிலே அடியெடுத்து வைக்க இருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு, சாண்டோ சின்னப்பா தேவர், கவியரசு கண்ணதாசன், எம்.ஜி.ஆர்., பேரறிஞர் அண்ணா ஆகியோர்களுடைய பெயர்களிலே பல விருதுகளைத் திரைப்படத் துறையினருக்கு வழங்கி வருகிறது. இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அற்புதமான உரையாடல்களை, ஏறத்தாழ 80 படங்களுக்கு மேல் தீட்டியவர், நம்முடைய முதல்வர் அவர்கள். அவருடைய வசனங்களைப் பேசாத நடிகர்கள் இல்லை. உலகத்திலே சிறந்த நடிகர் என்று சொல்லக்கூடிய சிவாஜி கணேசன் அவர்களை, இந்த உலகத்திற்கே அடையாளம் காட்டியது, 'பராசக்தி' என்ற படத்திலே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய வசனம்தான். அவர் எழுதிய அந்தப் 'பராசக்தி' படத்திலே, வறுமையினுடைய அடிப்படையைச் சுட்டிக்காட்டுவதற்காக, "ஓடினாள், ஓடினாள், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்" என்று எழுதினார். "கோயில்கள் கூடாது என்பதல்ல; கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது" என்றும் அதில் வசனத்தை எழுதினார். இன்னும் 'மனோகரா' என்ற ஒரு திரைப்படம். அற்புதமான வசனங்களை உள்ளடக்கிய திரைப்படம். "பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்த கண்ணே! முத்தே! தமிழ்ப் பண்ணே! என்றெல்லாம் தாலாட்டிக் கொஞ்சி, தந்தத்தாலான கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே இட்டு, வீரனே! விழி நிறைந்தவனே! என்று யாரைச் சீராட்டிப் பாராட்டி மகிழ்ந்தீர்களோ, அவனை, அந்த மனோகரனை, சங்கிலியாலே பிணைத்து, சபைநடுவே இழுத்து, சந்தோஷம் கொண்டாட நினைக்கும் உங்கள் தணியாத ஆசைக்குப் பெயர்தான் கட்டளையா? தந்தையே!" என்று எழுதியுள்ளார்கள். பழமையிலே புரண்ட பட உலகை — தமிழ்ப் பட உலகை — பகுத்தறிவுப் பாதைக்குப் புரட்டிப் போட்டது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய வசனம்தான். இந்த ஒப்பற்ற வசனத்தை எழுதி, இந்தத் தமிழ்ப் பட உலகத்தின் வரலாற்றை மாற்றியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அவர்கள் தனது பவளவிழா ஆண்டிலே அடியெடுத்து வைக்கிறார்கள். எனவே, பவளவிழா காணும் கலைஞர் அவர்களுடைய பெயரால் திரைப்படத் துறையினருக்கு 'நல்ல கதாசிரியர் விருது' என்கிற ஒரு அற்புதமான விருதை இந்த ஆண்டு முதல் வழங்க வேண்டுமென்று நான் அன்போடு இந்த அவைக்கு என்னுடைய முதல் கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.



இரண்டாவதாக, மணிமண்டபங்கள் பல்வேறுபட்ட தலைவர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் தமிழ்நாட்டில் எழுப்பப்பட்டுள்ளன. ஆனால், எளிய நடையால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேர்களுடைய மனதிலும், கவிஞர்களுடைய எண்ணத்திலும் குடிபுகுந்த பாரதிதாசன் அவர்களுக்கு மணிமண்டபம் இல்லை. எனவே, என்னுடைய வேண்டுகோள், சென்னையிலே, மெரினா கடற்கரையிலே, கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு ஒரு மணிமண்டபம் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய இடமாக, சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள மீன் காட்சியகத்தின் பக்கத்தில் ஒரு கட்டடம் இருக்கிறது; முன்பு ஓர் ஓட்டல் அதிலே இயங்கி வந்தது; இப்போது அது காலியாக உள்ளது; அந்த இடத்திலே பாரதிதாசன் அவர்களுக்கு ஓர் அழகான மணிமண்டபத்தைத் தலைவரின் பவளவிழா ஆண்டிலே செய்தித் துறையின் மூலமாக ஏற்படுத்த வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை நான் வைக்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-50*

அடுத்து, இந்த ஆண்டிலே இரண்டே முக்கால் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா சதுக்கத்தை அழகுற அமைத்துக் கொடுத்தார்கள். அதன் மூலமாக தமிழ்நாட்டிலே இருக்கிற மக்கள் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வருகிற அத்தனை மக்களும் அண்ணா சதுக்கத்தைக் கண்டு களித்து அண்ணாவினுடைய பெருமைகளை அறிவதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நம்முடைய முதல்வர் அவர்களையும், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்

அவர்களையும், சிறப்பாக பணி செய்து அந்தச் சதுக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நான் இந்த நேரத்திலே நன்றியோடு நினைவுகூறுகிறேன்.

அடுத்து, செய்தி மலர். நமது கலைஞருடைய அரசாங்கம் இந்த இரண்டாண்டு காலத்தில் அற்புதமான திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் அனைத்து மக்களையும் சென்றடைகின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை. அதை நாம் எல்லோரும் அறிவோம். இப்போது செய்தி மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. மூன்று செய்தி மலர் தயாரிக்கப்பட்டுள்ளதாக நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகின்றேன். அந்தச் செய்தி மலர் அதிக அளவிலே தயாரிக்கப்பட வேண்டும். குக்கிராமங்களிலே அந்தப் படங்கள் திரையிடப்பட வேண்டும். அதற்காக இந்தத் துறைக்கு எதிர்காலத்திலே அதிகமான நிதியை ஒதுக்கி நல்ல செய்தி மலர்களைத் தயார் செய்து தமிழ்நாடு முழுவதும் நம்முடைய அரசின் நலத் திட்டங்கள், நடந்து கொண்டிருக்கின்ற பணிகள் இவைகளை எல்லாம் படமெடுத்து, அவைகளைச் சிறந்த முறையிலே ஏழை மக்களும், கிராமத்திலிருக்கும் மக்களும் பார்க்கின்ற அளவுக்கு அதற்கான ஏற்பாட்டைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மக்களுக்கும், அரசிற்கும் பாலமாக இருப்பது நம்முடைய செய்தித் துறை. இந்தச் செய்தித் துறை ஆற்றுகின்ற பணிகள் மகத்தானவை. நம்முடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியில் இந்தத் துறை சிறப்பாக இயங்கி வருகிறது. எளிய முறையில் மக்களுக்குச் செய்திகளைச் சொல்கிற வகையில் அரசு செய்தி என்ற ஒன்றை அச்சடிக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 2,000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் இதுசம்பந்தமாக ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகின்றேன். படித்த மக்கள் கூடுகின்ற இடங்களில் இவைகள் ஒட்டப்படுகின்றன. படிக்காத மக்களுக்கு இந்த விஷயங்கள் எப்படித் தெரியும்? சில கிராமங்களிலே இவை இன்னும் அச்சடித்து ஒட்டப்படவில்லை. பல இடங்களுக்கு இவை சரியாகப் போய்ச் சேரவில்லை. எனவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் அரசின் நல்ல திட்டங்களை உள்ளடக்கிய சிறு சிறு துண்டு விளம்பரங்களை அரசு செய்தி என்ற அடிப்படையில் தயார் செய்து மக்களுக்கு நம்முடைய நலத் திட்டங்களைப் பற்றிய விவரங்கள்



சென்றடைவதற்கு வழி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

செய்தியாளர்களைப் பொறுத்து ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகின்றேன். நான் அறிந்த வகையில், என்னுடைய கவனத்திற்கு வந்த வகையில் இப்போது 58 வயதை அடைந்து ஓய்வுபெற்ற செய்தியாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆனால் சில பேர் 20 ஆண்டுகள் பணிபுரிகிறார்கள். ஆனால் 58 வயதை எட்டாமலேயே இறந்துவிடுகிறார்கள். தினமணியிலே பணியாற்றிய இரண்டு துணை ஆசிரியர்கள் காலமாகி அவர்களுடைய கோரிக்கை அரசிடம் இருக்கிறது. ஆனால் இந்த விதிமுறைகளினால் அந்த ஓய்வூதியத்தைக் கொடுப்பதற்கு காலதாமதம் ஆகிறது என்ற செய்தி என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் "20 ஆண்டுகள் செய்தி ஆசிரியராகப் பணியாற்றி இருந்தால் போதுமானது" என்று அந்த விதியை மாற்றி அவர்களுக்கு ஓய்வூதியத்தை விரைவில் வழங்க வேண்டுமென்பது தான். *(மணியடிக்கப்பெற்றது)*

இரண்டாவதாக, வட்ட அளவிலே பணியாற்றக்கூடிய செய்தி ஆசிரியர்களுக்கும் தேவையான அடையாள அட்டையை வழங்கி பேருந்துகளிலே இலவசமாகப் பயணம் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தமிழ்நாடு திரைப்படத் துறையிலே நடிப்புக்கு அவர்கள் பயிற்சி கொடுக்கிறார்கள். அதுபோல மற்றத் துறைகளிலும் பயிற்சி கொடுக்கிறார்கள். நடிப்புத் துறைக்கு ஒரு வருடத்திற்கு 21 பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மற்றத் துறைகளில் 12 பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். வேலைவாய்ப்பு மிக அதிகமாக உருவாகி வருகிற திரைப்படத் துறை, வீடியோ துறை போன்றவற்றில் மின்னணு சாதனங்கள் பெருமளவிலே இருக்கின்றன. அந்தத் துறைக்குச் செல்வதற்கு மக்களுக்கும் ஆர்வம் அதிகமாக இருக்கிறது. எனவே நம்முடைய திரைப்படக் கல்லூரியிலே நடிப்பிற்கு பயிற்சி கொடுக்கும்போது அதற்காக தேர்ந்தெடுக்கப்படும் நடிகர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். மற்றத் துறைகளிலும் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவான்மியூரில் பத்திரிகையாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கு அரசாங்கம் நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறது. இந்தியன் வங்கியிலிருந்து வீடுகட்டுவதற்காக அவர்கள் வாங்கிய கடனுக்கு 15 சதவிகிதம் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. எங்களுடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் 50 சதவிகிதம் அவர்களுக்கு மானியமாக கொடுத்தார்கள். இப்போது கடன் தொகையும் அதிகரித்து இருக்கிறது. வட்டி விகிதமும் அதிகரித்திருக்கிறது. எனவே இந்த அரசு ஒரு கோடியாவது மானியம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இங்கே உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு பஸ் பாஸ் கொடுக்கப்படுகிறது. அதுபோல டிவி.-க்கு செய்தி சேகரிக்கின்ற அந்த நிருபர்களுக்கும் பஸ் பாஸ் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது தியேட்டர்களில் தேசிய கீதம் ஒலிபரப்பப்படுவதே கிடையாது. ஆகவே தேசப் பற்றை உணர்த்துகின்ற அளவில் தேசிய கீதம் திரைப்படம் முடிந்தவுடன் முன்பெல்லாம் எப்படி ஒலிபரப்பப்பட்டதோ அதேமாதிரி ஒலிபரப்பப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அடுத்து, அரசு விழாக்களில் தேசிய கீத கேசட் போடுகிறார்கள். கேசட் தேய்ந்துவிட்டால் அரைகுறையாக தேசிய கீதம் பாடப்படுவது தேசிய கீதத்தை அவமானப்படுத்துவதாக அமைந்து விடுகிறது. எனவே, அரசு விழாக்களில் தேசிய கீத கேசட் போடாமல், பள்ளிக்கூட மாணவர்கள், அரசு அதிகாரிகள் அல்லது ஆசிரியர்கள் போன்றவர்கள் தேசிய கீதம் பாடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எம்.ஜி.ஆர். அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு 40 ஆண்டுகால நண்பராக இருந்தவர். எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை யாராவது திரைப்படமாக எடுக்க விரும்பினால்



அவர்களை ஊக்குவிக்கும் வகையில் வரிவிலக்கு தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர்கள் மற்றும் நாட்டில் உள்ளவர்கள் எல்லாம் தேச ஒற்றுமையோடு இருக்க வேண்டும். நாம் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்குச் செல்லுகிறோம். காசியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஆனால், இங்குள்ள கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது தமிழிலேயே பாடம் நடத்த வேண்டுமானால் தமிழ்நாடு தனி நாடாக வேண்டுமென்று.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுகுறித்து நீங்கள் நேற்றையதினம் அறையில் அவரிடம் கேட்டீர்கள். 'நான் அப்படிச் சொல்லவில்லை. 'தனி நாடு அல்ல' என்றுதான் சொன்னேன்' என்று சொல்லிவிட்டார்கள். மறுபடியும் அதை எழுப்பாதீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதுபோல் பேசக்கூடாது. அது நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு வழிவகுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'நான் அப்படிப் பேசவில்லை, நான் அந்தக் கருத்தில் பேசவில்லை' என்று சொல்லிவிட்டார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பதில் சொல்லிவிட்டால் ஒன்றும் இல்லை. ஏனென்றால் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நான் இல்லை என்று சொல்லிவிட்டேனே! நீங்கள் அடுத்த சப்ஜெக்டில் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சரி. கவனமாகவும், தேச ஒற்றுமையை பாதுகாக்கின்ற அளவிலும் நம்முடைய பேச்சுக்கள் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சுற்றுலா ஓட்டல்களில் பண்டங்கள் மிகவும் தரம் குறைந்தவையாக இருக்கின்றன. நாவுக்கு ருசியாகவும், விலை குறைவாகவும் சுற்றுலா ஓட்டல்களின் பண்டங்கள் இருக்க வேண்டும். மேலும் சுற்றுலா ஓட்டல்களின் அறை வாடகை மிகவும் அதிகமாக இருக்கிறது. அதைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலின் கோபுரம் அரசின் முத்திரைச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளது. வட நாட்டிலிருந்து ஏகப்பட்ட யாத்ரிகர்கள் அந்தக் கோயிலுக்கு வருகிறார்கள். எனவே ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியை சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியிலே பிளவக்கல் அணை இருக்கிறது. அது மாவட்ட சுற்றுலா மையமாக இருக்கிறது. அதை மாநில சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் நல்லதங்காள் பிறந்த இடமான அர்ச்சுனாபுரம், வத்திராயிருப்பு ஒன்றியத்திலே இருக்கிறது. அங்கே பிரசித்திப்பெற்ற அந்தக் கிணறுகூட இருக்கிறது. கிராமங்களில், நல்லதங்காள் பாடல்களை எல்லாம் கிராமியப் பாடல்களாகப் பாடுகிறார்கள். பழங்காலப் பெருமையை ஊக்குவிக்கும் வகையில் நல்லதங்காள் பிறந்த இடமான அர்ச்சுனாபுரத்தை சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்றக் கூட்டத்திற்கு வரும்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் எப்படி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதோ அதைப்போல பத்திரிகை நிருபர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் நிருபர்கள் சட்டமன்றத்திற்குள் வரும்போது வருகைப் பதிவேட்டில் கையெழுத்து போடுகிறார்கள். எனவே அவர்களுக்கும் அலவன்ஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தந்தை பெரியாருடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்டந்தோறும் தந்தை பெரியார் சிலைகளை வைத்தார்கள். அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், எம்.ஜி.ஆர். மீது மிகவும் பாசம் உள்ளவர்கள். எனவே, மாவட்டந்தோறும் அரசின் சார்பில் எம்.ஜி.ஆர். சிலைகளை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அவருடைய பொன்மொழிகளை எல்லாம் எழுதி வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது, 'தாயை மதிக்க



வேண்டும்', 'உழைப்பவரே உயர்வர்' போன்ற வாசகங்களை எழுதி வைக்க ஆவன செய்யவேண்டும். (குறுக்கீடு) சினிமா பாடல்களை எல்லாம் பாடிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு ஒரே கேலியும் கிண்டலுமாக இருக்கிறது. எத்தனை நாளைக்கு இந்த கேலியும், கிண்டலும் என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்து பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர் உட்கார்ந்து கொண்டு பேசலாமா? தோழமைக் கட்சி என்றால் அனுமதிக்கிறீர்கள், நாங்கள் பேசினால் இப்படி பேசக்கூடாது என்று சொல்லுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. பழனிசாமிக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். இருக்கையில் உட்கார்ந்துகொண்டு பேசக் கூடாது. என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேச வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இருக்கையில் உட்கார்ந்து கொண்டு, அனுமதி பெற்றுப் பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னுடைய அனுமதியைப் பெற்று எழுந்து நின்றுதான் பேச வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சென்னையில் உள்ள தியேட்டர்களில் டிக்கெட்டுகளை 50 ரூபாய், 60 ரூபாய் என்று விற்கிறார்கள். கவுண்டரில் 10 டிக்கெட்டுகள் மட்டும் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். மற்றவை வெளியில் விற்கப்படுகின்றன. இதில் போலீசும், தியேட்டர்காரர்களும் 50 சதவிகிதம், 50 சதவிகிதம் என்று பார்ட்னராக இருக்கிறார்கள். மேலும், தியேட்டர்களில் ஏ.சி. போடுவதில்லை. ஏ.சி. போடவில்லை என்று சொன்னால் அதற்குரிய கட்டணத்தைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, தனியார் டி.வி.-யாக இருந்தாலும் சரி, அரசாங்க டி.வி. என்றாலும் சரி, அவற்றில் மது விலக்குப் பிரச்சாரம் செய்கிறோம். ஆனால் டி.வி.-யில் மதுவை ஊற்றிக் கொடுப்பதுபோல் காட்டுகிறார்கள். லாட்டரிச் சீட்டைக் காட்டுகிறார்கள். அத்தகைய பிரச்சாரத்திற்கும், விளம்பரத்திற்கும் அரசு தடை விதிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும். நம்முடைய செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் மூலமாக சிறு கையேடு போடப்படுகிறது. நமது எம்.ஜி.ஆர். என்ற ஒரு பத்திரிகை இருக்கிறது. அந்தக் கையேட்டில் அந்தப் பத்திரிக்கையின் பெயரே இல்லாத அளவுக்கு ஆக்கிவிட்டார்கள். அதுமட்டுமல்லாமல் சட்டசபையில் செய்திகளைச் சேகரிக்க வருகின்ற நிருபர்களுக்கு எங்களுடைய கட்சி ஆளும் கட்சியாக இருந்தாலும் 8-வது இடத்தில் எங்கள் தலைவி அவர்களை உட்கார வைத்தார்கள். இப்போது ஒரு மூலையில் உட்கார வைத்து இருக்கிறார்கள். அவர் ஒரு சீப் ரிப்போர்டர், 35 வருடங்களாக நிருபராக இருப்பவரை அங்கே உட்கார வைத்திருக்கிறார்கள்.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே அவரை சீப் ரிப்போர்டர் என்கிற மாதிரி சொல்லக்கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** சீப் ரிப்போர்டர் இல்லை. தலைமை நிருபர். அந்தத் தலைமை நிருபராக இருப்பவர் 35 வருடம் அனுபவம் உள்ளவர். உங்களுடைய ஆட்சியிலே அவரை இப்படி அவமானப்படுத்தலாமா? அதனால் அவருக்கு உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. தருமபுரி மாவட்ட வெள்ளி விழாவின்போது, முதலமைச்சர் அவர்கள் தருமபுரியில் அவ்வை அதியமான் கோட்டம் அமைக்கப் போவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். நிதி நிலை காரணமாக அதை இப்போது அமைக்கிற மாதிரி தெரியவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து ஆலோசித்து, அவ்வை அதியமான் கோட்டத்தை அங்கே அமைக்க வேண்டிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டே இரண்டு பாயிண்ட்தான். அதையும் இங்கு வந்துதான் சேகரித்தேன்.

நம்முடைய இந்த செயிண்ட் ஜார்ஜ் கோட்டையை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயராலே எம்.ஜி.ஆர். கோட்டை என்று பெயரை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் எல்லா பத்திரிகை நிறுவனங்களுக்கும் அரசு விளம்பரங்களைப் பாகுபாடு இன்றி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். இப்போது முரசொலி 5000 தான் சேல்ஸ் ஆகிறது. அரசு விளம்பரம் பூராவும் அங்கேதான் கொடுக்கிறீர்கள். எனவே விற்பனைக்கு ஏற்றபடி எல்லா பத்திரிகைகளுக்கும் பாகுபாடு இன்றி அரசு விளம்பரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் சுற்றுலாத் துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்மீது அன்புத் தலைவர் மூப்பனார் வழிநடத்துகின்ற தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகப் பேசுவதிலே மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைக்கு அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவு தினம். கொடுஞ்செயல் எதிர்ப்பு நாளாக நாமெல்லாம் இன்றைக்கு அனுசரித்துக் கொண்டு இருக்கின்றோம். அன்னாருடைய தியாக உணர்வுக்கு அஞ்சலி செலுத்தி என்னுடைய பேச்சினைத் தொடங்குகின்றேன்.

ஓர் ஆட்சி என்ன செய்கிறது என்பது அது மக்களுக்கு சென்றடைவதைப் பொறுத்து இருக்கிறது. கலைவாணர் என்.எஸ்.கே. பாடியதைப் போல வெறுமனே இருந்தால் காலணா, பாக்கெட்டிலே போட்டால் நாலணா என்ற வகையிலே எதையும் விளம்பரம் செய்தால்தான் அது மக்களுக்கு சென்றடையும். அப்போதுதான் எந்த ஆட்சியாளரின் திறமையும் மக்களுக்குப் புலப்படும். அந்த வகையில் இன்றைக்கு பல செய்தித் தொடர்பு ஊடகங்கள் வந்திருக்கின்றன. செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, வான்வெளி தொலைக்காட்சி மற்றும் இண்டர்நெட் போன்று பல்வேறு ஊடகங்கள் பெருகியிருக்கின்றன. மிகவும் வல்லமையாகத் திகழ்கிற திரைப்படத் துறை, இன்றைக்கு செத்தொழிந்து கொண்டு இருக்கிறது. திரைப்படத் துறையைச் சேர்ந்த நண்பர்களை இன்றைக்கு பார்க்கும்போது ஏறக்குறைய மூடுகின்ற நிலையிலே அந்தத் துறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு வல்லமை வாய்ந்த சாதனமாக, பல மக்களைக் கவருகின்ற சாதனமாக நாட்டிலே இருக்கின்ற சாதனங்களில் மிகவும் மலிவாக, எளிதாகக் கிடைக்கக்கூடிய ஒரு சாதனமாக இருக்கின்ற திரைப்படத் துறையைக் காப்பாற்றுவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல மானியங்களும், பல்வேறு விருதுகளும்

தந்தாலும்கூட அதற்குரிய விதிமுறைகளை. அதற்குரிய ஆய்வுகளை விரிவாக நடத்தி திரைப்படத் தொழிலினைச் சார்ந்து இருக்கின்ற பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் கலைஞர்கள் வாழ்விலே இந்த அரசு ஒளி ஏற்ற வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல்வேறு கட்டுப்பாடுகளை அரசு சார்பாக திரைப்படத் தொழிலிலே நாம் விதிக்கலாம். ஏனென்றால் அப்படி கட்டுப்பாடுகளை விதித்தால்தான் அந்தத் திரைப்படத் துறை செத்தொழியாமல் வாழ்ந்து வழிகாட்ட முடியும் என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். அந்தத் துறை நலிவடையாமல் இருப்பதற்கு திரைப்படத் துறையில் இருக்கின்ற பல்வேறு வல்லுநர்களைக் கொண்டு விரிவான ஆராய்ச்சி செய்து அதற்கான வழிவகைகளைக் காண இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டதைப் போல செய்தியாளர்கள்தான் இன்றைக்கு மக்களுக்கும் அரசுக்கும் தொடர்பாக இருக்கக்கூடியவர்கள். எனவே, செய்தியாளர்களுக்குச் செய்யக்கூடிய நன்மை மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மை என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. இத்தகைய செய்தியாளர்களுக்குக் குடியிருப்புகளை 1989 ஆம் ஆண்டு திருவான்மியூர் பக்கத்திலே இருக்கின்ற சீனிவாசபுரத்திலே அரசு நில ஒதுக்கீடும் பண உதவியும் செய்தார்கள். பிறகு வந்த அ.தி.மு.க. அரசும் கூட வேறு வகையிலே அவர்களுக்கு உதவி செய்தார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்னவென்றால் அங்கே கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் எல்லாம் அவர்களுக்கு வழங்கப்படாமல் தொங்கு நிலையிலே இருக்கின்றன. அந்த வீடு என்ன விலை, மாதந்தோறும் எவ்வளவு கட்ட வேண்டும் என்பது பற்றி எல்லாம் தெரியாத நிலையிலே, திரிசங்கு சொர்க்க நிலையிலே பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். இதை நான் மிகவும் வருத்தத்தோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இடைப்பட்ட ஆண்டுகளிலே, அங்கே அமர்த்தப்பட்ட அலுவலர்கள் பல முறைகேடுகள் செய்து, இந்த நிலைமையை உருவாக்கி இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவற்றிற்கெல்லாம் விசாரணை நடத்தி, அதற்குண்டான விடிவினை, முடிவினை தமிழக அரசு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து பத்திரிகை நண்பர்கள் எல்லாம் முறையீடு செய்திருக்கிறார்கள். ஆனால், இதுகாறும் அதற்குண்டான விடை கிடைக்கவில்லை. எனவே, இந்த விஷயத்திலே அரசாங்கம் தலையிட்டு, அவர்கள் கட்டியிருக்கின்ற வீடுகளுக்கு என்ன விலை என்பதை நிர்ணயித்து — ஏற்கெனவே இருந்த



ஆட்சியில் செய்யப்பட்ட முறைகேடுகளால் அந்த வீடுகளின் விலை கூடியிருக்கிறது. அந்த முறைகேடுகளை எல்லாம் ஆராய்ந்து — அவர்களுக்கு மானியம் தந்து, சரியான விலையை, நியாயமான விலையை நிர்ணயித்து, அந்த வீடுகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-05*

பொதுவாக, திரைப்படத் துறையைப் பொறுத்தவரையிலே நம்முடைய அரசு செய்ய வேண்டிய வேலைகள் பல்வேறு இருக்கின்றன என்றாலும்கூட, நாங்கள் கல்கத்தா சென்றிருந்தபோது, அந்த மாநிலத்தில் பிறந்த 'சத்யஜித் ரே' அவர்களுக்கு அரசு சார்பிலே நிரந்தர கண்காட்சி ஒன்றை அமைத்து, அங்கே அவர்களால் படைக்கப்பட்ட படைப்புகளை ஒலி நாடாக்களாகவும், பிலிம் சுருள்களாகவும் பாதுகாத்து வருகின்றார்கள் என்பதைத் தெரிந்து கொண்டோம். அந்த வகையிலே, நம்முடைய அரசும் ஒரு சிறந்த லைப்ரரியை ஏற்படுத்தி, மிகச் சிறந்த வரலாற்றுக் காவியங்களை கேசட்டுகளாகவும், U-Matic கேசட்டுகளாகவும் அல்லது பிலிம் சுருள்களாகவும் பாதுகாக்க வேண்டும். அப்படிப் பாதுகாக்கின்ற நேரத்திலே, திரைப்படத் துறையிலே ஜாம்பவான்களாக விளங்கிய தலைவர்களையும், பெரியவர்களையும் நாம் பெருமைப்படுத்துகின்ற வண்ணம், அந்தக் காரியத்தை நிறைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், பல்வேறு சாகசங்களைச் செய்கின்ற, 'ஸ்டண்ட்' மாஸ்டர்கள் — சண்டைப் பயிற்சியாளர்கள் என்று சொல்லப்படுகின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசு கொடுக்கின்ற தொகை போதாது என்றுகூற நான் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்றால், ஒரு சேலஞ்சாக, வாழ்க்கையை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு, சர்க்கஸிலே செய்கின்றதைப் போல பல்வேறு சாகசங்களைச் செய்கின்ற அந்தத் தொழிலாள நண்பர்களுக்கு மிகச் சொற்பமான சம்பளம் கொடுக்கப்படுகின்றது. அந்தச் சொற்பச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, மக்களை மகிழ்விக்கின்ற அந்த நண்பர்களுக்கு வழங்கப்படும் இன்சூரன்ஸ் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திரைப்படத் துறையிலே இருக்கின்ற பல்வேறு சங்கங்களிடையே அதாவது பெப்சி, படைப்பாளிகள் என்பவர்களிடையே பல்வேறு தகராறுகள் அங்கே இருந்து வருகின்றன. அவற்றை எல்லாம்

தீர்த்துவைக்கும் வண்ணம், நிரந்தரத் தீர்வுகாண, தமிழக அரசு திறந்த மனதோடு பேசி, அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், அரசு சார்பிலே அளிக்கப்படுகின்ற விளம்பரங்களை எல்லாம் முறைப்படுத்தி அளிக்க வேண்டும் என்பதிலே தமிழ் மாநில காங்கிரஸ் தன்னுடைய வலுவான கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறது. A.B.C. — அதாவது, Audit Bureau of Circulation என்று சொல்லப்படுகின்ற, அந்த சர்குலேஷன் தணிக்கையின் அடிப்படையிலேகூட — ஏனென்றால், விளம்பரங்கள் தருவது என்பதைப் பொறுத்தவரையில், அவை மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் தருகிறோம். ஆகவே, அதன் அடிப்படையிலேகூட — விளம்பரங்களைத் தரலாம். அப்படிக் கொடுக்கும்போது, ஒரு கட்டுப்பாடு, வரையறை தானாகவே வந்துவிடும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பத்திரிகையாளர்களின் மறைவின்போது, D.C.R.G. தொகை ரூபாய் இருபத்தைந்தாயிரத்தை தமிழக அரசு அளித்து வருகிறது. அது போதாது என்று குறிப்பிட விரும்புகிறேன். அதை ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, கேளிக்கை வரித் துறையைப் பொறுத்தவரையில், சென்னை நகரைப் பொறுத்தவரையிலே பல்வேறு கேளிக்கை இடங்கள் இருக்கின்றன. கிஷ்கிந்தா, எம்.ஜி.எம்., கோல்டன் பீச் போன்ற இடங்கள் மக்களை ஈர்க்கின்ற இடங்களாக இருக்கின்றன. அதேபோல, மேட்டுப்பாளையத்தை எடுத்துக் கொண்டால், Black Thunder என்ற இடம் சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற இடமாக உள்ளது. அப்படியிருக்கும்போது, அங்கே நுழைவுக் கட்டணத்திற்கு நாம் விதிக்கும் வரி 20 சதவிகிதமாக இருக்கிறது. அது மிகவும் அதிகமாக இருப்பதாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்தவர்களும், அவற்றை நடத்துகின்ற நண்பர்களும் சொல்கின்றார்கள். ஆகவே, சுற்றுலாவை மேம்படுத்தும் வண்ணம் அந்த வரியைக் குறைக்க வேண்டும் அல்லது நீக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு அரசு விழாக்களை நாம் எடுத்து நடத்துகின்றோம். விழாக்கள் நடத்துவதை நாம் முறைப்படுத்தி இருக்கின்றோம். அதிலே குறிப்பாக என்னுடைய பகுதியைச் சேர்ந்த மங்கலக்கிழார் என்ற பெரியவரைப் பற்றிக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வடவெள்ளித் தந்தை, திருத்தணி



தமிழகத்திலே இருப்பதற்குக் காரணமாக இருந்தவர், தமிழ் மாமுனிவர் என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற மங்கலக்கிழார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசின் சார்பிலே கொண்டாட வேண்டும்.

அதேபோல, நாதஸ்வரக் கலைஞர்களது தன்மானத்தைக் காத்த ஒரு பெரிய கலைஞர், அன்பிற்குரிய ஐயா மூப்பனார் அவர்களின் அபிமானத்திற்கும், கலைஞர் அவர்களுடைய அபிமானத்திற்கும் பாத்திரமான திருவாவடுதுறை டி.என். இராஜரத்தினம் பிள்ளை அவர்களுடைய நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டு வருகிறது. இந்த இரண்டு விழாக்களையும் அரசு சார்பிலே, — தங்களைச் சுற்றி ஒரு கும்பலை வளர்த்துக் கொள்ளாமல், தங்களைப் பற்றி பறைசாற்றிக் கொள்ளாமல், ஒரு தொண்டு மனப்பான்மையோடு பணியாற்றிய இரு அறிஞர்களையும்—ஒருவர் மங்கலக்கிழார், இன்னொருவர் இராஜரத்தினம் பிள்ளை—இந்த இருவரையும் கௌரவிக்கும் முறையில், இவர்கள் இருவருடைய நூற்றாண்டு விழாவையும் அரசு சார்பிலே—இந்த ஆண்டு சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

அதுபோல, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களைப் பொறுத்தவரையில், அவரைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், தன்னலம் பாராமல் ஆத்திகத்திலும் சரி, வேறு வகையிலும் சரி சமூக நல்லிணக்கத்தைப் பேணியவர்களில் தலையாய இடத்தைப் பெறுகின்றவர் வாரியார் சுவாமிகள். அவருடைய மணிமண்டபத்தைக் கட்டுவதற்காக நம்முடைய அரசிடம் 10 ஏக்கர் நிலத்தை அவர்கள் — அந்த அறக்கட்டளையைச் சேர்ந்தவர்கள் — கேட்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை வழங்கி, வாரியார் சுவாமி அவர்களுடைய நினைவு மணிமண்டபத்தை சென்னையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, அம்பேத்கர் மணிமண்டபத்தைப் பொறுத்த வரையில், இன்றைக்கு ஓர் அறிக்கை வந்திருக்கிறது. அதிலே மணி மண்டபத்தைக் கட்டுவதிலே தயக்கம், சுணக்கம், தாமதம் இருக்கிறது என்று குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்கள். தாமதத்தைத் தவிர்த்து அம்பேத்கர் அவர்களுடைய மணிமண்டபத்தை விரைவாகத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) மனோன்மணீயம் சுந்தரனார் மற்றும் பெரியார் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களுக்கான ஆட்சிமன்றப் பேரவைக்கு (செனட்) மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி ஆட்சிமன்றப் பேரவை, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சொக்கர், திரு. கோ. நயினா முகமது.

பெரியார் பல்கலைக்கழகம், சேலம், ஆட்சிமன்றப் பேரவை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி.ப. அறுமுகம், திரு. கு. மனோகரன்.

### (ஈ) மாநில நூலகக் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாநில நூலகக் குழுவிற்கு கீழ்க்கண்டவர்களிடமிருந்து நியமனத்தாள்கள் முறையாக வரப்பெற்றுள்ளன:

திரு. வ. வேலுசாமி, திரு. செங்கை சிவம். தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள நியமனத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்கண்ட உறுப்பினர்கள் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 46-செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 50 சுற்றுலா—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், கண்டிப்பாக 5 நிமிடங்களுக்குள் பேசி முடிக்க வேண்டும்.

*** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி, விளம்பரத் துறை மற்றும் சுற்றுலாத் துறைமீது என்னுடைய ஒருசில கருத்துக்களை பாட்டாளி மக்கள் கட்சி-2 சார்பில் முன் வைக்க விரும்புகிறேன்.



இன்றைக்கு பொது வாழ்விலே மிக நீண்ட அனுபவமிக்கவரும், தமிழ் இனத்திற்காகத் தன்னை மெழுகுவர்த்தியாக்கி உழைத்துக் கொண்டிருக்கின்ற உத்தமத் தலைவருமான தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பவள விழா வந்து கொண்டு இருக்கிறது, வரும் ஜூன் திங்கள் 3-ஆம் நாள். இந்த நாளை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்களில், மிக அதிகமான முறை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக, மக்களுக்காகத் தொண்டாற்றிக் கொண்டு வருகின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், முத்தமிழிலும் வித்தகர் என்கின்ற காரணத்தாலே, கலைஞர் அவர்களுடைய பவள விழாவை தமிழகம் முழுவதும் முத்தமிழ் விழாவாக அரசு மாவட்டந்தோறும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்துகூட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய சீரியத் தொண்டினைப் பாராட்டுகின்ற வகையிலே, இந்தப் பவள விழாவிற்குத் தனிப்பட்ட முறையிலே அனைவரும் சேர்ந்து கட்சி வேறுபாடின்றி ஒரு விழா எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பவள விழாக்காணும் பைந்தமிழ் தேரோட்டி,
பகுத்தறிவுப் பகலவனின் கொள்கை வழிகாட்டி,
அறிவுலக மேதையால் அடையாளம் காட்டி,
ஆதவனே கலைஞருக்கு உழைப்பினில் போட்டி

என்று சொல்லக்கூடிய அளவிற்குப் பொது வாழ்விலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற அந்த உத்தமத் தலைவருக்கு, நன்றிக் கடனாகவும் அவர்களை மேலும் ஊக்கப்படுத்துகிற வகையிலும் இத்தகைய பணிகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுகின்ற பணி, இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு சென்னையிலே மணிமண்டபம் கட்டுகின்ற அந்தப் பணியினை விரைந்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல கடந்த ஆட்சிக் காலத்திலே இந்த மாமன்றத்திலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் இராமசாமி படையாட்சியார் அவர்கள். அவர்களுக்கு சென்னையில் சிலை வைக்க

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற முகத்தான், வாய்ப்பு அளித்த தமிழக முதல்வர் அவர்களையும், நெஞ்சுரம் ஏற்றியவரும், உழைப்புக்கு ஊக்கம் தருபவரும் எங்கள் இளைஞர் அணிக்கு வழிகாட்டியுமான தளபதியையும் வணங்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை, நல்ல ஆலோசனைகளைக் கூறி உள்ளார்கள்; அவர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படக்கூடிய விதத்திலே நிச்சயமாக சுற்றுலாத் துறை பணியாற்றும் என்பதை இந்த நேரத்திலே உறுதியுடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள், நெல்லை மாவட்டத்தில் சுற்றுலா விடுதி ஆரம்பிக்கப்பட்டாலும்கூட, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைத் தருகின்ற விதத்தில் கூடுதல் அறைகளை உருவாக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். வருங்காலத்தில் நிச்சயமாக—இதுவரை விடுதியே இல்லாமல் இருந்தாலும்கூட, கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் அங்கு ஒரு விடுதியை உருவாக்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டு இருக்கிறது; எனவே, வருங்காலத்தில் நிச்சயமாக—அங்கு அதிகமான வசதி வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய விதத்தில் கூடுதல் அறைகள் கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. டேவிட் செல்வின் அவர்களுடைய தொகுதியில் கிருஷ்ணாபுரத்தில் உள்ள சிற்பங்கள் எந்த அளவுக்குக் கலை நுட்பத்தோடு செதுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை அதே அளவுக்கு கலை நுட்பத்தோடு இங்கே வந்து விளக்கிக் கூறினார்கள். அந்த அளவுக்குச் சிற்பங்கள் இருப்பதால் அந்தப் பகுதியைச் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய விதத்தில் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்றும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில், எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது கிடையாது. சுற்றுலாப் பயணிகள் அதிகமாக ஒரு பகுதிக்கு வருகை தருகிறார்கள் என்று சொன்னால், அங்கு சுற்றுலாப் பயணிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய விதத்தில், சாலை வசதி, கழிப்பிட வசதி, மின் விளக்கு வசதி போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதுதான் சுற்றுலாத் துறையினுடைய பணியாக இருந்து



வருகிறது. பழங்கால துறைமுகப்பட்டினம் கொற்கையில் தமிழர்களுடைய நாகரிக வரலாறு, வீரம் முதலியவற்றை சுற்றுலாப் பயணிகளுக்கு விவரிக்கின்ற ஒரு அருங்காட்சியகம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அத்தகைய கருத்தின் அடிப்படையில், மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகள் அறிவதற்காக சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் ஒரு திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்க வேண்டுமென நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துக்கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதற்காக 30 இலட்ச ரூபாய் நிதியை ஒதுக்கி, ஒவ்வொரு வருடமும் தமிழர்களுடைய வரலாற்றை வெளிப்படுத்துகின்ற சிற்பங்களை அமைக்க வேண்டுமென்று அறிவுரை கூறி இருக்கிறார்கள். அந்தப் பணிகளும் நிச்சயமாக வருங்காலத்தில் தொடங்கப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

அதுபோன்று, பாஞ்சாலங்குறிச்சி—பாஞ்சாலங்குறிச்சியைப் பொறுத்தவரையில், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு மிகச் சிறப்பாக அந்தப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டு, இப்போது சுற்றுலாப் பயணிகள் எல்லாம் அதைப் பாராட்டுகின்ற வகையில், சுற்றுலாப் பயணிகள் பயனடையக்கூடிய அளவில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சுற்றுலாப் பயணிகளும் மற்றவர்களும் தெரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் கையேடுகள் எல்லாம் சுற்றுலாத் துறை மூலம் போடப்பட்டு, விளம்பரங்களும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கொல்லிமலையைச் சார்ந்துள்ள மேல் பகுதியில் உள்ள அருவியைச் சுற்றுலாப் பகுதியாக அறிவிக்கவேண்டுமென்றும், அந்தப் பகுதியை மேம்படுத்த வேண்டுமென்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகுதான், கொல்லிமலையில், வருகின்ற 24-ந் தேதி கோடை விழா முதன்முதலாகக் கொண்டாடப்படவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நிஜாமுதீன் அவர்கள் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் Telescope வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வருங்காலத்தில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாகப்

வேண்டுமென்று அனுமதி கேட்டு, இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலாவது - அவர்களுக்கு மிக நெருக்கமாக இருந்தவரும், அவரோடு நெருங்கி பழகியவருமான - திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சி அவர்களுக்கு சென்னை மாநகரத்திலே சிலை நிறுவுவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சேலம் அர்த்தநாரீஸ்வர வர்மா, சுதந்திரப் போராட்ட காலத்திலே கள் உண்ணாமைப் பாடல்கள், கதர் பாடல்கள் எல்லாம் பாடியவர். பாரதியாரைப் போல மிக அதிகமான பாடல்களை எழுதியவர் சேலம் அர்த்தநாரீஸ்வர வர்மா. ராஜாஜி அவர்கள்கூட ராஜ ரிஷி என்றுதான் அழைப்பார். சேலம், அர்த்தநாரீஸ்வர வர்மா அவர்கள் இறுதியாக மறைந்தது திருவண்ணாமலை. சேலத்தில் பிறந்திருந்தாலும் அவர் திருவண்ணாமலையில் மறைந்தார். அவர் ஒரு சுதந்திரப் போராட்ட தியாகியாகத் திகழ்ந்தவர். அவர்களுக்கு திருவண்ணாமலையில் ஒரு மணிமண்டபம் கட்டித்தர அரசு முன் வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோல, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தனித் தமிழ் இயக்கத்திலே தனிப் பெரும் முத்திரைகளைப் பதித்தவர். பாவலரேறு பாவாணருடைய மாணாக்கராகத் திகழ்ந்தவர். எனவே, பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு சென்னையிலே மணிமண்டபம் கட்டித்தர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். எல்லை மீட்ட வீரர் விநாயகம் அவர்களுக்கு திருத்தணியிலே ஒரு நினைவு மண்டபம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சுற்றுலா மையமான சாத்தனூர் அணை இன்றைக்குக் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது: அதை மிகச்சிறப்பாகக் கவனித்து, மேம்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்திலே உள்ள கோயில்—அது மத்திய அரசாங்கத்தினுடைய நேரடி பொறுப்பிலே



இருந்தாலும்கூட, அங்கு வந்து செல்கின்ற வெளிநாட்டுப் பயணிகளுக்குத் தங்குவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே, அங்குத் தங்குகின்ற வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் இருக்கக்கூடிய மேல் சித்தாமூர் என்ற கோயிலானது—அது சமணர்களுக்கு தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய பிரபலமான ஒரு கோயில்; எனவே, அந்தக் கோயிலை அரசு, சுற்றுலாத் தலமாக அறிவித்து அதனை மேம்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படங்களிலே பொதுவாக சாதிய உணர்வுகளைத் தூண்டுகின்ற வகையிலே (மணி அடிக்கப் பெற்றது) வரக்கூடிய பெயர்களை தவிர்ப்பதற்கு நம்முடைய துறையின் மூலமாக, அந்தத் திரைப்படத் துறையினருக்கு வேண்டுகோள் விடுக்கலாம். தேவர் மகன் என்றும் கவுண்டர் பொண்ணு என்றும்—இப்படியெல்லாம் வருகிறபோது, அது மேலும் மேலும் மக்களுடைய சாதிய உணர்வுகளைத் தூண்டுகிற வகையிலே இருக்கிறதே தவிர, நல்ல உணர்வுகளைத் தூண்ட முடியவில்லை. குறைந்தபட்சம் பெயர்களையாவது தவிர்ப்பதற்கு அவர்கள் முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர். (குறுக்கீடு) முடிந்துவிட்டது; 5 நிமிடங்கள் கேட்டீர்கள்; அதற்கு மேலேயே கொடுத்துவிட்டேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** பத்திரிகையாளர்கள் பல பேர்களுக்கு இன்றைக்கு வீடுகள் கிடைக்காமல் இருக்கின்றன. எனவே, அனைவருக்கும் வீடுகள் வழங்குவதற்கும், அவர்களுக்கு உதவித் தொகை 1 லட்சம் ரூபாயாகத் தருவதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் எனக்கு மூன்றாவது முறையாக

பரிசீலிக்கப்பட்டு, அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அந்தப் பணியும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பெருந்துறை பெரியசாமி அவர்கள், பெருந்துறையை மையப்படுத்தி, அது தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற காரணத்தாலும் அதிகமான போக்குவரத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற காரணத்தாலும், தங்கும் வசதியோடு கூடிய உணவு விடுதி ஒன்றையும் ஏற்படுத்த வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மக்களுடைய தேவைகளைக் கண்டிப்பாக நிறைவேற்றக்கூடிய விதத்தில் வருங்காலத்தில் தன்னுடைய பணியைச் சுற்றுலாத் துறை ஆற்றும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வல்லரசு அவர்கள் மதுரையை மையமாகக் கொண்டு, ஒருங்கிணைந்த சுற்றுலா மையம் ஏற்படுத்த வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில் 19 வகையான பயணங்களை இந்தச் சுற்றுலாத் துறை மூலம் மேற்கொண்டு வருகிறோம். பயணிகளின் வசதியை அடிப்படையாக வைத்து, சென்னையை மையமாகக் கொண்டு ஒருங்கிணைந்த சுற்றுலாப் பயணத் திட்டங்கள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருங்காலத்தில் திருச்சியை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த சுற்றுலாப் பயணங்களும், அதற்கு அடுத்ததாக மதுரையை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த சுற்றுலாப் பயணங்களும், அதற்கும் அடுத்து கன்னியாகுமரியை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட பயணிகளுடைய ஆர்வத்தைப் பொறுத்து, பயணிகளுடைய வசதி வாய்ப்புகளைப் பொறுத்து, அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள், சிற்றாறு அணையைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கவேண்டுமென்றும், பேச்சிப்பாறையிலும் சில பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று திற்பரப்பு நீர்வீழ்ச்சி பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஆல்பன் அவர்களும், திரு. மணி அவர்களும் பேசினார்கள். திற்பரப்பு நீர்வீழ்ச்சி குற்றால நீர்வீழ்ச்சி போல இருக்கிற காரணத்தால், அங்கே வருகின்ற மக்களின் பாதுகாப்பு கருதி கம்பிகளால் ஆன தடுப்புகளை வைக்க வேண்டுமென்றும், குளிப்பவர்களுக்கு வசதியாகப் படிக்கட்டுகளை உருவாக்கவேண்டுமென்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கான நிதி ஒதுக்குவதற்கு இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர்



அவர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள். அந்தப் பணிகளும் இந்த நிதியாண்டில் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்ட சரியான பயிற்சி பெற்ற வழிகாட்டிகள் இல்லை என்று எடுத்துச் சொன்னார்கள். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது, பயணிகள் அல்லல்படக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு அதற்கான பயிற்சி அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். பயிற்சிகள் ஆரம்பமாகக் கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. ஆகவே, வருங்காலத்தில் நிச்சயமாக அப்படிப்பட்ட குறைகள் போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தன் அவர்களும், திரு. தாமரைக்கனி அவர்களும், திரு. குழந்தை தமிழரசன் அவர்களும், டாக்டர் இராமன் அவர்களும் இங்கே தங்களுடைய கருத்துகளை எல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கருத்துக்கள் எல்லாம் கவனமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் இராமன் அவர்கள் நுழைவு வரியை 20 சதவீதத்திலிருந்து குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். சுற்றுலாப் பயணிகளிடம் அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுகின்ற நிலை இருப்பதாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துக் கூறி, அதற்கான பணிகளில் அரசும், சுற்றுலாத் துறையும் ஈடுபடும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட பணிகளை நிச்சயமாகச் சுற்றுலாத் துறை மிக வேகமாகச் செய்யும் மாண்புமிகு உறுப்பினர்கள் தந்த வெட்டுத் தீர்மானங்கள் ஆக இருந்தாலும் சரி, அதேபோன்று இங்கே எடுத்துக்கூறிய கருத்துக்களாக இருந்தாலும் சரி, அனைத்துக் கருத்துக்களையும் கவனத்திலே கொண்டு வருகிற நிதியாண்டில் உடனடியாக நிவர்த்தி செய்யாமல் இருந்தாலும்கூட, தொடர்ந்து உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய விதத்திலே முதல் கட்டமாக அந்தப் பணிகள் எடுத்து நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12-25

அதேபோன்று, தமிழ்நாட்டில் பல வகையான சுற்றுலாத் தலங்கள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. மற்ற மாநிலங்களோடு

ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் வருடாவருடம் 4 சதவிகிதம் சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கை அதிகரித்து கொண்டே இருக்கிறது. ஆனால், கடந்தகால அரசு, சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கை அதிகரிப்பதைக் கருத்தில்கொண்டு அடிப்படை வசதிகளைச் செய்யாத காரணத்தால், இன்றைக்குக் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு எந்தெந்தப் பகுதிகளுக்கு பயணிகள் அதிகமாக வருகை தருகிறார்கள் என்று பார்த்து அந்தப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமென்ற கருத்துரு அனுப்புவதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

அதேபோன்று, இந்த நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் சுமார் 48.58 இலட்சம் ரூபாய்க்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். 48.58 இலட்ச ரூபாயில், பூம்புகார் சுற்றுலா வளாகத்தைச் சுற்றிச்சுற்றுச் சுவர் கட்டுவதற்காக 5 இலட்சம் ரூபாயும், தஞ்சாவூர் ஒலி–ஒளிக் காட்சியைத் திரையிட திரைப்படக் கருவி வாங்குவதற்காக 2.08 இலட்சம் ரூபாயும், அதேபோன்று நெடுஞ்சாலை ஓரங்களில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சிறப்பு வகையான கழிப்பிட வசதிகளை ஏற்படுத்துவதற்காக 6 இலட்சம் ரூபாயும், முக்கிய சுற்றுலா மையங்களுக்குச் செல்லும் அணுகு சாலை வசதிகளைச் செய்தல், கன்னியாகுமரியில் சுற்றுலா கலைக்கூடம் அமைத்தல், மாமல்லபுரத்தில் பாரம்பரியப் பூங்கா அமைத்தல் போன்றவற்றிற்கு 10 இலட்சம் ரூபாயும், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டைக்கு மின் வசதியை உருவாக்குவதற்கான சாதனம் வாங்குவதற்காக 1.50 இலட்சம் ரூபாயும், சுற்றுலா அலுவலகங்களைப் பழுது பார்ப்பதற்காக 2 இலட்சம் ரூபாயும், சுற்றுலா மையங்களைத் தூய்மைப் பகுதியாக அமைப்பதற்காக 2 இலட்சம் ரூபாயும், அதற்கான வசதிகளைச் செய்வதற்கு 2 இலட்சம் ரூபாயும் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்ற அனைத்து தென் மாநிலங்களையும், தமிழகத்தின் பக்கத்து மாநிலமான கர்நாடகத்தையும், அதேபோன்று கேரளத்தையும், ஆந்திராவையும்



ஒருங்கிணைக்கும் ஒரு திட்டம் சுற்றுலாத் துறையின் மூலமாக நிறைவேற்றப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

இன்றைக்கு இராஜஸ்தான் மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற **Palace on wheels** என்ற பயணத்திற்கு இணையாக, தென் மாநிலங்களை ஒருங்கிணைத்து **Heritage on wheels** என்ற திட்டத்தைச் செயல்படுத்த இருக்கின்றோம். அதற்காகத் தோராய மதிப்பீடு சுமார் 15 கோடி ரூபாய் ஆகும் என்று துறை நிர்வாகிகள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக, தமிழ் மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கக்கூடிய விதத்திலே இதனை மத்திய அரசு பங்காகக் கொண்டு செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு பங்காக 28 சதவீதமும், மாநில அரசுப் பங்காக 12 சதவீதமும், இதர நிதி நிறுவனங்களின் கடன்களாக 60 சதவீதமும் பெறத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்காகத் தென்னக இரயில்வேயுடனும், பிற மாநிலங்களுடனும் இணைந்து செயல்படக் கூடிய வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, செங்கற்பட்டு பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 45-க்கு முன்பாக அமைந்துள்ள குளவாய் ஏரி தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே அதிவேகப் படகுச் சவாரி **wind surfing, hovercraft, jet ski, water ski** சாகசப் புனல் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்காக 50 இலட்சம் ரூபாய் மத்திய அரசின் 'அடிப்படை வசதி மேம்பாடு செய்தல்' என்ற திட்டத்தின் மூலமாகவும் மாநில அரசு நிதியுதவியுடனும் செயல்படுத்தத் துறை கருதுகிறது. இதற்கான ஆய்வுப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் அருகிலுள்ள 30 ஏக்கர் திறந்தவெளி அருங்காட்சியகத்தில் கூடுதல் சிலை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் இலக்கிய வரலாற்றினுடைய சிறப்பை அறிவிக்கின்ற வகையில் சங்கே முழங்கு, வீரபாண்டிய கட்டபொம்மன், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் ஆகியோருடைய சிலைகள் வைக்கப்பட இருக்கின்றன.

பிற்பகல் 12-30

இவை தவிர, வீரத்தாய், குடவோலை முறை, சோழர் கால நாணயங்கள், பாரதியின் கொட்டு முரசு, முல்லைக்குத் தேர் ஈந்த பாரியின் வள்ளல் திறன், இசைத்தூண் மண்டபம் ஆகியவைகளைப் படிப்படியாக அமைத்திட அரசு உத்தேசித்து இருக்கிறது. 35 இலட்சம் ரூபா செலவில் படிப்படியாக ஒவ்வோர் ஆண்டும் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று, சென்னை விமான நிலையத்திலிருந்து மாமல்லபுரம் வரை உள்ள சாலைகளில் வழிகாட்டிப் பலகைகளை நிறுவுவதற்காக 6 இலட்சம் ரூபாயை நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே கேட்டவுடன், உடனடியாக அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். தமிழ்நாட்டிலே உள்ள 19 முக்கிய சுற்றுலா இடங்களை ஒருங்கிணைத்து ஒரு மாஸ்டர் பிளான் என்ற விதத்திலே ஒரு பெரிய திட்டம் தயாரிப்பதற்காகப் பல நுண் ஆய்வுகள் செய்வதற்குத் தகுதிவாய்ந்த தொழில் நிறுவனங்களைக் கண்டறிய உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது, இறுதிக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இது ஒருசில மாதங்களில் தொடங்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாஸ்டர் பிளானைக் கொண்டு வருவதற்காக சுமார் 20 இலட்சம் ரூபாயை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

அதுபோன்று, தமிழ்நாட்டில் புகழ்பெற்ற சுற்றுலாத்தலங்களை மேம்படுத்த சாலைகள், கழிவறைகள், வெள்ள ஒளிவிளக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, வேளாங்கன்னி மற்றும் நாகூர் ஆகிய முக்கிய சுற்றுலாத்தலங்கள் முதற்கட்டமாக மேம்படுத்தப்பட உள்ளன. மத்திய, மாநில அரசுகள் மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை நிதி உதவியோடு இது மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளக். கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட உலா திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகளையும் மேம்படுத்த இந்தத் துறை கருதுகிறது. அந்த அடிப்படையிலே இதற்கான திட்டங்கள் தனித்தனியாகத் தயாரிக்கப்பட உள்ளன. அதற்கு முதற்கட்டமாக சுருளி அருவி,



கன்னியாகுமரியில் திற்பரப்பு அருவி, திருமூர்த்தி மலை அருவி, மனோரா நினைவுச் சின்னம், தாளையன் நாச்சியம்மன் அருவி போன்ற இடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, முதற்கட்டமாக 20 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதி உதவி தந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையை 1971 ஆம் ஆண்டு ஆரம்பித்தாலும்கூட, இன்றைக்குத் தலைமை அலுவலகம் உள்ள சென்னையில்கூட சொந்தமான இடம் இதுவரை இல்லாத ஒரு குறையைப் போக்க வேண்டும். நீங்கள் ஆரம்பித்த துறை, உங்களுடைய காலத்தில்தான், இதற்கு ஒரு தலைமை அலுவலகத்தை, அதற்கான இடத்தை நீங்கள் தரவேண்டுமென்று எடுத்துக்கூறியதன் அடிப்படையில் நம்முடைய முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு திருவல்லிக்கேணி பகுதியில் 20,162 சதுர அடி உள்ள சுமார் 3¼ கோடி ரூபாய் மதிப்புள்ள இடத்தை சுற்றுலாத் துறைக்கு என்று நிலக்கிரயம் இன்றி வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சுற்றுலா அலுவலகம் கட்டுவதற்கு இடம் வழங்கியதோடு மட்டும் நின்று விடாமல், சுற்றுலா அலுவலகம் கட்டுவதற்காக 20 இலட்சம் ரூபாய் நிதியையும் நம்முடைய முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இந்தச் சுற்றுலா அலுவலகத்தைப் பொறுத்தமட்டில், பல மாடிக் கட்டடங்களாகக் கட்டி மற்ற மாநிலங்களின் சுற்றுலா அலுவலகங்களையும் ஒரே இடத்தில் கொண்டு வருவதன் மூலமாக நம்முடைய மாநிலத்திற்குப் பிற மாநிலங்களுடைய சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதன் மூலமாக அதிகமான பொருளாதார வளர்ச்சியையும், அதேநேரத்தில் நம்முடைய சுற்றுலாத் துறையின் மூலதனத்தை மேம்படுத்துவதற்கும் இது ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே இப்படிப்பட்ட ஓர் அலுவலகம் கட்டப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், இந்தப் பேரவைக்கும் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதிக நஷ்டத்தை அடைந்திருந்தாலும்கூட, 1997-98 ஆம் ஆண்டு தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்து, சீரிய விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை விதித்ததன் மூலமாக, இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரையைப் பின்பற்றிய காரணத்தால் 24.33 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சுற்றுலாப் பயணிகளுக்காக 19 வகை முறைப்படுத்தப்பட்ட பயணங்களை இக்கழகம் இயக்கி வருகின்றது. இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முன்னாள் மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வருகின்ற 3-ஆம் தேதியிலிருந்து நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாள் அன்று 'திராவிட பண்பாட்டுச் சுற்றுலா' என்றவொரு திட்டம் இந்தச் சுற்றுலாத் துறையின் மூலம் இயக்கப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-35*

சுற்றுலாப் பயணங்களை இயக்கினால் மட்டும் போதாது, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான, வசதி வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக, சுமார் 24 பேருந்துகளை இந்தக் கழகம் இயக்கினாலும்கூட, 11 பேருந்துகள் இரண்டு வருடத்திற்கு மேல் ஆகி, பழமை வாய்ந்ததாக இருக்கின்ற காரணத்தால், அதிலே பயணம் செய்கின்ற பயணிகள் வசதிகளைப் பெற முடியாது. எனவே, அதை மாற்றித் தரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துக்கூறியதன் அடிப்படையில் அதற்காக உடனடியாக அந்த 11 பேருந்துகளையும் மாற்றி, புதியதாக 11 பேருந்துகளை வாங்குவதற்காக 115 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக 36 தங்கும் விடுதிகள் இன்றைக்குப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும்கூட, தனியார் விடுதிகளோடு போட்டி போடக்கூடிய விதத்திலே இந்த வருடம் தங்குகின்ற பயணிகளுக்கு அதிகமான வசதிகளைத் தரவேண்டும், அப்படி அதிகமான ' வசதிகளைத் தருகின்றபோதுதான் தனியாரோடு போட்டி போடக்கூடிய விதத்திலே இருக்கும் என்றும் அந்த விடுதிகளைத் தரம் உயர்த்தினால்தான் பயணிகள் தங்க வசதியாக இருக்கும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துக்கூறியதன் அடிப்படையில், அதற்காக ஒரு கோடி ரூபாயினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



சுற்றுலாப் பயணிகளுடைய அடிப்படைத் தேவைகளையும் தமிழகத்தினுடைய சுற்றுலா இடங்களைப் பற்றியும் மற்றவர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய விதத்திலே கையேடுகள், போஸ்டர்கள் போடுவதற்காக, விளம்பரங்கள் செய்வதற்காக, 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று கிழக்குக் கடற்கரைச் சாலையையொட்டி, சென்னை முதல் பாண்டிச்சேரி வரையுள்ள கடற்கரைப் பகுதிகளைச் சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. எனவே, பல்வேறு சுற்றுலாத் திட்டங்களைத் தனியார் முதலீட்டில் தொடங்க பலர் ஆர்வம் கொண்டிருந்தாலும், இப்பகுதிகளில் இந்தத் திட்டங்களைத் தொடங்க மத்திய அரசின் முன்அனுமதியை கடற்கரைப் பகுதிகள் ஒழுங்கு முறை விதிகள் அதாவது Coastal Zone Regulation என்பதன்கீழ் பெறவேண்டும். மேலும் தமிழக அரசு சம்பந்தப்பட்ட பல துறைகளின் ஒப்புதலையும் பெறவேண்டியுள்ளது. தற்போது இப்பகுதிகளில் சுமார் .300 கோடி ரூபாய் மதிப்புள்ள 8 தனியார் சுற்றுலாத் திட்டங்கள் அனுமதிக்காக நிலுவையில் இருக்கின்றன. இத்திட்டத்திற்கான அனுமதியைப் பெறுவதற்கு பல துறைகளோடு கலந்துபேசி, ஒப்புதல்பெற சுற்றுலாத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பினை நேரடியாகவும், மறைமுகமாகவும் கொடுக்கக்கூடிய விதத்தில் சுற்றுலாத் துறை செயல்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தந்த அனைத்துக் கருத்துகளையும் நிச்சயமாக இந்தத் துறை கவனத்தில் எடுத்து, அதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றும் என்ற உறுதியைத் தெரியப்படுத்திக்கொண்டு, இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள சுற்றுலா மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வெட்டுத்தீர்மானங்களின் மூலமாகக் கருத்துகளைத் தெரிவித்த உறுப்பினர்கள், அவற்றை வலியுறுத்தவேண்டாம் என்று கூறி, இந்த மானியத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னொரு அமைச்சர் பதில் சொல்லவேண்டும். அவர் பதில் சொல்லி முடித்தபிறகு, நீங்கள் கேட்கலாம். இப்போது உட்காருங்கள். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" திருக்குறளை இருவரிகளில் முறைப்படி அச்சிடவும் என்ற தேன்தமிழ் கவிஞருடைய திருமறைக்கொப்ப, தோன்றி, அல்லலுறும் மக்களின் இன்னலைக் களைய ஆருயிரைப் பணயம் வைத்து எல்லையில்லாப் புகழ் சேர்த்து, வையத்து நாடனைத்தும் வாழ்வாங்கு வாழ்கின்ற பெருவாய்ப்பினையும் பெற்று, நாட்டுக்குள்ளேயும், இதயக்கூட்டுக்குள்ளேயும் நீக்கமற நிறைந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், சுதந்திரப் பொன் விழா ஆண்டு இறுதிக் கட்டத்தில் பவள விழாவைக் கொண்டாடுகிற வாய்ப்பினைப் பெற்றிருக்கிற இந்த நல்ல நேரத்தில், அவரால் வழங்கப்பட்ட பதவியின் காரணமாக இந்தப் பேரவையின் விவாதத்திலே கலந்துகொண்டு, பதில் அளிக்கின்ற வாய்ப்பினை வழங்கிய அவருக்கும், தந்தைக்கே தந்தையாகப் பொறுப்பேற்று தந்தைக்குப் பெருமை சேர்த்திருக்கிற சென்னை மாநகர மேயர், வணக்கத்திற்குரிய தளபதி, அண்ணன் ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

இன்றையதினம் செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர்கள் தங்களுடைய மேலான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், அதேநேரத்தில் திருத்தப்பட வேண்டிய தங்களுடைய உணர்வுகளையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகப் பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களே ஒரு பத்திரிகையாளர் என்பது நாடு அறிந்திருக்கிற உண்மை ஒரு பத்திரிகையாளர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்கின்றவரும், இந்தியத் திருநாட்டில் அவர் மாத்திரம்தான். பத்திரிகையாளராகத் தொடர்ந்து பணியாற்றியதோடு, சமுதாயச் சீர்திருத்த உணர்வுகளையும் நாட்டு மக்களுக்கு முன்னாலே எடுத்துச்சொன்ன காரணத்தால், கலையை ஒரு கண்ணாகவும், அரசியலை இன்னொரு கண்ணாகவும் ஏற்று, அந்த இரு கண்களின் வளர்ச்சிக்காகத் தன்னுடைய அரசியல் ஆற்றலை,



அறிவாற்றலைப் பயன்படுத்தி, அதன்மூலம் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கிற அவர், தான் பத்திரிகையாளராக, மாநில முதலமைச்சராக மாத்திரம் இருந்தால் போதாது என்று சொல்லி, இந்து பத்திரிகையிலே பணியாற்றிய மேதகு குடியரசுத் தலைவர், டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்கள், இந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவராக வரவேண்டும் என்று முதன்முதலாக நாட்டுமக்களுக்கு அடையாளம் காட்டி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரைத் குடியரசுத் தலைவராகவே உயர்த்தி இருக்கிறார். அதற்கெல்லாம் காரணம், ஒரு பத்திரிகையாளர், உயர்ந்த சிந்தனையாளராக, முற்போக்குவாதியாக, ஜாதிமத பேதங்களுக்கு அப்பாற்பட்ட பகுத்தறிவுவாதியாக இருந்தால்தான் முடியும். அப்படிப்பட்ட நிலையை நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-40*

செய்தி மற்றும் விளம்பரத் துறை ஒரு மிக முக்கியமான துறை. ஏனென்று சொன்னால், மக்களின் உணர்வுகளைக் கவர்ந்து, அறிவை வளர்த்து, அவர்களை முற்போக்கான முறையில் உருவாக்கும் திரைப்படம், பத்திரிகை 'இந்த இரண்டும் இந்தத் துறையிலேதான் உள்ளன. அப்படியிருக்கிற இந்தக் காலகட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் —அவரே ஒரு பத்திரிகையாளராக இருந்து, முதன் முதலாக இந்த நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர். அவருடைய மறைவிற்குப் பின்னால் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையைத் தொடர்ந்து நிர்வகித்துக் கொண்டிருக்கிறவர். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் அதிக நாட்கள் முதலமைச்சராக இருந்த முதல் முதல்வர் என்கிற பெருமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய காலத்திலேதான் பத்திரிகைத் துறை பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறது." இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் விருப்புவெறுப்பின்றி 'எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரக் கட்டணங்களைக் கூட்டி வழங்கியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், ஆளுகிற கட்சிக்குச் சொந்தக்காரப் பத்திரிகை அல்லது எதிர்க்கிற பத்திரிகை என்ற பாகுபாடு இல்லாமல் விளம்பர நிறுவனங்கள் கோரிய கட்டணங்களில் 75 சதவீதத்தை எல்லாத் தரப்புப் பத்திரிகைகளுக்கும் வழங்கியிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் கடந்த காலங்களில்

எல்லாப் பத்திரிகைகளுக்கும் வழங்கப்படவில்லை. ஜால்ரா பத்திரிகைகள் சிலபேருக்கு மாத்திரம் வழங்கி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்லாமல் பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரையில் முரசொலியைக் கோடிட்டுக் காட்டி, அதற்கு விளம்பரம் தந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ரூ.5,000 என்று சொன்னார்கள். முரசொலி இன்றைக்கு பட்டிதொட்டிகளில் மாத்திரமல்ல. எல்லா இடங்களிலும் உள்ளது. ஒரு காலகட்டத்தில் திரு. சி. சுப்ரமணியம் அவர்களே 'முரசொலியைப் படித்துத்தான் நான் தமிழ் உணர்வு பெற்றேன், தமிழ் படிப்பதைக் கற்றுக்கொண்டேன்' என்று பாராட்டியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் முரசொலியைப் படிப்பதனால் மாத்திரம்தான் தமிழ்நாட்டினுடைய அரசியலை, தமிழருடைய பண்பாட்டை, கலையை, கலாச்சாரத்தை, நாகரிகத்தைப் புரிந்துகொள்ள முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அறிவு ஜீவிகள் அத்தனை பேரும் ஒப்புக் கொண்டிருக்கிற ஒரு பேருண்மையாகும்.

அதுமாத்திரமல்ல, பத்திரிகை ஒரு கூர்மையான ஆயுதம். அந்தப் பத்திரிகையினுடைய அருமை, பெருமைகளை எல்லாம் முன்னோர்கள் சொல்கிறபோது, குறிப்பாக பாவேந்தர் அவர்கள் கோடிட்டுக் காட்டுகிறபோது —

"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான்; இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாயாந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்ட இந்த
உலகினினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஒரு பெண்ணாக வடிவமைத்துப் பாடியிருக்கிறார்கள். கவிஞன் பூமியையும், நீரையும் பெண்ணாகப் பாவித்துப் பாடிய காலங்களையெல்லாம் மாற்றி பத்திரிகையை ஒரு பெண்ணாகவே பாவேந்தர் மாற்றியிருக்கிறார் என்று சொன்னால், அந்தப் பெண்ணுக்கு இருக்கிற பெருமையை உணர்ந்தவரின் இந்தத் தன்மையை உணர்ந்து கொள்ளலாம். ஆனால் பெண்ணின் பெருமையை உணராதவர்கள் காலத்திலேதான் பத்திரிகைகள் படாத பாடுபட்டது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். குறிப்பாக, பத்திரிகை எப்படிப் பயன்பட வேண்டுமென்பதைப் பற்றி நான் தந்தை பெரியாருடைய கருத்தை மாத்திரம் மேற்கோளாகக்



காட்டி ஒன்றைச் சொல்கிறேன். இங்கே பேசிய அப்பாவு அவர்கள், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், அதைத் தொடர்ந்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் வல்லரசு போன்றவர்கள் எல்லாம் சமய ஒற்றுமைக்கு, ஜாதிமத பேதங்களைப் போக்குவதற்கு எப்படி ஒன்றுபட்டு இருக்கவேண்டுமென்ற கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். 73 ஆண்டுகளுக்கு முன்னாலே 1925 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி தந்தை பெரியார் அவர்கள் குடியரசு இதழில் எழுதுகிறபோது மக்களிடம் சுயமரியாதையும், சமத்துவமும் ஓங்கி வளரவேண்டும். உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் ஜாதிச் சண்டை என்ற நெருப்புக்கு நெய்யாக இருக்கிறது. இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்து உயிர்களும் ஒன்று என்ற உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டுமென்றும் தந்தை பெரியார் வலியுறுத்தியிருக்கிறார்கள். மதங்களும் ஜாதிகளும் மக்களைக் கூறுபோட்டுப் பிரித்துவரும் இன்றைக்குக்கூட கச்சிதமாகப் பொருந்துகிற வகையில் 73 ஆண்டுகளுக்கு முன்னாலே தந்தை பெரியார் அவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள். இந்தக் கருத்தைத்தான் கட்சி வேறுபாடின்றி எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட நிலையைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உறுதுணையாக இருக்கவேண்டுமென்று துறையின் சார்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பத்திரிகைச் சுதந்திரம் என்பது அரசாங்கத்தின் தலையீடு இல்லாததைக் குறிக்கும் என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசைப் பார்த்துக் குறைசொல்கிறபோது அதை எதிர்க்காமல் இருப்பதுதான் பத்திரிகை தர்மம். அதுதான் ஜனநாயகம். ஆனால் கடந்த காலத்தில் அரசைப் பற்றிக் குறை கூறப்படுமேயானால் அல்லது ஆளுகின்றவர்களைப் பற்றி ஏதாவது குற்றச்சாட்டுகள் ஆதாரத்தோடு வெளியிடப்படுமேயானால், அவர்கள் எல்லாம் எமலோகத்திற்கு அனுப்பப்பட்ட வரலாறுகள் எல்லாம் நாடறிந்திருக்கிற உண்மைதான். தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன் முதலாகப் பத்திரிகையாளர் கொல்லப்பட்டது கடந்த கால ஆட்சியிலேதான். இரண்டு இளைஞர்கள் தராசு பத்திரிகை அலுவலகத்தில் அப்போதைய ஆளும் கட்சியினாலே படுகொலை செய்யப்பட்டார்கள்; படுகொலை செய்தது மாத்திரமல்ல; சம்பந்தமில்லாதவர்களைக் கொலையாளி என்று கைது செய்தார்கள். பிறகு தமது ஆட்சிக்காலம் முடிகிற வரையில் அதுபற்றிய விசாரணையே நடைபெறாமல் தடுத்துவிட்டார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், சி.பி.ஐ. விசாரணைக்கு

உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. முரசொலி பத்திரிகையினுடைய ஆசிரியராக இருந்த திரு. செல்வம் அவர்களும், குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டதும் இதே மாமன்றத்தில்தான். தினகரன் ஆசிரியர் முத்துப்பாண்டியன் கைது செய்யப்பட்டதும் கடந்த கால ஆட்சியிலேதான். கே.பி. சுனிலுக்கு பிடி வாரண்ட் போட்டதும் கடந்த கால ஆட்சியிலேதான். நக்கீரன் உட்பட பல பத்திரிகைகள் தீக்கிரையாக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதும் கடந்தகால ஆட்சியிலேதான். அம்மா என்றும், ஆதிபராசக்தி என்றும், பூமாதா, கோமாதா என்றும் ஆராதனை செய்து, பத்திரிகைகளுக்கு கோடிக்கணக்கான மக்கள் பணம் விளம்பரமாக வாரி இறைக்கப்பட்டது. அதில் ஒரு பகுதி ஆதிபராசக்தியினுடைய உடன் பிறவா சகோதரியும் கூட்டாக கமிஷன் என்ற பெயரால் கொள்ளை அடித்தார்கள் என்பதும், இவை எல்லாம் இப்போது வழக்கு மன்றத்திற்குப் போய் இருக்கின்றன என்பதும் நாடு அறிந்திருக்கிற உண்மைதான். அதே நேரத்தில் கடந்த கால ஆட்சியில் பத்திரிகையாளர்கள் எப்படியெல்லாம் மதிக்கப்பட்டார்கள், மிதிக்கப்பட்டார்கள் என்பதை நான் கோடிட்டுக் காட்டினேன்.

*பிற்பகல் 12-45*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தினமலர் அலுவலகம் தாக்கப்பட்டது இந்த ஆட்சியில்; தினபூமி ஆசிரியர் தாக்கப்பட்டார்; தராசு ஆசிரியர் தாக்கப்பட்டார்; ராஜ் டி.வி.-யினுடைய நிருபர் தாக்கப்பட்டார். அதெல்லாம் உங்கள் ஆட்சியிலே நடக்கவில்லையா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாக்கப்பட்ட எந்தப் பத்திரிகையாளரும் திராவிட முன்னேற்றக் கழகத்தவராலோ அல்லது ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களாலோ தாக்கப்பட்டார்கள் என்று எந்த வழக்கு மன்றத்திலேயும் புகார் செய்யப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதில் சொல்லி முடித்தவுடனே கேளுங்களேன்.



**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவரே சொல்லப்படுகிறது என்று சொன்ன காரணத்தினால், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. தாமரைக்கனி, நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள் என்றால், ஆதாரபூர்வமாக, அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டும். சொல்லப்படுகிறது, நம்பப்படுகிறது, கேட்கப்படுகிறது என்றெல்லாம் சொன்னால் எடுத்துக்கொள்ள முடியாது. நீங்கள் உட்காருங்கள். நேரம் அதிகமாகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் பத்திரிகையாளர்களை மதிக்க வேண்டும் என்ற உணர்வோடுதான் பருவ இதழ், மாத இதழ்களுக்கெல்லாம், குறிப்பாக, கடந்த கால ஆட்சியில் வழங்கப்படாத பத்திரிகைகளுக்கு எல்லாம் செய்தியாளர் அட்டைகளை 114 பேருக்கு வழங்கியிருக்கிறோம். அதேபோல, இந்தச் சென்னை மாநகரத்தைச் சேர்த்து தமிழ்நாட்டில் மொத்தம் 385 செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டைகளை வழங்கியிருக்கிறோம். அவர்களுக்கு பஸ் பாஸ் வசதிகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. ஆனால், கடந்த கால ஆட்சியில் இவை எல்லாம் வழங்கப்படவில்லை. அதுமாத்திரம் அல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசுகிறபோது, டி.வி. நிருபர்கள், ஒளிப்பதிவாளர்களுக்கு பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சென்னை நகரில் மட்டும் நாளிதழ், தொலைக்காட்சி, வானொலியைச் சேர்ந்த நிருபர்கள், புகைப்படக்காரர்கள், கேமிராகாரர்கள் ஆகிய 300 பேருக்கு இலவச பஸ் பாசோடு அங்கீகார அட்டையும் இந்த அரசு வழங்கியிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இவை எல்லாம் கடந்த கால ஆட்சியில் வழங்கப்படவில்லை என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் பத்திரிகையாளர்களுடைய குடும்பம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக பத்திரிகையாளர்கள் இயற்கை எய்தினால் அவர்களுடைய குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக 25,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று இந்தியாவிலேயே முதன் முதலாக ஆணையிட்டவர் நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதுமாத்திரம் அல்லாமல், கடந்த ஆண்டு பத்திரிகையாளர்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஓய்வூதியம் ரூ.500/- ஆக இருந்தது. இரண்டு மடங்காக அதாவது ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இப்படி வழங்கப்பட்டதோடு நிற்கவில்லை. பத்திரிகைச் சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டிய ஒன்று. வாள் முனையைவிடப் பேனா முனை வலிமை வாய்ந்தது என்று புரட்சிக் கவிஞர் வால்டர் சொன்னார். அதே நிலையைத்தான் நம்முடைய தலைவர் கலைஞர் எண்ணிப்பார்த்துக் கூறுகின்றபோது மக்கள் சக்தி மகத்தானது; வலிமை மிக்கது என்றார். அதுபோலவே மக்களின் கருத்தும் சக்தி வாய்ந்தது. எல்லாக் காலங்களிலும், எல்லாப் பிரச்சினைகளிலும் மக்களின் அபிப்பிராயம்தான் இவைகளை மாற்றுகிறது. இவ்வாறு மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்கும் சாதனங்களில் பத்திரிகையும், தொலைக்காட்சியும் முக்கியமானவை ஆகும். எனவே, தனி நபர்களைவிட, தகவல் தொடர்பு சாதனங்களுக்குப் பொறுப்பும், நிதானமும், பொதுநல நோக்கமும், மிக அதிகமாகத் தேவை. அத்தகைய பத்திரிகைகள் இன்று எப்படியிருக்கின்றன? அதையும் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒருமுறை நயத்தோடும், நாசுக்கோடும், சற்று நகைச்சுவையோடும் சுட்டிக்காட்டினார்கள். அந்தக் காலத்தில் ஒரு விஷயத்தைப் பற்றி மக்கள் பேசிக்கொள்கிறபோது பத்திரிகையிலே போட்டுவிட்டார்கள் என்று சொல்வார்கள். இப்போது பத்திரிகையிலேதானே போட்டிருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். அப்போது பத்திரிகையிலே போட்டுவிட்டார்கள் என்று பேசிக்கொள்வார்கள். ஆனால், இப்போதோ பத்திரிகையிலா போட்டிருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். இதிலிருந்து மக்களுக்குப் பத்திரிகைகளைப் பற்றிய கருத்து எவ்வாறு மாறியிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம் என்று இப்போது சில பத்திரிகைகளின் நிலையைத் தெளிவாக விளக்கியிருக்கிறார் டாக்டர் கலைஞர் அவர்கள். கடந்த கால வரலாற்றை நினைவுகூர்ந்து, நிகழ்காலப் பிரச்சினைகளை ஆராய்ந்து வருங்காலத்தில் அவற்றைக் களையும் வகையில் பத்திரிகைகள் கடமையாற்ற வேண்டும். ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர் சொன்னதுபோல் நேற்று, இன்று, நாளை ஆகிய முக்காலத்தின் தூதுவனாகப் பத்திரிகைகள் விளங்கிட வேண்டும் என்று பத்திரிகையாள நண்பர்களையெல்லாம் இந்த அரசின் சார்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் செய்தித் துறையை மேம்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி உயர்மட்டக் குழு ஒன்று அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனம், இத்துறையின் நிர்வாக அமைப்பு, அலுவலகங்களில் ஆற்றும் பணிகள்



பற்றிய நிர்வாகச் சீரமைப்பு குறித்து ஆலோசனைகளை வழங்குமாறு இந்தத் துறையால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்தத் துறையின் சார்பாக மதுரையில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்தப்பட்டு அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்று, தீண்டாமை ஒழிய வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையோடு எண்ணுகிற சிந்தனையாளர்களைக் கொண்ட அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் பங்கேற்று, சமுதாயத் தலைவர்களும் பங்கேற்று, தீண்டாமை ஒழிக்கப்படுவதைப்பற்றி வலியுறுத்திச் சொன்னார்கள். அந்த மாநாட்டிலேதான் கலப்புமணம் செய்துகொண்டால், தீண்டாமையை ஒழிப்பதற்காகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த சகோதரியையோ அல்லது சகோதரரையோ மணந்துகொண்டால் 20,000 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்; அதுமாத்திரமல்லாமல் கடந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்துகொண்ட கிராமியக் கலைக் குழு முதல் பரிசைப் பெற்றிருக்கிறது. கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் குடியரசு தின விழாவில் நடைபெறுகிற வாகன ஊர்தி சிறப்புப் போட்டியில் இந்தத் துறையின் சார்பாக இரண்டு முறையும் தொடர்ந்து பரிசுகளைப் பெற்றிருக்கிறோம்.

சீரணி அரங்கின் முகப்பில் விடுதலைப் போராட்ட வீரராக இந்திய மக்கள் எல்லோருடைய நெஞ்சங்களிலும் நிறைந்த வீரர் சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் திருவுருவச் சிலையை இந்த அரசு இந்த ஆண்டு திறந்து வைத்திருக்கிறது. அதேபோல கர்ம வீரர் காமராஜர் நினைவிட முகப்பில் அவரது மார்பளவுச் சிலையும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிட முகப்பில் அவரது சிலையையும், பேரறிஞர் அண்ணா நினைவிட முகப்பில் அண்ணா அவர்களின் மார்பளவுச் சிலையையும் மாண்புமிகு கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதுமாத்திரமல்லாமல் அரசியலுக்கு அப்பாற்பட்டு காழ்ப்புணர்ச்சியின்றி மதிக்கின்ற பெருந்தன்மையோடு இந்த அரசு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் முன்னாள் முதல்வர் பெரியவர் எம். பக்தவச்சலம் அவர்கள நினைவாக நினைவிடம் ஒன்று கட்டப்பட்டு அந்த இல்லமும் திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. குமரியில் ஜீவாவினுடைய பெயரால் மணி மண்டபம் கட்டப்பட்டு அதையும் நம்முடைய அரசு, தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அதுமாத்திரமல்லாமல், விடுதலைப் போராட்ட வீரர்களை மதிக்கிற அரசு என்ற காரணத்தால் பொன் விழா ஆண்டில் பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அப்படி அமைக்கப்பட்ட குழுவில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைச் சார்ந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதிலே பங்கேற்கவில்லை. ஒரு சுதந்திர நாட்டில், பொன் விழாக் கொண்டாடுகிற நாட்டில் ஒரு அரசாங்கம் கட்சி வேறுபாடு இல்லாமல் சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவிலேகூட இடம்பெற மறுக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு இந்த நாட்டின்மீது எவ்வளவு பற்றும் பாசமும் இருக்கிறது அல்லது சுதந்திரத்தின்மீது எவ்வளவு பாசம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோல, விடுதலைப் போராட்ட வீரர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டையொட்டி சிறப்பு அஞ்சல் தலைக்கும் அஞ்சல் உறைக்கும் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்பாடு செய்து வெளியிட்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல் ஜாதி மத பேதங்களை ஒழிக்க வேண்டும் என்பதற்காக மாநிலங்களில் பல்வேறு இடங்களில் மனிதச்சங்கிலி, சமபந்தி விருந்து, தீண்டாமை ஒழிப்பு மாநாடு போன்றவைகளை இந்தத் துறையின் சார்பாக நடத்தி இருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சி மறைந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகுதான் தியாகி கக்கன் அவர்களுக்கு கலைஞர் அவர்கள் சிலை திறந்து வைத்து இருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல் தியாகிகள் ஓய்வூதியத்தை ரூ. 3,000-ஆக உயர்த்தியது, மொழிப்போர் தியாகிகளுக்கு ஓய்வூதியங்களை வழங்கியது இவைகள் எல்லாம் தியாகிகளை மதிக்கிற அரசு என்பதற்கு அடையாளங்கள் ஆகும். அதுமாத்திரமல்லாமல், தலைவர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையின் சார்பாக அவ்வப்போது மக்களுடைய கோரிக்கைகளை மற்றும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் வைக்கிற கோரிக்கைகளை எல்லாம் ஏற்பதுடன், வரலாற்றில் புகழ்பெற்ற தியாக மறவர்கள், மொழிப் போர் தியாகிகள், நாட்டு விடுதலைக்காகப் போராடியவர்கள், கவிஞர் பெருமக்களை எல்லாம் பாராட்ட வேண்டும், அவர்களுடைய வழியில் இந்த நாட்டு மக்கள் செல்ல வேண்டும் என்பதற்காக அவ்வப்போது நினைவு மண்டபங்களை உருவாக்குகிற,



சிலைகளை உருவாக்குகிற நிகழ்ச்சிகளை எல்லாம் தொடர்ந்து அறிவித்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் விடுதலைப் போராட்ட வீரரும், தியாகியுமான விஸ்வநாத் தாஸ் அவர்களுடைய இல்லம் 11 இலட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபாய்க்கு மதுரை திருமங்கலத்தில் கையகப்படுத்தப்பட்டு 50 இலட்சம் ரூபாயிலே அங்கே ஒரு மணி மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது. வீரர் பூலித்தேவனுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் நினைவகம் அமைக்கப்பட்டு வருகிறது. அவரது வாரிசுகளுக்கு 3 இலட்சத்து 4,000 ரூபாய், நிலத்திற்காக வழங்கப்பட்டிருக்கிறது. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இல்லத்தை கலைஞர் அவர்களின் ஆலோசனையின் பேரில் நினைவிடமாக்க முடிவு செய்யப்பட்டது. நாமக்கல் கவிஞர் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு முதல்வர் அவர்களால் 9 இலட்சத்து 58,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதுமாத்திரமல்லாமல் தலைவர் கலைஞர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு குமரியிலே திருவள்ளுவருக்கு 133 அடி உயரத்திலே சிலை வைப்பதற்கான விழா எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டு அந்தச் சிலை அமைக்கிற பணி தொடர்ந்து நடைபெற்றது. ஆனால் ஆட்சி மாறியதற்குப் பின்னால் திருவள்ளுவர் மீது பக்தியும், பாசமும் உள்ளவர்களைப் போல, தமிழ் அன்னையாக உருவகப்படுத்திக்கொண்டவர்களுடைய ஆட்சியில், அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டு மீண்டும் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பின்னால் அங்கு வள்ளுவருடைய சிலை அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு திருத்திய மதிப்பீட்டின்படி 7 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தச் சிலை அமைக்கிற பணி இப்போது போர்க்கால அடிப்படையில் வேகமாக நடைபெற்று வருகிறது. அடுத்த ஆண்டு ஆகஸ்ட் திங்கள் இறுதிக்குள் இந்தப் பணி முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

அதே நேரத்தில், சென்னையில் தீரன் சின்னமலையினுடைய சிலை கிண்டிக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. வெள்ளையன் வெளியேற வேண்டும் என்பதற்காக அடிமைச் சங்கிலியை ஒழித்து சுய மரியாதை உணர்வோடு விடுதலைக்காகப் போராடிய அந்த மாவீரனுடைய சிலை அவரைத் தூக்கிலிட்ட நாளான ஆகஸ்டு திங்கள் 3 ஆம் நாள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. வ. முல்லைவேந்தன்] [1998 மே 21

அதேபோல், சென்னையில், மீனவ நண்பனாக விளங்கிய சிங்காரவேலரின் சிலை மாவட்ட ஆட்சியருடைய வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும், முதலமைச்சரிடத்திலே விரைவிலே தேதியைப் பெற்று, திறந்து வைக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல் கற்புக்கரசி கண்ணகியினுடைய சிலைக்கு, கலைஞருடைய ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னாலேதான் தொடர்ந்து மாலை அணிவித்து மரியாதை செய்யவேண்டும் என்ற நிலையை உணர்ந்து இருக்கிறோம். கற்புக்கரசிக்கு மாலை அணிவிக்கவேண்டும் என்ற உணர்வு கலைஞர் அவர்களுக்குத்தான் வந்திருக்கிறது ** என்று எண்ணுகிறேன்.

அது மட்டுமல்லாமல் முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா வருகிற காலகட்டத்தில் இராஜபாளையத்தில் கொண்டாடப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் கலைஞருடைய ஆட்சி, பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு திரைப்படத் துறை திரைப்படப் பிரிவில் பல செய்திப் படங்கள் எல்லாம் எடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எல்லாத் திரையரங்குகளிலும் காட்டப்படுவது இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். ஒரு படம் எடுக்கிறபோது 144 பிரதிகள் மட்டும் எடுத்து கிட்டத்தட்ட 2500-க்கு மேற்பட்ட திரையரங்குகளுக்கு அனுப்புவதற்கு ஓராண்டு காலம் ஆகிவிடுகிறது. இதனை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்தி மலராக திரையரங்குகளில் வெளியிடுவதைவிட அதை வீடியோ படமாக எடுத்து ஒரே நாளில் எல்லா தொலைக்காட்சிகளிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை அறிவித்து வெளியிட வேண்டும் என்று ஆணையிட்டு அந்த அடிப்படையில்தான் 3 தொலைக்காட்சிப் படங்கள்-தொலைக்காட்சியில் 3 வீடியோ படங்கள்-எடுத்து வெளியிடப்பட்டன. அதைத் தொடர்ந்து இந்த மாதம் படம் எடுக்கப்பட்டு வெளியிடப்பட இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் ஆண்டுக்கு 3 படங்கள் திரையில் வெளியிடுகின்ற வகையில் எடுக்கப்பட்டு அரசின் நலத் திட்டங்கள், சுதந்திரப் பொன் விழாவையொட்டி பல்வேறு தியாகப் பெருமக்கள் எல்லாம் கலந்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 மே 21] [திரு. வ. முல்லைவேந்தன்]

கொண்ட திருவிழா நிகழ்ச்சிகள், சுதந்திரத்திற்காகவும், நாட்டுக்காகவும், மொழிக்காகவும் போராடிய தியாகிகளை நினைவுகூரும் வகையில், நண்பர்கள் எல்லாம் பேசியதைப் போல அவர்களுடைய உணர்வுகளை மதிக்கின்ற வகையில் அப்படிப்பட்ட படங்கள் எல்லாம் எடுத்து திரையில் வெளியிடப்பட இருக்கின்றன. அதன் மூலம் இந்த அரசுக்கு மாதத்திற்கு 20 இலட்சம் ரூபாய் அளவுக்கு மிச்சம் ஆகிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு தொழில் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றியும், தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பது பற்றியும், 10 நிமிடங்கள் ஓடக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்குவது பற்றியும் விளக்கப் படங்களை எடுத்து அவற்றை எல்லாம், எல்லா தொலைக்காட்சிகளிலும் வெளியிட இருக்கிறோம். காரணம், உண்மைகளை மறைப்பதற்காக இந்த நாட்டில் ஏராளமான பேர் இருக்கிறார்கள். தொழில் துறை யாருடைய காலத்தில் உருவானது; வளர்ந்திருக்கிறது; அடிக்கல் நாட்டப்பட்டது அல்லது பணி முடிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் மக்களும் நேரடியாக, கண் கூடாகக் காணுகிறபோது யார் பெற்ற பிள்ளைக்கோ, யாரோ பெயர் வைப்பது போல் இன்றைக்கு உரிமை கொண்டாடுகிறவர்கள் சிலபேர் இருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட காட்சிகள் எல்லாம் கிராமப் பகுதியில் அவசியம் தேவைப்படுகின்றன என்பதை உணர்ந்து இந்தப் பணியை இப்போது இந்தத் துறை வேகமாகச் செய்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் சொல்லுகிறபோது அரசின் நலத் திட்டங்களோடு தொழில் மேம்பாடு போன்றவற்றை விளக்குகிற படங்கள் எல்லாம் எடுக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோளைச் சொன்னார்கள். அப்படிப்பட்ட படங்களை இந்த அரசு இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறது என்பதை அவருக்கு நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் திரைப்படக் கல்லூரியின் 37 ஆண்டுகால வரலாற்றில் இப்போதுதான் திரைப்படக் கல்லூரியில் எடுக்கப்பட்ட படங்கள் புதுடெல்லியில் நடக்கிற சர்வதேசப் போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெறுகிற வாய்ப்பைப் பெற்று இருக்கின்றன. இந்த திரைப்படக் கல்லூரியைப் பொறுத்தவரையில் நடிப்புப் பயிற்சி, படச்சுருள்

[திரு. வ. முல்லைவேந்தன்] [1998 மே 21

கழுவுதல், பட்டயப் படிப்பு போன்றவைகளைக் கற்றுத் தருகிற ஒரே நிறுவனம் இந்தியாவிலேயே இது ஒன்றுதான். இந்தியாவிலே முதன்முதலாக அமைந்த 2 திரைப்படப் பயிற்சி நிறுவனங்களிலே ஒன்றான தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் பெரும் அளவுக்கு இந்த ஆட்சியில் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆகவே வளர்ச்சி பெற்று இருக்கிற இந்த நிறுவனத்திலே இதுவரை 1,200 பேர் படித்து வெளியேறி இருக்கிறார்கள். சிறந்த நடிகர்களாகவும், நடிகைகளாகவும், அதே நேரத்தில் பல்வேறு துறைகளில் பணியாற்றுகிறவர்களாகவும், இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் இன்றைக்குப் புகழ் பெற்று விளங்குகிறார்கள். இப்போது 169 பேர் அதிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 70 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவிடப்படுகிறது.

மாணவர்களின் பட்டயப் படிப்புகள் கடந்த 10 ஆண்டுகளாக, குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடக்காமல் அதாவது 3 வருடப் படிப்பாக இருக்கவேண்டியவை 4 வருடமாக நடந்தன. ஆனால் கலைஞருடைய ஆட்சி, பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், திரு. அமிர்தம் அவர்கள் அதனுடைய இயக்குநராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான், அதன் திட்டங்கள் எல்லாம் வரைமுறைப்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட கால எல்லைக்குள் அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு, 3 ஆண்டுப் படிப்பாக இருந்தால் 3 ஆண்டு காலத்திலேயே முடித்து வெளியேறுகிற வாய்ப்பை இந்த அரசு இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறது. இந்தப் பயிற்சி நிறுவனத்தை ஆரம்பித்து 37 ஆண்டுகள் ஆகியும் முதன்முறையாக கடந்த ஆண்டுதான் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட படங்களுக்கு புதுடெல்லியில் நடந்த தேசிய திரைப்பட விழாவில் பரிசுகள் கிடைத்துள்ளன. அதாவது "விடியலை நோக்கி" என்ற படம் சிறந்த படம் என்றும், அந்தப் படத்தை இயக்கியதற்காக அதன் இயக்குநர் சிறந்த இயக்குநர் என்றும் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-00

மும்பையில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவில் இந்நிறுவன மாணவர்கள் இயக்கிய 4 பட்டயப் படங்கள் முதன்முதலாக இப்பொழுதுதான் அனுப்பப்பட்டிருக்கின்றன.

அதுமாத்திரமல்லாமல், இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள், இந்தக் கோட்டைக்கே எம்.ஜி.ஆர். கோட்டை என்று பெயர் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். எந்தத் துறையின் மூலம் வளர்ந்து,



1998 மே 21] [திரு. வ. முல்லைவேந்தன்]

இந்த நாட்டு மக்களுக்கு அறிமுகமாகி, அதன்மூலம் ஆட்சியைப் பிடிக்கிற அளவிற்கு வளர்ந்தாரோ, அப்படிப்பட்ட மாண்புமிகு மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவர் சார்ந்த எந்தத் துறை மூலம் புகழ் பெற்றாரோ அந்தத் துறையின் மூலம் அமைக்கப்பட்ட ஒரு நகருக்கு அவருடைய பெயரை வைக்காமல், தன்னுடைய பெயரை வைத்துக் கொண்டவர்களெல்லாம் இன்றைக்கு இந்தக் கோட்டைக்குப் பெயர் வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் அந்தப் பெயரைக் கூட எடுத்துவிட்டு, எம்.ஜி.ஆர். பெயரால் திரைப்பட நகரை உருவாக்கியவரே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரம் அல்ல. அவருக்குப் பிறந்த நாள் கொண்டாடுகின்ற காலகட்டங்களில், சிலைகளுக்கு மாலை அணிவித்து, அதே நேரத்தில் அவருடைய பெயரும், பெருமையும், புகழும் குன்றாமல் எந்தச் சூழ்நிலையிலும் அவமரியாதை ஏற்படாத ஒரு நிலையை உருவாக்கிக் கொண்டிருப்பவரும் கலைஞர் அவர்கள்தான். இன்னும் சொல்லப்போனால், சிலைகள் பாதுகாக்கப்படுவது இந்தத் துறையின் தலையாய கடமையாக இருக்கிறது.

அதேநேரத்தில் அந்தத் திரைப்பட நகரைப் பொறுத்தவரையில் பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் கடந்த காலங்களில் செய்திருக்கிறோம். அந்தத் துறை கடந்த காலத்தில் கடனாளியாகி, நோயாளியாகி, இன்னும் சொல்லப்போனால், கொஞ்சநாள் இருந்திருந்தால் ஒருக்கால் தப்பித் தவறி ஓராண்டுக் காலம் நீடித்திருந்தால் அந்தத் திரைப்பட நகரே காணாமற் போயிருக்கும். அந்த நிலையிலிருந்து அதை மீட்டு அந்தத் திரைப்பட நகரை உருவாக்கி மாதம் ஒன்றுக்கு 15 இலட்சம் ரூபாய் அளவிற்கு வருமானம் வருகிற நிலையை இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான் உருவாக்கித் தந்திருக்கிறது.

அதைத் தொடர்ந்து, சுற்றுலாத் துறை ஒரு பொருட்காட்சி நடத்தினாலும், செய்தித் துறையின் சார்பாகவும் ஆண்டுதோறும் பொருட்காட்சிகளை மாவட்டத் தலைநகரங்களில் நடத்திக்கொண்டிருக்கிறோம். கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், பொருட்காட்சிகளெல்லாம் பெயரளவிலே இருந்துவிடக்கூடாது; ஏதோ ஒப்புக்கு நடத்துவதாக இருந்துவிடக் கூடாது என்று சொல்லி, 4 அறிவுரைகளைச் சொன்னார்கள். பொருட்காட்சி பொருள் உள்ளதாக, மக்களுக்குப் பயன்படக்கூடியதாக, சென்று வருகிற

மக்கள் அறிவுஜீவிகளாக மாறுகிற அளவிற்குக் கருத்து விளக்கங்கள் நிரம்பியதாக, அதேநேரத்தில் அன்றாட புதுக் கண்டுபிடிப்புகளையெல்லாம் மக்கள் பார்த்துப் பயனடையத் தக்க வகையில் இருக்க வேண்டும்; கட்-அவுட் கலாச்சாரம் அறவே இருக்கக்கூடாது; ஆடம்பரம், விளம்பரம் இருக்கக் கூடாது என்று அவர் அறிவுறுத்தியதன்பேரில் அந்தப் பொருட்காட்சிகளெல்லாம் இப்பொழுது சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

*1978* ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நடைபெற்றிருக்கிற *94* பொருட்காட்சிகள் ரூபாய் *676.07* இலட்சம் இலாபத்தைப் பெற்றிருக்கின்றன. ஆனால், அதே நேரத்தில் *1991* ஆம் ஆண்டு முதல் *1996* ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற *9* பொருட்காட்சிகளிலே மாத்திரம் *51* இலட்சத்து *72* ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் *1989* முதல் *1991* முடிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற ஒன்பது பொருட்காட்சிகளில் *80* லட்சத்து *18* ஆயிரம் ரூபாய் இலாபத்தைப் பெற்றிருக்கிறோம். *1996* இல் மீண்டும் கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, முதலமைச்சருடைய அறிவுரையோடு நடைபெறுகிற, நடைபெற்று முடிந்திருக்கிற *5* பொருட்காட்சிகளிலே மாத்திரம் *116* இலட்சத்து *12* ஆயிரம் ரூபாய் இலாபத்தைப் பெற்றிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் நெல்லையிலே பொருட்காட்சி நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். வருகிற ஜூன் மாதம் அங்கே பொருட்காட்சி நடைபெறும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பொருட்காட்சியின் மூலம் வரும் இலாபத்தில் வேலூர் நகராட்சிக்குப் பங்கு வேண்டுமென்று, இந்தச் சட்டமன்றம் ஆரம்பித்த காலத்திலேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது அரசுத் துறை நடத்தும் பொருட்காட்சி. வேலூரில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிக்குத் தேவையான தண்ணீர் வசதியை வேலூர் நகராட்சியே செய்து தருகிறது. அதற்கான கட்டணம் நகராட்சிக்கு முன்கூட்டியே துறையால் செலுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி இடம் தந்தால் மாத்திரம்தான் அது இலாபத்திலே பங்கு பெற முடியும். ஆனால் இது மத்திய அரசுக்குச் சொந்தமான இடம் என்கிற காரணத்தால் நகராட்சிக்கு இலாபத்தில் பங்கு தருவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல, சினிமாத் துறையை பொறுத்தவரையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கூடுதலான கட்டணம் வசூலிக்கப்படுகிறது, கழிப்பிட வசதிகள் இல்லை, முறைகேடு நடக்கிறது என்ற குற்றச்சாட்டுக்களையெல்லாம் சொன்னார்கள். இவைகளையெல்லாம் நீக்குகிற வகையிலேதான் இந்த அரசு பல்வேறு வழக்குகளைப் போட்டு தீவிரமாக நடவடிக்கை எடுத்துவருகிறது. விதிமுறைகளை மீறிச் செயல்படுகிற திரையரங்கின் 'சி' படிவ உரிமங்கள் இரத்துச் செய்யப்படுவதும், தற்காலிகமாகத் திரையரங்குகள் சஸ்பென்ட் செய்யப்படுவதும் இன்றைக்குத் தொடர்ந்து நடைபெற்று வருகிற காரியங்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், *227* திரையரங்குகளின்மீது வழக்குகளைப் போட்டிருக்கிறோம். குறிப்பாக, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் திருட்டு வீடியோ ஓட்டியதன்பேரில் *220* வழக்குகளும், அதேபோல வேறுபல குற்றச்சாட்டுகளின் பேரில் *34* வழக்குகளும், ஆபாசத் திரைப்படங்களைக் காட்டியதன் பேரில் *7* வழக்குகளும், ஏ.சி. இல்லாமல் தியேட்டரை ஓட்டிய காரணத்தால் *3* வழக்குகளும் போடப்பட்டு, அவற்றின் மீது தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

*பிற்பகல் 1-05*

அதுமாத்திரமல்ல. திரையரங்குகளில் அளவிற்கு மீறி இஷ்டம் போலக் கட்டணம் வசூலித்துக் கொள்கிறார்கள் என்ற ஒரு வெட்டுத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்களும் தந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களும் அதைச் சொல்கின்றபோது, இப்படியெல்லாம் கூடுதல் கட்டணமாக இருக்கின்றதே, தாறுமாறாகப் போகிறதே, தடுத்து நிறுத்தக் கூடாதா என்ற கேள்வியை எழுப்பினார்கள். முந்தைய ஆட்சியிலேதான் திரையரங்கு உரிமையாளர்களே எவ்வளவு வேண்டுமானாலும் கட்டணத்தை நிர்ணயித்துக்கொள்ளலாம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்ததற்கு என்ன காரணமோ எனக்குத் தெரியாது. பொது மக்களுடைய நலன் கருதி, இப்படித் திரையரங்கு உரிமையாளர்கள் விருப்பம்போல் கட்டணத்தை உயர்த்திக்கொள்ளக் கூடாது என்று சொல்லி, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு *28-10-1994*-க்கு முன் வசூலிக்கப்பட்ட நுழைவுக் கட்டணத்தில் *75* சதவீதம் மாத்திரம் உயர்த்திக் கொள்ளலாம் என்கிற ஆணையைப் போட்டு, அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய், இப்போது வழக்கு நிலுவையில் இருக்கிறது.

ஏற்கெனவே, வசூலித்த தொகையைத்தான் வசூலிக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில் மேற்கொண்டு இதை முறைப்படுத்துவதற்கு இந்த அரசு சட்டத் துறையோடு கலந்து பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசுகின்றபோது திரையரங்கிலே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டு மென்று அவர் சொன்னது தேவையான ஒன்றாக இருந்தாலும், திரைப்பட விதிகளின்படி திரைப்படத்தின் இறுதியிலோ அல்லது தொடக்கத்திலோ அந்தப் பாடல்கள் இசைக்கப்பட வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எனவேதான், அப்படி தேசிய கீதம் இசைக்கப்படுகின்ற சூழ்நிலையில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய கீதம் திரையரங்குகளில் இசைக்கப்படுவது சம்பந்தமாக ஒரு விவரத்தை இந்தச் சபைக்குச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். நம்முடைய இந்திய மக்களுடைய பழக்கவழக்கங்கள் அதாவது behaviour என்று சொல்வார்களே, அது சம்பந்தமாக நாடாளுமன்றக் குழுவினுடைய தலைவர்களெல்லாம் இந்திராகாந்தியிடத்தில், 1968-லே பேசிக்கொண்டிருந்த நேரத்தில், "திரையரங்குகளிலே தேசிய கீதம் இசைக்கப்படும்போது, சினிமாவிற்கு வரக்கூடிய மக்கள் அதற்கு மதிப்புத் தராமல் அங்கே தேசிய கீதம் பாடுகின்ற நேரத்தில் எல்லோரும் கலைந்து போகிறார்கள்; ஆகவே இது தேவைதானா? அதிலும் வெளிநாட்டிலிருந்து வரக்கூடியவர்கள் இதைப் பார்த்தால், இந்திய மக்களுக்குத் தேச பக்தியே இல்லையென்று முடிவு செய்துவிடுவார்கள்" என்றெல்லாம் கருத்துகள் சொல்லப்பட்டு, கடைசியிலே இந்திராகாந்தி அம்மையார் அவர்களே இனிமேல் திரையரங்குகளிலே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என அறிவித்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்தத் துறை மேலும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காகப் பல்வேறு அறிவிப்புகளை வழங்குவதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். எனவே திரைப்படத் துறையில் நடப்பாண்டில் நிரந்தரமாக ஒரு



கண்காட்சி வைக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஒரு வேண்டுகோளைச் சொன்னார்கள். திரைப்படம் தொடங்கிய காலம் முதல் இதுவரை திரைப்படத் துறையில் நிகழ்ந்துள்ள வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்து நிரந்தரமாக ஒரு கண்காட்சி வைத்து அதன் மூலம் இளைய தலைமுறையினரும் திரைப்படத் துறையின் வளர்ச்சிகளைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்கும் வகையில் 5½ இலட்சம் ரூபாயில் திரைப்பட நகரில் ஒரு நிரந்தரக் கண்காட்சியை உருவாக்குவோம்.

திரைப்பட நகரம் 70 ஏக்கர் நிலப்பரப்பிலே இருக்கின்ற காரணத்தினால் அதைச் சுற்றிப் பார்க்கின்ற குழந்தைகள், சிறுவர்கள், வெகுதூரம் நடந்து செல்ல வேண்டிய அவல நிலையை நீக்குவதற்காக 5 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயில் உல்லாச வேன் ஒன்று வாங்குவதற்காக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஒலிப்பதிவுத் துறையில் சிறந்த பயிற்சி பெற வேண்டும் என்பதற்காகக் குறுகிய கால 3 மாதப் பயிற்சியை வழங்குவதற்காகத் திரைப்பட நகரில் நடப்பாண்டில் அதைத் தொடங்குவதற்கான வாய்ப்பை நமது முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

சிறுவர் விளையாட்டுச் சாதனங்களைச் செம்மைப்படுத்துவதற்காக 33 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் — அதாவது திரைப்பட நகர் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரையில் சாமான்கள் எல்லாம் பழுதுபட்டிருந்த நிலையை மாற்றி, புதிதாக 33 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான — பல்வேறு விளையாட்டுச் சாதனங்களை வாங்குவதற்கான வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். இவை மூலம் திரைப்பட நகரம் மேலும் வளர்ச்சி பெறுவதற்கு, வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கும்.

திரைப்பட நகரைத் தொடர்ந்து, திரைப்படக் கல்லூரி பற்றிச் சொல்கிறேன். அக்கல்லூரி தொடங்கிய காலத்திலிருந்து இதுவரையில் ஏககாலத்தில் 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இயந்திரங்களை வாங்குவதற்கான அனுமதியை எந்தக் காலத்திலும் வழங்கியதில்லை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான். திரைப்படக் கல்லூரி செம்மையாக நடைபெற வேண்டும் என்பதற்காக 95 இலட்சம் ரூபாயில் புதிய நவீனக் கருவிகளை வாங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். திரைப்படக் கல்லூரியிலே இருக்கின்ற மாணவர்களைப் பாராட்ட வேண்டும். அவர்களுடைய திறமை மேலும் மேலும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, வருடந்தோறும் சிறந்த திரைப்படங்களுக்கு மாநில அரசு விருதுகளை வழங்குவதுபோல்,

திரைப்படக் கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்படும் சிறந்த குறும் படத்திற்கும் நடப்பாண்டிலிருந்து மாநில அரசு விருது வழங்கப்படும்.

மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களில் போதிய வசதிகளில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், திரு. நிஜாமுதீன் அவர்களும் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். எனவே, மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களில் புகைப்படப் பிரிவு செம்மையாகச் செயல்பட வேண்டும், எடுக்கப்படுகிற படங்கள் உடனடியாகப் பத்திரிகைகளுக்குச் செல்ல வேண்டும் என்கிற அடிப்படையில் புகைப்படக்காரர்கள் 17 மாவட்டங்களிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்டத்திலே மாத்திரம் அதற்கான Dark Room என்று சொல்வார்களே அந்த இருட்டறை இருக்கிறது. ஓர் இருட்டறை அமைப்பதற்கு 1 இலட்சம் ரூபாய் செலவாகிறது. முதல் கட்டமாக தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, விழுப்புரம், தருமபுரி ஆகிய 5 மாவட்டங்களில் 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் இருட்டறை வசதிகள் இந்த ஆண்டு அமைக்கப்படும்.

பிற்பகல் 1-10

அதேபோல், பத்திரிகையாளர்களைப் பற்றியெல்லாம் இங்கே நம்முடைய நண்பர்கள் கோரிக்கைகளைச் சொன்னார்கள். கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 25,000 ரூபாய் குடும்ப நல நிதியை வழங்கினார்கள். ஓய்வூதியமாக 1,000 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு இதுவரையிலும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. எனவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு, ஓய்வூதியம் பெறுகிற அந்தப் பத்திரிகையாளர் இறந்தால் அவருடைய துணைவியார் உயிரோடு இருக்கிற காலம் வரையில் 500 ரூபாயைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதற்கான அறிவிப்பினை இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல, நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம்-கடந்த காலத்தில் அந்த நினைவிடம் எப்படியெல்லாம் பாழ்படுத்தப்பட்டது, ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பு, ஒரு கண்ணுக்கு வெண்ணெய் என்ற நிலையில் எப்படியெல்லாம்



அவமானப்படுத்தப்பட்டது என்பது எல்லாம் இந்த நாட்டுக்குத் தெரியும், அந்த நிலையை மாற்றுவதற்காக-நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியோடு செம்மைப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டிற்கு வருகிற யாராக இருந்தாலும் அந்த அண்ணா சதுக்கத்திற்குச் சென்றுதான் போக வேண்டும் என்கிற அளவிற்கு, அது சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செல்கிறவர்கள் அறிவுஜீவியாக மாறவேண்டும் என்பதற்காகவும், அண்ணாவைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் அண்ணா நினைவிடத்தில் அண்ணா அருங்காட்சியகம் 2 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கிறது. அதேபோல், காந்தி அருங்காட்சியகத்தை கிண்டியில் செம்மையாக அமைப்பதற்காக 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இப்போதே அந்தப் பணி தொடங்கப்பட இருக்கிறது.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மருதூர் திரு. இராமலிங்கம் அவர்கள் வள்ளலார் இராமலிங்கம் அடிகளாருக்கு, "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பாடிய வள்ளலாருக்குச் சிறப்பு செய்கிற வகையில் அவர் பிறந்த அந்த மருதூரில் இருக்கிற அவரது இல்லத்தைச் செம்மைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். எனவே, அந்த அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், வள்ளலார் இராமலிங்க அடிகளார் பிறந்த ஊரான மருதூர் கிராமத்தில் அவரது இல்லத்தினை, அவரது நினைவினைப் போற்றும் வகையில் அரசின் சார்பாகப் புதுப்பொலிவுடன் மாற்றியமைக்க ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கிண்டியிலே இருக்கிற இராஜாஜி நினைவிட உட்புறம் 3 இலட்சம் ரூபாயில் புதிதாக மாற்றியமைக்கப்பட்டு செம்மைப்படுத்தப்படும். அதேநேரத்திலே, சுதந்திரப் போராட்ட வீரர் வ.வே.சு. அய்யர் இல்லம் செம்மைப்படுத்தப்படாமல் திருச்சிராப்பள்ளியில் நீண்டகாலமாக கிடப்பிலே இருந்தது. 1986 ஆம் ஆண்டிலே அது விலைக்கு வாங்கப்பட்டது; அரசுடைமையாக்கப்பட்டது. ஆனால், அதை அரசுடமையாக்கியதோடு நிற்காமல் அதனைச் செம்மைப்படுத்தி, நூலகம் அமைத்து விரைவிலே திறப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், எட்டையபுரத்திலேயுள்ள பாரதியார் மணி மண்டபம் செம்மைப்படுத்தப்படாத பழைய நிலையிலேயிருந்து விடுபடுவதற்காக, பாரதியாரைப் பற்றிய புகைப்படங்கள், நூல்கள் அவருடைய செய்தி நறுக்குகள் எல்லாம் சேர்த்து அங்கே வைத்துச் செம்மைப்படுத்தப்படுவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னையிலேயுள்ள நினைவிடங்களைப் பராமரிப்பதற்காக இந்தத் துறையின் மூலமாக 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்காகத் தனியாகப் பணியாட்களை வைத்து, பேரறிஞர் அண்ணா நினைவிடம், டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் ஆகியவை வருங்காலங்களிலே பராமரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைவாணர் அரங்கம், சென்னை, சீரமைப்புப் பணிக்காக 22 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சகோதரர் திரு. பெரியசாமி தன்னுடைய வேண்டுகோளாக பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலக்கியவாதியாக மாத்திரமல்லாமல், ஒரு திரைப்பட வசனகர்த்தாவாக மாத்திரமல்லாமல், எல்லாக் கலைகளையும் கற்ற ஒரு மாமேதையாக இருக்கிற காரணத்தால், இங்கே திரைப்படத் துறையில், புரட்சிகரமான பாடல்களின் மூலம் புகழ்பெற்ற உடுமலை நாராயணக் கவிராயர் அவர்களுக்கும், அவரைப் பின்பற்றி, புரட்சிப் பாடல்களை இயற்றிய நமது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்கும் நினைவு மண்டபங்கள் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற அறிவிப்பை அவர் சார்பாக அறிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல், தருமபுரி மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது அதியமான் கோட்டம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூட வேண்டுகோள் வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அன்றைக்குச் சொன்னதை நினைவிலே கொண்டு, "சொன்னதைச் செய்வோம்: செய்வதைச் சொல்வோம்" என்ற உயர்ந்த சிந்தனையோடு, தருமபுரியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அதியமான்



கோட்டம் அமைப்பதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

பவள விழா காணுகின்ற கலைஞருடைய ஆட்சி, இன்றைக்கு இந்தத் துறைக்கு ஏராளமான சலுகைகளை அளித்திருக்கிறது. இந்தத் துறை மென்மேலும் வளருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கிறது. ஒரு திறந்த நிலை அரசாங்கமாக, இரகசியம் ஏதுமில்லாமல், அரசினுடைய திட்டங்களெல்லாம் மக்களைச் சென்று சேரவேண்டுமென்ற உணர்வோடு மக்கள் சாசனத்தை வெளியிடுகின்ற ஒரு வாய்ப்பை இங்கே உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்திய நாட்டிலேயே, முதன்முதலாகத் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்து, அரசினுடைய திட்டங்களையெல்லாம் நாட்டு மக்கள் புரிந்துகொள்கின்ற வாய்ப்பை உருவாக்கியிருக்கின்ற முதல்வர் கலைஞர் மாத்திரம்தான் என்பதை நினைவில் கொண்டு, இந்த அரசுக்கு நீங்கள் எல்லாம் என்றைக்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையின்மீது கோரப்பட்டுள்ள தொகையை வழங்குமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகின்றபோது** என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற தாளையன் நாச்சியம்மன் அருவி வருடம் முழுவதும் தண்ணீர் வருகின்ற ஓர் அருவியாக இருக்கிற காரணத்தால், அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்கியிருக்கிறார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இரண்டு, மூன்று அருவிகளை ஒன்றாகச் சேர்த்து மொத்தமாக அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். குறிப்பாக அந்தச் சுற்றுலாத் தலத்திற்கு மட்டும், அதாவது தாடகை

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நாச்சியார் அருவிக்கு மட்டும் எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புவதோடு,..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். நீங்கள் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை. இருந்தாலும், நீங்கள் கேட்டதற்காக அனுமதி கொடுத்தேன். அப்படியிருக்க, நீங்கள் இப்படி நீட்டித்துக்கொண்டே போனால் எப்படி? சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், அதற்குத் தனியாக எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக சுருளி அருவி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திற்பரப்பு அருவி, திருமூர்த்தி மலையருவி, மனோரா நினைவுச் சின்னம் மற்றும் தாளையன் நாச்சியம்மன் அருவி ஆகிய இவை அனைத்திற்கும் 20 இலட்சம் ரூபாயை மாநில அரசு ஒதுக்கி இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழம்பெரும் நிருபர் மருதப்பன் அவர்கள் இறந்து விட்டார்கள். அவருடைய இறப்புக்கு நம்முடைய முதல்வர் அவர்களும் மேயர் அவர்களும் சென்று ஆறுதல் கூறினார்கள். பணமுடிப்பும் கொடுத்தார்கள் ஆனால், அவர் குடியிருக்கின்ற வீட்டை உடனே காலி செய்யவேண்டுமென்று சொல்லி, வீட்டுவசதி வாரிய அதிகாரிகள் அவர்களை மிரட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பத்திரிகை நிருபரின் குடும்பத்தினர் அந்த வீட்டில் குடியிருக்கும் காலத்தை இரண்டு வருடம் நீட்டிப்புச் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் அந்த வீட்டில் குடியிருப்பதற்கான காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.



**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீரன் சின்னமலையினுடைய சிலையைத் திறப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் கொங்கு வேளாள மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடநாட்டிலிருந்து பல்வேறு மாநிலங்களைக் கவர்ந்து இழுக்கக் கூடிய சுற்றுலாத் தலம் கன்னியாகுமரி. 300 ஆண்டுகளுக்குப் பிறகு, 18 ஆம் தேதி, அங்கே நித்தம் தவம் செய்யும் குமரி அன்னை என்று சொல்லப்படுகின்ற, அந்தக் கோயிலின் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது. ஆண்டுதோறும் அங்கே மூடியிருந்த கிழக்குக் கதவுகள் அன்றையதினம் திறந்துவிடப்பட்டன. அதை நிரந்தரமாகத் திறந்து வைக்க வேண்டுமென்று பக்தர்கள் விரும்புவதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. திறந்து வைப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை நிரந்தரமாகத் திறந்து வைத்து பக்தர்களுடைய கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பது செய்தித் துறை மற்றும் சுற்றுலாத் துறை மானியம். கோயில் தொடர்பான கேள்வியை இன்னொரு வாய்ப்பில் கேட்டால்தான் விடை சொல்ல முடியும். என்றாலும், இன்றைக்கு வந்திருக்கின்ற செய்திகளின்படி, அதிகாரிகள் அதைத் திறக்க முன்வந்தாலும், சிலபேர் அதை மறுத்திருக்கிறார்கள். எனவே, அது குறித்து ஆய்வு செய்யப்படும்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(று) மானியக் கோரிக்கை எண் 46- செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46-செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல். வெட்டுத் தீர்மானங்கள்

வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.16,89,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## (ஆ) மானியக் கோரிக்கை எண் 50-சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50—சுற்றுலா, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,92,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் குறித்த விதி 32-ஐ 22-5-1998 அன்று தளர்த்துவதற்குரிய தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள விதி 32-ஐ 22-5-1998 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசின் அலுவல்களுக்காக எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.



மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, 22-5-1998 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-05-1998) காலை 9-30 மணிக்கு கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*152. 1996-97 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

216. மானியக் கோரிக்கை எண் 46-செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

217. செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

218. மானியக் கோரிக்கை எண் 50-சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

219. சுற்றுலாத் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

220. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

## இணைப்பு-I

*(239 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 46**

# செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99

### முன்னுரை

மக்களுக்காக மக்களால் ஏற்படுத்தப்பட்ட, மக்களுடைய அரசு என்ற மக்களாட்சி முறையை ஏற்றுக் கொண்டிருக்கிற நமது ஜனநாயக அமைப்பில், அரசின் திட்டங்கள். செயலாக்கங்கள், நலத் திட்ட உதவிகள் குறித்த செய்திகள், பயனாளிகளான மக்களுக்குச் சென்றடைந்திடும் பணியை நிறைவேற்றுவதே செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் முக்கியப் பணியாகும்.

மக்களாட்சியில் உயிர்நாடியாக விளங்குகிற வாக்காளர்களாகிய பொதுமக்களுக்கு அரசின் செயற்பாடுகள், கொள்கை முடிவுகள் குறித்த விழிப்புணர்ச்சியை உருவாக்கிடும் பொறுப்பு, செய்தி, மக்கள் தொடர்புத் துறையைச் சார்ந்ததாகும்.

அரசால் உருவாக்கப்படுகிற மக்கள் நலத் திட்டங்களை மக்களுடைய இல்லங்களுக்கும் அவர்தம் இதயங்களுக்கும் எடுத்துச் செல்லுகின்ற பணிகளை “மக்கள் தொடர்பு ஊடகங்கள்” வாயிலாக இத்துறை மேற்கொண்டு வருகிறது.

அரசின் புதிய அறிவிப்புகள், மற்றும் செயற்திட்டங்கள், பொதுத் தொடர்புச் சாதனங்களான செய்தி இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி,

[1998 மே 21

தனியார்த் தொலைக்காட்சிகள் அரசின் வெளியீடுகளான 'தமிழரசு', 'அரசு செய்தி' இதழ்கள் மூலம் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கப்படுகின்றன. முக்கிய மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, பொருட்காட்சிகளில் பல்துறை வளர்ச்சிப் பணிகளை விளக்கிடும் வண்ணம் காட்சி அரங்குகள் அமைக்கப்படுகின்றன. கல்வி அறிவில்லா மக்களும் அரங்குகளில் அமையும் காட்சிகளின் வாயிலாக, அரசின் திட்டங்களை எளிதில் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

ஒளி நாடாக்கள் வாயிலாக திட்டங்கள் குறித்த ஒளி நாடாச் செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டு, ஒளி நாடா ஊர்திகளின் வாயிலாக குக்கிராமங்கள் வரை திரையிட்டுக் காட்டப்படுகின்றன. திரைப்படச் செய்திச் சுருள்கள் தயாரிக்கப்பட்டு, திரை அரங்குகளில் திரையிடப்பட்டு, மக்களைச் சென்றடைகின்றன. ஒளி நாடாச் செய்தி மலர்கள் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று சேரும் வண்ணம், செயற்கைக்கோள் ஒளிபரப்பு மூலம் தனியார்த் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

அரசின் மனிதநேய சமூக நலத் திட்டங்கள், நலிவுற்றோர் நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணித் திட்டங்கள், அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள் குறித்து அவ்வப்பொழுது செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. இவற்றுடன் 'தமிழரசு', 'அரசு செய்தி' ஆகிய இதழ்கள் மற்றும் சிறப்பு வெளியீடுகள் அச்சடித்து விநியோகிக்கும் பணியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

நாட்டுக்கு உழைத்த நல்லோர்களின் நினைவுகளைப் போற்றிடும் வகையில், திருவுருவச் சிலைகள் அமைத்தல், நினைவிடங்கள் உருவாக்குதல், பராமரித்தல் போன்ற பணிகளும் இத்துறையின் சார்புடையதே. மேலும் திரைத் துறை வளர்ச்சி குறித்தான பணியும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசின் ஆக்கப்பூர்வ அரிய திட்டங்களைப் பொதுமக்களுக்கு அறிவித்திடும் பெரும் பணிகளை, வளர்ந்து வரும் நவீன மின்னணு தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி நிறைவேற்றுவதில் இத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.



1998 மே 21]

### அத்தியாயம்-1

## செய்தி-மக்கள் தொடர்புத் துறை

செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்ககம், தலைமைச் செயலகத்தில், இயக்குநரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. இயக்குநர் (அலுவலால்) துணைச் செயலாளராகவும் பணிபுரிந்து வருகிறார்.

மாவட்டங்களில், அரசின் திட்டங்கள், சாதனைகள் அனைத்தும் மக்களைச் சென்றடையும் வகையில், செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்கள் களவிளம்பரப் பணியாற்றி வருகிறார்கள். அரசின் திட்டங்களின் பலன்களை மக்களுக்குத் தெரிவித்து, அவர்கள் பலன் துய்க்கும் வகையில் செய்தி வெளியீடுகள், திரைப்படப் பிரிவின் செய்தித் திரைப்படங்கள், ஒளி நாடாச் செய்தி மலர்கள், 'தமிழரசு' இதழுக்குச் சந்தா சேகரித்தல், 'அரசு செய்தி' சுவரொட்டி இதழை தொலைதூரக் கிராமங்களுக்கும் விநியோகித்தல் என களவிளம்பரப் பணிகளை மேற்கொள்கிறார்கள். அதோடு, அரசு விழாக்கள், களவிளம்பரப் பொருட்காட்சி அமைத்தல், செய்தியாளர்கள் பயணம், ஆங்காங்குள்ள நினைவகங்களைப் பராமரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

## ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் சமூக, பொருளாதார வளர்ச்சியினை மேலும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல, தக்க திட்டங்களை வகுப்பதற்கு இது பொருத்தமான நேரமாகும். இந்தத் திட்டக் காலத்தில், பொருளாதார வளர்ச்சியுடன் மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொள்வது ஒரு நல்ல அணுகுமுறையாகும். இந்நலத் திட்டங்களில், அரசு மட்டுமில்லாது, அதிகமான அளவில் பொதுமக்களையும் நேரிடையாகப் பங்குகொள்ளச் செய்வது முக்கிய நோக்கமாகும்.

இந்நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், தகவல் தொடர்புச் சாதனங்களை நவீனமயமாக்கிடும் வண்ணம் உயர் தொழில்நுட்பச் சாதனங்களைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நிருவாக அமைப்பினை மேம்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆலோசனைப்படி, தகவல் தொடர்புப் பணிகளில் நவீன சாதனங்களைப் பயன்படுத்துதல்

[1998 மே 21

என்பதோடு, இத்துறையின் மனித வளத்தை மேம்படுத்தி, நிருவாகச் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் வண்ணம், உயர் மட்டக் குழு ஒன்று அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனம், இத்துறையின் நிருவாக அமைப்பு, செயல்படும் அலுவலர்கள், ஆற்றும் பணிகள் என நிருவாகச் சீரமைப்பு குறித்த கருத்துக்களை வழங்குமாறு இத்துறையால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### அத்தியாயம் - 2

## பொருட்காட்சி

"பல புத்தகங்களைப் படிப்பதைவிட ஒரு பொருட்காட்சியால் விளையும் பயன் மகத்தானதாக இருக்கும்" என்றார் பேரறிஞர் அண்ணா. தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும், நலத் திட்டங்களையும், அறிவிப்புகளையும், ஆக்கப்பணிகளையும் விளக்கும் வண்ணம் செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் பொருட்காட்சிகள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படுகின்றன. அரசுத் துறைகளும், அரசுச் சார்பு நிறுவனங்களும் அரங்கங்களை அமைக்கும் இந்தப் பொருட்காட்சிகள் மக்களுக்கு மகிழ்வூட்டுவது மட்டுமல்லாமல், அரசுத் திட்டங்களையும் ஆக்கப் பணிகளையும் அறியச் செய்யவும் பயன்படுகின்றன. இந்நோக்குடன் பொருட்காட்சிகளில் கட்-அவுட்டுகளும், வெறும் புகைப்படங்களும் மட்டுமே முதன்மையாக அமையாமல், பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு அரசுத் துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விளக்கங்களை, மாதிரி வடிவ அமைப்பிலான சாதனங்கள் வாயிலாக எடுத்துச் சொல்லும் வகையில், அரசுத் துறை அரங்குகளை அமைக்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

1978ஆம் ஆண்டு முதல், இதுவரை இத்துறை 94 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. இப்பொருட்காட்சிகள் பொது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுத் திகழ்வதுடன், இதுவரை ரூ.676.07 இலட்சம் நிகர இலாபத்தை அரசுக்கு ஈட்டித் தந்துள்ளன. கடந்த நிதியாண்டில் (1997-98) மதுரை, கோயம்புத்தூர், சேலம் நகரங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு ரூ.87.57 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.



1998 மே 21]

மதுரை, சேலம், கோவை ஆகிய பெருநகரங்களில் அரசுப் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. வேலூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் இரண்டாண்டுகளுக்கொருமுறை அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்கிறது. புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்று, தமிழ்நாடு அரங்கில் பல்வேறு அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்குகொள்ளும் பொருட்காட்சியினையும் ஆண்டுதோறும் இத்துறை நடத்துகிறது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் டெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப் பேரணி விழாவிலும் (Phool-walon-ki-sair) இத்துறை தொடர்ந்து பங்கேற்கிறது.

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு சார்பில் கலந்து கொண்டு கிராமியக் கலைக் குழு மற்றும் மலர் விசிறி ஆகிய இரண்டும் சிறந்தவைகளாகத் தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசு வழங்கப்பட்டது. சென்னை காந்தி மண்டபத்தில் காந்தி பிறந்த நாளையொட்டி, புகைப்படக் கண்காட்சி ஒன்றும், மதுரையில் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டினையொட்டி புகைப்படக் கண்காட்சியும் நடத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள், கிராமியக் கலைநிகழ்ச்சிகள், விழா நிகழ்ச்சிகளுக்கான நேர்முக வர்ணனை ஏற்பாடு போன்ற முக்கியப் பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது. 1998-ல் சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தி பங்கேற்று இரண்டாம் பரிசினைப் பெற்றது.

### அத்தியாயம் - 3

## அரசு விழாக்கள்:

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும், சமூக விழிப்புணர்வுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றிய பெருந்தலைவர்கள் தோன்றிய சிறப்புக்குரியது இம்மாநிலம். அப்பெருந்தகையாளர்களைப்

[1998 மே 21

போற்றிச் சிறப்பிக்கும் வகையிலும், அவர்களுடைய நாட்டுப் பற்று, சமூக உணர்வு, அருந்தொண்டு போன்றவைகளை நாட்டு மக்கள், குறிப்பாக, இளந்தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையிலும் அவர்களது பிறந்தநாள், நினைவு நாள் மற்றும் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் அரசு விழாக்களாக மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கொண்டாடப்படுகின்றன.

1997-98 ஆம் ஆண்டில் மாநில அளவிலான கீழ்க்காணும் விழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளன:

1. டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா
2. கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழா
3. அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா
4. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா
5. தேசிய மறு அர்ப்பணிப்பு நாள் நிகழ்ச்சி
6. மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா
7. மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா
8. வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா
9. வல்வில் ஓரி விழா
10. சித்திரை முழு நிலவு விழா

முப்படை வீரர்களின் தியாகத்தைப் போற்றிடும் வண்ணம் சென்னை, தீவுத்திடல் அருகிலுள்ள போர் நினைவுச் சின்னத்தில் 16-12-1997 அன்று, மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் சென்னையிலுள்ள முப்படைத் தலைவர்களும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

31-8-1997 அன்று, மதுரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், மத நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தும் மனிதச் சங்கிலி, சமபந்தி விருந்து, தீண்டாமை ஒழிப்பு மாநாடு ஆகியவை நடைபெற்றன. இவ்விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தியாகி கக்கன் அவர்களுடைய திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

15-12-1997 அன்று சென்னை, காமராசர் சாலை, சீரணி அரங்க முகப்பில் விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்



1998 மே 21]

அவர்களின் நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, 25-2-1998 அன்று, சென்னையில், சர்தார் வேதரத்தினம் அவர்கள் நூற்றாண்டினையொட்டி நினைவுச் சிறப்பு அஞ்சல் தலை, மற்றும் அஞ்சல் உறை ஆகியவற்றை அஞ்சல் துறைத் தலைவரால் வெளியிடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12-10-1997 அன்று சென்னை காமராசர் நினைவிட முகப்பில், பெருந்தலைவர் காமராசர் அவர்களது மார்பளவுச் சிலையும், 24-12-1997 அன்று, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட முகப்பில், எம்.ஜி.ஆர். அவர்களது மார்பளவுச் சிலையும், 3-2-1998 அன்று பேரறிஞர் அண்ணா நினைவிட முகப்பில், பேரறிஞர் அண்ணா அவர்களது மார்பளவுச் சிலையும் திறந்து வைக்கப்பட்டன.

சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் திருவுருவச் சிலை, சிற்பி சிங்காரவேலர் மாளிகை வளாகத்தில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவாக கிண்டி, காந்தி மண்டபம் அருகில் ரூ.25 இலட்சத்தில் புதிதாக நினைவிடமும், நினைவிடத்தில் வைக்கப்பட்ட அவரது மார்பளவுச் சிலையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13-3-1998 அன்று திறந்து வைக்கப்பட்டன.

## அத்தியாயம் - 4

### சுதந்திரத் திருநாள் பொன் விழா:

தமிழ்நாட்டில் இந்திய சுதந்திரத் திருநாள் பொன் விழா 15-8-1997 முதல் 15-8-1998 வரை ஓராண்டு காலத்திற்குச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பொன் விழா நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர்

[1998 மே 21

அவர்கள் தலைமையில் மாநில அளவிலான குழு மற்றும் உயர்மட்ட செயல்பாட்டுக் குழுவும், துறைச் செயலாளர்கள் தலைமையில் ஆறு குழுக்களும் அமைக்கப்பட்டு, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ. 71.55 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

**நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள்:**

9-8-1997 அன்று 5,000 மாணவ மாணவியர் பங்கேற்ற 'வெள்ளையனே வெளியேறு' முழக்கம் எழுந்த நினைவுப் பேரணி நடத்தப்பட்டு, இப்போராட்டத்தில் ஈடுபட்ட 15 தியாகிகள் சிறப்பு செய்யப்பட்டனர். 14-8-1997 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பேரணியில், தமிழ்நாடு சார்பில் கலந்துகொள்ளச் சென்ற 54 தியாகிகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 1,000-க்கான பொற்கிழி மற்றும் கைத்தறி ஆடைகள் அளிக்கப்பட்டன. இவர்களுக்கான பயணச் செலவு, தங்குதல் மற்றும் உணவு ஆகிய அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்றது. 14-8-1997 அன்று, நேரு விளையாட்டரங்கில் மேதகு ஆளுநர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பங்குபெற்ற, சுதந்திரத் திருநாள் பொன் விழா மற்றும் மாநில விளையாட்டுப் போட்டிகள் தொடக்க விழா நடைபெற்றன. திரைப்படக் கலைஞர்கள் பங்குபெற்ற இன்னிசை நிகழ்ச்சி, மாணவர்களின் கலை நிகழ்ச்சி மற்றும் அணிவகுப்புகள் நடைபெற்றன.

15-8-1997 சுதந்திரத் திருநாளன்று, கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றிய பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 50 தியாகிகளுக்குச் சிறப்பு செய்தார்கள். மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தியாகிகள் சிறப்பு செய்யப்பட்டார்கள். அப்போது, தியாகிகளுக்கான ஓய்வூதியத்தை மத்திய அரசு அறிவித்தது போல், ரூ. 1,500-லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தியும், சிறைக் கைதிகளுக்குச் சலுகைகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டன.

15-8-1997 முதல் 31-8-1997 வரை மாநிலம் முழுவதும் தீண்டாமை ஒழிப்பு நாள் மற்றும் சமபந்தி விருந்து நடத்தப்பட்டன.

31-8-1997 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் மதுரையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள்/சமயச் சான்றோர்கள் பங்கு கொண்ட தீண்டாமை ஒழிப்பு மாநாடு, மனிதச் சங்கிலி, சமபந்தி விருந்து நடத்தப்பட்டது. அப்போது தியாகச் செம்மல் முன்னாள் அமைச்சர்



1998 மே 21]

கக்கன் அவர்களது சிலை திறந்து வைக்கப்பட்டது. 26-8-1997 அன்று சென்னையில் "சுதந்திரப் போராட்டத்தில் பத்திரிகையாளர்களின் பங்கு" என்ற கருத்தரங்கம் நடத்தப்பட்டு, சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்ற பத்திரிகையாளர்கள் சிறப்புச் செய்யப்பட்டனர்.

இவை தவிர, சென்னையிலும் மாவட்டங்களிலும் துப்புரவு இயக்கம், விளையாட்டுப் போட்டிகள், சுதந்திரப் போராட்டம் தொடர்பான திரைப்படங்கள் திரையிடுதல், கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள், புகைப்படக் கண்காட்சிகள், மகளிர் தினம், மனிதச் சங்கிலி நிகழ்ச்சிகள், மாணவ மாணவியருக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தொடர்பான விழாக்கள் நடத்தப்பட்டன.

சுதந்திரப் போராட்ட வீரரும், நாடக நடிகருமான விசுவநாததாஸ் அவர்களுக்கு, திருமங்கலத்தில் ரூ. 50 இலட்சம் செலவில் நினைவகம் அமைத்தல், ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பூலித்தேவனுக்கு திருநெல்வேலி மாவட்டம் நெற்கட்டும்செவ்வலில் நினைவகம் அமைத்தல், ரூ. 30 இலட்சம் செலவில் சென்னையில் தியாகிகள் மணிமண்டபம் நிறுவுதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. சுபாஷ் சந்திரபோஸ் அவர்களது சிலை திறப்பு, சுதந்திரப் பொன் விழா நினைவுச் சின்னம் திறப்பு, வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம், போராட்ட வீரர் சர்தார் வேதரத்தினம் அவர்களின் நினைவாக, அஞ்சல் தலை மற்றும் உறை வெளியீடு ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன், குடியரசுத் திருநாளன்று சென்னையில் ஐந்து சுதந்திரப் போராட்ட வீரர்கள் சிறப்புச் செய்யப்பட்டனர். இவைமட்டுமின்றி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்து தியாகிகள், மாவட்ட ஆட்சித் தலைவரால் சிறப்புச் செய்யப்பெற்றனர். திரு. அரவிந்தர் அவர்களுடைய 125 ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

அனைத்துச் சமுதாயத்தினரும் நல்லிணக்கத்துடன் வாழும் வகையில் 50 இடங்களில் சமத்துவபுரங்கள் அமைத்தல், குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்க, தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைவாழ் மக்கள் நலனுக்காக மூன்றாண்டு சிறப்புத் திட்டம் ஆகிய முக்கிய திட்டங்களும், தொடர்புடைய துறைகளால் பொன் விழா ஆண்டில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

[1998 மே 21

## அத்தியாயம்—5

### நினைவகங்கள் :

நாட்டு விடுதலைக்காக அரும்பணியாற்றி, தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொண்ட தியாகச்சீலர்கள், சமுதாய முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றிய அறிஞர் பெருமக்கள் மற்றும் கவிஞர் பெருமக்கள் ஆகியோரின் நினைவினைப் போற்றிச் சிறப்பித்திடும் வகையில், பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள கீழ்க்கண்ட 27 நினைவகங்கள், செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் சீரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன:

1. வள்ளுவர் கோட்டம், சென்னை.
2. அண்ணா சதுக்கம், சென்னை.
3. இராஜாஜி மண்டபம், சென்னை.
4. இராஜாஜி நினைவகம், சென்னை.
5. காமராசர் இல்லம், சென்னை.
6. காமராசர் நினைவகம், சென்னை.
7. காந்தி மண்டபம், சென்னை.
8. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், சென்னை.
9. மகாகவி பாரதியார் இல்லம், திருவல்லிக்கேணி, சென்னை.
10. அண்ணா அருங்காட்சியகம், அண்ணா சதுக்கம், சென்னை.
11. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சென்னை.
12. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம்.
13. இலங்கையில் கடைசித் தமிழ் மன்னர், விக்ரமசிங்கராஜா நினைவகம், வேலூர்.
14. இராஜாஜி இல்லம். தொரப்பள்ளி, தருமபுரி மாவட்டம்
15. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு.
16. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர்.
17. வ.வே. சுப்பிரமணியம் நினைவு இல்லம், திருச்சிராப்பள்ளி.
18. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி.



1998 மே 21]

19. கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி.
20. மருது சகோதரர்கள் நினைவகம், திருப்பத்தூர்.
21. காமராசர் இல்லம், விருதுநகர்.
22. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம்.
23. பாரதியார் இல்லம், எட்டயபுரம்.
24. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம்.
25. செய்குத்தம்பி பாவலர் நினைவகம், நாகர்கோவில்.
26. காந்தி மண்டபம், கன்னியாகுமரி.
27. பெரியார் நினைவகம், வைக்கம், கேரள மாநிலம்.

### புதிய நினைவகங்கள்:

**தியாகிகள் மணிமண்டபம், கிண்டி, சென்னை:**

தமிழ்நாடு அரசின் சார்பில், இந்திய சுதந்திரப் பொன் விழா ஆண்டில், இந்திய சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட தியாகிகள் நினைவினைப் போற்றும் வகையில் ரூ. 30.00 இலட்சம் செலவில் "தியாகிகள் மணிமண்டபம், சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்றது.

**தியாகி விஸ்வநாததாஸ் நினைவில்லம்:**

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் வாழ்ந்த மதுரை மாவட்டம், திருமங்கலம் வீட்டினை அரசு ரூ. 11,82,500 செலவில் கையகப்படுத்தி அவர் நினைவினைப் போற்றும் வகையில் ரூ. 50.00 இலட்சம் செலவில் திருமண மண்டபம், நூல் நிலையம் உள்ளிட்ட வசதிகளுடன் தியாகி விஸ்வநாததாஸ் நினைவில்லம் அமைக்கப்பட்டு வருகின்றது.

**பூலித்தேவன் நினைவுச் சின்னம்:**

சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவன் நினைவினைப் போற்றும் வகையில், திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும் செவ்வல் கிராமத்தில், பூலித்தேவன் வாழ்ந்த அரண்மனையை பழமை மாறாமல் புதுப்பித்து, அம்மாளிகையில் திருமண மண்டபம், கண்காட்சிக்கூடம், பூங்கா உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகளைச் செய்து நினைவுச்

[1998 மே 21

சின்னமாக அமைத்திட அரசு ரூ.50.00 இலட்சம் வழங்கி ஆணையிட்டு, பணிகள் தொடங்கப்படவுள்ளது. மேலும், இந்நிலத்தை கையகப்படுத்தி பூலித்தேவன் வாரிசுதாரர்களுக்கு வழங்கிட அரசு ரூ.3.04 இலட்சம் நிதி ஒப்பளிப்பு ஆணையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கியுள்ளது.

அமரர் ப. ஜீவானந்தம் அவர்களுக்கு நினைவுச் சின்னம் :

அமரர் ப. ஜீவானந்தம் நினைவைப் போற்றிடும் வகையில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் சர். சிபி. இராமசாமி பூங்காவில் ரூ.15.50 இலட்சம் செலவில் அமரர் ப. ஜீவானந்தம் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம்:

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் கவிஞர் இராமலிங்கம் வாழ்ந்த இல்லம் மற்றும் காலியிடமாக உள்ள நிலத்தினை கையகப்படுத்தி அரசு நினைவிடமாக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கிட ரூ.9.58 இலட்சம் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**நினைவகங்களின் மேம்பாட்டுப் பணிகள்:**

பேரறிஞர் அண்ணா நினைவகம், காஞ்சிபுரம் :

பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காஞ்சிபுரம் இல்லத்தின் பராமரிப்புப் பணிகள் ரூ.4.20 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் புகைப்படங்கள் லேமினேசன் செய்யப்பட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

காந்தி மண்டபம், கன்னியாகுமரி:

கன்னியாகுமரி, காந்தி நினைவு மண்டபத்தின் மேம்பாட்டுப் பணிகள் ரூ.2.60 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

மகாகவி பாரதியார் இல்லம், எட்டயபுரம் :

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்திலுள்ள மகாகவி பாரதியார் இல்லத்தின் மேம்பாட்டுப் பணிகள் ரூ.4.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.



1998 மே 21]

தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம், நாகப்பட்டினம்:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபத்திற்கு ரூ.5.91 இலட்சம் செலவில் பல்வேறு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**அண்ணா சதுக்கம்:**

பேரறிஞர் அண்ணா நினைவிடமான அண்ணா சதுக்கத்தை புதுப்பொலிவுடன் அமைத்திட ரூ. 2.75 கோடி செலவில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அண்ணா சதுக்கத்தின் நடைபாதை 72 அடி அகலத்தில் அகலப்படுத்தப்பட்டு தரை முழுவதும் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. ஆறு அழகிய எண்கோண மண்டபங்கள், இரண்டு அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அழகிய தோட்டங்கள், புல்வெளிகள், நீரூற்றுகள் மற்றும் வண்ண விளக்குகள் அமைக்கும் பணிகள் ரூ. 150 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் புகைப்படங்கள், அவர் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் நூல்களைக் கொண்டு, அழகுற அண்ணா அருங்காட்சியகம் ரூ.29.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.64 இலட்சம் செலவில் அண்ணா சதுக்கத்தின் முகப்பில் கலைநுட்பம் கொண்ட பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட நுழைவு வாயில் 46 அடி உயரத்தில், 71 அடி அகலத்தில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.31.50 இலட்சம் செலவில் பேரறிஞர் அண்ணாவின் துயிலிடம் 80 ச.அடி பரப்பளவிலிருந்து 192 ச.அடி பரப்பளவில் அகலப்படுத்தப்பட்டு, நினைவுத்தூண் 50 அடி உயரத்திலிருந்து 60 அடி உயரமாக அமைக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் பணிகளனைத்தும் முடிக்கப்பட்டு பேரறிஞர் அண்ணா நினைவிடம், காண்போரைக் கவரும் வண்ணம் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கிறது.

[1998 மே 21

**வள்ளுவர் கோட்டம்:**

உலகம் போற்றும் பொது மறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குன்றா முயற்சியின் பயனாக சென்னை நுங்கம்பாக்கத்தில் ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள பரந்தவெளியில், தென்றல் வீசும் தெற்குத் திசை நோக்கிக் கட்டப்பட்ட வள்ளுவர் கோட்டம் இன்று புதுப் பொலிவு பெற்றுத் திகழ்கிறது.

வள்ளுவர் கோட்டம் புதுப்பொலிவுடன் அமைந்திட ரூ.84.94 இலட்சம் செலவில், வள்ளுவர் கோட்டத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவடைந்துள்ளன.

குறள் மணி மாடத்தில் கோட்டக்கல் உபயோகித்து தளம் அமைத்தல், குறள் மண்டபம், அரங்கம் மற்றும் சுற்றுக்கூடம் ஆகிய இடங்களில் மழைக் காலங்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுக்கும் பணி, தோரணவாயில் மற்றும் பூங்காக்களின் நடைபாதைகளில் வழுக்காத ஓடுகளைப் பதிக்கும் பணி, தேரின் பின்பகுதியில் தேரின் பிம்பம் தெரியும் வகையில் செயற்கை நீருற்று அமைக்கும் பணி, திருவள்ளுவர், திருக்குறள் பற்றி அனைத்து ஆசிரியர்கள் எழுதிய திருக்குறள் உரை, ஆய்வுக் கட்டுரை நூல்கள், தமிழ் ஆங்கிலம் ஆகிய அனைத்து மொழி நூலாசிரியர்கள் இயற்றிய நூல்கள் இடம் பெறும் நூலகம் அமைத்தல், வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அனைத்து கட்டடச் சுவர்களுக்கும் (உள்பக்கம், வெளிப்பக்கம்) சுற்றுச் சுவருக்கும் சிமெண்ட் வண்ணம், பூசுதல், வள்ளுவர் கோட்ட சுற்றுக்கூடம், குறள்மணி மாடம், தேர், கருவறை ஆகிய இடங்களில் போதிய மின் விளக்குகள் அமைக்கும் பணி, கலைநுட்பம் கொண்ட சிற்பத் தேரில் செதுக்கப்பட்டுள்ள குறள் விளக்கக் காட்சிகளில் மீதமுள்ள பணிகள், வள்ளுவர் கோட்டத்தின் பின்புறம் தனியாக சுற்றுச்சுவர் கட்டுதல், அழகுற சுற்றுச்சுவர் அமைத்தல் உட்பட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புதுப்பொலிவுடன் வள்ளுவர் கோட்டம் அமைந்துள்ளது. இவ்வாறு புதுப்பொலிவுடன் திகழுகின்ற வள்ளுவர் கோட்டத்தினை, இன்றளவில் நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் கண்டுகளித்துச் செல்கின்றனர்.

**திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி:**

வான் புகழ் கொண்ட குறள் தந்த பெரும்பேராசான் வள்ளுவர்க்கு, தமிழகத் தலைநகரில் வள்ளுவர் கோட்டம் கண்ட இந்த அரசு,



1998 மே 21]

1975 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்தறிவித்த முடிவுக்கேற்ப தென்குமரி முனையில் திருவள்ளுவருக்குச் சிலை அமைக்கும் பணி, இடையில் ஏற்பட்ட தொய்வுகளையெல்லாம் கடந்து, 6-09-1990-ல் இதே அரசினால் சிலை அமைப்புப் பணி தொடங்கும் விழா நடைபெற்றது. கடந்த ஆட்சியில் 1-3-1995 முதல் நின்றுவிட்ட இப்பணிகளை மீண்டும் விரைவாக முடித்திட 12-12-1996 அன்று இவ்வரசால் ஆணையிடப்பட்டு, கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.7.86 கோடி செலவில் நடைபெற்று வருகின்றது. திருவள்ளுவர் சிலையினை வடிவமைத்திட கற்கள் செதுக்கும் பணியும், திருவள்ளுவர் சிலை வைக்கின்ற பாறையினை சமன் செய்கின்ற பணியும், கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து சிலைக்குத் தேவையான எல்லா கற்களையும் எடுத்துச் செல்கின்ற பணியும், கட்டுமானப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவள்ளுவர் சிலைக்கான கல் செதுக்குகின்ற பணிகள், சென்னை சோழிங்கநல்லூர், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்று வருகின்றன.

1999 ஆகஸ்டு இறுதிக்குள் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி நிறைவு பெறும்.

**மகாகவி பாரதியார் இல்லம், திருவல்லிக்கேணி:**

திருவல்லிக்கேணி, மகாகவி பாரதியார் இல்லத்தில் ரூ.8.30 இலட்சத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி இல்லத்தில் சிமெண்ட் தகடுகள் கூரை வேயப்பட்டு, இரும்பு உத்திரங்கள் பொருத்தப்பட்டுப் பணிகள் முடிவுற்றன. பாரதியார் பற்றிய புத்தகங்கள் வாங்குதல், அவரது கையெழுத்துப் பிரதிகள் லேமினேஷன் செய்தல், ஒலிபெருக்கிக் கருவிகள் அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

[1998 மே 21

அத்தியாயம்—6

## தமிழரசு மற்றும் தமிழரசு அச்சகம்:

### 'தமிழரசு' இதழ்

'குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப்பெண் ணேஉன்
நலங்காணார் ஞாலம் காணார்!....

—என்றெல்லாம், பத்திரிகையைப் பெண்ணாக உருவகப்படுத்திப் பெருமைபடப் பாடியிருக்கிறார், பாவேந்தர் பாரதிதாசனார்.

அந்த வகையில், நாட்டு மக்கள் நலம் கருதி அரசு தீட்டுகின்ற அரிய திட்டங்கள் பற்றி, அவை செயல்படுத்தப்படும் சீரிய விதத்தினைப் பற்றி, அரசின் அன்றாட அறிவிப்புகள் — அவ்வப்போது மேற்கொள்ளப்படும் ஆக்கப் பணிகள் பற்றிய செய்திகளையெல்லாம் உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் ஊடகமாக இருந்து ஒப்பற்ற பணிபுரிந்து வரும் ஏடு 'தமிழரசு'.

1970-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த ஏடு, வெள்ளி விழா ஆண்டைக் கடந்து வெற்றி நடை போட்டு வருவது பெருமைக்குரியது ஆகும். அரசு விழாக்களின் நிகழ்ச்சித் தொகுப்புகளையும், அங்கு மேடையில் வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாக மிதந்து வரும் மேன்மக்களின் உரைகளையும் தாங்கி வருவது 'தமிழரசு'. வேளாண்மை, மருத்துவம், தொழில் வளர்ச்சி, கல்வி, சமூகநலம், உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகள் பற்றிய கட்டுரைகளோடு, அரிய பல கருத்தோவியங்களும், வாழ்வாங்கு வாழ்ந்தோரின் வாழ்க்கைப் பாதை காட்டும் வனப்போடு வெளி வருகிறது 'தமிழரசு'.

தமிழில் திங்கள் இருமுறை இதழாகவும், ஆங்கிலத்தில் மாத இதழாகவும், 'தமிழரசு' வெளிவந்து கொண்டிருக்கிறது. தற்போது தமிழில் 33,000 பிரதிகள் அச்சிடப்பட்டு, தமிழகமெங்கும் தமிழ்மணம் கமழ, விநியோகம் செய்யப்படுகிறது. ஆங்கிலத்தில் 3,150 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.



1998 மே 21]

### 'அரசு செய்தி'

'அரசு செய்தி' என்னும் வண்ணச் சுவரொட்டி இதழ், தமிழக முதல்வர் அவர்களால் 14-4-1997-ல் தொடங்கப்பட்டது. இந்த இதழ் வாரந்தோறும் 20,000 பிரதிகள் 'தமிழரசு' அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

'அரசு செய்தி' இதழில் அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள், புதிய திட்டங்கள், அத்திட்டங்கள் மூலம் பயன்பெற யாரை அணுகவேண்டும் என்ற செய்திகள் மற்றும் அரசுத் திட்டங்கள் பற்றிய முக்கியச் செய்திகள் படங்களோடு வெளியிடப்படுகின்றன. வாரந்தோறும் வெளியிடப்படும் இந்த வண்ணச் சுவரொட்டிகள், அரசு அலுவலகங்கள், பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும், தொலைதூரக் கிராமங்களிலும் சுவர்களில், தட்டிகளில், தனி அறிவிப்புப் பலகைகளில் ஒட்டப்பட்டு வருகின்றன. இதனால் அனைவரும் அரசின் திட்டங்களையும், நலத் திட்டங்களையும் உடனுக்குடன் அறிந்துகொள்ள ஏதுவாகிறது.

### மேம்பாட்டுப் பணிகள்:

அரசினர் தோட்டத்திலுள்ள 'தமிழரசு' அலுவலகக் கட்டடத்தின் மேம்பாட்டுப் பணிகள் ரூ.5 இலட்சம் செலவில், 1998-99 பகுதி-2 திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

அத்தியாயம்—7

## தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம்:

நம் மக்களின் வாழ்வியலோடு பிரிக்க இயலா வண்ணம் இரண்டறக் கலந்துள்ள கலை அம்சத்தில், திரைப்படமும் தொலைக்காட்சியும் முன்னிலை வகிக்கின்றன. எனவே, இத்துறைகளில் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர்களை உருவாக்குவது தவிர்க்க இயலாத ஒன்று, என்ற அடிப்படையில் தென்னாட்டிலேயே தமிழகத்தில்தான் (சென்னையில்) திரைப்பட, தொலைக்காட்சி நுட்பங்களைக் கற்றுத் தரும் வண்ணம் இந்நிறுவனம் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் திரைப்பட இயக்கம் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, படத்தொகுப்பு மற்றும் படம்

திரையிடப்பட்டு வருகிறது. இவ்வாறு அனைத்துத் திரையரங்குகளிலும் திரையிடச் செய்ய சுமார் 6 மாத காலம் ஆகிறது. இதனால், உடனடி பயன் கிடைக்கப் பெறாதது மட்டுமல்ல, அதிகச் செலவும் ஆகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி வீடியோவில் படமாக்கி, சென்னைத் தொலைக்காட்சியிலும் பிற தனியார் செயற்கைக் கோள் ஒளிபரப்பு மூலம் ஒளிபரப்பு செய்ய முடிவெடுக்கப்பட்டது, அவ்வாறு செய்வதன்மூலம் அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் முதலியவை தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் போய் உடனடியாகச் சேருவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. இதுவரை மூன்று ஒளி நாடா செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டு, செயற்கைக்கோள் மூலம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளன. இதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு காணப்படுகிறது. இவ்வாறு, ஒளி நாடா செய்தி மலர்கள் தயார் செய்யப்பட்டு, தொலைக்காட்சிகளின் மூலம் ஒளிபரப்பு செய்யப்படுவதால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 20 இலட்சம் செலவு மீதமாகிறது.

**விளக்கப்படங்கள் தயாரிப்பு:**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மக்கள் பயனடையக்கூடிய வகையில் குடும்ப நலம், சமூகக் காடுகள், வேளாண்மை, சுகாதாரம், வனப் பாதுகாப்பு, கூட்டுறவு மற்றும் இதர துறைகள் குறித்து பல்வேறு துறைகள் அளிக்கும் நிதிக்கு ஏற்றாற்போல் பிலிமில் விளக்கப்படங்கள் தயாரித்து வருகிறது. இதுவரை 127 படங்கள் தயாரித்து வெளியிட்டுள்ளன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு விளக்கப்படங்கள் தயாரிப்பதுடன், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் படத் தயாரிப்பாளர்களையும் பயன்படுத்துகிறது. சில தேசியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படம் எடுக்கப்பட்டது போல, செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் நிதி ஒதுக்கீட்டில் ரூ. 8.28 இலட்சத்தில் 'வாழும்போதே வரலாறான பேரறிஞர் அண்ணா ' வாழ்க்கை வரலாற்றை 20 நிமிட வண்ணப்படம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இத்திரைப்படத்துக்கான வரிவடிவம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**ஒளி நாடா செய்திகள்:**

1988 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் ஒளி நாடாப் பிரிவு செயல்பட ஆரம்பித்து, ஒளி நாடாச் செய்தி மலர்களை 1989 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கத் தொடங்கியது. 60 முதல் 90





நிமிடங்கள் வரை ஓடக்கூடிய இந்த மலர்களில், அரசிற்கு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அனைத்துத் தரப்புகளும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் சிறு கதைகள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைக் காட்சிகள் மூலமாக மிகவும் சுவையாக தயாரித்து வழங்கப்படுகிறது. இந்த மலர்கள், மாவட்டங்களில் கள விளம்பரப் பணிக்காக உள்ள 20 ஒளி நாடா ஊர்திகள் மூமாகவும் திரையிடப்படுகிறது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை 13 மலர்கள் தயாரித்துள்ளது.

**ஒளி நாடா விளக்கப்படங்கள்:**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவானது குடும்ப நலம், காடு வளர்ப்பு, சிறுசேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, சாலை விபத்து போன்ற பொருட்களிலும் ஒளி நாடா விளக்கப்படங்களாகத் தயாரித்துள்ளது. இவ்வாண்டில், 30 ஒளி நாடா விளக்கப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதுவரை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 246 ஒளி நாடா விளக்கப்படங்களைத் தயாரித்துள்ளது.

அரசின் பிற துறைகளின் தேவைக்கேற்ப அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் 30 நிமிடம் ஓடக்கூடிய வீடியோ படங்களைத் தயாரித்து வழங்கி வருகிறது. மக்கள் நல்வாழ்வு, குழந்தை நலம், கல்வி, வேளாண்மை, குடிநீர், சுற்றுப்புறச் சூழ்நிலைப் பராமரிப்பு, மரங்கள் வளர்த்தல், காடுகளைப் பாதுகாத்தல், வனவிலங்குகள் சரணாலயம், பெண்கள் முன்னேற்றம், போதைப் பொருட்களால் தீமை போன்ற பல்வேறு மையக் கருத்துக்களைக் கொண்டு இப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இப்படங்களை அந்தத் துறைகள் ஒளிபரப்புவதோடு வி.எச்.எஸ். பிரதிகள் எடுத்து மாவட்டங்களிலுள்ள ஒளி நாடா ஊர்திகள் மூலமாக கள விளம்பரம் செய்யவும் பயன்படுகிறது.

**ஒளி நாடா செய்தி மலர்கள் படப்பிடிப்பு:**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழகம் முழுவதிலும் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளை ஒளி நாடாவில் படமெடுக்கிறது. இவை ஒளி நாடாச் செய்தி மலர் தயாரிப்புக்குப் பயன்படுவது போக, சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினருக்கு, ஒளிபரப்பிற்குத் தருவதற்கும் பயன்படுகிறது. திரைப்படப் பிரிவில் நவீன ஒளி நாடாக் கருவிகளின் மூலம் எடுக்கப்படும் வீடியோ தயாரிப்புகள் தரம் சிறந்தவையாகவும், சென்னைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புக்கு அனுப்பும் வகையிலுள்ளதாகவும் வனப்புற அமைந்துள்ளன.

[1998 மே 21

பதனிடுதல் ஆகிய மூன்றாண்டு பட்டயப் படிப்பும், திரைப்பட நடிப்பில் ஓராண்டு சான்றிதழ் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மூன்றாண்டு பட்டயப் பயிற்சி ஒவ்வொன்றிலும் 12 மாணவர்களும் திரைப்பட நடிப்புப் பயிற்சியில் 21 மாணவர்களும் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாண்டில் இந்நிறுவனத்தில் 169 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

இந்தியாவிலேயே திரைப்படச் சுருள் பதனிடுதல், நடிப்புப் பயிற்சியளித்தல் என்ற பாடப்பிரிவுகள் இங்கு மட்டும்தான் உள்ளன.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் நாள்தோறும் புதிய மின்னணு சாதனங்களை அறிமுகப்படுத்திடும் துறைகளில், மின்னணுத் துறை முன்னிலை வகிக்கிறது. இவற்றின் தாக்கத்தால், திரைப்பட தொலைக்காட்சி தொழில்நுட்பவியலுக்குப் புதிய நவீனக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இத்துறைகளில் பணியாற்றிட தொழில்நுட்பப் பயிற்சிகளை அளித்துவரும் இந்நிறுவனத்தை நவீனப்படுத்தும் முகத்தான், 1997-98 பகுதி-2 திட்டத்தின்கீழ், இரண்டு புதிய புகைப்படக் கருவிகள் ரூ.1 இலட்சத்திலும், (Non-Leaner Video Editing System) நான் வீடியோ எடிட்டிங் சிஷ்டம் ரூ.8.32 இலட்சத்திலும், எஸ்.வி.எச்.எஸ். வீடியோ கேமரா ரெக்கார்டர் மற்றும் கேசட் ரெக்கார்டர் கருவிகள் ரூ.6.50 இலட்சத்திலும் வாங்கி பயன்படுத்தப்படுகின்றன. மேலும், மாணவர்கள், படப்பிடிப்பு அரங்கு ஒன்றும், மாணவர்கள் பயிற்சிக்காக நிழற்படம் எடுக்கும் அரங்கும் நவீனப்படுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், பகுதி-2 திட்டத்தின்கீழ், இந்நிறுவனத்திற்காக 1998-99-ல் டிஜிட்டல் ஆடியோ ஒர்க் ஸ்டேஷன் (Digital Audio Work Station) ரூ.30 இலட்சத்திலும், 35 எம்.எம். பிலிம் எடிட்டிங் ஸ்டீன்பக் (Steinbek) இயந்திரம் ரூ.30 இலட்சத்திலும், வீடியோ புரொஜக்டர் ரூ.4 இலட்சத்திலும், வண்ணப் புகைப்படப் பெருக்கி மற்றும் பிரதிகள் எடுக்கும் கருவிகள் ரூ.5 இலட்சத்திலும், வெளிப்புறப் படப்பிடிப்புப் பேருந்து, மின்ஆக்கி (Generator) சக்தி வாய்ந்த ஒளி விளக்குகள் ஆகியவை ரூ.26 இலட்சத்திலும் ஆக மொத்தம் ரூ.95 இலட்சத்தில் வாங்கப்படும்.

இக்கல்லூரியின் 37 ஆண்டு கால வரலாற்றில், முதன் முறையாக இங்கு பயிலும் மாணவர்களின் 6 பயிற்சிப் படங்கள், 1997 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற 44-ஆவது தேசிய திரைப்பட விருது பெறும் விழாவில் திரையிட அனுப்பப்பட்டன. அவற்றில் 'விடியலை நோக்கி' எனும் குறும் படம், 1997 ஆம் ஆண்டில் சிறந்த படமாகத் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான தேசிய விருதினைப் பெற்றுள்ளது.



அதேபோன்று, முதன் முறையாக 29-ஆவது இந்திய உலகத் திரைப்பட விழாவில் இந்திய 'பனோரமா'வில் திரையிடத் தேர்வு பெறுவதற்காக இந்நிறுவன மாணவர்களின் 6 பயிற்சிப் படங்கள் அனுப்பப்பட்டன. அவற்றில் 'விடியலை நோக்கி' மற்றும் 'வானவில்' என்னும் 2 பயிற்சி குறும் படங்கள் தேர்வு செய்யப்பட்டு 13-1-1998 மற்றும் 15-1-1998 அன்று 29-ஆவது இந்திய உலகத் திரைப்பட விழாவில் இந்திய 'பனோரமா' பிரிவில் திரையிடப்பட்டன.

இப்பயிற்சி நிறுவனத்தின் பாடத் திட்டங்களை நவீனமயமாக்குவதற்கும் புதிய நவீனக் கருவிகள் வாங்குவதற்கும் வழிவகைகளை ஆராய்ந்து, அரசுக்குப் பரிந்துரை செய்ய ஒரு அறிவுரைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகளின்பேரில், இப்பயிற்சி நிறுவனத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம்—8

### தமிழ்நாடு திரைப்படப் பிரிவு:

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழகம் முழுவதிலும் நடைபெறும் தமிழக அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள், மக்கள் நலத் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து செய்திப் படம் தயாரித்து வெளியிடும் சீரிய பணியில் ஈடுபட்டு வருகிறது.

### 1. செய்தி மலர் தயாரிப்பு:

1968 ஆம் ஆண்டு முதல் கருப்பு வெள்ளையில் செய்தி மலர் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு முதல், செய்தி மலர்கள் வண்ணத்தில் தயாரிக்கப்பட்டு வருகிறது. அரசு நிகழ்ச்சிகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் பற்றி எடுக்கப்பட்ட படத்தினைத் தொகுத்து 10 நிமிடம் ஓடக்கூடிய செய்தி மலராகத் தயார் செய்து வெளியிடப்படுகிறது. இதுவரை 415 செய்தி மலர்களைத் தயாரித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் ஒரு செய்தி மலர் படச்சுருளில் தயார் செய்து 147 பிரதிகள் எடுத்து தமிழ்நாட்டிலுள்ள திரையரங்குகளில்

இந்நிறுவனத்தை நவீனப்படுத்தும் வகையில், 1997-98 பகுதி-2 திட்டத்தின் கீழ், வீடியோ ஹை பேண்ட் கருவிகள் ரூ. 23.26 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

1998-99 பகுதி-2 திட்டத்தின்கீழ் மேலும் ரூ.5 இலட்சம் செலவில் ஒளிப்பதிவுத் தன்மையை மேம்படுத்தும் வகையில் ஒரு பி.டி.4 போர்ட்டபிள் டாட் டிஜிட்டல் ஆடியோ ரெக்கார்டர்கள் வாங்கி நிறுவப்படும்.

## அத்தியாயம் - 9

## சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு, தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் திட்டம்:

திரைப்படத் துறையில் ஈடுபடுவோரை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால், திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், திரைக் கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. இவ்வரசால் 1995 முதல் புதிதாக, சிறந்த வில்லன் நடிகர் ஒருவருக்கும், சிறந்த நகைச்சுவை நடிகர் ஒருவருக்கும் விருதுகள் வழங்க முடிவு செய்யப்பட்டு, விருதுகள் அறிவிக்கப்படுகின்றன.

### சிறந்த தமிழ்த் திரைப்படம்:

1. முதல் பரிசு.. ரூ. 1,25,000 மற்றும் கேடயம்
2. இரண்டாம் பரிசு.. ரூ. 75,000 மற்றும் கேடயம்
3. மூன்றாவது பரிசு.. ரூ. 50,000 மற்றும் கேடயம்
4. சிறப்புப் பரிசு.. ரூ. 50,000 மற்றும் கேடயம்

தேர்வு செய்யப்பட்ட சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 1996 ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 30-1-1998 அன்று, மேதகு ஆளுநர்



தலைமையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. 1997 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் இந்த நிதியாண்டில் வழங்கப்படும்.

### கலைத் துறை வித்தகர்களுக்கான விருதுகள்:

திரையுலக வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கவிஞர் கண்ணதாசன், கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர். ஆகியோர் பெயரால் கலைத் துறை வித்தகர்களுக்கான விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வித்தகர் விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு, தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 1996 ஆம் ஆண்டிற்கான விருதுகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

திரைப்படங்களில், பெண்களை இழிவுபடுத்துவதைத் தவிர்க்கவும், பெண்கள் நிலையை உயர்த்திக் காட்டவும் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு ரூ. 1.25 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

### தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் (Subsidy) வழங்கும் திட்டம்:

சமுதாய நோக்குடன் கூடிய நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. அரசால் அமைக்கப்படும் தேர்வுக் குழு தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்து மானியம் வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. 1995 ஆம் ஆண்டில் மானியத்திற்கென வந்த 44 படங்களில் தகுதி பெற்ற 40 படங்களுக்கு இவ்வரசு ரூ. 120 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது. 8 பிரதிகளுக்குக் குறையாமல் 25 பிரதிகளுக்கு மிகாமல், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படம் ஒன்றுக்கு 17-7-1996 முதல், மானியத் தொகையை அரசு ரூ. 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

1996 ஆம் ஆண்டின் நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்து அரசிற்குப் பரிந்துரை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றை ஆங்கில மொழியில் திரைப்படமாக தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் எடுத்து வருகிறது.

அந்தப் படம் தமிழாக்கம் செய்து வெளியிடப்படுமேயானால், தமிழக அரசின் உதவித் தொகையாக ரூ. 10 இலட்சம் வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அண்ணல் அம்பேத்கர் திரைப்படம் (ஆங்கிலத்தில்) தயாரிப்புப் பணி முடிந்து, தற்போது தமிழாக்கம் (டப்பிங்) செய்யும் பணி, நடைபெற்று வருகிறது.

**திரைப்படத் துறையினருக்கான சலுகைகள்:**

தரமான திரைப்படங்களுக்கான மானியம் (Subsidy) வழங்கும் திட்டத்தில், மிகச் சீரிய மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு 12 முதல் 30 பிரதிகள் எடுக்கப்பட்டு வெளியிடப்படும் திரைப்படங்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ், முன்பு உதவி பெறத் தகுதியுடையவனாக இருந்தன.

ஆனால், 17-7-1996 முதல், 8 பிரதிகளுக்குக் குறையாமல் 25 பிரதிகளுக்கு மிகாமல் எடுக்கப்பட்டு, குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்ட திரைப்படங்கள் தகுதியுடையவை என அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 16-7-1996 வரை ரூ. 3 இலட்சமாக இருந்த மானியத் தொகையை 17-7-1996 முதல் திரையிடப்பட்ட படங்களுக்கு மானியத் (Subsidy) தொகையாக ரூ. 5 லட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சலுகை பெறும் திரைப்படங்களின் எண்ணிக்கை 50-லிருந்து 75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அரசு மானியம் பெறத் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்கள் வெளியிடப்பட்ட முதல் நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டத்தை 12-12-1996 முதல் அமல்படுத்தியுள்ளது.

தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் படத் தயாரிப்பாளர்கள் படப்பிடிப்பு நடத்த, முன்பு கட்டணம் ஒரு இடத்திற்கு ரூ. 5000/- ஆகவும், ஏனைய இடங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 2,500/- ஆகவும் இருந்ததை, முறையே ரூ. 1,000 எனவும் ரூ. 500 எனவும் குறைத்து 26-7-1996-ல் ஆணையிட்டுள்ளது.



**திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்புறுதித் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டம்:**

திரைப்படத் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும், விபத்துக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அரசு 4-3-1997 முதல் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொழிலாளரும் ரூ. 50,000-க்குக் காப்புறுதி செய்யப்படுவர். விபத்தில் இறந்தால் இந்தத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும். விபத்தில் உடல் ஊனமுற்றால், அதற்குத் தகுந்தாற்போல தொகை வழங்கப்படும். அரசு இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. சண்டைக் காட்சியில் நடிக்கும் பொழுது, சண்டைப் பயிற்சியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் ரூபாய் ஒரு இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ. 50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும்.

திரைப்படத் தொழிலாளர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு திரைப்படத் தொழிலாளரும் மாதம் ரூ.25 அல்லது ஆண்டிற்கு ரூ.300 சந்தாவாகச் செலுத்த வேண்டும். நிலுவை இல்லாமல் சந்தா செலுத்தும் திரைப்படத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்திலும் விபத்துக் காப்புறுதித் திட்டத்திலும் சேர்க்கப்படுவர்.

**மாநில மேல்முறையீட்டு உயர்நிலைக் குழு (State Appellate Committee) :**

திரைப்படத் தொழில் தொடர்பான தகராறுகளை அவ்வப்போது தீர்த்து வைக்க பல மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் திரையீட்டாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மாவட்டக் குழுக்களால் தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு செய்தி–சுற்றுலாத் துறையின் செயலாளர் தலைமையில், படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் திரையீட்டாளர்களின் பிரதிநிதிகள் அடங்கிய மாநில அளவிலான மேல்முறையீட்டு உயர்நிலைக் குழு (State Appellate Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டக் குழுக்கள் உயர்நிலைக் குழுவிற்கு மேல்முறையீடு செய்யும்போது, மாநில மேல்முறையீட்டு உயர்நிலைக்குழு பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்.

[1998 மே 21

தமிழ் திரைப்படத் தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் திரைப்படத் தொழிலாளர்கள் கூட்டமைப்புகளுடன் 8-7-1997 மற்றும் 7-8-1997 ஆகிய நாட்களில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஒருவர் தொழிலில் இன்னொருவர் இடையூறு விளைவிக்காமல் திரைப்படங்கள் எடுக்கும் முயற்சியில் ஈடுபடலாம் என அறிவுரை வழங்கப்பட்டது. பேச்சுவார்த்தைக்குப் பின்பு, தொழிலில் இருந்த சுணக்கம் நீக்கப்பட்டு சுமுகமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

**படப்பிடிப்பு நடத்த ஒரே இடத்தில் அனுமதி வழங்கு முறை:**

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த, முன்பு, படத் தயாரிப்பாளர்கள் அரசின் பல்வேறு துறைகளுக்குச் சென்று தடையில்லாச் சான்று பெற்று, அனுமதி பெறவேண்டி இருந்தது. தற்போது தடையில்லாச் சான்றிதழ் இன்றி அரசுக்குச் சொந்தமான அனைத்து இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்க ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறை (Single Window System) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் திரைப்பட உலகினரால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 10

**செய்தி வெளியீட்டுப் பிரிவு :**

அரசின் சார்பில் அளிக்கப்படும் செய்தி வெளியீடுகளை 75-க்கும் மேற்பட்ட நாளிதழ்களுக்கும், 15-க்கு மேற்பட்ட தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும், வானொலிக்கும் தொலையச்சு மூலம் அனுப்பி உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவிக்கும் சீரிய பணியினை செய்தி வெளியீட்டுப் பிரிவு, விடுமுறை நாட்கள் உள்பட 24 மணி நேரமும் ஆற்றி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர், அனைத்து அமைச்சர் பெருமக்கள் மற்றும் மிக முக்கிய விருந்தினர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் சென்று கலந்து கொள்ளும் வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் இப்பிரிவே செய்து வருகிறது.



1998 மே 21]

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பத்திரிகையாளர் கூட்டம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் நடத்தப்பெறும் பத்திரிகையாளர் கூட்டம், ஆகியவற்றிற்கு அவ்வப்போது உரிய ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

**நவீன வசதிகள் :**

முக்கிய பிரமுகர்கள் வருகை மற்றும் முக்கிய அரசு விழாக்களுக்குச் சென்று படமெடுக்க வசதியாக ரூ.3.5 இலட்சம் செலவில் ஒரு ஜீப் வாகனமும், புகைப்பட வெளியீடுகளை உடனுக்குடன் பத்திரிகை நிறுவனங்களுக்கு அனுப்ப ரூ. 3 இலட்சம் செலவில் கணினி (Computer), மோடம் (Modem), ஸ்கேனர் (Scanner) கருவியும், ரூ.2.5 இலட்சம் செலவில் ஒரு புதிய ஜெராக்ஸ் இயந்திரமும் செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கென பகுதி-2 திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நவீனப்படுத்தப்படும் புகைப்படப் பிரிவு :**

தற்போது புகைப்படப் பிரிவில் கருப்பு வெள்ளைப் படங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ், புகைப்படப் பிரிவில் ரூ.3 இலட்சம் செலவில் 'கலர் லேப்' அமைத்து வண்ணப் படங்களைத் தயாரித்து பத்திரிகைகளுக்கு வழங்கவும், கண்காட்சி பேனல் போர்டுகள், 'தமிழரசு' இதழ் ஆகியவற்றிற்காக வண்ணப் புகைப்படங்கள் தயாரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தலைமையகத்திலுள்ள புகைப்படக்காரர்கள் மற்றும் மாவட்டங்களிலுள்ள புகைப்படக்காரர்கள் ஆகியோருக்காக ரூ.4.05 இலட்சம் செலவில் 10 புதிய கேமராக்கள் இந்த ஆண்டில் வாங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**நாளிதழ் செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம்:**

சென்னை மாநகரிலிருந்து வெளிவரும் நாளிதழ்கள் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வெளியாகும் நாளிதழ்களில் பணியாற்றும் சென்னை செய்தியாளர்கள், செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள், அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, புகைப்படப்பிரிவு, திரைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒலி, ஒளிப் பதிவாளர்கள் ஆகியோருக்கு அரசால் அமைக்கப்பட்ட செய்தியாளர் அங்கீகாரக் குழுவின் பரிசீலனைக்குப்

[1998 மே 21

பின் பரிந்துரைக்கப்பட்டு, இத்துறையினால் ஆண்டுதோறும் அரசு அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு 75 நிறுவனங்களைச் சார்ந்த 370 நபர்களுக்கு அரசு அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு அங்கீகார அட்டைகள் பெற்றுள்ளவர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசப் பயண அட்டை, இரயில் பயணத்தில் 50 சதவிகிதக் கட்டணச் சலுகை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்பு மற்றும் மாதாந்திரத் தவணைத் திட்டத்தின் மூலம் வீடுகள் வாங்குதல் ஆகியவற்றில் தனி ஒதுக்கீடு, வீட்டிற்குத் தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை ஆகிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவன செய்தியாளர்களுக்குச் செய்தியாளர் அட்டை :**

அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று செய்திகள் சேகரிப்பதற்கு ஏதுவாக, செய்தியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குமாறு பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களிடமிருந்து அரசுக்கு வரப்பெற்ற கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, 'செய்தியாளர் அட்டை' பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப் பதிவாளர்கள் ஆகியோருக்கு வழங்கிட ஆணையிட்டார்கள். அதன்பேரில், அதற்கென ஒரு பரிந்துரைக் குழு அமைக்கப்பட்டு, சனவரி 1997 முதல் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு 45 பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களைச் சார்ந்த 114 நபர்களுக்குச் செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**செய்தியாளர்கள் குடியிருப்பு:**

சென்னைக்கு அருகே கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் 136 செய்தியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டு, தற்பொழுது செய்தியாளர்கள் அங்கே வசித்து வருகின்றார்கள்.

இதுபோன்று மாவட்டங்களிலும் செய்தியாளர்களுக்கெனத் தனியாகச் செய்தியாளர் குடியிருப்பு அமைத்திட வேண்டும் என்று மாவட்டங்களில்



1998 மே 21]

பணிபுரியும் செய்தியாளர்கள் அரசுக்கு விடுத்த கோரிக்கையினை அரசு பரிவுடன் பரிசீலித்து வருகிறது.

**செய்தியாளர் பயணம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொள்ளும் முக்கிய அரசு நிகழ்ச்சிகளுக்குச் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப் பதிவாளர்கள் சென்று வர, அனைத்து வசதிகளையும் இத்துறை செய்து கொடுக்கிறது. மேலும் அரசின் ஆக்கப்பணிகள், நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவை எவ்விதம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நேரில் சென்று பார்த்து பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி மூலமாக மக்களுக்கு எடுத்தியம்பும் வகையில், அவ்வப்போது செய்தியாளர் சுற்றுப் பயணங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்:**

ஓய்வு பெற்ற ஏழ்மை நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் 1986 ஆம் ஆண்டு முதல் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வு பெற்ற ஏழ்மை நிலையிலுள்ள பத்திரிகையாளர்கள் 55 பேர் தற்பொழுது ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில், ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்த தொகையான ரூ.500 1-8-1996 முதல் ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில், வருமான வரம்பு விதிகளை மேலும் தளர்த்தி, அவர்களின் வருட வருமான வரம்பு ரூ.5,000லிருந்து, ரூ.12,000 ஆகவும், ஓய்வு பெறும்போது பெறுகின்ற பணிக்கொடையின் வரம்பு ரூ.10,000லிருந்து ரூ.25,000 ஆகவும், பணியில் இருந்தபோது எந்த ஒரு குறிப்பிட்ட ஆண்டிலும் பெற்ற வருமான வரம்பு ரூ.24,000 ஆக இருக்க வேண்டுமென்ற விதியினைத் தளர்த்தி ரூ.40,000 ஆக இருக்கலாம் எனவும் விதி தளர்த்தப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி:**

பத்திரிகைத் துறையில் தொடர்ந்து இருபதாண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் பணியிலிருக்கும் போது இயற்கை எய்தினால், அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர்

[1998 மே 21

நிதியிலிருந்து ரூ.25,000 நிதியுதவி வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1997-98 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, 20-3-1997 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், இயற்கையெய்திய செய்தியாளர்கள் திருவாளர்கள் வேம்புசாமி, எஸ்.எம். மருதப்பன், எஸ். அலெக்சன் ஜெயபாண்டியன் ஆகியோர் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25,000 வழங்கப்பட்டுள்ளது.

**மாநிலச் செய்தி மையம்:**

சென்னை அரசினர் தோட்டத்தில் 1956 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த மாநிலச் செய்தி மையம், சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு இல்ல மாடியில் 4-7-1997 முதல் இயங்கிவருகிறது.

**செய்தி மைய நூலகம் மற்றும் படிப்பகம்:**

இந்நூலகத்தில் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, குழந்தைகள் நூல்கள், கலை, அறிவியல் மற்றும் இலக்கியம் உட்பட பல்வேறு தலைப்புகளில் 12,500-க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கில நூல்கள் உள்ளன. அரசுத்துறை வெளியீடுகள், தமிழ்நாடு அரசு தேர்வாணையக் குழு வெளியீடுகள் ஆகியனவும் இங்குள்ளன. மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்களும் இந்த நூலகத்தைப் பயன்படுத்துகிறார்கள். இங்குள்ள படிப்பகத்தில் ஆங்கில நாளேடுகள், வார, மாத பருவ இதழ்கள் வாங்கப்படுகின்றன. நாள்தோறும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படித்து பயன் அடைகிறார்கள். இப்பருவ இதழ்களும், நாளேடுகளும் தொகுத்து வைக்கப்பட்டு, பலதரப்பட்டோரின் மேற்கோளுக்காகத் தேவைப்படும்போது வழங்கப்படுகின்றன.

**திரைப்படச்சுருள் நூலகம்:**

மாநிலச் செய்தி மைய படச்சுருள் நூலகத்தில், குடும்பக் கட்டுப்பாடு, சிறுசேமிப்பு, அறிவியல், கல்வி போன்ற 34 தலைப்புகளில் 343-க்கும் மேற்பட்ட தமிழ் மற்றும் ஆங்கிலப் படச்சுருள்கள் உள்ளன.



1998 மே 21]

பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் மத்திய, மாநில அரசு நிறுவன ஊழியர்கள் கண்டு பயன்பெறும் வகையில் இப்படச்சுருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், அரசுத் துறை நிறுவனங்கள் இரவல் அடிப்படையில் இப்படச் சுருள்களைப் பெற்று, திரும்பத் தருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்துகொள்ளும் விழா நிகழ்ச்சிகள், அரசின் முக்கிய உயர்மட்ட கூட்டங்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கூட்ட நிகழ்ச்சிகளையும் ஒலி நாடாக்களின் மூலம் பதிவு செய்யும் பணியும் இங்குள்ள திரைப்படக் கருவி இயக்குபவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

## அத்தியாயம் 11

**விளம்பரம்:**

மாநில அரசின் அனைத்துத் துறைகள், அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு கழகங்கள் மற்றும் அனைத்து வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் விளம்பரங்களை வெளியிடும் மைய நிறுவனமாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயங்கி வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு, தேவையின் அடிப்படையில் மட்டும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரத்தின் தன்மை, முக்கியத்துவம், சேர வேண்டிய மக்கள் பகுதி ஆகியவற்றின் அடிப்படையில் விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

விளம்பரச் செலவினங்களில் முடிந்த அளவு சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் வகையில், அதே சமயம், அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை வெளியிடுவதில், அனைத்துத் துறைகளும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி அரசு ஆணை எண் 290, நாள்: 12-12-1997-ல் வெளியிடப்பட்டுள்ளது.

[1998 மே 21

## அத்தியாயம் - 12

**வாகனங்கள்:**

அரசின் சாதனைகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூகநலத் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், வீடியோ படங்களை மாவட்டங்களில் காண்பிப்பதற்காக ஒவ்வொரு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கும் ஒரு வீடியோ வாகனமும், பத்திரிகையாளர் பயணம், செய்தி வெளியீடு, பொருட்காட்சி, விழாக்கள் போன்ற பணிகளைக் கவனிப்பதற்காக மற்றொரு 'டெம்ப்போ ட்ராக்ஸ்' வாகனமும் வழங்கப்பட்டுள்ளன.

1997-98-ல் சென்னை, திருவள்ளூர், கரூர், தேனி, பெரம்பலூர், நாமக்கல், திருவாரூர் ஆகிய 7 மாவட்டங்களுக்கு 7 வீடியோ வாகனங்களும், மற்றும் தலைமையிட அலுவலகப் பயனுக்காக 3 புதிய அம்பாசிடர் கார்களும், ரூ.37 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன. மேலும், திருவள்ளூர், திருவாரூர், நாமக்கல், தேனி ஆகிய 4 புதிய மாவட்டங்களுக்கென 4 டெம்ப்போ ட்ராக்ஸ் வாகனங்கள் ரூ.13 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் - 13

**தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம்:**

*எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்:*

சென்னை தரமணியில், 76 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 23.82 கோடி திட்ட முதலீட்டில், தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திரைப்பட நகரில் உட்புற மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்பு இடங்கள் 45 உள்ளன. திரைப்படத் தயாரிப்புக்கான தொழில்நுட்ப வசதிகள் யாவும் ஒரே இடத்தில் எல்லாவிதமான வசதிகளுடன் அமைந்துள்ளன. இந்தத் திரைப்பட நகரத்தில் படப்பிடிப்பு முடிந்த பிறகு, படத் தயாரிப்புக்குத் தேவையான டப்பிங் தியேட்டர் மற்றும் வீடியோ ஸ்டுடியோ ஆகியவை உலகத்தரத்திற்கு ஏற்ற வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. திரைப்படம் மற்றும் வீடியோ தயாரிப்பாளர்கள் இங்கு மிகவும் பாதுகாப்பாகவும் எந்தவித இடையூறுகள் இல்லாமலும் வெளியிடங்களில் இருக்கும்



1998 மே 21]

படப்பிடிப்பு நிலையங்களைவிட மிகக் குறைந்த செலவில் பல்வேறு உயர் தொழில்நுட்பங்களைக் கொண்ட சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வித ஏற்பாடுகளின் சூழலில் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 90 திரைப்படப் படப்பிடிப்புகள் நடைபெறுகின்றன.

பொதுமக்களும் திரைப்பட நகரைப் பார்க்க, நபருக்கு ரூ.15 என்ற கட்டண வீதத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். பள்ளி மாணவர்களுக்கும் மற்றும் 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் அனுமதிக் கட்டணத்தில் 50 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் சராசரியாக 30 ஆயிரம் பெரியவர்களும் 6 ஆயிரம் குழந்தைகளும் கண்டு களிக்கிறார்கள். இத்திரைப்பட நகரில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.15.00 இலட்சம் வருவாய் கிடைக்கப் பெறுகிறது.

ஜப்பான் தோட்டம், இத்தாலியன் தோட்டம் ஆகியவற்றை மேலும் அழகூட்டும் வண்ணம் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், தங்கும் குடில்களை அழகுப்படுத்துவதற்காக ரூ.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. திரைப்பட நகரைக் காண வருவோருக்கு, 3 அழகிய நிழற்குடைகள், கலை நயத்துடன் அமைக்கப்பட்ட 3 குடிநீர்த் தொட்டிகள் அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் ரூ.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகர், திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு மேலும் பயன்படும் வகையில், கூடுதல் வருமானத்துடன் சிறப்பான முறையில் நடத்தப்படுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, அரசிற்குத் தெரிவிக்க உயர் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 14

**சினிமா, வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்புக் கூட்டமைப்புகள்:**

தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழில் ஒன்றாகும். திரைப்படத் தொழில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் அதிக அளவில் வருவாய் ஈட்டித் தருகின்ற ஒரு நிதி ஆதாரமாக இருந்து வருகிறது. திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு அரசு பல சலுகைகளை திரைப்படத் துறைக்கு அளித்து வருகிறது.

[1998 மே 21

தமிழ்நாட்டில் மொத்தம் 2,502 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவைகளாவன:

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 1514 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 211 |
| 3. | திறந்தவெளித் திரையரங்குகள் | 14 |
| 4. | நடமாடும் திரையரங்குகள் | 763 |
| | மொத்தம் | **2,502** |

திரையரங்குகளுக்குச் செல்கின்ற பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், கட்டட நிலை நலத்தன்மை, முறையான பராமரிப்பு இவைகளைத் தருகின்ற வகையில் 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழிமுறைகள் வகுக்கப்பட்டு உள்ளன.

திறந்தவெளித் திரையரங்குகளுக்குத் தனியாக விதிகளை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது. திறந்தவெளித் திரையரங்குகளுக்கு என இயற்றப்படும் சட்டங்கள்/விதிகள், தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) சட்டம்/விதிகளில் சேர்க்கப்படும்.

1994 ஆம் ஆண்டு திரையரங்குகளில் நுழைவுக் கட்டணம் நிர்ணயிப்பது குறித்து பிறப்பித்த ஆணையினை மறு ஆய்வு செய்து, திரையரங்கு உரிமையாளர்கள் அதிகமாக நுழைவுக் கட்டணம் வசூலிப்பதைக் கருத்தில் கொண்டு, திரையரங்குகளில் நுழைவுக் கட்டணம் வசூலிப்பதில் கடைசி வகுப்பு தவிர உச்சவரம்பு நிர்ணயித்து 6-11-1996 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்கேற்றவாறு விதிகளில் தக்க திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

மேற்சொன்ன ஆணைக்கெதிராக, சில திரையரங்கு உரிமைதாரர்கள் தனியாகவும் மற்றும் சில உரிமையாளர்கள் கூட்டாகவும் சென்னை



1998 மே 21]

உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை கொடுத்தனர். சென்னை உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பென்ஞ்ச், திரையரங்குகளில் நுழைவுக் கட்டணம் நிர்ணயிப்பதற்கும் அது தொடர்பாகச் சட்டங்கள் இயற்றுவதற்கும் அரசுக்கு அதிகாரம் உள்ளது என்றும், எனினும் மேல்முறையீடு கொடுத்தத் திரையரங்கு உரிமைதாரர்கள் நுழைவுக் கட்டணங்களை நிர்ணயித்துக்கொள்ள அனுமதி அளித்தும் தீர்ப்பு வழங்கியுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பென்ஞ்சின் தீர்ப்பின் நகல் கிடைக்கப் பெற்றவுடன், மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரையரங்கு உரிமைதாரர்கள், திரையரங்குகளில் நிறுத்தப்படும் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், கார்கள் முதலான வாகனங்களுக்கு அதிக அளவில் கட்டணங்கள் வசூலிப்பதாக, பொதுமக்களிடமிருந்து முறையீடுகள் வந்ததைத் தொடர்ந்து, திரையரங்கு வளாகங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கான கட்டணங்களை முறைப்படுத்த அரசு முடிவு செய்து, அதற்கான சட்டத்திருத்தம் 23-3-1998 அன்று, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

திரைப்படத் துறையைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் கோரிக்கைகளை அரசு பரிவுடன் பரிசீலித்து ஆணை பிறப்பித்தாலும், திரையரங்குகள் விதிகளில் கூறியுள்ளபடி சரியாக பராமரிக்கப்படுவதில்லை. நிர்ணயிக்கப்பட்ட நுழைவுக் கட்டணங்களுக்குக் கூடுதலாகக் கள்ளச் சந்தையில் நுழைவுச் சீட்டுக்களை விற்பது, நிர்ணயம் செய்யப்பட்ட இருக்கையின் எண்ணிக்கைகளுக்கு அதிகமான நபர்களை அனுமதிப்பது போன்ற குறைபாடுகள் பற்றிய முறையீடுகள் அரசுக்கு வந்த வண்ணம் உள்ளன. இதுபோன்ற புகார் மனுக்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், திடீர் சோதனை மேற்கொண்டு விதிகளுக்குப் புறம்பாக செயல்படும் திரையரங்கு உரிமையாளர்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து உரிமம் வழங்கும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் கருத்தில் கொண்டு, குற்றத்தின் தன்மையை கடுமையாக்கித் தண்டனைகளை வழங்குவது குறித்து 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் தமிழ்நாடு சட்டம் எண் 30/97-ல் வெளியிடப்பட்டு 1-7-1997 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## வீடியோ தொடர்பான சட்டமும் விதிகளும்:

தமிழ்நாடு மாநிலத்தில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைப்படுத்துவதற்காகவும், இதற்கு இடைநிகழ்வாகவும், தொடர்புடையதாகவும் உள்ள காரணங்களுக்காகவும், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம், வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியாருக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் மாவட்டாட்சித் தலைவர்களும் சென்னை மாநகரில் காவல்துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டுப் பயனுக்காக, வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படம் போட்டுப் பார்ப்பதற்கு உரிமம் எதுவும் அவசியமில்லை. இம்மாநிலத்தில், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ், உரிமம் பெற்ற 1,213 வீடியோ நூலகங்களும், 3 வீடியோ திரையரங்குகளும் உள்ளன.

வீடியோ திருட்டைத் தடை செய்வதற்காக அரசு, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலமும், கேபிள் தொலைக்காட்சி இணைப்பு மூலமும், தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டத்தின்கீழ், வீடியோ நூலகங்கள், வீடியோ திரையரங்குகள் ஆகியவை உரிமம் வழங்கும் அதிகாரியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். உரிமத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளை மீறுபவர்களுக்குத் தண்டனைகள் விதிப்பதற்காக, வீடியோ தொடர்பான சட்டம் மற்றும் விதிகளில் போதிய விதிமுறைகள் இயற்றப்பட்டுள்ளன.

வீடியோ திருட்டைக் கட்டுப்படுத்துவதற்காக மாநில காவல் துறை இயக்குநர் (குற்றப்பிரிவு) கட்டுப்பாட்டின்கீழ், காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் அரசு தனிப்பிரிவு ஒன்றினை 1995 ஆம் ஆண்டு ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு, வீடியோ கேசட்டுகள் மூலமாகத்



திரைப்படம் பதிப்பு உரிமைகளை மீறுதல், ஏனைய பதிப்புரிமை மீறுதல்கள் தொடர்பான புகார்களைப் புலனாய்வு செய்யும்.

முன் அனுமதி பெறாமல் வீடியோ காம்பாக்ட் டிஸ்க் மூலமாக கேபிள் தொலைக்காட்சியில் புதிய திரைப்படங்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு வெளியிடுவோர்கள்மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சென்னையைப் பொறுத்தவரை, பெருநகர் காவல் ஆணையர் ஆகியோர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான குழுவின் மூலமாக நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பதிப்புரிமைச் சட்ட மீறல்களைத் தடுப்பதற்கு திடீர் சோதனை இடவும், பத்திரிகைகளில் இதற்காக உரிய விளம்பரங்கள் செய்யவும் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## கேபிள் தொலைக்காட்சி இணைப்பு முறை:

கேபிள் தொலைக்காட்சி மூலமாக, திரைப்படங்களைத் திரையிடுவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தை 1991-ல் அரசு இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம் 11-11-1991 முதல் நடைமுறைக்கு வந்தது.

கேபிள் டிவி. அமைப்பு முறையை நெறிப்படுத்த, மத்திய அரசு கேபிள் டிவி. அமைப்பு ஒழுங்குப்படுத்துதல் சட்டம் மற்றும் விதிகள் 1995-ல் இயற்றியுள்ளது. தலைமை அஞ்சல் அதிகாரி பதிவு செய்யும் அலுவலர் ஆவார். இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொருந்தும். இச்சட்டத்தின்படி, 18 மற்றும் 19 ஆம் பிரிவுகளுக்கு, சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும், சென்னைக்கு, மாநகரக் காவல் துறை ஆணையரையும் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளாக மாநில அரசு நியமித்துள்ளது. மத்திய சட்டத்தின் விதிகளுக்கு முரண்படாத வகையில், மாநிலத்தில் கேபிள் தொலைக்காட்சியை ஒழுங்குபடுத்துவதற்கு உரிய சட்டமுன்வடிவு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## இணைப்பு - II

*(242 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 50

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 1998 - 99

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சுற்றுலாவின் பங்கு மிக அதிக அளவில் இருப்பதை உணர்ந்த உலக நாடுகள் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. உலகிலேயே அன்னிய செலாவணியை அதிக அளவில் ஈட்டித்தரும் தொழில்களில் ஒன்று சுற்றுலாவாகும். உலக நாடுகளில் ஈட்டப்படும் அந்நியச் செலாவணியில் 8 சதவீதம் சுற்றுலாவின் மூலம் பெறப்படுகிறது. வள்ளுவர் பெருந்தகையின் வாய்மொழிக்கொப்ப எல்லா வளங்களும் தன்னகத்தே கொண்டு திகழும் நாடு தமிழ்நாடு. தமிழகக் கோயில்களின் தொன்மைச் சிறப்பையும், கலைச் செல்வங்களையும் கண்டு இன்புறவும், மலை மற்றும் கடல்வளம் காணவும், வனவிலங்குச் சரணாலயங்களைப் பார்த்து மகிழவும், சோலைகள் நிறைந்த மலையில் அருவிகளில் நீராடவும்; புனல் விளையாட்டுக்களில் ஈடுபடவும் ஆண்டுதோறும் வெளிநாட்டிலிருந்தும், நம் நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

சுற்றுலா ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டு அதற்குத் தேவையான சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் வளர்ச்சியின் மூலம் நாடு பொருளாதார முன்னேற்றத்தைக் காண முடிகிறது, அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்ட முடிகிறது மற்றும் வேலை வாய்ப்புடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைய முடிகிறது. எண்ணற்ற மக்கள் பயன்பெறும் சுற்றுலா வளர்ச்சி பற்றிய கொள்கைகள், பயன்பாடுகளைக் கருத்தில் கொண்டு வகுக்கப் படுகின்றன.

1998 மார்ச் திங்கள் 18, 19 ஆம் நாட்களில் தென்னிந்தியாவை முழு வளர்ச்சி அடைந்த முக்கிய சுற்றுலாப் பகுதியாக மாற்றுவது குறித்த கருத்தரங்கு, சென்னையில் நடைபெற்றது. மைய அரசு, மாநில அரசுப் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு சுற்றுலா சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ளோர் கலந்து கொண்டனர். சுற்றுலா வளர்ச்சி சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளையும் கொண்ட உயர்மட்ட செயலாக்கக் குழு ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தென் மாநிலங்களுக்கிடையே வரிவிதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் களைந்து சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளது. நான்கு மாநிலங்களும் இணைந்த சுற்றுலா வளர்ச்சிக்கான கூட்டு நடவடிக்கையில் ஈடுபட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவை, இந்தியாவின் முக்கியமான சுற்றுலாப் பகுதியாக உலகளவில் விளம்பரப்படுத்திட, மைய அரசு கலந்து கொள்ளும் சுற்றுலா விளம்பரப் பணிகளில் கூட்டாகப் பங்கேற்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழிகளில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

**இந்தியாவில் சுற்றுலா :**

இந்தியாவிற்கு 1951-ல் சர்வதேச சுற்றுலாவினர் வருகை 16,829 நபர்களாக இருந்தது. இது 1995-ல் 21.2 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது ஆண்டிற்கு 17.6 சதவிகிதம் என்ற கூட்டு விகிதத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தியச் சுற்றுலா என்பது முக்கியமாக உள்நாட்டு சுற்றுலா வகையைச் சார்ந்ததாகும். 1995-ல் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 13.5 கோடியாகும்.

பொன், அணிஆபரணம் மற்றும் ஆயத்த ஆடை தயாரித்தல் ஆகிய தொழில்களுக்கு அடுத்தாற்போல் சுற்றுலா இந்தியாவின் மூன்றாவது பெரிய அந்நியச் செலாவணி ஈட்டும் தொழிலாகக் கருதப்படுகிறது. சுற்றுலா மூலமாக அந்நியச் செலாவணியாக இந்தியாவிற்கு 1997-98-ல் கிடைத்தத் தொகை ரூ. 10,061 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் சுற்றுலா :**

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பாதுகாப்புடன் குறைந்தச் செலவில் நிறைந்த வசதிகள் செய்து, வருகை தருவோர் உவகையுடன் திரும்பிட முனைப்புடன்





நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் விபரம் பின்வருமாறு:

| சுற்றுலாப் பயணிகளின் வருகை | ஆண்டுகள் | | | 1997-ல் விகிதாச்சார உயர்வு |
|---|---|---|---|---|
| | 1995 | 1996 | 1997 | |
| | (இலட்சங்களில்) | | | |
| உள்நாட்டினர் | 172.00 | 182.00 | 189.00 | 4 % |
| வெளிநாட்டினர் | 5.86 | 6.14 | 6.37 | 4 % |

சுற்றுலாத் துறை நேரடியாக வசதிகளை வழங்கும் பொறுப்பு மட்டுமின்றி, தற்பொழுது சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்க முன்வரும் தனியார் துறையை ஊக்குவிக்கும் பணியில் அரசு விதிகளின்படி (Statutory Clearance) தேவையான அனுமதியை பிற அரசுத் துறைகளிடமிருந்து பெற்றிட உறுதுணை புரிகிறது.

**தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை:**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு கடைப்பிடிக்கும் சுற்றுலா அணுகுமுறையைக் கருத்தில் கொண்டு மாநில அரசு தனது கொள்கையை வகுத்துள்ளது.

1. சுற்றுலா மையங்களின் தன்மையைப் பொறுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு உரிய வசதிகள் செய்தல்.
2. சுற்றுலாத் தலத்தின் சிறப்பைப் பொறுத்து அந்தப் பகுதியில் ஒருங்கிணைந்தத் தீவிர சுற்றுலா வளர்ச்சித் திட்டம் தீட்டுதல்.
3. சுற்றுலாத் திட்டங்களில் தனியார் முதலீட்டை ஊக்குவித்து, பல்வேறு அனுமதிகளை ஒரு குடையின்கீழ் வழங்க ஏற்பாடு செய்தல்.
4. தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புகளைப் பற்றி வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் தீவிர விளம்பரப்படுத்துதல்.

[1998 மே 21

5. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சுற்றுலா வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்துதல்.

6. விழாக்கள் நடத்துவதன் மூலம் பண்பாட்டுச் சுற்றுலாவை ஊக்குவித்தல்.

உள்நாட்டுச் சுற்றுலாவினை மேம்படுத்தவும், பொதுமக்களிடையே சுற்றுலா விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் பயணிகளுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களைத் தரவும், ஹைதராபாத், பெங்களூர் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய நகரங்களில் புதிய சுற்றுலாத் தகவல் மையங்கள் கடந்த நிதி ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. சுற்றுலா வளர்ச்சிக்காகச் சுற்றுலாத் துறையின்கீழ் தமிழ்நாட்டில் 14 இடங்களிலும், புது தில்லி, கல்கத்தா, மும்பை மற்றும் கோவா ஆகிய இடங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் ஏற்கெனவே சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன.

**சுற்றுலா வளர்ச்சிக்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு:**

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் சுற்றுலா வளர்ச்சிக்காக மைய அரசின் சிறப்புத் திட்டமான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி வழங்கப்படுகிறது.

1998-99 ஆம் ஆண்டு ரூ. 85.00 இலட்சத்திற்குப் பின்வரும் திட்டங்கள் அனுமதிக்கப்படும் :

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | தொகை ரூபாய் இலட்சத்தில். |
|---|---|---|
| 1. | உதகமண்டலம்: லோயர் பஜார் சாலை மேம்பாடு மற்றும் அபிவிருத்தி செய்தல் (உதகை காபி ஹவுஸிலிருந்து மத்திய பேருந்து நிலையம் வரை 1 கி.மீ. தூரம்) | 50.00 |
| 2. | உதகமண்டலம் படகு இல்லப் பகுதியில் பயணிகள் நடைபாதையை ஏற்படுத்துதல் | 9.00 |
| 3. | உதகமண்டலம் இளைஞர் விடுதியில் கூடுதல் படுக்கைகள் கட்டி விரிவுபடுத்துதல் | 10.00 |
| 4. | உதகமண்டலம் படகு இல்ல வளாகத்தில் உயர் தரத்தில் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல் | 7.00 |
| 5. | கோத்தகிரி நேரு பூங்காவை மேம்படுத்துதல் | 7.00 |
| 6. | சுற்றுலாத் தகவல் பலகைகளை நிறுவுதல் | 2.00 |
| | மொத்தம் | **85.00** |

(ரூபாய் எண்பத்தைந்து இலட்சம் மட்டும்)



1998 மே 21]

**ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி வளர்ச்சித் திட்டம்:**

ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், புதிய திட்டமாக அங்கீகரித்து மத்திய திட்டக் குழு சுற்றுலாத் துறைக்கு 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 100.00 இலட்சம் வழங்க கொள்கை அளவில் ஒத்துக் கொண்டுள்ளது. அதன்படி, கீழ்க்கண்ட கடற்கரைப் பகுதியிலுள்ள சுற்றுலாத் தலங்களில் சாலைகள் மேம்பாடு மற்றும் பாதாளச் சாக்கடை போன்ற வசதிகளைச் செய்ய கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மாமல்லபுரம் | 25.00 |
| 2. | இராமேஸ்வரம் | 25.00 |
| 3. | திருச்செந்தூர் | 25.00 |
| 4. | கன்னியாகுமரி | 25.00 |
| | மொத்தம் | **100.00** |

இதேபோல் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் சுற்றுலா வசதிகளைப் பெருக்க நிதி ஆதாரம் கோரப்படுகிறது. மாவட்டப் பரவலாக்கத் திட்டத்திலும் அடிப்படை வசதிகள் செய்ய நிதி ஒதுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**விடுதிகள் மற்றும் உணவகத் தொழில்நுட்ப நிறுவனம் (உணவுக் கலைப் பயிற்சி நிறுவனம்):**

திருச்சிராப்பள்ளி துவாக்குடியில் உள்ள உணவுக் கலைப் பயிற்சி நிறுவனம், சுற்றுலாத் துறையின் மானியத்துடன் இயங்கி வருகிறது.

[1998 மே 21

1994-95 ஆம் ஆண்டு முதல் "மூன்றாண்டு பட்டயப் படிப்பு" வழங்கும் சுயநிதி நிறுவனமாக இயங்குவதால், இதன் தரத்தை உயர்த்தி "விடுதிகள் மற்றும் உணவகத் தொழில்நுட்ப நிறுவனமாக" மேம்படுத்தப்பட்டு இவ்வாண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

மேலும், ஓராண்டு முழு நேரப் பயிற்சிச் சான்றிதழ் வகுப்புகள் கீழ்க்கண்ட துறைகளில் நடத்தப்படுகின்றன :—

1. ஓட்டல் வரவேற்பு, கணக்கு வைப்பு முறை மற்றும் இல்லப் பராமரிப்பு
2. சிற்றுண்டிச் சாலைகளில் உணவு பரிமாறும் முறை
3. ரொட்டி மற்றும் இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல்
4. உணவு உற்பத்தி செய்யும் முறைகள்
5. இல்லப் பராமரிப்பு

ஒவ்வொரு ஆண்டும், இந்த நிறுவனத்திற்கு, அரசு மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாண்டும் ரூ. 11.00 இலட்சம் (பதினோரு இலட்சம்) மானியமாக வழங்கப்படும்.

**சுற்றுலாத் தலங்கள், சாலைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளைப் பெருக்குதல்:**

மத்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க தமிழகத்திலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் அணுகு சாலைகள், தேசிய நெடுஞ்சாலை தரத்திற்கு மேம்பாடு, குடிநீர், பாதாளச் சாக்கடை, மின்தொடர் விநியோகம் மற்றும் வெள்ள ஒளி விளக்குகள் போன்ற வசதிகளை ஏற்படுத்த, ஒருங்கிணைந்தத் திட்டத்தில் ரூ.9,895.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி உதவி கோரி மத்திய சுற்றுலாத் துறைக்கு விரைவில் அனுப்பப்படும்.

**மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் :**

கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுலா விடுதிகள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன:



1998 மே 21]

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சாலையோர விடுதி, ஸ்ரீபெரும்புதூர் (2 அறைகள் மற்றும் உணவகம்) | 22.16 |
| 2. | சுற்றுலா விடுதி, விருதுநகர் (10 அறைகள் மற்றும் உணவகம்) | 28.78 |
| 3. | சுற்றுலா விடுதி, நாமக்கல் (16 அறைகள் மற்றும் உணவகம்) | 23.25 |
| 4. | சுற்றுலா விடுதி, புதுக்கோட்டை (8 அறைகள் மற்றும் உணவகம்) | 18.78 |
| 5. | சுற்றுலா விடுதி, குற்றாலம் (14 அறைகள் மற்றும் உணவகம்) | 39.30 |
| 6. | "யாத்ரிநிவாஸ்", இராமேஸ்வரம் (15 அறைகள்) | 44.78 |
| 7. | கொடைக்கானலில் குடில்கள் | 30.40 |
| 8. | சுற்றுலா வரவேற்பு மையம், தஞ்சாவூர் (5 அறைகள் - சுற்றுலா அலுவலகம்) | 26.30 |
| 9. | ஆறு சுற்றுலாக் குடில்கள், ஏற்காடு | 26.28 |
| 10. | கடற்கரைக் குடில்கள், திருச்செந்தூர் (8 அறைகள்) | 26.28 |
| 11. | சுற்றுலா வளாகம், ஓசூர் (6 குடில்கள்) | 26.73 |
| 12. | பொதுக் கழிப்பிடங்கள் வசதி, மேல்மருவத்தூர் | 12.75 |
| 13. | கன்னியாகுமரியில் கடலில் உள்ள விவேகானந்தா நினைவு மண்டபத்திற்கு ஒளி வெள்ளமூட்டி, கடலின் உள்ளே கேபிள் ஒயர் அமைக்கும் பணி | 11.19 |

[1998 மே 21

கீழ்க்கண்ட இடங்களில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ளன:—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | "யாத்ரிநிவாஸ்", ஸ்ரீரங்கம் (12 அறைகள் மற்றும் உணவகம்) | 39.92 |
| 2. | சுற்றுலா வரவேற்பு மையம், தரங்கம்பாடி (4 அறைகள்) | 29.49 |
| 3. | சுற்றுலா விடுதி, விழுப்புரம் (8 அறைகள் மற்றும் உணவகம்) | 18.78 |
| 4. | "யாத்ரிநிவாஸ்", திருவண்ணாமலை (8 அறைகள் மற்றும் உணவகம்) | 39.10 |
| 5. | சுற்றுலா வளாகம், காஞ்சிபுரம் (6 அறைகள்) | 24.60 |
| 6. | சுற்றுலா விடுதி, மேல்மருவத்தூர் | 18.70 |
| 7. | சாலையோர வசதி விடுதி, வட்டக்கோட்டை, கன்னியாகுமரி | 20.00 |
| 8. | சாலையோர வசதி விடுதி, திருத்தணி | 20.00 |
| 9. | காட்சி கோபுரம், கன்னியாகுமரி | 30.00 |
| 10. | வேலூர் கோட்டையில் சுற்றுலா வசதிகள் செய்தல் | 26.60 |
| 11. | பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் சுற்றுலா வசதிகள், பேருந்து நிலையம், சிலம்புவடிவ பயணிகள் காத்திருக்கும் கூடம், உணவகம் உட்பட. | 30.00 |



1998 மே 21]

**1997-98 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:**

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் வெள்ள ஒளியூட்டுதல் | 10.00 |
| 2. | சென்னையில் சுற்றுலா வளாகம் கட்டுதல் | 45.00 |
| 3. | சுற்றுலா பெருந்திட்டங்கள் தயாரித்தல் | 20.00 |
| 4. | கணிப்பொறி மூலம் சுற்றுலாத் தகவல் வசதி | 15.00 |
| 5. | விழாக்கள் நடத்துதல் | 10.00 |
| | மொத்தம் | **100.00** |

**1997-98 ஆம் ஆண்டில் முடிவுற்ற திட்டங்கள் :**

| | | தொடங்கிய நாள் |
|---|---|---|
| 1. | சுற்றுலா வளாகம், சேலம் | 30-09-97 |
| 2. | சுற்றுலா வளாகம், திருநெல்வேலி | 08-03-98 |
| 3. | சுற்றுலா வளாகம் விரிவுபடுத்துதல், கிருஷ்ணகிரி | 28-03-98 |
| 4. | சுற்றுலா விடுதி, விருதுநகர் | " |
| 5. | சுற்றுலா விடுதி, குற்றாலம் | " |

முதல் மூன்று விடுதிகளும் தற்போது பயனுக்கு விடப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதர விடுதிகளை விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1998-99 ஆம் ஆண்டில் கூடுதல் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதில் அடிப்படை வசதிகள், தொல்பொருள் சிறப்புமிக்க இடங்களைப் புதுப்பொலிவூட்டி, ஒளி வெள்ள விளக்கு அமைத்தல், வரலாற்றுப் பின்னணியுடன் ஒலி-ஒளிக்காட்சி ஏற்பாடு செய்தல், பண்பாட்டைப் பிரதிபலிக்கும் விழாக்களைச் சிறப்புற நடத்துதல் முதலியவற்றிற்கு முன்னுரிமை வழங்க வலியுறுத்தப்படும்.

[1998 மே 21

**பூம்புகார் சுற்றுலா வளாகம்**

பண்டைத் தமிழகத்தின் நாகரிகம், கடல் வாணிகம், வரலாறு ஆகிய தொன்மைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டு பூம்புகார். தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் நகர் பூம்புகார். இங்குள்ள எழுநிலை மாடத்துடன் கூடிய கலைக்கூடம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம் மற்றும் நெடுங்கல் மன்றம் முதலியவை மிக நுணுக்கமான சிற்ப வேலைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டு. இம் மாநிலத்தின் அழகிய கடற்கரைச் சுற்றுலாத் தலங்களில் பூம்புகாரும் ஒன்றாகும்.

சிறப்புத் திட்டமாக, பூம்புகார் சுற்றுலா வளர்ச்சிக்கென்று ரூ. 62.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் முடிவுற்றுள்ளன:

1. கலைக்கூடம், கொற்றப்பந்தல் மற்றும் சுற்றுலா விடுதிகளைச் சீரமைப்பு செய்து வண்ணம் பூசுதல்
2. தோட்டத்தை மேம்படுத்துதல்
3. புதிய மின் டிரான்ஸ்பார்மர் அமைத்தல்
4. நினைவுச் சின்னங்களை ஒளியூட்டுதல்
5. சங்குக் குடிலைச் சீரமைப்பு செய்து சீர்வளி செய்தல்
6. வளைவுசாலை, கடற்கரை சாலை பழுதுபார்த்தல், சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் சிமெண்ட் சாலை கட்டுதல்
7. குடிநீர் வசதி செய்தல்
8. நெடுங்கல் மன்றத்திற்குச் சுற்றுச்சுவர் எழுப்புதல் மற்றும் கழிப்பறை கட்டுதல்
9. மின் ஆக்கி வாங்குதல் மற்றும் மின் ஆக்கி அறை கட்டுதல்
10. சுற்றுலா அலுவலகம் மற்றும் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்
11. தோட்டக்காரர்களுக்கும், காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டுதல்
12. சுவரொட்டிகள் மற்றும் கையேடுகள் அச்சடித்தல்
13. இலஞ்சி மன்றத்தைச் சுற்றி தற்காலிக கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல்

இவை தவிர, நிரந்தரக் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்ட நீர்வள ஆதாரத் துறைக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.



1998 மே 21]

**வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டை, பாஞ்சாலங்குறிச்சி**

வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட முதல் சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக 1974-ல் கட்டப்பட்ட நினைவுச் சின்னம், பாஞ்சாலக்குறிச்சியில் சுற்றுலாத் துறையினால் பராமரிக்கப்படுகிறது. இங்கு ஆங்கிலேய ஆட்சியில் கோட்டை இடிக்கப்பட்ட போதிலும், சில பகுதிகள் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இங்கு பழமை வாய்ந்த தேவி ஜக்கம்மாள் ஆலயம் உள்ளது. இந்தக் கோட்டையில் கீழ்க்கண்ட பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு ரூ.24.00 இலட்சம் சிறப்புத் திட்டமாக நிதி ஒதுக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் முடிவுற்றுள்ளன:—

1. குடிநீர் வசதி
2. நிலச்சீரமைப்பு மற்றும் குழந்தைகள் விளையாட்டுச் சாதனங்களுடன் பூங்கா அமைத்தல்
3. கழிப்பறை கட்டுதல்
4. நுழைவுச் சீட்டு கொடுக்கும் அறை கட்டுதல்
5. கம்பி நுழைவு வாயில் அமைத்தல்
6. ஆறு அலங்கார வளைவுகளைப் பழுதுபார்த்து வண்ணம் பூசுதல்
7. தங்குமிடத்தைப் பராமரித்துப் புதுப்பித்தல்
8. தோட்டப் பராமரிப்பு
9. சுவரொட்டிகள் அச்சடித்தல்

இது தவிர, குறுக்குச் சாலையிலிருந்து பாஞ்சாலங்குறிச்சி சாலை, நெடுஞ்சாலைத் துறையினரால் செப்பனிடப்பட்டுள்ளது.

[1998 மே 21

**மாநில அரசு நிதியில் கீழ்க்கண்ட இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன**

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | ஒகேனக்கல்லில் தொங்கு பாலம் அமைத்தல் | 15.70 |
| 2. | வீடூர் அணையில் தங்குமிடம், கழிப்பறை மற்றும் அணைப்பகுதியில் மின் விளக்கு வசதிகள் செய்தல் | 7.00 |
| 3. | குற்றாலத்தில் படகு இல்லம் கட்டுதல் | 10.00 |
| 4. | முக்கொம்பில் சுற்றுலா வசதிகள் செய்தல் | 10.00 |

**1998-99ஆம் ஆண்டு பகுதி 2 திட்டங்கள்:**

மாநில அரசு கீழ்க்கண்ட திட்டங்களை இந்த ஆண்டில் அனுமதித்துள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | பூம்புகார் சுற்றுலா வளாகத்தைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டுதல் | 5.00 |
| 2. | பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டைக்கு 2 கே.வி. மின் ஆக்கி வாங்குதல் | 1.50 |
| 3. | மாமல்லபுரம், சிதம்பரம், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி சுற்றுலா அலுவலகங்களைப் பழுதுபார்த்து மேம்பாடு செய்தல் | 2.00 |
| 4. | தஞ்சாவூர் ஒலி, ஒளிக்காட்சிக்காக ஒரு மின்னணு தொழில்நுட்ப இயக்கி பதவியும், ஒரு பதிவுறு எழுத்தர் பதவியும் தோற்றுவித்தல் | 2.08 |
| 5. | நெடுஞ்சாலையின் ஓரத்தில் சிறப்பு நிலை கழிப்பறைகள் கட்டுதல் | 6.00 |
| 6. | கன்னியாகுமரியின் சுற்றுலாக் கண்காட்சிக்கூடம் மற்றும் மாமல்லபுரத்தில் பாரம்பரிய பூங்கா அமைத்தல் | 10.00 |
| 7. | மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்துதல் | 20.00 |



1998 மே 21]

| | | |
|---|---|---|
| 8. | இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரியில் தூய்மைப்பகுதி என்று அறிவித்து வசதிகள் செய்து பாதுகாத்தல். | 2.00 |

**சுற்றுலாப் பெருந்திட்டம் தயாரித்தல்**

தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான பத்தொன்பது சுற்றுலா தலங்களுக்கு சுற்றுலா வசதிகளை செய்வதற்காக தேவையான திட்ட வடிவம், நிதி ஆதாரம் முதலியவற்றை விளக்கி அறிக்கை தயாரிப்பதற்காக, தனியார் துறையில் அனுபவமுள்ள நிறுவனங்களிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென தகுதி வாய்ந்த நிறுவனத்தை தொழில் நுட்ப ரீதியாக ஆராய்ந்து தேர்ந்தெடுக்க முன்னாள் மத்திய அரசு சுற்றுலாத்துறை செயலர் தலைமையில் உயர் மட்டக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. விரைவில் முடிவான ஆணை வெளியிடப்படும்.

**சுற்றுலா தலைமை அலுவலக வளாகம்**

சுற்றுலா வளாகம் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை திருவல்லிக்கேணியில் ரூ.328/- இலட்சம் மதிப்புள்ள சுமார் 20,162 சதுர அடி நிலத்தை அரசினர் தோட்டத்தில் கலைவாணர் அரங்கிற்கு அருகில் இலவசமாக சுற்றுலாத்துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். இந்த இடத்தில் அனைத்து மாநில சுற்றுலா தகவல் மையங்களையும் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விளம்பரம் மற்றும் விழாக்கள்**

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய விவரங்களை வெளிநாட்டினர் அறியச் செய்யவும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அறியவும் சிறப்பு விளம்பர நிதி ஒதுக்கீடாக அரசு ரூ. 1.00 கோடி அளித்துள்ளது. இதனைப் பயன்படுத்தி தொலைக்காட்சி வாயிலாகவும் வெளிநாட்டுச் செய்தித் தாள்கள் வாயிலாகவும் விளம்பரம் ரூ.25.00 இலட்சம் செலவில் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர, விளம்பர ஒலிநாடாக்கள் தயாரிக்க ரூ.5.00 இலட்சமும், வழிகாட்டிகள் பயிற்சிக்காக ரூ.5.00 இலட்சமும் வெளிநாட்டில் விளம்பர முகாம்களுக்கு ரூ.6.00 இலட்சமும், வழிகாட்டி ஏடுகள், சுவரொட்டிகள், கையேடுகள் மற்றும் சுற்றுலா ஏடுகள் அச்சடிக்க ரூ.30.00 இலட்சமும் செலவிடப்படுகிறது.

[1998 மே 21

**சுற்றுப்புறச் சூழல் போற்றும் சுற்றுலா**

முட்டுக்காடு-பாண்டிச்சேரி கிழக்கு கடற்கரைப் பகுதி சிறப்பு சுற்றுலாப் பகுதியாக, மாநில அரசு அறிவித்துள்ளது. இப்பகுதியில் சுற்றுப்புறச் சூழலைப் போற்றும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் தனியார் முதலீட்டில் ஆரம்பித்திட சிலர் முன்வந்துள்ளனர். சில தனியார் நிறுவனங்கள் மூலம் பெரும் முதலீட்டில், கடற்கரை விடுதிகள் கால்ப் (Golf) விளையாட்டிடங்கள், சாகச விளையாட்டு மற்றும் பொழுது போக்கு வளாகங்கள் போன்ற சுற்றுலாத் திட்டங்கள் வரவுள்ளன. அரசின் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளுடன் சுற்றுலாத்துறை கலந்து பேசி, இத்திட்டங்களை விரைவில் நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தனியார் துறையின் மூலம் துவங்கப்படும் சுற்றுலாத் திட்டங்களுக்கு இந்த அரசு ஊக்கம் அளிக்கும்.

**கால்ப் விளையாட்டு**

உலகெங்கும் பல நாடுகளில் குறிப்பாக தென் கிழக்காசிய நாடுகளில் சிறப்புற்று விளங்கும் "கால்ப்" விளையாட்டில் பங்கேற்க ஜப்பான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா போன்ற பல நாடுகளிலிருந்து நிறைய சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இந்த வசதியை மேம்படுத்துவதற்கு சென்னை நந்தனத்திலுள்ள கால்ப் விளையாட்டு குழுமத்திற்கும், உதகமண்டலம் கால்ப் குழுவிற்கும் நிதி உதவியாக தலா ரூ.15.00 இலட்சம் மற்றும் ரூ.10.00 இலட்சம் மத்திய அரசிடம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது போன்று பிற இடங்களில் இந்த விளையாட்டு வசதியைப் பெருக்க முனைவோருக்கு வேண்டிய உதவிகளை இத்துறை செய்யும்.

**பயணிகளுக்கு வசதி**

கோயில்கள் நிறைந்த நகரமான காஞ்சிபுரத்தில் காஞ்சி சங்கரமட அறக்கட்டளை மூலம் பயணிகளுக்கு தங்கும் வசதி ஏற்படுத்த ரூ. 30.00 இலட்சம் மத்திய சுற்றுலாத் துறையால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போல், மேல்மருவத்தூரில் அருள்மிகு ஆதிபராசக்தி அறக்கட்டளை மூலம் பொதுக்கழிப்பிட வசதியும், ஓய்விட வசதியும் ஏற்படுத்த ரூ. 12.75 இலட்சம் மத்திய சுற்றுலாத் துறையால் ஒதுக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.



1998 மே 21]

# சுற்றுலா ஒரு தொழில்

சுற்றுலாவை ஒரு தொழிலாக அரசு அறிவித்து 20-01-1992-க்குப் பிறகு தொடங்கப்பட்ட பின்வரும் புதிய சுற்றுலாத் திட்டங்களை அரசு ஊக்குவித்து, மேம்படுத்தி வருகிறது.

1. சென்னை, கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சி எல்லை நீங்கலாக ஏனைய இடங்களில் கட்டப்பட்ட ஒன்று முதல் மூன்று நட்சத்திர தரமுள்ள ஓட்டல்கள்.
2. பொழுது போக்கு பூங்காக்கள்
3. ஏற்பளிக்கப்பட்ட சுற்றுலா சீர்வளி பேருந்துகள்
4. "கால்ப்" விளையாட்டிடங்கள்
5. இந்திய அரசு/தமிழ்நாடு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலைகள்.

**அரசால் அளிக்கப்படுகின்ற சலுகைகள்:**

**(அ) கடன்கள்**

அவ்வப்போது அரசு/இந்திய ரிசர்வ் வங்கி, நிர்ணயிக்கும் வட்டி விகிதங்களில் சுற்றுலாத் திட்டங்களுக்கு அரசு நிதியுதவி நிறுவனங்கள் மூலம் கடன்கள் அளிக்கப்படுகின்றன.

**(ஆ) மூலதன மானியங்கள்**

நிலத்தின் விலை நீங்கலாக, மொத்த முதலீட்டில் 10 சதவீதம் புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மூலதன முதலீட்டு மானியங்கள் அளிக்கப்படுகின்றது. இது, திட்டம் ஒன்றுக்கு உயரளவுத் தொகையான ரூ.10 இலட்சத்திற்கு உட்பட்டதாகும்.

**(இ) மின் ஆக்கி எந்திர மானியங்கள்**

மின் ஆக்கி எந்திரத்தின் விலையில் 15 சதவீதம் புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மின் ஆக்கி எந்திர மானியமாக அளிக்கப்படுகிறது.

இச்சலுகையின் கீழ் கிடைக்கக்கூடிய அதிக அளவு மானியத் தொகை ரூ.5.00 இலட்சமாகும்.

**(ஈ) ஆடம்பர வசதி வரித் தள்ளுபடி**

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்படாத பகுதிகளுக்கு 50 சதவீதம் ஆடம்பர வரி தள்ளுபடி வழங்கப்படுகிறது. இத்தகைய தங்கும் விடுதிகளில் ஒன்று இரண்டு அல்லது மூன்று நட்சத்திர அந்தஸ்து பெற்றவையாகவும், இவ்விடுதி கட்டுவதற்கான மொத்த செலவு ரூ. 100.00 இலட்சத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

**தமிழக சுற்றுலா விழாக்கள்**

தமிழகம் உயர்ந்த தொல் மரபையும், பல்வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும், பண்பாடுகளையும் கொண்டு திகழ்கிறது. வெளிநாட்டுச் சுற்றுலா முக்வர்கள், திட்டமிட்ட தொகுப்புச் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த முறையில் முன்னதாகவே ஏற்பாடு செய்ய இயலும் வகையில் தமிழ்நாட்டில் பண்பாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்த பின்வரும் விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன.

1. நாட்டிய விழா, மாமல்லபுரம்.
2. கோடை விழா, உதகமண்டலம்.
3. தேயிலை மற்றும் சுற்றுலா விழா, குன்னூர்/உதகமண்டலம்.
4. நாட்டியாஞ்சலி, சிதம்பரம்.
5. சித்திரைத் திருநாள், மதுரை.
6. முக்கியமான சுற்றுலா மையங்களில் பொங்கல் விழா.
7. மாங்கனி விழா, கிருஷ்ணகிரி.
8. சாரல் திருவிழா, குற்றாலம்.
9. குமரி முனை விழா, கன்னியாகுமரி.

மேற்கண்ட விழாக்கள் தவிர, பல்வேறு இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்காக, விழாக்கள் சுற்றுலாத் துறையால் நடத்தப்படுகின்றன. மேற்கண்ட விழாக்களில் முதல் ஐந்து விழாக்களை நடத்துவதற்கு மத்திய அரசு நிதியுதவி வழங்குகிறது.



D Y24.3:N98 N98.5572

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி தொடங்கப்பட்டது. மிகவும் சாதாரணமான முறையில் ஐந்து தங்கும் விடுதிகள் மற்றும் இரண்டு சொகுசுப் பேருந்துகளுடன் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பரிணாம வளர்ச்சி அடைந்து இக்கழகம் இன்று தமிழகம் முழுவதும் 36 தங்கும் விடுதிகளைக் கொண்டுள்ளது என்பது பெருமைப்படக் கூடிய ஒன்றாகும். இக்கழக விடுதிகளில் முதலில் 253 படுக்கை வசதிகள் இருந்தன. தற்பொழுது 2,404 படுக்கை வசதிகள் உள்ளன. இதே போல் சொகுசுப் பேருந்துகள் 24 பயன்பாட்டில் உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்காக ஏற்படுத்தியுள்ளது:

| | |
|---|---|
| தங்கும் விடுதிகள் | 36 |
| இளைஞர் விடுதிகள் (குறைந்த வருவாய் சுற்றுலா பயணிகளுக்காக) | 8 |
| படகு குழாம் | 8 |
| உணவு விடுதிகள் | 3 |
| சிற்றுண்டி விடுதிகள் | 2 |
| தொலைநோக்கி கோபுரம் | 4 |
| நடமாடும் உணவு விடுதி | 2 |
| பூங்காக்கள் | 3 |
| சேவை மையம் (பெட்ரோல் பங்க்) | 1 |

21.9.98

குறைந்த வருவாயுடைய சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் பலர் தங்கும் பெரிய அறைகள் உள்ளன. தங்குவதற்கான விடுதிக் கட்டணம் நபருக்கு நாளொன்றுக்கு ரூ.50/- மட்டுமே. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உல்லாச வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து ஆணையிட்டுள்ளார். இச்சலுகை விடுதிக் கட்டணம் ரூ. 199/- வரை உள்ள அறைகளுக்குப் பொருந்தும். இதன் மூலம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

[1998 மே 21

**பயணங்கள் ஏற்பாடு செய்தல்:**

1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தென்னிந்தியா முழுவதும் முறைப்படுத்தப்பட்ட பயணங்களை மேற்கொள்கிறது. கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், கோவா ஆகிய மாநிலங்கள் உள்ளிட்ட அனைத்து சுற்றுலா தலங்களுக்கும் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

2. சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கைகளுக்கிணங்க சிறப்புப் பயணங்களையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

    1. 8 நாட்கள் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேச சுற்றுலாத் தலங்களுக்கு பயணம்.
    2. மூன்று நாட்கள் நவக்கிரக தரிசன சுற்றுலா.
    3. இரண்டு நாட்கள் தேவாலய தரிசன சுற்றுலா.
    4. 5 நாட்கள் சோழ நாட்டு 21 வைணவத் தலங்கள் சுற்றுலா.
    5. ஒரு நாள் சக்தி கோவில்கள் சுற்றுலா.
    6. ஒரு நாள் திருமால் தரிசன சுற்றுலா.

3. இவை தவிர, வழக்கமான பயணங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவை நகர்வலசுற்றுலா, மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருப்பதி, 8 நாட்கள் தென்னிந்தியச் சுற்றுலா, 7 நாட்கள் கோவா மந்திராலயச் சுற்றுலா, 14 நாட்கள் தென்னிந்தியச் சுற்றுலா ஆகியவை ஆகும்.

4. இக்கழகம் சிறப்புச் சுற்றுலாக்களையும், மாணவர்களுக்காக சலுகைக் கட்டணத்தில் ஏற்பாடு செய்கிறது.

5. தொழிலாளிகளுக்காக சலுகைக் கட்டணத்தில் சிறப்புச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்படுகிறது.

6. அரசு ஊழியர்களுக்காக விடுபபுப் பயணச் சலுகைக் கட்டணத்தில் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

7. வெளிநாட்டுப் பயணிகளுக்காக பயணங்களோடு கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.



1998 மே 21]

**1997-98 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள்**

1. நவீன தொலைபேசி (EPABX) இணைப்புகள் மதுரை அலகு 1 மற்றும் 2-லும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியிலும் உள்ள நான்கு தங்கும் விடுதிகளில் ரூ.12 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

2. 200 வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் தேவையான அனைத்து விடுதிகளிலும் ரூ.22 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

3. மனமகிழ் விளையாட்டுச் சாதனங்கள் ரூ.20 இலட்சம் செலவில் உதகமண்டலம் படகு குழாம் வளாகத்தில் நிறுவப்பட உள்ளது.

4. சூரிய ஒளி மூலம் வெந்நீர் உற்பத்தி கலன்கள் ரூ.25 இலட்சம் செலவில் மாமல்லபுரம் அலகு 1 மற்றும் 2-லும், திருச்சிராப் பள்ளி, கன்னியாகுமரி, மதுரை அலகு 2, இராமேஸ்வரம் மற்றும் கோயம்புத்தூரிலும் நிறுவப்படும்.

5. தங்கும் விடுதிகளில் உள்ள வசதிகளைத் திறனாய்வு செய்து செம்மைப்படுத்த வினாப்படிவங்கள் ஒவ்வொரு அறையிலும் வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

6. அனைத்து மின் சாதனங்களும் செவ்வனே இயங்குவதை கண்காணிக்க பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன.

7. தங்கும் விடுதிகள் மூன்று பிரிவுகளாக பாகுபாடு செய்யப்பட்டு பணியாளர் ஒதுக்கீடு செய்யப்படும்.

8. தொழில் நுட்ப ரீதியான சேவை வழங்க தொழில் கல்வி தகுதியுள்ள 10 அலுவலர்களை மேலாண்மை பயிற்சியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

9. சமையல் எண்ணெய் ஒரே தரத்தில் பயன்படுத்த அனைத்து விடுதிகளிலும் "சஃபோலா" பயன்படுத்தப்படுகிறது.

10. சமையலர்கள் தரமான உணவு தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

11. ஒரு முறை பயன்படுத்திய சமையல் எண்ணெய் மீண்டும் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

[1998 மே 21

**1998-99-ல் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்**

1. பதினோரு புதிய தொழில்நுட்ப தரம் வாய்ந்த சொகுசுப் பேருந்துகள் ரூ. 115 இலட்சம் செலவில் வாங்கப்பட உள்ளன.
2. உதகமண்டலம் ஏரிப்பகுதியில் (Cable Car) கேபிள் கார் ஏற்பாடு செய்தல்.
3. இக்கழகத்தின் சிறந்த தங்கும் விடுதிகளான மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் வசதிகளை மேம்படுத்த ரூ. 100 இலட்சம் செலவிடப்படும்.
4. 1998-99 ஆம் ஆண்டில் பிராட்வே சாலையில் சட்டக் கல்லூரி விடுதி இயங்கிய கட்டடத்தைப் புதுப்பிக்க மைய அரசு உதவியுடன் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.
5. தங்கும் விடுதிகளில் அன்றாடப் பணிகளைச் செம்மைப்படுத்தி எளிமைப்படுத்த கணிப்பொறி மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.
6. மாமல்லபுரம் கடற்கரை தங்கும் விடுதியின் முன்புறமுள்ள 14 ஏக்கர் நிலத்தில் பாரம்பரிய கிராம சுற்றுலா வளாகம் அமைக்கப்படும். இதில் சிறுவர்கள் விளையாட வசதிகள் செய்யப்படும்.
7. முட்டுக்காட்டில் 39 ஏக்கர் நிலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**1998-99-ல் தொடங்கப்படும் புதிய தங்கும் விடுதிகள்**

| விடுதிகள் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | அறைகள் |
|---|---|---|
| 1. குற்றாலம் | 39.30 | 14 |
| 2. இராமேஸ்வரம் | 44.78 | 15 |

**விற்பனை மேம்படுத்துதல்**

குழுக்கள் முன்பதிவு செய்ய வசதி செய்யும் பொருட்டு விற்பனை மையம் தொடங்கப்பட்டது. முன்னோடி பொதுத் துறை நிறுவனங்களோடு தொடர்பு கொள்ளப்படுகிறது. "பாரத் பெட்ரோலிய" நிறுவன ஊழியர்கள் சலுகைக் கட்டணத்தில் ஆண்டு முழுவதும்



1998 மே 21]

தங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மற்ற நிறுவனங்களுடனும் ஒப்பந்தம் செய்யப்படும்.

மாமல்லபுரம் கடற்கரை தங்கும் விடுதியில் ஒரு ஜெர்மனிய நிறுவனம் ஆகஸ்டு 97ல் யோகா பயிற்சி வகுப்பு நடத்தி இக்கழகத்திற்கு ரூ. 8 இலட்சம் வருமானம் ஈட்ட வழி செய்துள்ளது.

பெருமளவு பொதுத் துறை நிறுவனங்கள் மதுரை, கோயம்புத்தூர், மாமல்லபுரம் தங்கும் விடுதிகளில் கருத்தரங்கம் நடத்தியுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் கட்டணச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அரசு விரைவுப் பேருந்துகளில் ஓட்டுநர் இருக்கைகளுக்குப் பின்புறம் கண்ணைக் கவரும் விளம்பரங்கள் எழுதி, இதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் நமது விடுதிகளில் தங்க வழிவகை செய்யப்படும்.

சுற்றுலாத் தகவல் மையங்களில், நமது தங்கும் விடுதிகளில் தங்க முன்பதிவு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**நிதி நிலை**

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 192.44 இலட்சம் மொத்த இலாபம் ஈட்டியதோடு, ரூ. 43.05 இலட்சம் நிகர இலாபம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

1994-95 மற்றும் 1995-96ல் இக்கழகம் அதிக நட்டத்தை அடைந்திருந்தது. இருப்பினும் தேவையற்ற செலவினங்களை தவிர்த்து சீரிய நிதிக் கட்டுப்பாடு விதித்ததன் மூலம் இச்சாதனையை அடைய முடிந்தது.

1997-98 ஆம் ஆண்டிலும் நிதி நிலை திருப்திகரமாக உள்ளது. இவ்வாண்டு ஈட்டிய வருவாய் ரூ. 24.33 கோடியாகும். இது சென்ற ஆண்டில் ஈட்டிய ரூ. 20.66 கோடியைவிட 18% கூடுதலாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

D
N211, 3, N98
N98 5512
219398